
சித்தர் சிவவாக்கியரின்

ஜீவிதமும் சிந்தனையும்

சிவவாக்கியம் விளக்க உரை





பாட்டுச்சித்தர்

ஓம் சக்தி நாராயணசாமி

சீர்காழி



பாட்டுச்சித்தர்

ஓம் சக்தி நாராயணசாமி

ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட அறக்கட்டளை


பதிவு எண் - 13/2017, பாட்டுசித்தர் தவக்குடில்,

27, தியாகராஜ நகர், சீர்காழி - 609 110, நாகை மாவட்டம்.

செல்: 9843650639, 9894751006

சித்தர் சிவவாக்கியரின்
ஜீவிதமும் சிந்தனையும்

[சிவவாக்கியம் விளக்க உரை]



பாட்டுச் சித்தர்

ஓம்சக்தி நாராயணசாமி

சீர்காழி.

வெளியீடு :

ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட குருகுல ஆசிரமம்

7/17C, பழைய பாபநாசம் சிவன் கோயில் தெரு,
சிவந்திபுரம் கிராமம், அம்பைவட்டம்,
நெல்லை மாவட்டம் – 627 425.
செல் : 9843650639, 9894751006

சித்தர் சிவவாக்கியாரின்
ஜீவிதமும் சிந்தனையும்

நான்காம் பதிப்பு : செப்டம்பர் 2017
ஐந்தாம் பதிப்பு : நவம்பர் 2022

பாட்டுச்சித்தர் ஓம்சக்தி நாராயணசாமி
ஸ்ரீ மனோன்மணி சித்தர்பீட அறக்கட்டளை
பதிவு எண். 13/2017
பாட்டுச்சித்தர் தவக்குடில்
27, தியாகராஜ நகர், சீர்காழி - 609 110
நாகை மாவட்டம்.
செல் : 9843650639, 9894751006

விலை : ரூ. 200/- (சித்தர் பீட நன்கொடைக்காக)

வெளியீடு : ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட குருகுல ஆசிரமம்
7/17C, பழைய பாபநாசம் சிவன் கோயில் தெரு,
சிவந்திபுரம் கிராமம், அம்பை வட்டம்,
நெல்லை மாவட்டம் - 627 425.
செல் : 9843650639, 9894751006

தாள் : 21.3 மேப்லித்தோ

அச்சிட்டோர் : ஆர் வி இண்டஸ்ட்ரீஸ்
118/26 வேலாயுதம் ரோடு
சிவகாசி - 626123
போன் : 04562 - 227589
Email : business@orrveeprinters.com

பொருளடக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்



அருள் வாழ்த்துரை

நமசிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே
– அப்பர் தேவாரம்

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். இவர்கள் பதினெண் எனப் பொதுப்பட சுட்டினாலும் இப்பூவுலகில் எண்ணற்ற சித்தர்கள் வாழ்ந்து வந்துள்ளமை வரலாறு உணர்த்தும். நவகோடி சித்தர்புரம் என்பது திருஆவடுதுறையைக் குறிக்கும் பலப் பெயர்களுள் ஒன்று.

சுந்தரர் தாம் அருளிய திருத்தொண்டர் தொகையுள் "சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்க்கும் அடியேன்" என்று அருளியுள்ளமை கொண்டு சித்தர்களின் சிறப்பினை உணரலாம். "சித்தம் போக்கு சிவன் போக்கு" என்னும் வழக்கு இவர்களைக் குறித்து எழுந்தவையே. "யோக சமாதி உகந்தவர் சித்தரே" என்பது திருமூலர் வாக்கு. மனத்தால் சிவனையே பற்றி, புத்தியால் சிவனே முழுமுதற் கடவுள் என நிச்சயித்து, சித்தத்தால் அவனையே இடைவிடாது சிந்தித்து, அகங்காரத்தால் எழுச்சியுற்று சிவனையே அடைந்து அழுந்தி அனுபவிப்பவர்கள் சித்தர்கள் எனலாம்.

திருவிளையாடற் புராணம் சிவனே எல்லாம் வல்ல சித்தராக வந்ததை உரைக்கின்றது. சித்தர்கள் சாதி, மதம் கடந்தவர்கள். அட்டமா சித்திகள் கைக்கூடப் பெற்றவர்கள்.

பதினெண் சித்தர்களுள் சிவ நெறியோடு முரண்படாது தத்துவ நுட்பங்களை எடுத்துரைப்பவர்கள் சிலரே. பாம்பாட்டியாரும், சிவ வாக்கியரும் சடங்குகளையும் ஆசாரங்களையும் சாடியவர் என்றாலும் அவரது பாடல்கள் எளிமையில் நின்று, சைவ சமயக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் ஆழமாகவும், நுட்பமாகவும் எடுத்துரைப்பதைக் காணலாம்.

"அஞ்செழுத்தில் ஓர் எழுத்து அறிந்து கூற வல்லீரேல்
அஞ்சல் அஞ்சல் என்ற நாதன் அம்பலத்தில் ஆடுமே"

ஐந்தெழுத்து என்பது நமசிவாய. இதை வடமொழியில் பஞ்சாக்கரம் என்பர். இதனை ஐவகையாக ஓதலாம். நமசிவாய, சிவாயநம, சிவாயசிவ, சிவ, சி இவை முறையே தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகாகாரணம் எனப்படும்.

ஐந்தெழுத்தையும் சொல்ல இயலாதவர் ஓர் எழுத்தைச் சொன்னாலே அம்பலத்தில் ஆடும் நடராஜப் பெருமான் காத்தருள்வார் என்றுரைக்கின்றார்.

சிவ வாக்கியரின் வாழ்வும் வாக்கும் எனும் நூலினை சீர்காழி நாராயணசாமி அவர்கள் உரை விளக்கத்தோடு தந்திருப்பது சிறப்பிற்குரியது. அனைவரும் படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளது. அன்பரின் சமயப் பணியும், நூற்பணியும் மேலும் மேலும் சிறக்க, நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பராமாசாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதீனம்

பெறுநர்: பாட்டுச் சித்தர் ஓம் சக்தி நாராயணசாமி,
ஸ்ரீ தர்மசாஸ்தா அறக்கட்டளை,
27, தியாகராஜ நகர்,
சீர்காழி – 609 110.

"வள்ளல் நேசன்"
மருத்துவர். ஜெய. ராஜமூர்த்தி M.B.B.S.,
தலைவர் வள்ளலார் தமிழ் மன்றம்,
திருவெண்காடு - 609 114.



முன்னுரை

இறைவனை வெளியில் அதாவது புறத்தில் இருப்பதாகக் கருதி அவனைத் தேடி ஊர் தோறும், கோயில்கள் தோறும் அலைந்து பக்தி செய்ய விழைபவர்கள் பக்தர்கள். அந்த இறைமையை தமக்குள்ளே அனுபவப்பூர்வமாக உணர்ந்து பேரின்பத்தில் திளைப்பவர்கள் சித்தர்கள், சித்தத்தைச் சிவத்தின்பால் வைத்தவர்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தக் கரணங்கள் நான்கில் வரும் சித்தம் தெளிந்தவர்கள்.

சித்தர்கள் சிறந்த சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள். கடவுளை மறுக்காத பகுத்தறிவாளர்கள். பகுத்தறிவு கொண்டு கடவுளை அணுகும் அன்புள்ளம் கொண்டோர். மெய்ஞானத்தில் விஞ்ஞானம் காட்டிய புரட்சியாளர்கள். புறச்சடங்குகளை விட அகவழிபாட்டிற்கு அடிகோலியவர்கள். தன்னை அறிந்த தனக்குள் இருக்கும் மெய்ப்பொருளைத் தரிசித்த தத்துவ ஞானிகள், பிறப்பறுத்தவர்கள். மரணமிலாப் பெருவாழ்வு பேசியதோடு வாழ்ந்தும் காட்டியவர்கள். மூடநம்பிக்கை எதிர்ப்பாளர்கள், சாதி, மத மறுப்பாளர்கள். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று ஒருமைபாட்டை முழங்கியவர்கள்.

உடல் நலன், உள்ள நலன், உலக நலன் என்று மானுடம் வாழ்வாங்கு வாழ வழி சொன்னவர்கள். மனதை வசப்படுத்தி, மனதை வென்று "சும்மா இருக்கும் சுகம்" கண்டவர்கள். சரியை, கிரியை, யேகாம், ஞானம் எனும் நான்கு வகை மார்க்கங்களில் யோகத்திலும், ஞானத்திலும் பழுத்தவர்கள். வைத்தியத்திலும் அட்டமா சித்திகளிலும் கைதேர்ந்தவர்கள். சித்தர்கள் பலர் வாழ்ந்ததும் அவர்கள் ஆயிரக்கணக்கான பாடல்கைளப் பாடியதையும் வரலாற்றில் அறிகிறோம். சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் வாழ்வு பற்றியும் வாழ்வில் நடந்த அற்புதங்களைப் பற்றியும் எழுதியிருப்பதோடு அவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்திற்கும் அழகான, தெளிவான விளக்கவுரையை

இந்நூலின் வாயிலாகத் தந்துள்ளார் பாட்டுச் சித்தர் நாராயணசாமி அவர்கள். பொதுவாக சித்தர்கள் பாடல்களைப் படிக்கும் போது அதில் வரும் மறைபொருளுக்கு, அவர்களுடைய பரிபாஷைக்கு அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி அதற்கான விளக்கங்களையும் தந்துள்ளார் நூலாசிரியர்.

சித்தர்கள் பாடலுக்கு உரை எழுத போந்தால் சித்தர் தத்துவங்களில் ஆழ்ந்த ஞானம் இருக்க வேண்டும். ஆன்மீகத் தெளிவு இருக்க வேண்டும். நல்ல தமிழறிவும் இருக்க வேண்டும். இவை அனைத்தும் இந்நூலாசிரியரிடம் இருப்பதால் அவரால் இந்த நூலைச் சிறப்பாகத் தர முடிந்தது. சிவவாக்கியர் மானுட சமுதாயம் அன்பும், அறிவும் கொண்டு உண்மையொளியை உள்ளத்தில் கண்டு வாழ ஐநூறுக்கும் மேற்பட்ட பாடல்களைத் தந்துள்ளார்.

“நமசிவாய” எனும் ஐந்தெழுத்து மந்திரம் சமய மதங்களுக்கு அப்பாற்பட்ட சிவானுபத்தைத் தரும் அற்புத மந்திரம். அதன் தத்துவ விளக்கம் பல பாடல்களில் வெளிப்பட்டுள்ளது.

பாட்டுச் சித்தர் நாராயணசாமி அவர்கள் பாட்டு, பக்தி, பஜனை என்பவற்றோடு மட்டுமல்லாமல் நாட்டு மக்களுக்கும் நல்ல செய்திகளைத்தர முற்பட்டதின் விளைவே இந்நூலாகும். பக்தியோடு முக்திக்கும், சித்திக்கும் நமக்கு வழிகாட்டியுள்ளார்.

இறைவன் மீது பக்தி செலுத்தும் இவர் சிறந்த தமிழிலக்கியப் படைப்பாளியாகவும் பரிமானம் எடுத்துள்ளார். ஏற்கனவே இவர் படைத்த சித்தர்களின் தசதீட்சை என்ற நூலைப் படிக்கும் பேறு பெற்றதோடு அந்த நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டு சித்தர்கள் தத்துவங்கள் குறித்துப் பேசியுள்ளேன். தற்கால மனித சமுதாயம் “அன்புருவாம் பரசிவமே” என்று வள்ளலார் சொன்ன உண்மையை நன்கு உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்து நற்சிந்தனையோடு வாழ இது போன்ற நூல்கள் தொடர்ந்து வெளிவருதல் நல்லது. இந்த நூலை வருங்காலத் தலைமுறையினர் படித்துணர்ந்து தங்கள் வாழ்வில் கடைபிடித்தால் வாழ்வை இன்பமாக கடந்து இறைவன் திருவடியைப் பற்றலாம் என்பது முற்றிலும் உண்மை.

என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே

– சிவவாக்கியர்

என்பது போல தன்னிலே இருக்கும் ஆன்மா சொரூபத்தை உணர்ந்து கொண்டவர்கள் சிவத்தை உணர்ந்தவர்கள் ஆகிறார்கள். சீவன் ஆவதற்கு சித்தர்களின் பாடல்களை ஆழ்ந்து படித்து சிந்தித்து வாழ்வில் கடைபிடித்தல் அவசியம்.

திருஞான சம்பந்தர் அவதரித்த, தமிழிசை மூவர்களாம் அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத்தாண்டவர் போன்றோர் பிறந்து தமிழிசை வளர்த்த மண்ணில் உதித்த நம் பாட்டு சித்தர் மேலும் மேலும் இதுபோன்று ஆன்மீகப் பணி செய்ய எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதியை வணங்கி வாழ்த்துகிறேன்.

“**எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே**
எல்லாம் வல்லான் தனையே ஏத்து”

– வள்ளலார்

இவண்,

மருத்துவர் **ஜெய. ராஜமூர்த்தி** M.B.B.S., D.C.H.,

திரு. K. நாகராஜ் சுவாமி
டிரஸ்டி : ஸ்ரீ புற்றடி மாரியம்மன் கோயில், சீர்காழி.

பிரபஞ்சம் பல அண்டங்களையும் பல இரகசியங்களையும் உள் அடக்கியது. அது போல் பிண்டமாகிய நம் உடம்பிலும் பல இரகசியங்களும் உள் அடங்கியுள்ளன. அண்டத்தில் உள்ளவை யாவும் பிண்டத்தில் உள்ளதே என்பார் சட்டைமுனி சித்தர். இப்பிரபஞ்ச இரகசியங்கள் யாவையும் தங்கள் உடம்பிலேயே கண்டு பதினெட்டு வகை சித்திகளையும் பெற்று இறவா நிலை அடைந்தவர்களே பதிணெண் சித்தர்கள்.

சித்த மருத்துவத்தையும், அதில் பல பாஷாணங்களை உயிர் காக்கும் மருந்துகளாக மாற்றும் வித்தையையும் அதற்கு துணையான பல மூலிகை இரகசியங்களையும் அறிந்து மனித நேயமுடன் உலகிற்கு வழங்கியவர்கள் சித்தர்கள். அதோடு மட்டுமல்லாமல் அண்டங்களில் சுழலும் கோள்களையும் அதன் ஒளி சக்தி, பூமியில் ஏற்படுத்தும் கால மாற்றங்களையும் கண்டறிந்து சொன்னவர்கள் சித்தர்கள். வான சாஸ்திரத்தையும் வானுயர்ந்த கோயில்களையும் கட்டி, கட்டிடக் கலையை உருவாக்கியவர்கள் சித்தர்கள். மேலும் இல்லற இன்பத்தை உணர்த்த "காமசூத்திரம்" எனும் இரகசிய நூல் எழுதியுள்ளார்கள். அதில் இல்லற கூட்டில் ஏற்படும் உபாதை மனமாற்றம், அதனால் ஏற்படும் பிணிகளுக்கு மருந்து ஆண் சிசு பெண் சிசு பிறக்க வழி என்பன போன்ற பல அரிய விஷயங்களையும் சொல்லியுள்ளார்கள். இவ்வாறு விஞ்ஞானியாகவும் மெய்ஞானியாகவும் விளங்கி உலகில் பல அற்புதங்களைச் செய்தவர்கள் சித்தர்கள்.

அந்த சித்தர்கள் மரபில் தோன்றி சிவவாக்கியம் தந்தவரே சிவவாக்கியர். "அரியும் சிவனும் ஒன்று அறியாதவன் வாயில் மண்ணு" என்று பாடி அவரே திருமழிசை ஆழ்வாராகவும் அவதாரம் செய்தவர் என்ற உண்மையை வெகு அழகாக நமக்குத் தெளிய வைக்கிறார் இந்நூலாசிரியர். சித்தர் சிவவாக்கியர் சொல்லாத விஷயங்கள் இல்லை என்பதை இந்நூலில் அனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

சித்தர்கள் பாடல்களுக்கு உரை செய்வது என்பது மிகவும் எளிதான செயல் அல்ல. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளை முறையாக அறிந்து அனுபவித்து உணர்ந்தாலும் சித்தர்களின் பரிபாஷை இரகசியங்களை அறிவது கடினம். ஆதலால்தான் இந்நாள் வரையில் சித்தர் பாடல்களுக்கு விளக்கவுரை எவரும் எழுதவில்லை. எழுத முயன்ற சிலரும் அர்த்தத்தை அனர்த்தங்களாக்கி அவர்கள் கற்பனையில் உதித்தவைகளை மட்டும் எழுதி வெளியிட்டு தோற்றுப் போனார்கள். ஆனால் எனது நண்பர் பாட்டுச் சித்தர் ஓம் சக்தி நாராயணசாமி அவர்கள் தனது நீண்டகால யோக ஞான தவ அனுபூதியால் சித்தர் சிவ வாக்கியரின் சிவவாக்கியம் பெரிய ஞானக் கோவையில் உள்ள 550 பாடல்களுக்கும் முழுமையாக மிகச்சரியாக எளிமையான நடையில் எல்லோருக்கும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூலை எழுதி ஆன்மீக உலகிற்குப் படைத்திருக்கிறார். இது எக்காலத்திலும் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாக அமைந்துள்ளது.

ஒரு குழந்தை அழும் போது அந்த குழந்தையின் மன நிலைக்கு ஏற்ப சென்று நாம் விளையாண்டால்தான அக்குழந்தையும் நம்மிடம் சிரித்து விளையாடும். அதுபோல எந்த நிலையிலிருந்து சிவவாக்கியர் இந்த நூலினை எழுதினாரோ அந்நிலைக்குச் சென்ற பாட்டுச் சித்தர் இதற்கு விளக்கவுரை எழுதியதால்தான் இந்நூல் முழுமை பெற்றதை உணருகின்றேன்.

உதாரணமாக சிவ வாக்கியத்தின் 518 – வது பாடலான

கூடுகட்டி முட்டையிட்டுக் கொண்டிருந்த வாறுபோல்
ஆடிரண்டு கன்றையீன்ற வம்பலத்து ளாடுதே
மாடு கொண்டு வெண்ணெயுண்ண மானுடப் பசுக்களே
வீடு கண்டு கொண்ட பின்பு வெட்டவெளியும் காணுமே

என்ற பாடலுக்கு விளக்கவுரையில் இவர் எழுதியுள்ள பாங்கு அனைவரும் படித்து இன்புறத்தக்கது. இது போல் ஒவ்வொரு பாடலின் பொருளும் சிந்தித்து அறியத்தக்கது.

இதுபோல் இறைவனிடம் தவமிருந்து வரம் வாங்கிய இரண்யன் பின் நானே கடவுள் என்று கூறியதைப் போல் இன்று பவனி வரும் பல குருமார்கள் நானே உங்களுக்கு ஞானத்தைக்

கொடுப்பேன், சொர்க்கத்தைக் காட்டுவேன், ஜீவன் முக்தி அளிப்பேன் என்றெல்லாம் விளம்பரங்கள் செய்து கடவுளாக வலம் வருபவர்களை அன்றே சிவவாக்கியர் அடையாளம் காட்டி பாடியுள்ளதை நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அம்மாதரி போலி குருமார்களிடம் மாட்டிக் கொண்டு செம்மறி ஆட்டுக் கூட்டமாக மாறும் பல நல்ல பக்திமான்களும் நல்லவர்களும் உண்மையை உணர்ந்து உண்மையில் பாடுபட இந்நூல் உதவும். இந்நூல் ஆன்மீகப் பாதையில் செல்லும் அன்பர்களுக்கு ஊன்று கோலாகவும் வழிகாட்டியாகவும் விளங்கும் என்பதை எண்ணி மகிழ்கின்றேன்.

அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி இந்நூலுக்கு அணிந்துரை அளிக்கச் செய்த பாட்டுச் சித்தரை அன்போடும் நன்றியோடும் எண்ணி அகம் நெகிழ்கின்றேன். நாளெல்லாம் நாட்டுக்கும் நல்ல தமிழுக்கும் நம் சித்தர்களை நன்றே அடையாளம் காட்டும் உங்கள் இறைத்தொண்டும் எழுத்துப் பணியும் தொடரத் துணை நிற்கும் நண்பர்களில் ஒருவனாய் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

என்றும் ஆன்மீகப் பாதையில் வாழும்
அன்பன். K. **நாகராஜன்.**

சித்தர் சிவவாக்கியரும் திருமழிசை ஆழ்வாரும்



உ
ஆதியே துணை
ஓம் நமசிவய சிவாய நம ஓம்

சிவவாக்கியர்

இவ்வுலகில் பிறக்கும் குழந்தைகள் யாவும் "குவா குவா" என்று உ, அ என்ற எட்டிரண்டு மந்திரத்தையே முதன் முதலாக ஒலித்து அழும். ஆனால் இவர் பிறக்கும் போது "சிவா சிவா" என அழுகுரலோடு அலறியதால் " சிவவாக்கியர் " எனப் புகழப் பெற்றார். பிறந்ததிலிருந்தே சிவ நாமம் உச்சரித்து சிவ சிந்தையோடே வாழ்ந்து சித்தராகவே வளர்ந்தவர். எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவராயினும் ஜனித்த போதே சித்தராக உருவாகியதால் இயற்கையாகவே இறைவழிபாடுகள் செய்து அவரின் கடமைகளை ஈசனிடம் விட்டுவிட்டு ஆன்மிக தேடுதல் நாட்டம் கொண்டு அலைந்தார். இவ்விதம் ஏற்பட்ட இறை நாட்டத்தினால் நான்கு வேதங்கள், சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் மற்றும் பல நன்னூல்கள் யாவையும் கசடறக் கற்றறிந்தார். ஆதலால் ஞான தாகம் ஏற்பட்டு பற்பல இடங்களுக்கு அலைந்து ஞான குருவைத் தேடினார். இவரின் இயல்பான கேள்வி ஞானத்திற்குத் தக்க பதிலைக் கூறும் மெய் குருவைத் தேடிக்கொண்டே இருந்தார். இவரின் ஞானக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல எந்த குருவினாலும் இயலவில்லை. ஆதலால் மெய்ஞான குருவை அடைவதையே இலட்சியமாகக் கொண்டு ஊர் ஊராக கோயில் கோயிலாக காடு மலைகளில் எல்லாம் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்.

இப்படியே ஞானிகளும், தவசிகளும், யோகிகளும், முனிவர்களும், சித்தர்களும் கூடும் பக்தர்களின் புனித பூமியான காசி மாநகருக்கு வந்தார். அங்கே காசி விஸ்வநாதரையும் அன்னை அன்னபூரணியையும் தரிசித்து வணங்கினார். காசி நகரின் அழகையும் கங்கையின் வற்றாத பெரு வெள்ளத்தையும் கண்டார். ஆதியிலிருந்தே புனிதத்தலமாக வழிபடும் காசியில் பூ மணக்காது, பிணம் நாறாது, பல்லி சொல்லாது, காகம் கரையாது, கருடன் வட்டமிடாது போன்ற விவரங்களை நேரில் கண்டார். ஆரூர் பிறக்க முத்தி ! அண்ணாமலை நினைக்க முத்தி ! காசி இறக்க முத்தி ! என சைவர்கள் போற்றும் காசி நகரம் இவ்வுலகின் மத்திய பாகத்தில் அமைந்துள்ளதையும் பூமியின் ஆணி வேராக இத்தலம் அமையப்

காரணத்தையும் கண்டு உணர்ந்து அறிந்தார். அங்கு சாமியாராகவும், குருவாகவும் திகழ்பவர்களிடம் சென்று தனது மெய்ஞானக் கேள்விகளைத் தொடுத்து திக்குமுக்காடச் செய்தார். அவரின் சந்தேகங்கள் யாவையும் தீர்த்து வைக்கவும் அவருக்கு உபதேசம் வழங்கி தீட்சை கொடுத்து தெளிய வைக்கவும் அவரது பிறவியை அறிந்த ஸ்ரீமன் நாராயணனே மெய்குருவாக வந்தார். குருவாக வந்தவர் அங்கு ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளியாக ராமன் என்ற பெயரில் சிவ வாக்கியரின் பார்வையில் படும் வண்ணம் அமர்ந்து தன் வேலையைச் செய்து கொண்டிருந்தார்.



குருவைக் கண்டு தெளிதல்

இவரைக் கண்டவுடன் சிவவாக்கியரின் உள்ளுணர்வு உணர்த்தப் பெற்று இவர்தான் தாம் தேடி வந்த மெய்குரு என்பதைக் கண்டு கொண்டார். இருப்பினும் அவர் உருவை கண்டு எள்ளாமல் அவரையே கண்காணித்தவாறு அவர் திருவடி நிழலில் சேரும் நாளை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தார். அவரோ இவரைக் கவனியாதது போல் தன் செருப்பு தைக்கும் தொழிலை மட்டும் மும்முரமாக செய்து கொண்டிருந்தார் தினசரி அவருக்குக் கிடைக்கும் உணவை ஒரு பிடி கூட உண்ணாமல் அங்கிருக்கும் பறவை இனங்களுக்கும் நாய்களுக்கும் அளித்து வந்ததைத்

தொடர்ந்து பார்த்து வந்த சிவவாக்கியர் ஒருநாள் அவரிடம் சென்று பணிந்து நின்றார். ராமன் இவரைப் பார்த்து என்ன வேண்டும் எனக் கோட்டார். சிவவாக்கியர் அவரைப் பணிவுடன் வணங்கியபடியே "ஐயா அடியேன் தினமும் உங்களைக் கவனித்து வருகிறேன். தாங்கள் உணவு உண்டு நான் கண்டதில்லை. பின் எவ்வாறு உயிர் வாழ்ந்து உழைக்கிறீர்கள்" எனக் கேட்டார். ராமனும் சிரித்தபடியே நான் காற்றையே உணவாக்கிக் கொள்கிறேன். வாசியினால் பிராண சக்தியைச் சேமித்து என் உயிரையும் உடலையும் பாதுகாத்து வளர்த்து வருகிறேன். ஆதலால் எனக்கு வேறு உணவு தேவைப் படுவது இல்லை என்றார்.

இப்பதில் கேட்ட சிவ வாக்கியர் இவரே தன் சத்குரு என்பதை உணர்ந்து தெளிந்து அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவர் பாதம் பற்றிய வண்ணம் சரணாகதி அடைந்து தானும் மெய்நிலை பெறுவதற்கும் மோட்சம் அடைவதற்கும் வழிகாட்டி உபதேசிக்க வேண்டினார். அவரோ, "தம்பி கூரை ஏறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுந்தம் போவானா ?" என்று கேட்டார். பதிலேதும் சொல்லத் தெரியாது நின்ற சிவவாக்கியரிடம் மகனே ! வீட்டிற்குக் கூரை இருப்பது போல் மனிதனின் எண்சாண் உடம்பாகிய வீட்டிற்கு கூரையாக இருப்பது சிரசாகிய தலையையே குறிக்கும். அங்கே உயிராகிய கோழி உலாவிக் கொண்டுள்ளது. அந்த உயிரை அறிந்து கொண்டு ஆறு ஆதாரங்களையும் யோக ஞான சாதகத்தால் ஏறி பிடித்தால் உயிரில் ஒளிந்திருக்கும் இறைவனைச் சிக்கெனப் பிடிக்கலாம். அவ்வாறே தியானம், தவம் இருந்து ஆகாயத்தலத்தில் ஏறி மோட்சமாகிற வைகுந்தம் சேரலாம் என்பதையே இவ்வாறு பழமொழியாய் கூறியுள்ளார்கள். ஆதலினால் நீயும் உன் சிரசில் இறைவனைத் தியானத்தினால் பிடித்தால் அவனருளால் இம்மாதிரி பல சித்திகளைப் பெற்று மோட்சம் அடையலாம் என்று விளக்கினார். பார்ப்போரை எல்லாம் கேள்விக் கணைகளால் பிரமிக்க வைத்த சிவவாக்கியர் கேள்வி ஏதும் இன்றி குருவின் கருணை கிட்டி உபதேச தீட்சை பெற வேண்டியே மவுனமாக மண்டியிட்டு நின்றார்.

குரு உருவில் வந்த ராமன் சிவவாக்கியரை மேலும் சோதிக்க எண்ணி அவரிடம் மகனே, நான் இந்நாள் வரை செருப்பு தைத்து வந்த வருவாயைச் சேர்த்து வைத்துள்ளேன். இந்த காசுகளை உன்னிடம் தருகிறேன். அதை நீ என் தங்கையாகிய கங்கையிடம் கொடுத்துவிட்டு வந்து சேர் என்றார். மேலும் அவரிடம் ஒரு பேய்ச்சுரைக்காயைக் கொடுத்தனுப்பி இதன் கசப்பு போக கங்கையில் கழுவி கொண்டு வா என்று கூறினார்.



சிவ வாக்கியர் கேள்வி ஏதும் இல்லாமல் மறுப்பேதும் சொல்லாமல் அக்காசையும் பேய்ச்சுரைக்காயையும் பெற்றுக் கொண்டு குருவின் ஆணைப்படி கங்கையை நோக்கிப் புறப்பட்டார்.

குருநாதர் எதைச் சொல்னாலும் அதைச் செய்ய வேண்டும் என்ற ஒரே நினைப்போடு கங்கையை அடைந்து தாயே இதோ என் குருநாதர் கொடுத்த காசுகளைப் பெற்றுக்கொள் எனச் சொல்லி கங்கை நீரிர் போடப்போனபோது வளையல் அணிந்த அழகிய கையொன்று அந்நீருக்குள் இருந்து வெளிப்பட்டு சிவவாக்கியர் கொடுத்த காசுகளைப் பெற்றுக் கொண்டு நீரில் மறைந்தது. சிவ வாக்கியர் பிரம்மிப்புடன் பார்த்துக் கொண்டு பேய்ச்சுரைக்காயை கங்கை நீரில் கசப்பு போக கழுவி எடுத்துக் கொண்டு குருபிரானிடம் திரும்பினார்.

மறுநாள் குரு தன்னுடனேயே இருக்கும் சிவவாக்கியரை அழைத்து நேற்று என் தங்கை கங்கையிடம் கொடுத்த காசு எனக்கு இப்போது வேண்டும். ஆகையால் அவைகளைத் திரும்பவும் வாங்கி வா என்றார். சீடரும் உடனே கங்கையை நோக்கிப் புறப்படலானார். குரு அவரை நிறுத்தி தான் செருப்பு தைக்க தோல் பையில் வைத்திருந்த தண்ணீரைக் காட்டி இதுவும் கங்கை நீர்தான் இங்கேயே கேட்டு வாங்கித்தா என்றார். சிவ வாக்கியரும் குரு வார்த்தையை மாறாது அத்தோல் பையில் இருந்த தண்ணீரைப் பார்த்து நேற்று நான் உன்னிடம் கொடுத்த என் குருநாதரின் காசுகளைத் திரும்பவும் தா என வேண்டினார்.

அடுத்த கணமே அத்தோல் பையிலிருந்த நீரிலிருந்து அதே வளையலணிந்த கரம் தோன்றி அக்காசுகளை மாறாமல் கொடுத்து விட்டு மறைந்தது. எவ்வித வியப்போ, திகிலோ, பயமோ இன்றி எந்த உணர்ச்சிகளுக்கும் ஆட்படாது தன் கடன் குரு பணியே என்று அதனை குருவிடம் ஒப்படைத்தார். குரு சிவவாக்கியரைப் பார்த்து வேறு ஏதேனும் சந்தேகங்களும் கேள்விகளும் உன்னுள் இருக்கிறதா? என்றார். சிவ வாக்கியர் குருவின் தாள் பற்றி எந்த சந்தேகங்களும் இப்போது இல்லை குருநாதா நான் கேள்விகள் கேட்டு பெற முடியாத மெய்ப்பொருளை அருளி உபதேசியுங்கள் என்று வேண்டி நின்றார். சந்தேகங்கள் யாவும் தீர்ந்து தெளிந்தவனே உண்மையான சீடன், நீ உபதேசம் பெற தகுதியுள்ளவனாய் மாறிவிட்டாய். ஆகவே உனக்கு சித்தர்களின் மணிமந்திர ஔஷத தீட்சைகளை வழங்குகின்றேன் என ஆசி கூறி உபதேசம் செய்தார் குருவாக வந்த ராமன்.

குரு கொடுத்த ஒவ்வொரு தீட்சைகளையும் முறையாக பயிற்சி செய்து பழுதறப் பயின்று வந்தார் சிவவாக்கியர். ஒரு நாள் குருவானவர் தன் சீடரிடம் சிவவாக்கியா நீ எல்லா சித்திகளையும் உன் வைராக்கிய தவ முயற்சியினால் பெற்று சித்தனாகிவிட்டாய். இருப்பினும் நீ இல்லற தர்மத்தை முடிக்க வேண்டி இருப்பதால் அதனையும் கடக்க உனக்கு நல்ல மனைவி அமைய வேண்டும். உன் தவத்தையும் தொடர்ந்து செய்து கொண்டு உலக அனுபவங்களைப் பெற்று சித்தராக வாழ்ந்து வா. சித்தர்களில் சிறந்த பேறு பெற்ற பரம்பொருளை அடைவாய் என ஆசி வழங்கினார். மேலும் சிவவாக்கியரிடம் ஆழாக்கு மணலையும்

பேய்ச் சுரைக்காயையும் கொடுத்து இதனைச் சமைத்து உனக்கு உணவு படைப்பவளே உன் மனைவியாவாள். அவளைக் கண்டு மணம் முடித்து இல்லறம் நடத்தி அக்கர்மாவை முடித்து தவம் புரிந்து வா. தக்க தருணத்தில் யாம் வந்து ஆட்கொள்வோம் எனக்கூறி மறைந்து போனார் ராமனாக வந்த ஸ்ரீஹரி.

இல்லறத்தில் இணைதல்

குருவின் கட்டளையை நிறைவேற்ற அவர் கொடுத்த ஆழாக்கு மணலையும் பேய்ச் சுரைக்காயையும் எடுத்துக் கொண்டு தன் இல்வாழ்க்கை துணையைத் தேடி தெற்கு திசை நோக்கி பயணமானார். சித்தரின் அழகில் வயப்பட்ட பல இளம் பெண்களும் அவரை மணக்க விரும்பினர். ஆனால் சித்தரின் நிபந்தனை கேட்டு ஆழாக்கு மணலை எவ்வாறு சமைத்து உணவு படைப்பது என புரியாமல் தயங்கினார்கள். இப்படியே ஒவ்வொரு ஊராக அலைந்து கொண்டிருந்த சிவ வாக்கியர் ஒரு நாள் வீட்டின் முற்றத்தில் மூங்கில் கூடை பின்னிக் கொண்டிருந்த ஒரு குறப் பெண்ணைக் கண்டார்.



கண்டவுடனேயே இவள்தான் தான் தேடி வந்த பெண் என்று உள்ளுணர்வு உணர்த்தப் பெற்றார். உடனே தனிமையில் வேலை செய்து கொண்டிருந்து அப்பெண்ணை நோக்கிச் சென்றார். அக்குற மாதும் சித்தரைக் கண்டு நாணி இன்முகத்தோடு வரவேற்று அமரச் சொல்லி அருந்த தண்ணீர் கொடுத்தார்.

சிவவாக்கியர் அப்பெண்ணிடம் தான் கொண்டு வந்த மணலையும் பேய்ச் சுரைக்காயையும் கொடுத்து இதனை எனக்கு சமைத்து உணவு படைத்துத் தர உன்னால் முடியுமோ ? என அன்புடன் கேட்டார். அக்குறப் பெண்ணும் மறுப்பேதும் சொல்லாமல் இதோ ஒரு நாழிகைக்குள் உணவு படைக்கிறேன் எனக் கூறி அந்த ஆழாக்கு மணலையும் கசப்புள்ள பேய்ச் சுரைக்காயையும் கழுவி சமையல் செய்ய ஆரம்பித்தாள். அவள் அடுப்பை பற்ற வைத்து அவைகளை சமையல் செய்கையில் அதிசயமான முறையில் மணல் அருமையான சாதமாகவும், பேய்ச் சுரைக்காய் ருசி மிகுந்த கூட்டுக் குழம்பாகவும் மாறி மணம் வீசியது. இதனை வியப்புடன் பாரத்துக் கொண்டு காத்திருந்த சித்தருக்கு சமைத்ததை இலையில் பரிமாறி சாப்பிட அழைத்தாள். சிவ வாக்கியரும் இன்முகத்தோடு அமர்ந்து அவள் சமைத்த உணவு மிகவும் ருசியுடன் இருப்பதை உணர்ந்து சுவைத்துச் சாப்பிட்டார். பின் இவள்தான் நம் குருநாதர் சொல்லிய தன் இல்வாழ்க்கை துணை என்பதை அறிந்து அவளை மணமுடிக்க எண்ணம் கொண்டு அவளின் தாய் தந்தையரைப் பற்றிய விவரங்களைக் கேட்டார்.

அப்பெண் கூடை முறம் பின்ன மூங்கில் வெட்டுவதற்காக தன் தாயும் தந்தையும் காட்டிற்குச் சென்றுள்ளனர் என்றும் அவர்கள் திரும்பி வரும் நேரம்தான் இது எனவும் பதிலுரைத்தாள். அவள் சொன்னது போலவே தொலைவில் மூங்கிலைத் தலையில் சுமந்து கொண்டு அப்பெண்ணின் பெற்றோர்கள் குடிசைக்கு வந்து கொண்டிருந்தனர். அவர்கள் சுமையை இறக்கி வைத்து தங்கள் வீட்டின் முன்பு அமர்ந்திருந்த சிவவாக்கியரைப் பார்த்து திகைத்த வண்ணம் வணங்கி சுவாமி தாங்கள் யார் ? உங்களுக்கு என்ன வேண்டும்? என்று பயத்துடன் கேட்டனர். சிவ வாக்கியர் அவர்கள் அச்சத்தைப் போக்கித் தன்னைப் பற்றி எடுத்துரைத்து தான் அங்கு

வந்த விவரத்தையும் நடந்தவைகளையும் கூறி தவம் செய்யும் எனக்குத் துணையாக ஒரு பெண்ணைத் தேடினேன். இவளே என் குருநாதர் கூறிய குணவதி. ஆகவே இவளை தங்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து தரவேண்டும் எனப் பணிவுடன் கூறி வேண்டினார்.

மகளின் விருப்பத்தை அறிந்து கொண்ட பெற்றோர் ஐயனே! தங்களைப் போன்ற ஒரு சித்தபுருஷருக்கு என் மகளைத் திருமணம் செய்து கொடுப்பது எங்கள் பூர்வ புண்ணிய பாக்கியமே. ஆனால் திருமணத்திற்குப் பிறகு எங்கள் குல வழக்கப்படி நீங்கள் இங்குதான் வாழவேண்டும். எங்கள் குல வழக்கத்திற்குக் கட்டுப்பட்டு எங்கள் கூட்டத்தில் சேரவேண்டும். இவைகளை நீங்கள் ஏற்றுக் கொண்டால் எங்கள் மகளைத் தங்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றோம். தங்களுக்குச் சம்மதமா? எனக் கேட்டனர். சிவ வாக்கியரும் குருவின் கட்டளைப்படி இல்லறக்கடன் முடிக்க அவர்கள் கூட்டத்திலேயே சேர்ந்து வாழ ஒத்துக் கொண்டார்.

அதன்படியே ஒரு நல்ல நாளில் அவர்கள் குல வழக்கப்படி இருவருக்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. குறவர் குல கூட்டத்திலேயே தங்கி இல்வாழ்வை இனிதாக நடத்தி வந்தார் சிவ வாக்கியர். சித்தருக்குரிய ரிஷி பத்தினியாக வாழ்ந்து வந்தாள் அக்குறமாது. சிவ வாக்கியர் தான் ஜனித்ததிலிருந்தே ஓதி வரும் சிவ பஞ்சாட்சர மந்திரத்தையும் குரு உபதேசித்த யோக ஞானத்தையும் செவ்வனே செய்து தவம் புரிந்து வந்தார். இல்லறம் நடத்த காட்டிற்குச் சென்று மூங்கில் வெட்டி எடுத்து வந்து குறவர்களைப் போல் கூடை முறம் போன்றவைகளைச் செய்து அதனை சந்தையில் சென்று விற்று நிறைவாக இல்லறம் நடத்தி வாழ்ந்து கொண்டிருந்தார். இவ்வாறு இல்லறத்தையும், ஆன்மிகத்தையும் இரு கண்களைப் போல் கருதி காத்து வந்தார் சிவவாக்கியர்.

ஆட்கொல்லி

ஒருநாள் சிவ வாக்கயர் காட்டிற்கு மூங்கில் வெட்டி எடுத்துவரச் சென்றார். அவர் ஒரு மூங்கிலை வெட்டியபோது அம்மூங்கிலில் இருந்து தங்கத் துகள்கள் தகதகவென மின்னி

கொட்டிக் கொண்டே இருந்தது அதனைப் பார்த்த சிவவாக்கியர் ஐயோ ! ஆட்கொல்லி ஆட்கொல்லி என அலறியபடியே ஓடி வந்தார். வழியில் இவரைக் கண்ட நான்கு இளைஞர்கள் ஆட்கொல்லி ஆட்கொல்லி என கத்தியபடியே ஓடி வந்த சித்தரைப் பிடித்து நிறுத்தி என்ன விபரம் ? ஏன் இப்படி கத்திக் கொண்டே ஓடி வருகிறீர்கள் ? என்று விசாரித்தனர். இவரோ அங்கே ஆட்கொல்லி கொட்டிக் கொண்டே இருக்கிறது என அஞ்சியபடியே சொல்லிக் கொண்டிருந்தார். நான்கு நண்பர்களும் அவரை அழைத்துக் கொண்டு அவ்விடத்தைச் சென்று பார்க்கையில் வெட்டப்பட்ட மூங்கிலிலிருந்து தங்கத்துகள்கள் கொட்டிக் கொண்டிருந்தது.



நால்வரும் அந்த இடத்தை விட்டுத் திரும்பி வந்து, ஆமாம் சித்தரே அது ஆட்கொல்லிதான். நாங்கள் அதனைப் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் தைரியமாக வீட்டிற்குச் செல்லுங்கள் என்று சொல்லி சிவவாக்கியரை அவ்விடத்தைவிட்டு அனுப்பி வைத்தனர். சிவவாக்கியரும் அது ஆட்கொல்லி ஆட்கொல்லி எனச் சொல்லி எச்சரித்துவிட்டு அனைத்தும் சிவன் செயலே எனக் கூறிவிட்டு வீடு திரும்பினார்.

அவர் சென்றதைக் கண்ட நால்வரும் அங்கு சென்று அத்தங்கக் குவியலை காவல் காத்தனர். பின் அரவமற்றதும் அங்கிருந்த தங்கம் முழுவதையும் ஒரே மூட்டையாகக் கட்டி

தூக்கிக் கொண்டு வந்து சற்றுத் தொலைவில் இருந்த ஒரு பாழுங் கிணற்றின் அருகே இறக்கி வைத்தனர். நடுநசிக்குப் பிறகு யாருக்கும் தெரியாமல் நம் வீட்டிற்கு இதைக் கொண்டு போய் நான்கு பங்காகப் பிரித்து எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்துக் காத்துக்கிடந்தனர். நான்கு இளைஞர்களுக்கும் பசி வந்து துன்புறுத்தியது. அதனால் இரண்டு பேர் ஊருக்குள் சென்று பசியாறிவிட்டு மற்ற இருவருக்கும் சாப்பாடு வாங்கி வருவதென்றும் முடிவு செய்தனர். இருவர் தங்கத்திற்குக் காவல் இருக்கவும், இருவர் சாப்பிட்டுவிட்டு சாப்பாடு வாங்கி வரவும் சென்றனர்.

"விநாச காலே விபரீத புத்தி" என்பதைப் போல ஊருக்குள் சென்று உணவருந்திய இருவரும் தங்கத்தின் மேல் கொண்ட ஆசையினால் விபரீத புத்தி ஏற்பட்டு காவலிருப்பவர்களுக்கு வாங்கிய சாப்பாட்டில் கொடிய நாகத்தின் விஷத்தைக் கலந்து எடுத்து வந்தனர். அவர்கள் நஞ்சு கலந்த உணவை உண்டு மாண்டு விடுவார்கள், அதன் பின் இருக்கும் தங்கத்தை நாம் இருவரும் பங்கு போட்டு எடுத்துக் கொண்டு வளமுடன் வாழலாம் என மனக் கணக்குப் போட்டு வந்தார்கள். தங்க மூட்டைக்குக் காவல் இருந்த இருவருக்கும் இதே கெட்ட எண்ணம் ஏற்பட்டு சாப்பாடு கொண்டுவரும் நண்பர்கள் இருவரையும் எப்படியாவது தந்திரமாக கொன்று விட்டு நாமே எல்லா தங்கத்தையும் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று திட்டம் தீட்டினர். சாப்பாடு வாங்கி வந்த நண்பர்கள் இருவரும் மற்ற இரு நண்பர்களிடம் விஷம் கலந்த உணவைக் கொடுத்தனர். அவர்களும் சாப்பிட அமர்ந்து மற்ற இரு நண்பர்களிடம் பக்கத்தில் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுத்து வருமாறு கூறினர். தண்ணீர் எடுக்க அப்பாழுங் கிணற்றில் இருவரும் எட்டிப் பார்க்கையில் அவர்கள் அறியாவண்ணம் பின் வந்த இருவரும் திடீரெனப் பாய்ந்து அவர்களை அப்பாழுங்கிணற்றில் தலைகுப்புற தள்ளி விட்டார்கள். சாப்பாடு கொண்டு வந்த நண்பர்கள் இருவரும் கிணற்றில் அடிபட்டு அப்போதே மாண்டு போனார்கள். பின் இவர்கள் இனி தங்கம் முழுமையும் நம் இருவருக்கும் மட்டுமே என மகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டே பசி வருத்த, இறந்தவர்கள் கொண்டு வந்த நாக நஞ்சு கலந்த உணவை உண்டனர். உண்டு முடித்தவுடன் வாயில் நுரை தள்ளியபடியே நஞ்சு தலைக்கேறி அங்கேயே வீழந்து இறந்து போனார்கள்.

காலையில் எப்போதும் போல் மூங்கில் வெட்ட வந்த சிவவாக்கியரும் அவர்தம் மனைவியும் அங்கே தங்க மூட்டை அப்படியே இருக்க, அதன் அருகிலேயே விஷ உணவு உண்டவர்கள் இறந்து போய் கிடப்பதையும் அவ்வாறே அருகிலிருந்து பாழுங் கிணற்றில் தலைகுப்புற வீழ்ந்து இருவர் இறந்து கிடப்பதையும் கண்டனர். சிவவாக்கியர் ஞான திருஷ்டியால் நடந்தவைகளை அறிந்து கொண்டு தம் மனைவியிடம் நான் அப்போதே இவர்களிடம் இது ஆட்கொல்லி என்று சொன்னேன், கேளாமல் இறந்து கிடக்கின்றனர் என்றார். சித்தரின் துணைவி பின் இந்த தங்க மூட்டையை என்ன செய்வது எனக் கேட்டார். சிவ வாக்கியர் இது இன்னும் எத்தனை ஆட்களைக் கொல்லுமோ எனக் கூறி அக்காட்டிலேயே ஒரு பெரிய குழி தோண்டி யாருக்கும் தெரியாமல் அத்தங்க மூட்டையை அக்குழியில் போட்டு மூடினார். தேவையான மூங்கிலை வெட்டி எடுத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்கு இருவரும் திரும்பினர்.

வீட்டிற்கு வந்ததும் சிவவாக்கியர் தம் மனைவியைப் பார்த்து என்னம்மா உனக்குத் தங்கத்தின் மீது ஆசையுள்ளதா ? எனக் கேட்டுக் கொண்டே கொல்லைப்புறம் அழைத்துச் சென்றார். பின் அங்கிருந்த குட்டிச் சுவர் மீது சிறுநீரைப் பெய்தார். உடனே அந்த மண் சுவர் முழுவதும் பொன்னாகி மின்னியது. அம்மா உனக்கு வேண்டிய பொன்னை எடுத்துக் கொள் என்றார். சிவ வாக்கியரின் துணைவியோ சிறது கூட சலனமின்றி, சுவாமி ! தங்கள் மனைவியான எனக்குத் தங்கள் சொல்லே வேதம், அடியவளுக்கும் இது ஆட்கொல்லிதான், தங்கள் அன்பையும், தங்களுக்குச் செய்யும் பணிவிடைகளையும் தவிர இவ்வுலகில் எனக்கு வேறெதுவும் வேண்டாம் என்று பதிலுரைத்தாள். மனைவி பக்குவப்பட்டவள் என்பதில் பூரண திருப்தி கொண்ட சிவ வாக்கியர் மன மகிழ்ச்சியுடன் தம் மனைவியுடன் வாழ்ந்திருந்தார்.

சித்தர்களுடன் இணைதல்

சிவவாக்கியரின் ஞானத்தையும் தவத்தையும் கேள்வியுற்று அறிந்த கொங்கணச் சித்தர் இவரை சோதிக்க எண்ணி சிவ வாக்கியரைக் காண வந்தார். சிவவாக்கியரைக் கண்டு அளவலாவி மகிழ்ந்து, தான் ரசவாத வித்தையால் அரும் பாடுபட்டுச் செய்து முடித்த குளிகையைக் காண்பித்து இது காணிப் பொன் பெறும் என்றார். சிவவாக்கியர் உடனே தம் உடம்பிலிருந்த அழுக்கைத் திரட்டி எடுத்து இது கோடிப் பொன் பெறும் என்று சொல்லி கொங்கணரிடம் கொடுத்தார். ரச வாத வித்தையில் சித்தி பெற்று சிறந்தவரான கொங்கணச் சித்தர் அவ்வழுக்கை பரிட்சித்துப் பார்த்து வியப்படைந்து, ஆம் ஆம் இது கோடிப் பொன் பெறும் என்பது உண்மையே ! சிவவாக்கியர் தம் உடம்பையே அழியாக் கற்பமாக மாற்றியுள்ளார். அவருடைய யோக ஞானமும் தவமும் சித்தர்களால் பாராட்டப்பட வேண்டியது என்று புகழ்ந்துரைத்தார்.



இதன் பின் சிவ வாக்கியரும் கொங்கணரும் சிறந்த நண்பர்கள் ஆயினர்.

சீர்காழியில் தவம் புரிந்து வாழ்ந்திருந்தார் சட்டை முனிநாத சித்தர். அவரைச் சந்திக்க ஆவல் கொண்டு சிவவாக்கியரும் கொங்கணரும் ககன மார்க்கத்தில் வந்தனர். சட்டை முனியைச் சந்தித்து சத்சங்கம் செய்தனர். பின் மூவரும் ஒன்று சேர்ந்து சதுரகிரி சுந்தர மகாலிங்க மலைக்குச் சென்று தவம் செய்தனர். சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் தொண்டும் மகேசன் தொண்டும் செய்து கொண்டிருந்தனர். சதுர கிரியில் தவம் செய்யும் பதினெண் சித்தர்களையும் தரிசித்து அவர்களுடன் ஒன்றாகக் கலந்தனர். பின் பொதிகை மலை, கொல்லிமலை, கயிலை மலை போன்ற இடங்களுக்குச் சென்று இறை தரிசனம் செய்தனர். பின் கொங்கணச் சித்தர் கலியின் கொடுமைகளுக்கு மக்கள் ஆளாவதைக் கண்டு மனம் பொறாமல் திருப்பதி மலைக்குத் திரும்பினார். கலி முடியும் வரை கல்பகோடி காலம் ஜீவ சமாதியில் இருந்து இறையை வேண்டுவார்களுக்கு அருளும் பொருளும் கிடைக்க வழிவகை செய்து திருப்பதியில் சமாதியில் ஐக்கியமாகி இருந்து வருகிறார். சிவவாக்கியரும் சட்டை முனியும் மக்களின் அறியாமை அகலவும் எல்லோரும் இன்புற்று மரணமில்லாப் பெரு வாழ்வைப் பெறவும் பல பாடல்களைப் பாடி வந்தனர்.



மீண்டும் சீர்காழிக்குத் தரும்பிய சட்டை முனி சித்தரும் சிவவாக்கியச் சித்தரும் ஈசனுக்குரிய சேவைகள் யாவையும் செய்து முடித்தனர்.

பின், இருவரும் ஈசனோடு ஐக்கியமாக எண்ணங் கொண்டு அதற்கான தவ முயற்சியில் ஈடுபட முடிவெடுத்னர். சிவ வாக்கியர் திருமழிசை என்ற ஊரிலும் சட்டைமுனி சித்தர் சீர்காழியிலும் கடுமையான தவம் பூண்டு கல்பதேகமான தங்கள் உடம்பை சமாதியிலேயே இருந்து பஞ்ச பூதங்களையும் பிரித்து வானாகி மறைத்தனர். பின் தங்கள் பரிசுத்த ஆன்ம ஜோதியோடு ஈசனோடு கலக்க சிவலோகம் புகுந்தனர். அங்கே பரம் பொருளாகிய ஈசன் இவர்களின் ஆன்மாக்களைத் தடுத்து நிறுத்தி நீங்கள் இருவரும் இப்பூவுலகில் ஆற்ற வேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றது. பக்தி ஞானத்தை வளர்க்கவும், இறை சக்தியை நிலை நிறுத்தவும் நீங்கள் மீண்டும் மண்ணில் பிறந்து அதனைச் செய்து முடித்து என்னைச் சேருங்கள் எனக் கட்டளையிட்டார். ஈசன் ஆணையின் வண்ணம் சட்டை முனி சித்தர் ஸ்ரீஇராமானுஜராகவும், சிவவாக்கியர் ஸ்ரீதிருமழிசை ஆழ்வாராகவும் மீண்டும் இப்பூமியில் அவதரித்தனர்.

திருமழிசை ஆழ்வார்

திருமழிசையில் பார்க்கவர் என்ற முனிவர் திருமாலைக் குறித்துப் பெரிய வேள்வி செய்து கடுமையான தவம் புரிந்து கொண்டிருந்தார். அவர் மீது பொறாமை கொண்ட தேவர்கள் தேவ மாதர்களை அனுப்பி அவருடைய தவத்தைக் கலைக்க முயற்சித்தனர். தடைகள் யாவையும் மீறி தவத்தையும் வேள்வியையும் மேற்கொண்டிருந்தார் பார்க்கவ முனிவர். ஆனால் விதி வசத்தால் ஒரு நாள் கனகாங்கி என்ற தேவ கன்னிகையின் அழகில் மயங்கினார். அவள் கட்டழகில் காமமுற்று அவளுடன் கலந்து இன்புற்றார். ஆதலால் இந்நாள் வரை கட்டிக்காத்த பிரம்மசரிய விரதம் கெட்டதையும் தாம் தவமிழந்ததையும் எண்ணி வருந்தி மனம் வெறுத்து தன்னையே நொந்து கொண்டு வேறு இடத்திற்குச் சென்று விட்டார். இவரால் கருவுற்ற கனகாங்கிக்கு உருப்பெறாத பிண்டம் சிசுவாக வெளிப்பட்டது. அதனை வெறுத்து அங்கிருந்த பிரம்புப் புதரில் அப்பிண்டத்தை வீசியெறிந்துவிட்டு விண்ணுலகம் சென்றாள். அத்தேவ மாது வீசியெறிந்த பிண்டத்தில் ஈசன் கட்டளைப்படி தன் ஆன்மாவை புகுத்திக் கொண்டார் சிவ வாக்கியர். அக்கரு திருமாலின் அருளால் உயிர்பெற்று ஒரு சிறந்த ஆண் குழந்தையாய் உருவாகியது.

மறுநாள் அங்கே பிரம்பறுக்க வந்த வேளாளன் ஆகிய திருவாளன் என்பவர் கையில் அக்குழந்தை கிடைத்தது.



உடனே அக்குழந்தை ராம ராம என்ற மந்திரத்துடன் அலறியது. பிள்ளைப் பேறு இல்லாது திருமாலை எப்போதும் வேண்டித் தொழுது வந்த திருவாளன் இக்குழந்தை பெருமாள் தனக்குக் கொடுத்த செல்வம் என மகிழ்ந்து தன் வீட்டிற்குக் கொண்டு வந்து சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தார். இது வரை எதுவும் உண்ணாமல் இருந்த அக்குழந்தை சூரியனைப் போல முகப் பொலிவுடன் சிரித்துக் கொண்டிருந்தது. பிள்ளைப் பேறில்லா திருவாளனும் அவர் மனைவியும் அக்குழந்தைக்கு அன்புடன் பாலருந்த ஊட்டினர். அக்குழந்தை அப்பாலை ஏற்று உண்டது. அக்குழந்தைக்குத் திருமழிசையான் எனப் பெயர் வைத்து மிகவும் அன்புடன் பேணி வளர்த்து வந்தனர்.

ஒரு சமயம் திருமழிசையான் உண்டு மீதமிருந்த பாலை திருவாளனும் அவர் மனைவியும் அருந்தினர். அதன் பயனால் அவர்களுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கப் பெற்று கணிகண்ணன் என்ற ஆண் மகவைப் பெற்றனர். இரு குழந்தைகளையும் இரு கண்களைப் போல பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். திருமழிசையான் மீது மிகவும் அன்பு கொண்டு கணிகண்ணன் வளர்ந்து வந்தான். அவர்களுடனேயே வாழ்ந்து திருமால் புகழ்பாடி தொண்டு செய்து கொண்டிருந்த திருமழிசையார் ஆழவாரானார். பின் முன் செய்திருந்த தவப்பயன் தொடர்பால் தனக்கு முன்பு குருவாக வந்தவன் ஸ்ரீமன் நாராயணனே என உணரப் பெற்றார். அவனையே அனைத்துமாகக் கருதி தன் தியான தவத்தை தொடர்ந்து செய்துகொண்டிருந்தார்.



திருமழிசையார் இவ்வாறு தவம் புரிந்து வருகையில் அவ்வூருக்கு முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் வருகை தந்தார். இவருடைய தவாக்னி அவ்வழியே சென்ற பேயாழ்வாரை ஈர்த்தது. அங்கு பேயாழ்வார் எழுந்தருளி திருமழிசையாரைச் சந்தித்து ஆரத்தழுவினார். இவரின் அரிய பிறவிப் பெருமையை உணர்ந்து கொண்டு அவருடனேயே தங்கியிருந்து திருமழிசையாருக்கு ஞான உபதேசம் கொடுத்து திருமழிசை ஆழ்வாராக்கினார். பின் திருமழிசையிலே தங்கி ஹரி பக்தியைப் பரப்பிய வண்ணம் யோக தியான தவம் செய்து வாழ்ந்திருந்தார் திருமழிசை ஆழ்வார். ஈசன் இவருக்குக் காட்சித் தந்து இவருடைய ஹரி பக்தியைச் சோதித்து ஆழ்வாருடைய வைராக்கிய பக்தியைக் கண்டு வியந்து 'பக்திசாரர்' என திருநாமமிட்டு வாழ்த்தி மறைந்தார்.

மாய மந்திரக்காரனாக விளங்கிய சுக்திஹாரன் என்பவன் தன்னை யாராலும் வெல்ல முடியாது எனக் கூறிக் கொண்டு ஆணவ அகங்காரத்தினால் செருக்குடனும் இறுமாப்புடனும் இருந்து கொண்டிருந்தான் பக்திசாரர் அவன் மாயச் செயல்களை வென்று அவன் அகந்தையை அழித்தார். பக்திசாரரின் மெய் பக்தியினால் அவனது மாய மந்திர தந்திர வித்தைகளை ஒழித்து ஊரை விட்டு ஓடச் செய்தார்.

கணிகண்ணன் இவரையே குருவாகக் கொண்டு இவருடனேயே தங்கி தம் தமையனார்க்குக் குரு சேவை செய்து கொண்டிருந்தார். முற்பிறவியின் தொடர்பால் எண்ணற்ற சித்திகளைப் பெற்ற திருமழிசை ஆழ்வார் அவைகளை யாவரும் வியக்கச் செய்து காட்டி மக்களை எல்லாம் பக்தி மார்க்கத்தில் ஈடுபடச் செய்தார்.

பின் ஆழ்வார் யாவரும் அறியாத குகையில் தனிமையில் இருந்து திருமாலையே தியானித்து யோக ஞான சாதகம் செய்து கொண்டிருந்தார். அவ்வழியே தேசாந்திரம் செய்து வந்த கொண்டிருந்த முதலாழ்வார்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் குகையில் தெரியும் பக்திசாரரின் தவப் பேரொளியைக் கண்டு அங்கு சென்றனர்.



குகையில் திருமழிசை ஆழ்வாரின் தவக் கோலத்தைத் தரிசித்து ஆவலுடன் கூடி அளவலாவினர். நால்வரும் சேர்ந்து திருமாலின் புகழைப் பாடியும் ஆடியும் களித்தனர். பின் சிறிது காலம் பேயாழ்வார் அவதாரத் தலமான திருமயிலையில் தங்கி திருமால் பெருமையையும் பக்தியையும் பரப்பினர். முதலாழ்வார்கள் மூவரும் திருத்தல பயணம் செல்ல தீர்மானித்து அவர்கள் புறப்பட்டதும் பக்திசாரர் திருமழிசை திரும்பி கணிகண்ணனுடன் சேர்ந்து அங்கேயே பல்லாண்டு வாழ்ந்திருந்தார்.

அப்போது ஆழ்வாரிடம் பெரு மதிப்பும் மெய் பக்தியும் பூண்ட ஒரு வயது முதிர்ந்த பெண் அவர் ஆஸ்ரமத்தில் நெடுங்காலமாக பணி செய்து கொண்டிருந்தாள். அவளது பக்தியிலும், தொண்டிலும், மகிழ்ந்த திருமழிசை ஆழ்வார் அவளுக்கு என்ன வரம் வேண்டும் கேள் எனக் கேட்டார். அவளும் ஆழ்வாரின் பாதம் பற்றி தனக்கு இளமையும், பேரழகும் வேண்டும் எனக் கேட்டாள். அவள் வரம் கேட்டதைப் போல் ஆழ்வார் அவளை என்றும் இளமை மாறா அழகிய பெண்ணாக மாற்றி அருளினார். அவளது அழகில் மயங்கிய அந்நாட்டு அரசனாகிய பல்லவராயன் அவளையே மணந்து கொண்டு அந்நாட்டின் பட்டத்து ராணியாக்கி அவளோடே வாழ்ந்து வந்தான்.

சீடர் கணிகண்ணன்

நாளாக நாளாக அரசன் மூப்பு பெருகுவதையும் அரசி மட்டும் எப்போதும் இளமையும் அழகும் மாறாது இருப்பது கண்டு வியப்படைந்து அதன் காரணம் என்னவென்று அரசியிடம் விசாரித்தான். அரசியாக வந்தவள் திருமழிசை ஆழ்வாருக்கு உண்மையான தொண்டு செய்து அவர் மனம் மகிழ்ந்து கொடுத்த வரத்தால்தான், தான் என்றும் இளமையாக இருப்பதைப் பற்றிக் கூறினாள். விசாரித்தறிந்த அரசன் தானும் அது போலவே இளமையைப் பெற ஆசை கொண்டான். அப்போது அங்கிருந்த திருமழிசை ஆழ்வாரின் சீடரான கணிகண்ணனை அரண்மனைக்கு அழைத்து தன் எண்ணத்தை வெளியிட்டு ஆழ்வாரிடம் இதனை எடுத்துரைத்துத் தனக்கும் அவ்வரத்தை வாங்கித்தர வேண்டும் என்று வேண்டினான் அரசன். கணிகண்ணனோ இம்மை சுகத்திற்காக தன் குருநாதர் ஒருபோதும் அருள்புரியமாட்டார் என மறுமொழி கூறினான். அரசன் இப்பதிலால் அதிர்ச்சியுற்று தன் அமைச்சர்களை அழைத்து தான் இளமை பெற என்ன வழி என வினவினான்.

அமைச்சர்கள் கூடி தீர ஆலோசித்து அரசனிடம் ஆழ்வாரின் சீடரான கணிகண்ணனே தாங்கள் விரும்பும் வரத்தைக் கொடுக்க வல்லமை படைத்தவர். ஆகையால் அவரிடமே தாங்கள் இளமை பெற வரம் கேட்கலாம் என்று கூறினார்கள். மீண்டும் கணிகண்ணனை அழைத்து தான் இளமை பெற நீங்கள்தான் அருள்புரிய வேண்டும் என்றான் அரசன்.

ஆனால் கணிகண்ணனோ தாம் இறைவனையன்றி மானிடம் பாடேன் என உறுதியுடன் பதிலுரைத்தார். ஆனால் அரசனோ பிடிவாதமாக கண்கண்ணனிடம் தாங்களே இறைவனிடம் வேண்டி எனக்கு இளமை பெற்றுத் தர பாட வேண்டும். இது அரசக் கட்டளை என ஆணையிட்டான். கணிகண்ணனும் வேறு வழியின்றி அரசன் ஆணைக்கிணங்க,

"ஆடவர்களெங்ஙன கன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா நீடியமால்
நின்றானிருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் பொழிற் கச்சி மாண்பு" - என்று பாடினார்.

அரசன் சினங்கொண்டு தன்னைப் பாடாது காஞ்சி மாநகரத்தைப் பாடியதால் கணிகண்ணனை இவ்வூரைவிட்டு வெளியேற்றி நாடு கடத்த உத்தரவிட்டான். இதனை அறிந்து திருமழிசைபிரான்,



"கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைநாகப் பாய்சுருட்டிக் கொள்".

என்று பாடி வேண்டி திருவெஃகாவில் கோயில் கொண்டிருந்த பெருமாளையும், தன் சீடரான கணிகண்ணனையும் கூடவே அழைத்துக் கொண்டு அருகில் இருந்த ஊருக்குச் சென்றார்.

விஷ்ணுவும் அவர்களோடு சென்றதை அறிந்த லட்சுமியும் அவ்வூரைவிட்டு விலகி திருமழிசை பிரான் தங்கி இருக்கும் ஊரை நோக்கிச் சென்றாள். இதனால் நகர் எல்லாப் பொலிவும் இழந்து இருளில் மூழ்கியது. பெருந் துன்பங்கள் சூழ்ந்து மன்னனும் மக்களும் துன்புற்று வருந்தினர்.

இதற்கெல்லாம் காரணம் கணிகண்ணனை நாடு கடத்தியதால் அவர் குரு திருமழிசை பிரானின் கோபமே என்பதை அரசனும் அமைச்சர்களும் அறிந்து கொண்டு கணிகண்ணனை தேடி அவர் அவருடைய குருவோடும் பெருமாளோடும் இருக்கும் இடத்திற்கு வந்தனர். தாங்கள் செய்த தவறுக்கு அவர்கள் பாதங்களில் வீழ்ந்து மன்னிக்கும்படி வேண்டினர். நாட்டில் ஏற்பட்ட நிலைமையை எடுத்துக் கூறி நகருக்குத் திரும்பும் படி அழுது புலம்பி அழைத்தனர். சீடரும் குருவிடம் கூறி நாடு திரும்ப வேண்டுகோள் விடுத்தார். உடனே திருமழிசை பிரான்,

> **"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி**
> **மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய**
> **செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்**
> **பைநாகப் பாய்விரித்துக் கொள்".**

என்று அப்பாடலையே சிறிது மாற்றிப் பாடினார். பெருமாளும் குருவும் உடன்வர கணிகண்ணன் கச்சியம்பதி திரும்பினான்.



நகர் தன் பழைய நிலையையும் பொலிவையும் பெற்றுத் திகழ்ந்தது. இந்த வரலாறு காரணமாகவே இவ்வூரில் கோயில் கொண்ட திருமாலுக்கு "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்ற பெயர் வழங்கலாயிற்று. இவர்கள் சென்று தங்கிய ஊரும் "ஓரிரவிருக்கை" என்று அழைக்கப்படுகின்றது. மன்னனும் மக்களும் பக்திசாரரான திருமழிசை ஆழ்வாரிடமும் அவர் சீடரான கணிகண்ணனிடமும் மிகவும் அன்பு பூண்டு பக்தி கொண்டு வாழ்ந்திருந்தார்கள்.

ஆழ்வாரின் யாத்திரை

திருமால் பக்தியில் திளைத்த திருமழிசை ஆழ்வார் குடந்தையங் கோவலனை தரிசித்து ஆடி பணியப் பயணமானார். சீடரை அங்கேயே இருந்து பெருமாள் பக்தியை வளர்க்க ஆணையிட்டு தான் மட்டும் கும்பகோணத்தை நோக்கிப் புறப்பட்டார். நடந்து வரும் வழியில் பெரும்புலியூரில் அந்தணர் தெரு ஒன்றில் உள்ள வீட்டில் வேதம் ஓதுவதைக் கேட்டு அவ்வீட்டின் திண்ணையில் சற்று அமர்ந்தார். ஆழ்வாரின் சிறப்பறியாத அந்தணர்கள் யாரோ பாவி நாம் வேதம் ஓதுவதைக் கேட்கிறானே என்று எண்ணி வேதம் ஓதுவதைப் பாதியிலேயே நிறுத்தி விட்டனர். அவர்களின் மன நிலையை அறிந்து கொண்டு ஆழ்வார் வேறு இடம் சென்றமர்ந்தனர். அவர் அங்கிருந்து அகன்றதும் அந்தணர்கள் மீண்டும் வேதமோதுவதைத் தொடங்க எண்ணினர். ஆனால் விட்ட இடம் எதுவென்ற நினைவுக்கு வரவில்லை. இது ஆழ்வாரை அவமரியாதை செய்த குற்றமே என்பதை உணர்ந்த அந்தணர்கள் அவரை அணுகி தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினர். ஆழ்வார் அங்கிருந்த கருப்பு நெல்லை தன் நகத்தால் கீறியபடியே "க்ருஷ்ணாநாம் வ்ரிஹீணாம் நக நிர்ப்பிந்தம்" என்று வேதத்தில் விட்ட இடத்தை நினைப்பூட்டினார்.

அந்தணர்கள் ஆழ்வாரின் பெருமை உணர்ந்து அவர் பாதங்களில் பணிந்து வீழ்ந்து அவருக்குத் தொண்டு செய்து வந்தனர். அவ்வூரில் யாகங்கள் செய்து வாழ்ந்திருந்த பெரும் புலியூரடிகள் என்பார் ஆழ்வாரின் சிறப்புகளை அறிந்து கொண்டு அவரைக் காண வந்தார்.

ஆழ்வார் செல்லும் பக்கமெல்லாம் அவ்வூர் கோயில் கொண்ட பெருமாள் திரும்புவதை கேள்வியுற்று அதனைக் கண்டு மகிழ்ந்து ஆழ்வாரின் சீடரானார்.



தான் செய்யும் யாகங்களில் முதற் பூசையைத் தன் குருவான ஆழ்வாருக்கு வழங்கினார். இதற்கு மறுப்பு செய்து பலர் கேலி பேசியதை அறிந்த பெரும்புலியூரடிகள் ஆவேசமாகி ஆழ்வாரிடம் தங்கள் உண்மை சொரூபத்தைக் காட்டி அவர்களைத் திருத்தி ஆட்கொள்ளுமாறு வேண்டி நின்றார். பக்தி சாரரான திருமழிசை ஆழ்வாரும்,

அக்கரங் களக்கரங்களென்று மாவ தென் கொலோ
இக்குறும்பை நீக்கியென்னை யீசனாக்க வல்லையேல்
சக்கரங் கொள் கையனே சடங்கர் வாயடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே

என்று பெருமாளை வேண்டிப் பாட ஆழ்வார் உடம்பிலேயே திருப்பாற் கடலில் பள்ளி கொண்ட கோலத்தில் தன் தேவிமார்களுடன் திருமால் காட்சி தந்தனன். மறுத்துப் பேசியவர்களுடன் யாவரும் இக்காட்சி கிடைத்து மனத் தெளிவுற்று திருந்தி ஆழ்வார் அடி பணிந்து வணங்கி அடியார்கள் ஆயினர்.

சமாதி

சிறிது காலம் அங்கு தங்கி திருமால் புகழ் பாடிய ஆழ்வார் பின்னர் அங்கிருந்து கும்பகோணம் புறப்பட்டார். திருக்குடந்தையை அடைந்து ஆராவமுதப் பெருமாளைச் சேவித்து வணங்கினார். பெருமாளை வேண்டி "நடந்த கால்கள் நொந்தவோ கிடந்தவாறெழுந்து பேசு" என்று பாட சிலையுருவில் வரம்பு கடந்து அப்பெருமான் எழ அப்பெருமாளின் எழிலுக்குத் தீங்கு நேராவண்ணம் ஆழ்வார் வாழிகேசனே என்று பாடி முடித்து மங்களா சாசனம் செய்து வைத்தார். அப்பொழுதிருந்தபடியே அப்பெருமானும் அப்படியே எழுந்த வண்ணம் நிலைத்து அருள் வழங்கி வருகின்றார். திருமழிசைப்பிரான் ஆழ்வாரும் நாலாயிரத் தெழு நூற்றாண்டுகள் பக்தியையும், ஞானத்தையும் வளர்த்து வைணவத்தைப் பரப்பி வாழ்ந்து கும்பகோணத்திலேயே ஜீவசமாதி ஆகி மறைந்தார். இவருடைய ஜீவ சமாதி கும்பகோணத்தில் கும்பேஸ்வரன் கோயிலுக்கு அருகில் உள்ள சாத்தார தெருவில் இருக்கின்றது.

இருவரும் ஒன்றே

இவர் சித்தராக இருந்தபோது இயற்றிப் பாடிய நூல் சிவவாக்கியம். இவர் சித்தராக மாற குருவாக வந்தது ஸ்ரீ விஷ்ணுவே என்பதை உணர்ந்து கொண்டு அக்குரு சேவைக்காக ஈசன் ஆணையின் வண்ணம் திருமழிசை ஆழ்வாராக அவதரித்தார். "இறைவன் புத்தியைத் தருவான் ஆனால் பக்தியைத் தாரான்" என்ற வேத வாக்கியத்தை உணர்ந்து பக்தியை முழுவதும் அனுபவித்து தானே உணரவும் பக்தியைப் பரப்பவும் பக்திசாரராக ஞானம் வளர்த்தார். திருமழிசை ஆழ்வாராக வைராக்கிய பக்தியைக் கடைபிடித்து வாழ்ந்து திருமாலின் அருளால் நான்முகன் அந்தாதி, திருச்சந்த விருத்தம் என்ற நூல்களை இயற்றினார். எண்ணற்ற சித்தாடல்கள் செய்து காட்டினார்.

ஆழ்வாரின் பாடல்கள் வைணவர்களின் தோத்திர நூலாகிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் சிவத்தையும், பஞ்சாட்சரத்தையும் சிவாயமாக்கி சிவவாக்கியர் பாடிய சிவ வாக்கியம் இவரை நாத்திகராக விமர்சித்த சிலரின் திட்டமிட்ட சதியால் சைவத்தின் திருமறையில் சேர்க்கப்படாது நிராகரிக்கப்பட்டு இச்சித்தர் பாடல் இடம் பெறாது போனது.

இருப்பினும் சிவவாக்கிய சித்தரின் உண்மையை உரைக்கும் கருத்தாழமுள்ள பாடல்கள் என்றென்றும் மறையாது. அனைத்து வகையினராலும் போற்றப்பட்டு வழக்கில் வழங்கி வருகிறது. அவரின் பாடல்கள் உலகில் உள்ள அனைத்து அறிஞர்களாலும் யோக ஞானிகளாலும் ஆராயப்பட்டு வருகிறது. சிவவாக்கியரின் பாடல்களில் புரட்சிகரமான சிந்தனைகளும் பொது உடமை கருத்துக்களும் நிரம்ப பொதிந்துள்ளது. சித்தர்கள் யாவருமே சாதி மத வேறுபாடுகளை ஒழிக்கப் பாடியவர்கள். உலகம் யாவுமே மனித குலம் ஒன்றே எனவும் ஒருவனே தேவன் என்பதையும் உபதேசித்து மூடநம்பிக்கைகளை விரட்டிப் பாடினார்கள். இக்கருத்தை வலியுறுத்தி பாடியதாலேயே அவர்களின் பாடல்களும் வாழ்வும் திட்டமிட்டே ஒதுக்கப்பட்டு மறைக்கப்பட்டது. இருப்பினும் சித்தர்களின் உண்மையான தவமும் அவர்கள் மனித நேயம் உயர உழைத்த தொண்டும் நிலைத்து நின்று சூழ்ச்சிகளை வென்று இன்று உலகம் முழுமையும் பரவி வருகின்றது. சித்தர்களின் யோக ஞானக் கலைகளும் தியானம், தவம் போன்றவைகளும் உலக அறிஞர்களால் போற்றப்பட்டு வளர்ந்து வருகின்றது.

சித்தர்களின் கருணை

சித்தர்கள் மனித குலத்தை சாதி மதங்களால் பிரித்தவர்களையும் இன உணர்வைத் தூண்டி பிரிப்பவர்களையும் மிகவும் கடுமையாகச் சாடி பல பாடல்களைப் புனைந்தவர்கள். அவர்களைக் கூட இந்த சித்தர் இந்த சாதியில் பிறந்தவர் இந்த மதத்தைச் சார்ந்தவர் என்று நூல்களில் எழுதி வருவது மிகவும் வருந்தத்தக்கது. அவர்களின் சீரிய கொள்கைகளை உணராமல் இது சித்தர்களை அவமதிப்பதற்குச் சமமாகும். அவர்களது பாடல்களில் உள்ள பரிபாசை இரகசியங்களையும். உண்மையான கருத்து விளக்கங்களையும் அனைவரும் அறிந்து கொண்டு சித்தர்கள் வழியில் உண்மையாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில் இந்நூலில் சிவவாக்கிய சித்தர் பாடல்களுக்கு இச்சிறியேன் என் குரு நாதன் ஐயனின் அருளாணைப்படியும், அடியவனிடம் யோக ஞான உபதேசம் பெற்று அதில் அயராது பாடுபட்டு வாழ்ந்து வரும் என் அன்பு நண்பர்களாக விளங்கும் சீடர்களின் வேண்டுகோளுக்கு இணங்கியும் விளக்கவுரை எழுதியுள்ளேன். ஞானிகளும், அறிஞர்களும் எழுத அஞ்சிய விசயத்தை அடியவன் யோக ஞானத்தில் பொய்களை விளம்பரப்படுத்தி விற்கப்படும் இக்கால சூழ்நிலையில் உண்மையை யோக ஞானம் தேடும் சாதகர்கள்

உணர வேண்டும் என்ற அவாவினால் துணிந்து இந்நூலை இயற்றிய சிவ வாக்கிய சித்தர் பெருமானிடமே சரணடைந்து அந்த ஞானகுருவின் அருளாசியோடு இதனை எழுதி வெளியிடுகின்றேன். இந்த ஞான பூமியில் அவதரித்த மகா ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் முன்பு அடியவன் ரொம்பவும் அற்பமானவன். இருப்பினும் இறை கருணையினால் என் உள் உணர்வில் ஓர் உந்துதல் வயப்பட்டு இச்சீரிய பணியைத் தொடங்கி உள்ளேன். இவ்விளக்கவுரை அன்பு வாசக நெஞ்சங்களையும், யோக ஞான சாதகர்களையும் நியாயமான முறைகளில் சிந்திக்கத் தூண்டி உள் மனதைத் தீண்டி அறிவை உணர்ந்து தெளிய வைக்குமானால் அப்பயன் என் குருநாதன் ஐயப்பன் மலரடியையே சேரும். இதில் ஏதேனும் குறையிருந்தால் அது அடியேனையே சேரும்.

இனி சித்தர் சிவவாக்கியரின் சிந்தனைகளைச் சிந்திப்போம் வாருங்கள்.

சித்தர்கள் பாடல்களின் பொருளை உணர்வதற்கு முதலில் தன்னை உணர வேண்டும். தன் உயிரை அறிய வேண்டும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பதினெட்டு நிலைகளையும் தெரிந்து கடக்க வேண்டும். அனைத்திற்கும் அடிப்படையான ஓங்காரத்தையும், ஐந்தெழுத்தின் உண்மைகளையும் உணர்ந்து கொள்ள வேண்டும். பிராணாயாமம், வாசியோகம் போன்ற யோகக் கலைகளைக் கற்க வேண்டும். மேலும் யாவிற்கும் மேலான ஓரெழுத்து இரகசியத்தையும், மெய்ப்பொருள் உண்மையும் உணர்ந்திருந்தால் சித்தர்களின் பரிபாசையைப் புரிந்து கொள்ளலாம். இவைகளைச் சித்தர் பாடல்களில் மிகவும் விரிவாகவும் விளக்கியும் கூறியுள்ளார்கள். ஆதலால் இவைகளை விரிவாக தெரிந்து கொள்ள இதன் தத்துவங்களை அறிந்து கொள்ள பின்வரும் உண்மைகளை அட்டவணைப்படுத்தி உள்ளோம். படித்து அறிந்து கொள்ளுங்கள்.

ஒன்பது வாசல் கொண்ட நம் உடம்பில் உள்ள 96 தத்துவங்கள்

அறிவு	-	1
இருவினைகள் (நல்வினை, தீவினை)	-	2
மூவாசைகள் (மண், பொன், பெண்)	-	3
அந்தக் கரணங்கள் (மனம், புத்தி, சித்தம், ஆங்காரம்)	-	4

பஞ்ச பூதங்கள் – 5

1. பிருதிவி – (பூமி – நிலம் – மண்)

2. அப்பு –	(ஜலம் –	நீர்	–	புனல்)
3. தேயு –	(அக்னி –	நெருப்பு	–	அனல்)
4. வாயு –	(கால் –	காற்று	–	கனல்)
5. ஆகாயம் –	(வெளி –	வானம்	–	விசும்பு)

பஞ்ச ஞானேந்திரியங்கள் – 5

1. மெய் 2. வாய் 3. கண் 4. மூக்கு 5. செவி

பஞ்ச கன்மேந்திரியங்கள் – 5

1. வாக்கு (வாய்), 2. பாணி (கை), 3. பாதம் (கால்), 4. பாயுரு (மலவாய்), 5. உபஸ்தம் (கருவாய்)

பஞ்ச தன்மாத்திரைகள் – 5

1. சுவை (ரசம்), 2. ஒளி (ரூபம்), 3. ஊறு (ஸ்பரிசம்), 4. ஓசை (சப்தம்) 5. நாற்றம் (கந்தம்).

பஞ்ச கோசங்கள் – 5

1. அன்னமய கோசம், 2. பிராணமய கோசம், 3. மனோமய கோசம், 4. விஞ்ஞானமய கோசம், 5. ஆனந்தமய கோசம்.

மூன்று மண்டலங்கள் – 3

1. அக்னி மண்டலம், 2. சூரிய மண்டலம், 3. சந்திர மண்டலம்

குணங்கள் – 3

1. ராஜஸம், 2. தாமஸம், 3. சாதவீகம்

மலங்கள் – 3

1. ஆணவம், 2. கன்மம், 3. மாயை.

பிணிகள் – 3

1. வாதம், 2. பித்தம், 3. சிலேத்துமம்

ஏடனை – 3

1. லோக ஏடனை, 2. தார ஏடனை, 3. புத்திர ஏடனை.

ஆதாரங்கள் – 6

1. மூலாதாரம், 2. சுவாதிஷ்டானம், 3. மணிபூரகம், 4. அனாகதம், 5. விசுத்தி, 6. ஆஞ்ஞா.

அவத்தைகள் – 5

1. சாக்கரம் (நனவு) 2. சொப்பனம் (கனவு) 3. சுழுத்தி (உறக்கம்)
4. துரியம் (நிஷ்டை) 5. துரியாதீதம் (உயிர்ப்படக்கம்)

தாதுக்கள் – 7

1. இரசம், 2. இரத்தம், 3. மாமிசம், 4. மேதஸ், 5. அஸ்தி,
6. மச்சை, 7.சுக்கிலம் (அ) சுரோனிதம்.

ராகங்கள் – 8

1. காமம், 2. குரோதம், 3. லோபம், 4. மோகம், 5. மதம்,
6. மார்ச்சர்யம், 7. இடம்பம், 8. அகங்காரம்.

தச நாடிகள் – 10

1.	இடகலை	–	இடப்பக்க நரம்பு
2.	பிங்கலை	–	வலப்பக்க நரம்பு
3.	சுழுமுனை	–	நடுநரம்பு
4.	சிகவை	–	உள் நாக்கு நரம்பு
5.	புருடன்	–	வலக்கண் நரம்பு
6.	காந்தாரி	–	இடக்கண் நரம்பு
7.	அத்தி	–	வலச்செவி நரம்பு
8.	அல்புடை	–	இடச்செவி நரம்பு
9.	சங்கினி	–	கருவாய் நரம்பு
10.	குகு	–	மலவாய் நரம்பு

தசவாயுக்கள் – 10

1. பிரானன் – உயிர்க்காற்று 2. அபாணன் – மலக்காற்று
3. வியானன் – தொழிற்காற்று 4. உதானன் – ஒலிக்காற்று
5. சமானன் – நிரவுக்காற்று 6. நாகன் – விழிக்காற்று
7. கூர்மன் – இமைக்காற்று 8. கிருகரன் – தும்மல் காற்று
9. தேவதத்தன் – கொட்டாவிக் காற்று 10.தனஞ்செயன் – வீங்கல் காற்று.

ஆக மொத்தம் 96 தத்துவங்கள்.

ஓங்காரம்

ஓம் அ+உ+ம் = உகாரம் அகாரம் மகாரம் ஓம் என்பதே வாலையாகும். ஓங்காரத்தினுள்ளே அனைத்தும் ஒடுங்கி ஓங்காரத்தினாலேயே யாவும் தோன்றி நடத்து வருகின்றது. இதனை உபதேச வாயிலாக உட்பொருளை அறிந்து கொள்ளல் வேண்டும். வாலையின் அட்சரம் = ஆ, ஹு, ஹீ (அ, உ, இ) (ஆ, கூ, கீ)

எட்டிரண்டு

யோக ஞானத்திற்கு அடிப்படையாய் இருப்பதே ஓங்காரத்துள்ளிருக்கும் எட்டு இரண்டு. இதற்கு விளக்கம் ஆகாயத்தைப் போல விரிவடைந்து கொண்டே இருக்கும். இதைப் பற்றி இயம்பாத சித்தர்களே கிடையாது.

எட்டு	இரண்டு
அ	உ
சிவன்	சக்தி
நாதம்	விந்து
உடம்பு	உயிர்
சூரியன்	சந்திரன்
வலது கண்	இடது கண்
பிங்கலை	இடகலை
அபானன்	பிராணன்
அமுரி	உபரி
அகண்டம்	உலகம்
அகாரம்	உகாரம்

இன்னும் பல விதமாகவும் சித்தர்கள் இதனை எட்டிரண்டு என்பர்.

ஓரெழுத்து

(.) இந்த புள்ளி என்பதுவே ஓரெழுத்து, ஊமையெழுத்து, பேசா எழுத்து, அது பேசும் எழுத்தாகும் போது சிகாரமாகியது. இச்சிகரமே யாவிற்கும் தலையாகவும், ஆதியாகவும், அனாதியாகவும், அந்தமாகவும் உள்ளது. இதை மெய்குருவிடம் உபதேசமாகப் பெற்று அறிந்து கொள்ளவேண்டும்.

பஞ்சாட்சரம்

மந்திரம்	ஆதாரம்	தெய்வ சக்திகள்	சக்கர கமலம்	இடம்	பூதங்கள்	வண்ணங்கள்
ஓம்	மூலாதாரம்	கணபதி - குண்டலினி	4 இதழ்	குதம்	---	-----
ந	சுவாதிட்டானம்	பிரம்மா - சரஸ்வதி	6 இதழ்	அடிவயிறு	மண்	மஞ்சள்
ம	மணிபூரகம்	விஷ்ணு - லெட்சுமி	10 இதழ்	தொப்புள்	நீர்	வெண்மை
சி	அனாகதம்	ருத்திரன் - துர்க்கை	12 இதழ்	நடுமார்பு	நெருப்பு	சிகப்பு
வ	விசுத்தி	மகேஸ்வரன் - மகேஸ்வரி	16 இதழ்	கழுத்து	காற்று	பச்சை
ய	ஆஞ்ஞா	சதாசிவன் - மனோன்மணி	2 இதழ்	நெற்றி	ஆகாயம்	நீலம்

மெய்ப் பொருள்

மெய்ப்பொருளை உணர்த்த உணர்ந்து கொள்ள வேண்டும். இதை வெளிப்படையாக சொன்னால் தலை வெடிக்கும் என்பது சித்தர்கள் சாபம். ஆதலால் இதை உங்கள் உடம்பிலேயே அறிந்து உண்மையை உணர்ந்து அனுபவித்து தெளிந்து கொள்ளவேண்டும். மெய்ப்பொருளை முப்பொருள் உண்மையாக சொல்வார்கள். நம் உயிரில் சூட்சமமாக உள்ளதே அது.

ஆதி	அனாதி	அந்தம்
முதல்	நடு	முடிவு
அது	பொருள்	மெய்ப்பொருள்
அவன்	அவள்	அது
பதி	பசு	பாசம்
பிரம்மம்	பூஜ்யம்	பூரணம்
சாகாக்கால்	வேகாத்தலை	போகாப்புனல்
அண்டக்கல்	பிண்டக்கல்	நெஞ்சக்கல்
ஆண்	பெண்	அலி
சிவம்	சைவம்	பரம்
மோனம்	ஞானம்	சோதி
கட்டாதலிங்கம்	வெட்டாத சக்கரம்	எட்டாத புஷ்பம்
சிவன்	திருமால்	பிரம்மன்

உ

காப்பு

**1. அரியதோர் நமசிவாயம் ஆதியந்தம் ஆனதும்
ஆரிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்
சுரியதோர் எழுத்தைஉன்னி சொல்லுவேன் சிவவாக்கியம்
தோஷ தோஷ பாவ மாயை தூர தூர ஓடவே.**

மிகவும் அரியதான நமசிவய என்ற அஞ்செழுத்தே ஆதியும் அந்தமுமாக ஆகியுள்ளது. அடுத்து எண்சாண் உடம்பைப் பெற்ற அரிய பிறவியை அடைந்த மனிதர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும் அன்றும் இன்றும் என்றும் ஓதி வருவதும் அனைவருக்கும் எடுத்துரைத்த மந்திரம் "ஓம்நமசிவய" என்பதே. அதுவே அனைத்தும் அடங்கிய ஓரெழுத்தானதையும் என் உயிரில் வாலையாக விளங்குவதையும் உணர்ந்து அந்த ஓர் எழுத்தைத் தியானித்து அதன் உள்ளிருக்கும் சிவனை அறிந்து இதனை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றே ஈசனைத் தியானித்து இந்த சிவவாக்கியம் என்ற நூலைச் சொல்லுகின்றேன்.இதனைப் படித்து உணர்பவர்களுக்கு எல்லா தோஷங்களும் பற்றிய பாவவினைகளும் தொடரும் மாயைகள் யாவும் விலகி தானே வெகுதூரம் ஓடிவிடும்.

**2. கரியதோர் முகத்தையுற்ற கற்பகத்தைக் கைதொழக்
கலைகள் நூற்கண் ஞானமும் கருத்தில் வந்துதிக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரெலாம்
பேயனாகி ஓதிடும் பிழைபொறுக்க வேண்டுமே.**

'கரியதோர் முகத்தையுற்ற கற்பகம்' இது உபதேசத்தினால் உணர்ந்து அறிந்து கொள்ளவேண்டிய மெய்ப்பொருள். இந்த ஒரு பொருளைப் பற்றி உலகோர் உணர்வதற்கே இந்த சிவவாக்கியம் முழுவதும் சொல்லி இருக்கின்றார் சிவவாக்கியர்.

கரிய நிறமுடைய தும்பிக்கையை முகத்தில் உடையவரும் கேட்ட வரங்கள் யாவையும் கற்பகத்தருவைப் போல் வழங்கும் கருணை உடையவரான கணபதியைக் கைகள் தொழுது வேண்டுகிறேன். ஆய கலைகள் அறுபத்தி நான்கும், வேத ஆகம புராண காவிய சாஸ்திர நூல்களில் உள்ள உண்மைகளும்,

முக்கண் ஞான அறிவும் என் கருத்தில் தோன்றி இந்நூலில் உதிக்க வேண்டும். அறிஞர் பெருமக்களும், வயதில் சிறியவராயினும் ஞானம் பெற்றவர்களும், யோக ஞானம் அனைத்தையும் கற்று உணர்ந்தவர்களும் மற்றும் யாவரும் தவறுகளைப் பொறுத்து அருள வேண்டும்.

நூல்

3. ஆன அஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆன அஞ்செழுத்துளே ஆதியான மூவரும்
ஆன அஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆன அஞ்செழுத்துளே அடங்கலாவ லுற்றதே.

நமசிவய என்ற அஞ்செழுத்துக்குள்ளே அண்டமாகிய இவ்வுலகம் அகண்டமாகிய ஆகாய வெளியும் அமைந்துள்ளது. ஆதி பராசக்தியினால் ஆன அஞ்செழுத்தே ஆதியாகி அதிலேயே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் அமர்ந்திருக்கின்றனர். அந்த அஞ்செழுத்தின் உள்ளேயே அகாரமாகவும், மகாரமாகவும் அமைந்துள்ளது. ஆதலின் இந்த அஞ்செழுத்தை அறிந்துணர்ந்து ஓதுங்கள். இந்த அஞ்செழுத்துக்குள்தான் அனைத்து தத்துவங்களும் அடங்கி அது நமக்குள்ளேயே பஞ்சாட்சரமாகி உற்ற பொருளாய் உட்கலந்து இருக்கின்றது.

4. ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே.

அருட்பெருஞ் சோதியான ஆண்டவனாகிய ஈசனை அங்கும் இங்கும் ஓடி ஓடி தேடுகின்றீர்கள். அவன் உங்கள் உடம்பின் உள்ளே கலந்து சோதியாக ஓடி உலாவுவதை காணாது, அவனையே நாடி பற்பல இடங்களுக்கும் ஓடி ஓடி தேடியும் அலைந்தும் காண முடியாமல் உங்கள் ஆயுள் நாட்கள் கழிந்துபோய் கொண்டிருக்கிறது.

அவனை ஞான நாட்டத்துடன் நாடி அச்சோதியாகி ஈசன் நம் உடலிலேயே உட்கலந்து நிற்பதை உணர்ந்து கொள்ளாமல் இவ்வுலக மாயையில் சிக்கி வாட்டமுற்று மாண்டு போகும் மனிதர்கள் எண்ணற்ற கோடி பெறற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்ற இவர்கள் என்றுதான் சோதியாக இறைவன் தம்முள்ளே கலந்து நிற்பதை உணர்ந்து கொள்வார்களோ! தம்முளே உறையும் உயிரை அறியாமல் அவ்வுயிரை ஈசனிடம் சேர்த்து பிறவா நிலை பெற முயலாமல் அவனை அகிலமெங்கும் தேடி ஓடி நாடி வாடி இறந்து போகின்றனரே.

5. உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள் தரித்த நாதர் பாதம் அம்மை பாதம் உண்மையே.

நம் உடம்பில் சுழு முனை நாடியில் மூலாதாரத்தில் தனஞ்செயன் எனும் பத்தாவது வாயு ஒடுங்கி பாம்பைப் போல் சுருண்டு உறங்கிக் கொண்டிருக்கிறது. இதையே யோகிகள் குண்டலினி சக்தி என்பர். தாயின் கர்ப்பத்திலிருந்து முழு உருவமாய் வெளிவரும் போது தனஞ்செயன் என்ற இக்காற்றின் செயலால் தான் பிண்டம் பிறக்கின்றது. அதன் பிறகு எச்செயலும் இன்றி மூலாதாரத்திலேயே ஒடுங்கியுள்ளது. உயிர் உடம்பை விட்டுப் போன பிறகு மூன்று நாட்கள் இருந்து இவ்வுடம்பை அழுகச் செய்தபின் கபாலத்தைப் பிளந்து வெளியேறும். ஆதலால் இதனை நன்கு அறிந்து வாசியோகம் எனும் யோகதந்திரத்தால் கருத்தோடு இருத்தி எழுப்பி சுழுமுனையினால் முதுகுத் தண்டின் வழியாக மேலே ஏற்றி கபாலம் எனும் தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் கொண்டு சேர்த்து தியானம் செய்து வரவேண்டும். இதனை முழு முயற்சியுடன் பயிற்சி செய்து தொடர்ச்சியாக தியானத்தில் இருந்து வருபவர்கள் கிழவனாக இருந்தாலும் இளமை பெற்று மெய் பரவசத்தால் குழந்தையைப் போல் மாறுவர். அவர்கள் உடல் பொன் நிறமாக மாறும். இந்த யோக தந்திரத்தை முறையாக அனுசரித்து செய்து வந்தால் இறையருள் கிடைக்கப் பெற்று இன்புறலாம்.உடம்பிலேயே சிவசக்தி திருவடியான பாதம் மெய்ப்பொருள் என்பது உண்மையே.

**6. வடிவுகண்டு கொண்ட பெண்ணை மற்றொருவன் நத்தினால்
விடுவனோ அவனை முன்னர் வெட்டவேண்டும் என்பனே
நடுவன் வந்து அழைத்த போது நாறும் இந்த நல்லுடல்
சுடலை மட்டும் கொண்டு போய்த் தோட்டி கைக்கொடுப்பரே.**

அழகிய பெண்ணைக் கண்டு மணமுடித்துக் கொண்டவன் அப்பெண்ணை வேறு ஒருவன் தொட்டு விட்டால், விடாதே அவனைப் பிடித்துக் கட்டுங்கள், முதலில் அவனை வெட்டவேண்டும் என்று அரிவாளை எடுப்பான். அந்த அழகிய பெண்ணை விதி வசத்தால் எமன் வந்து உயிரை எடுத்துப் போய்விட்டால் என்ன செய்வாய். மிக அழகிய பெண்ணாயிற்றே என்று அந்தப் பிணத்தை அப்படியே வைத்திருக்க முடியுமா? அவ்வுடம்பில் பிணவாடை வீசி நாற்றமடிக்கும் அல்லவா. ஆகவே அதனைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று தோட்டியின் கையில் கொடுத்து அவன் அவ்வுடலைத் தொட்டு எரிக்கவோ, புதைக்கவோ சொல்லுவார்கள். அப்போது கோபம் வருவதில்லையே! அது ஏன்? அந்த அழகு எங்கு போயிற்று என்பதை யோசியுங்கள்.

**7. என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லிரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே.**

எனக்குளே ஒன்றான மெய்ப்பொருளாக இறைவன் இருக்கின்றான் என்பதை நான் முன்பு அறிந்து கொள்ளவில்லை. அப்பரம் பொருளைப் பல இடங்களிலும் தேடியும், நல்ல நூல்களைப் படித்தும், நல்லோரிடம் பழகியும், நல்ல குருநாதர் மூலம் அது என்னிடையே இருப்பதை யான் அறிந்து கொண்டேன். தனக்குள் இருந்த உயிரை அறிந்து அதனுள் இருக்கும் ஈசனை யார் காண வல்லவர்கள். என்னிலே இருந்த அந்த மெய்ப்பொருளை அறிந்து அதையே என் உள்ளத்தில் இருத்தி தியானித்தில் இருந்து இருந்து அந்த உண்மையை யான் உணர்ந்து கொண்டேன்.

8. நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாயை மாயையே
அனைத்துமாய் அகண்டமாய் அனாதி முன் அனாதியாய்
எனக்குள் நீ உனக்குள் நான் நினைக்கு மாற தெங்கனே.

நான் தியானத்திலிருந்து நினைப்பது ஒன்றான மெய்ப்பொருளே அது நீயேயன்றி வேறு ஒன்றையும் நான் கண்டது இல்லை. நான் தியானத்தில் அமர்ந்து என் நினைவை புருவ மத்தியில் நிறுத்திப் பார்க்கும் போது அங்கு உன் நினைவைத் தவிர வேறு நினைவு இல்லை. நான் நினைப்பதாகவும், மறப்பதாகவும், நின்ற மனம் ஒரு மாயையே, இவ்வுலகில் உள்ள அனைத்துமாகவும் எல்லாம் அடங்கியுள்ள ஆகாயமாகவும் அனாதி காலங்களுக்கும் முன் உள்ள அனாதியாகவும் உள்ளவன் நீயே. எனக்குள் நீ இருப்பதுவும் உனக்குள் நான் இருப்பதையும் உணர்ந்த பிறகு எல்லாம் உன் செயல் என்று அறிந்த பிறகு உன்னை நினைப்பது எவ்விதம் என் ஈசனே. உன்னை மறந்தால் தானே நினைக்க முடியும். உன்னை மறவேன்.

9. மண்ணும் நீ விண்ணும் நீ மறிகடல்கள் ஏழும் நீ
எண்ணும் நீ எழுத்தும் நீ இசைந்த பண் எழுத்தும் நீ
கண்ணும் நீ மணியும் நீ கண்ணுளாடும் பாவை நீ
நண்ணும் நீர்மை நின்ற பாதம் நண்ணுமாறு அருளிடாய்.

பூமியாகவும் ஆகாயமாகவும் ஏழு கடல் நீராகவும், காற்று நெருப்பு என பஞ்ச பூதங்களாகவும் இருப்பவன் நீயே. எட்டிரண்டு என்ற எண்ணாகவும், அகார உகார எழுத்தாகவும் ஆகி இசையுடன் கூடிய தேவாரப் பண்ணாகவும், ஏழு ஸ்வரங்களான சரிகமபதநி என்ற ராக எழுத்தாகவும் உள்ளவன் நீயே. கண்ணாகவும், கண்மணியாகவும் கண்ணுள் ஆடும் பாப்பாவாகவும் ஆனவனும் நீயே. இப்படி அனைத்துமாய் உள்ள உண்மையான பிரம்ம ஞானத்தை எனக்கு வழங்கி என்னுள் நீராகி நின்ற நினது திருவடிப் பாதத்தை என்றும் என் தியானத்தில் வைக்க அருள் செய் ஈசா.

10. அரியும் அல்ல அயனும் அல்ல அப்புறத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்
துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே.

மெய்ப்பொருள் விஷ்ணுவும் அல்ல, பிரம்மாவும் அல்ல. விஷ்ணுவாலும் பிரம்மாவாலும் அடி முடி காண முடியாமல் அப்பாலுக்கப்பாலாய் நின்றவன் ஈசன். அவன் அதுவாகி அப்புறத்தில் அப்புறமாய் கருமை செம்மை வெண்மை நிறங்களை கடந்து நின்று சோதியாகி காரணப் பொருளாய் நமக்குள்ளே இருக்கின்றான். அச்சிவனே சீவனாக கருமையிலும் சிகப்பு வெள்ளை அணுக்களிலும் கலந்து நின்று உயிரும் உடலும் இயங்க காரணமாய் இருக்கிறான். அவனுடைய திருவடி நமக்குள் இருப்பதை உணருங்கள். அது பெரியதும் இல்லை சிறியதும் இல்லை யாவிலும் நடுவாய் இருப்பது. அப்பாதத்தையேப் பற்றி நின்று தியானியுங்கள். அது துரியமாகிய ஆஞ்ஞா கமலத்தில் ஆகாயத் தத்துவத்தையும் கடந்து நிற்பதால் வெகு தூரமாய் தோன்றுகின்றது. இதனை தனக்குள்ளேயே அறிவை அறிந்து உண்மையை உணர்ந்து தியானியுங்கள்.

11. அந்தி மாலை உச்சி மூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்பணங்களும் தபங்களும் செபங்களும்
சிந்தை மேவு ஞானமும் தினம் செபிக்கு மந்திரம்
எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே.

அதிகாலை, மதியம், மாலை என்று மூன்று நேரங்களிலும் நீராடி குளித்துவிட்டு இயம நியமங்களுடன் இருந்து சந்தியா வந்தனம் தர்ப்பணங்கள் போன்றவைகளைச் செய்வதும், பெறற்கரிய தவங்கள் புரிந்து காயத்ரி செபம் செய்வதும், இதனால் வரும் பலன்களால் சிந்தையில் எப்போதும் ஞானம் ஒன்றையே வைத்து தியானம் செய்வதினால் வரும் பலன்களும் எந்தையாகிய ஸ்ரீ இராமனின் ராம மந்திர செபத்தை செய்வதினாலே கிடைக்கும். ஆதலால் குரு நாதரின் ராம நாமத்தை தினமும் செபித்து தியானித்திருங்கள்.

**12. கதாவு பஞ்ச பாதகங்களைத் துரந்த மந்திரம்
இதாம் இதாம் இதல்ல என்று வைத்துழலும் ஏழைகாள்
சதா விடாமல் ஓதுவார் தமக்கு நல்ல மந்திரம்
இதாம் இதாம் இராம ராம ராம என்னும் நாமமே.**

செய்த பாவங்கள் யாவும் அகலவும், பஞ்சமா பாதகங்களைச் செய்யா வண்ணம் காப்பதற்கும் ஓதுவதற்குரிய அரிய மந்திரம் இதுவாக இருக்குமோ அல்லது அதுவாக இருக்குமோ என்று பற்பல மந்திரங்களை ஓதி உச்சரித்து வையகத்தில் வாழ்ந்து உழன்று வரும் ஏழை பக்தர்களே! இதோ சர்வ காலங்களிலும் எந்த நேரத்திலும் உச்சரித்து ஓதுவதற்குரிய அரிய நல்ல மந்திரம் இதுதான் என்பதை உணர்ந்து எப்போதும் இராம ராம ராம என்னும் நாமத்தை என்றும் மறவாது ஓதி உயர்வடையுங்கள்.

**13. நான தேது? நீய தேது? நடுவில் நின்றது ஏதடா?
கோனதேது? குருவதேது? கூறிடும் குலாமரே
ஆனதேது? அழிவதேது? அப்புறத்தில் அப்புறம்
ஈனதேது? ராம ராம ராம என்ற நாமமே.**

நான் என்று ஆனது எது? நீ என்பது எது? ஞானமாகிய நமக்குள் நடுவாக நின்றது என்ன? கோனாகி இவ்வுடலை ஆட்சி செய்வது எது? குருவாக அமைந்திருப்பது எது? அது என்பதை எதுவென்று கூறிடுங்கள் எம் குல மக்களே! ஆதியாக ஆனது எது? அழியும் உடம்பில் அழியாத பொருளாய் நின்றது எது? அது நம் உடம்பிலேயே அப்புறத்திற்கு அப்புறமாய் வெளியாக நின்று உடல் அழிந்த பிறகும் கூட வருவது எது என்பதை நன்கு சிந்தித்து அறிந்து கூறுங்கள். இவை யாவும் ஒன்றே என அறிவை அறிய வைத்து நம் பிறவியை ஈடேற்ற துணையாவது இராம நாமமே என்பதை உணர்ந்து இராம மந்திரத்தை ஓதுங்கள்.

**14. சாத்திரங்கள் ஓதுகின்ற சட்ட நாதப் பட்டரே
வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ
மாத்திரைப் போதும்முளே யறிந்து தொக்க வல்லிரேல்
சாத்திரப்பை நோய்கள் ஏது சத்தி முத்தி சித்தியே.**

சாஸ்திரங்கள் வேத பாராயணங்கள் போன்றவைகளை தினமும் ஓதுகின்ற சட்டநாதப்பட்டரே! உங்களுக்கு நோய் வந்து மாரடைப்பு ஏற்பட்டு வேர்த்து இரைத்து உயிர் ஊசலாடும் போது நீங்கள் சொல்லி வந்த வேதம் அந்நேரம் வந்து உதவுமோ? உதவாது. ஆதலால் ஒரு நொடி நேரமாவது உங்களுக்குள்ளே உள்ள மெய்ப்பொருளை அறிந்து வாசியோகம் செய்து அதையே தொக்கியிருந்து தியானம் செய்து வந்தீர்களானால் சோற்றுப்பையான இவ்வுடம்பிற்கு நோய் என்பது வராது. மரண காலத்திலும் ஈசன் கருணையினால் சக்தியும், முத்தியும், சித்தியும் கிடைக்க மெய்ப்பொருளை அறிந்து தியானியுங்கள். தாங்கள் தினம் தினம் சொல்லி வந்த வேத சாஸ்திரங்களுக்கும் அதனால் சக்தி கிட்டி முத்தி பெற்று சித்தி அடைவீர்கள்.

15. **தூரம் தூரம் தூரம் என்று சொல்லுவார்கள் சோம்பர்கள்**
பாரும் விண்ணும் எங்குமாய்ப் பரந்த அப்பராபரம்
ஊரு நாடு காடு தேடி உழன்று தேடும் ஊமைகள்
நேரதாக உம்முள்ளே அறிந்துணர்ந்து கொள்ளுமே.

இறைவன் வெகுதூரத்தில் இருக்கின்றான் என்றும் அவனை ஆன்மிக நாட்டம் கொண்டு அடையும் வழி வெகுதூரம் என்றும் சொல்லுபவர்கள் சோம்பேறிகள். அவன் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து மண்ணாகவும், விண்ணாகவும் எங்கும் பரந்து இருக்கின்றான். அவனைப் பல ஊர்களிலும் பல தேசங்களிலும் பற்பல காடு மலைகளிலும் உழன்று அலைந்து தேடும் ஊமைகளே! அவ்வீசன் உனக்குள் உள்ளதை உணர்ந்து முதுகுத் தண்டு வளையாமல் நேராக பத்மாசனத்தில் அமர்ந்து தியானித்து அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

16. **நாலு வேதம் ஓதுவீர் ஞான பாதம் அறிகிலீர்**
பாலுள் நெய் கலந்தவாறு பாவிகாள் அறிகிலீர்
ஆலம் உண்ட கண்டனார் அகத்துளே இருக்கவே
காலன் என்று சொல்லுவீர் கனவிலும் மஃது இல்லையே.

ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும் நன்றாக மனப்பாடம் செய்து ஓதுவீர்கள். ஆனால் அந்த நான்கு வேதங்களும் சொல்லும் ஞான பாதம் எது என்பதை அறிவீர்களா? அமுதம் வேண்டி திருப்பாற் கடலைக் கடையும் போது ஆதிசேஷன்

கக்கிய ஆலகால விஷத்தை உண்டு அவனியைக் காத்த நீலகண்டன் நம் உள்ளத்தில் இருப்பதையும் ஞானபாதம் எனும் மெய்ப்பொருளை அறிந்தவர்க்கும் காலன் என்ற எம பயம் கிடையாது. அதை அறிந்து அதையே எண்ணி தியானிப்பவர்களுக்குக் கனவில் கூட எம பயமோ எம வேதனையோ இருக்கவே இருக்காது.

17. வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை
தச்சிலாது மாளிகை சமைந்தவாற தெங்ஙனே
பெற்ற தாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்
சித்திலாத போது சிவனில்லை இல்லை இல்லையே.

பரம்பொருளே அனைத்திற்கும் வித்தாக இருக்கின்றது. அதனாலேயே எல்லா சம்பிரதாயங்களும் மேலுலகிலும், பூலோகத்திலும் அமைந்துள்ளது. அவனன்றி ஓரணுவும் அசையாது. தச்சன் இல்லாது மாளிகை அமையுமா? அஸ்திவாரம் இல்லாத கட்டிடம் எழும்புமா? நம் உடம்பில் உயிராகி வித்தாக இருப்பவன் ஈசன். மானிடப் பிறவிகள் சிவனை வித்தாகக் கொண்டே நடமாடும் கோயிலாக உடம்பு அமைந்துள்ளது. பெற்ற தாயை மறந்துவிட்டு பெண்களிடம் அடிமை கொள்ளும் பேதை மக்களே! பெற்ற ஞானத்தை விற்று சிவன் உறையும் சீவர்களை அடிமைகளாக மாற்றுகின்ற பேதை ஞானிகளே! சிவன் இல்லாது போனால் இந்த சீவனும் இல்லை இந்த உடம்பு இல்லையென ஆகிவிடும் என்பதை உணர்ந்து அச்சிவனையே தியானித்திருங்கள்.

18. அஞ்சும் மூன்றும் எட்டதாம் அநாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்து கொண்டு நீருருச் செபிப்பிரேல்
பஞ்சமான பாதகங்கள் நூறு கோடி செய்யினும்
பஞ்சு போல் பறக்கும் என்று நான் மறைகள் பன்னுமே.

'நம சிவய என்ற அஞ்செழுத்தும்' அ, உ, ம் என்ற மூன்றெழுத்தும் சேர்ந்த 'ஓம் நமசிவய' என்ற எட்டெழுத்து மந்திரமே அனாதியாக விளங்கும் ஈசனின் மந்திரம். இதுவே அனாதியான மந்திரம். இதனை நன்கு அறிந்து கொண்டு நம் உள்ளமாகிய கோவிலிலே இருத்தி நினைந்து நீங்கள் கண்ணீர்சிந்தி அழுது உருக்கொடுத்து செபித்து தியானியுங்கள். எந்த ஜென்மத்திலும் செய்த பஞ்சமா பாதகங்களும் பாவங்களும் அனைத்தும் இம்மந்திர செபத்தால் காற்றில் பஞ்சு பறப்பது போல் நம்மைவிட்டுப் பறந்துவிடும்.

எவ்வித பழிபாவங்களையும் செய்யாவண்ணம் நம்மை நன்னெறியில் நடக்கச் செய்யும் என்று நான்கு மறைகளும் சொல்கின்றன. ஓம் நமசிவய.

19. அண்டவாசல் ஆயிரம் ப்ரசண்டவாசல் ஆயிரம்
ஆறிரண்டு நூறு கோடியான வாசல் ஆயிரம்
இந்த வாசல் ஏழை வாசல் ஏக போகமான வாசல்
எம்பிரான் இருக்கும் வாசல் யாவர் காணவல்லரோ?

இவ்வுலகத்திற்கும் பிற உலகங்களுக்கும் ஆயிரமாயிரம் வழிகள் வாசல்களாக அமைந்திருக்கின்றன. எண் சாண் உடம்பு கொண்ட மானிடப் பிறப்பில் ஒன்பது வாசல்களாக அமைந்து எண்ணாயிரம் கோடி உயிர்களிலும் கோடிக்கணக்கான வாசல்கள் கொண்டு இப்பூமியில் இலங்கி வருகின்றது. இதிலே இறைவன் நம் உடம்பில் பத்தாவது வாசலில் இருந்து உலவுகின்றான். இந்த வாசல் ஏழை வாசலாகவும், ஏகமாகி நின்று இறைவன் இன்பம் கிட்டும் வாசலாகவும் எளிமையாக எல்லோரிடமும் மறைவாக இருக்கின்றது. இந்த பத்தாவது வாசலை அறிந்து யோக ஞானத்தால் அவ்வாசலின் பூட்டை திறந்து எம்பிரானாகிய ஈசன் இருக்கும் வாசலை யாவர் காணவல்லவர்கள்.

20. சாம நாலு வேதமும் சகல சாத்திரங்களும்
சேமமாக ஓதிலும் சிவனை நீர் அறிகிலீர்
காம நோயை விட்டு நீர் கருத்துளே உணர்ந்த பின்
ஊமையான காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே.

காலம் தவறாது நான்கு வேதங்களையும் சகல சாஸ்திரங்களையும் வெகு நேர்த்தியாகவும், ஒழுங்காகவும், மிக அழகாகவும் நன்றாக ஓதி வந்தாலும் சிவன் நீராக உள்ளதை அறியார்கள். தன் உடம்பில் உயிர் இருப்பதையும் அதற்குள் சிவன் இருப்பதையும் அறிந்துணரமாட்டார்கள். தனக்குள் உட்பகையாக இருக்கும் காமம் என்ற நோயை அகற்றிவிட்டு அதே காமம் தோன்றும் இடத்தில் கருத்துடன் எண்ணத்தை வைத்து ஈசனை உணர்ந்து தியானித்தால் நம்மில் ஊமையெழுத்தாகி சூட்சம உடம்பில் இருப்பான் எங்கள் ஈசன் என்பதை அறிந்து நீங்களும் உணர்ந்து தியானியுங்கள்.

**21. சங்கிரண்டு தாரை ஒன்று சன்னல் பின்னல் ஆகையால்
மங்கி மாளுதே உலகில் மானிடங்கள் எத்தனை
சங்கிரண்டையும் தவிர்த்து தாரையூத வல்லீரேல்
கொங்கை மங்கை பங்கரோடு கூடி வாழல் ஆகுமே.**

நமது மூக்கு ஒன்று, வாசல்கள் இரண்டு, அவைகளில் நம் மூச்சுக் காற்றானது இடகலை, பிங்கலை, சுழுமுனை எனும் நாடிகளில் சன்னல் பின்னலாக ஓடி நடந்துகொண்டிருக்கின்றது. இப்படியாக ஒவ்வொரு சுவாசத்திலும் பிராணனில் இருந்து நாலு அங்குலம் நஷ்டமடைகிறது. அதனால் பிணி மூப்பு ஏற்பட்டு ஆயுளும் மங்கி மாண்டு போகும் மனிதர்கள் கோடானு கோடி. இப்படியாக ஓடிகொணடிருக்கும் மூச்சை சந்திரகலை, சூரியகலை வழியாகக் கட்டுப்படுத்தி பிராணாயாமத்தினால் பிராண வாயுவைப் பெருக்கி ரேசகம், பூரகம், கும்பகம் செய்து உடம்பையும், உயிரையும் வளர்க்கவேண்டும். இதனை நன்கு அப்பியாசித்து இடபிங்கலைகளை ஒழுங்குபடுத்தி சுழுமுனை எனும் வாசலைத் திறந்து வாசியினால் தாரை ஊதுவதைப் போல் ஊதி மூலாதாரத்தில் மூண்டெழும் கனலை மேலேற்றி அனலுடன் கூட்டி சோதியில் சேர்க்க வல்லவர்களானால் அழகில் சிறந்த அம்மையை இடபாகங் கொண்ட ஈசருடன் கூடி வாழலாம்.

**22. தங்கம் ஒன்று ரூபம் வேறு தன்மையான வாறு போல்
செங்கண் மாலும் ஈசனும் சிறந்திருந்ததும்முளே
விங்களங்கள் பேசுவார் விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்ற நாமம் இந்த நாமமே.**

தங்கம் என்ற ஒரு பொருளில் இருந்தே கம்மல், வளையல், மோதிரம், தாலி, மூக்குத்தி போன்ற நகைகள் பல வகைகளில் உருவாகி வெவ்வேறு தன்மைகளில் விளங்குகின்றது. அதுபோலவே ஒன்றான பிரமத்தில் இருந்தே திருமாலும் ஈசனும் சிறந்த மெய்ப்பொருளில் அமர்ந்திருந்து நமக்குள்ளே இருக்கின்றார்கள். இதனை அறியாமல் விஷ்ணு பெரிது சிவன் பெரிது என்று வியாக்கினங்கள் பேசி வாழ்பவர்கள் வாழ்வு விளங்காது. நமக்குள் இருந்த பரம்பொருளே இப்பிரபஞ்சம் முழுவதும் நின்றிருப்பதை அறிந்து சிவனும் ஈசனும் ஒன்றாகவே விளங்கும் ஓரெழுத்தை உணர்ந்து தியானியுங்கள்.

23. அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தில் ஓரெழுத்து அறிந்து கூற வல்லீரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே.

ஐந்து பூதங்களால் பிறந்து அந்த ஐந்து பூதங்களின் தன்மைகளால் வளர்ந்து அஞ்செழுத்தின் உண்மைகளை உணராது அதனை பஞ்சாட்சரமாக வெறும் வாயால் மட்டும் அஞ்செழுத்து மந்திரமாக ஓதி வரும் பஞ்சபூதங்களால் ஆன பாவிகளே! பஞ்சபூதங்களும் நமக்குளே பஞ்சாட்ரமாக எவ்வாறு இயங்கி வருகிறது என்ற உண்மையை அறிந்து அதனை அஞ்செழுத்தால் அதற்குரிய இடத்தில் வைத்து ஓதி தியானியுங்கள். நமசிவய என்ற அஞ்செழுத்தில் ஓரெழுத்து என்ன என்பதை அறிந்து அதிலேயே நினைவால் நிறுத்தி செபித்து தியானிக்க வல்லவர்களானால் அந்த அஞ்செழுத்தும் ஓரெழுத்தாகி நிற்கும் அம்பலமான கோயிலில் ஈசன் அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்று நடராஜனாக ஆடி நிற்பான்.

24. அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே அனாதியான தஞ்சுமே
பிஞ்சு பிஞ்சதல்லவோ பித்தர்காள் பிதற்றுவீர்
நெஞ்சிலஞ்சு கொண்டு நீர் நின்று தொக்க வல்லிரேல்
அஞ்சுமில்லை யாருமில்லை அனாதியாகத் தோன்றுமே.

அஞ்செழுத்தே ஐந்து பூதங்களாகவும், ஐந்து புலன்களாகவும் நமது உடம்பில் இருந்து இயங்கி அனாதியான பஞ்சாட்சரமாகி இருக்கின்றது. அதுவே சீவனாகி என்றும் அனாதியாக உள்ள சிவனால் ஜீவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுவே பிஞ்செழுத்தான வாலையாக ஓரெழுத்தாகி உள்ளது. இதனை அறியாமல் பித்தர்களைப் போல் வெறும் வாயால் மட்டுமே பிதற்றுவதால் பயன் ஏது? அந்த அஞ்செழுத்தாக ஆகியிருப்பது இன்னது என்பதை அறிந்து கொண்டு நெஞ்சமாகிய கோவிலிலே அஞ்செழுத்து ஓதி உள்ளம் உருகி கண்ணீர் கசிந்து அங்கேயே நினைவை நிறுத்தி அதிலேயே நின்று தியானிக்க வல்லவர்க்கு அஞ்செழுத்தும் இல்லை, ஆறாதாரங்களும் இல்லை. அஞ்செழுத்தும், ஆறு ஆதாரங்களில் உள்ள தெய்வ சக்திகளும் ஒன்றான சிவமாகி அனாதியாகத் தோன்றும்.

25. நீளவீடு கட்டுநீர் நெடுங்கதவு சாத்துறீர்
வாழ வேணு மென்றல்லோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலன் ஓலை வந்த போது கையகன்று நிற்பிரே
ஆலமுண்ட கண்டர் பாதம் அம்மை பாதம் உண்மையே.

தான் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்பதற்காக நீளமாக பெரிய வீட்டைக்கட்டி வேறு எவரும் உள்ளே நுழையா வண்ணம் பெரிய நிலையுடன் கூடிய கதவுகளை அமைத்து வைத்து வாழ்ந்திருக்கும் மனிதர்களே! எத்தனைக் கதவுகள் அமைத்து சாத்தி வைத்தாலும் எமனின் ஓலையில் எழுதியபடி உயிர் போகும் தருணத்தில் எதைக் கொண்டும் தடுக்க இயலாமல் நம்மால் எதுவும் ஆகாது என கைவிரித்து நிற்பார்கள். ஆலகால விஷத்தை உண்டு அகிலம் முழுமையும் காத்த நீலகண்டராகிய ஈசன் பாதமும் அம்மை சக்தியின் பாதமும் நம்மிடம் உள்ளதை உணர்ந்து அத்திருவடிகளைப் பற்றித் தியானியுங்கள். அத்திருவடி சத்தியமாக நம்மை கரை சேர்க்கும். இது உண்மையே.

26. வீடடுத்து வேள்வி செய்து மெய்யினோடு பொய்யுமாய்
மாடு மக்கள் பெண்டீர் சுற்றம் என்றிருக்கும் மாந்தர்காள்
நாடு பெற்ற நடுவர் கையில் ஓலை வந்து அழைத்திடில்
ஓடு பெற்ற அவ்விலை பெறாது காண் இவ்வுடலமே.

மெய்யாகிய வீட்டை அறியாது பொய்யான வாழ்வை நம்பி, புது வீட்டைக் கட்டி வேள்விகள் செய்து புதுமனை புகுவிழா நடத்தி, மாடு மக்கள் மனைவி சொந்த பந்தங்கள் என அனைவரோடும் எப்போதும் இப்படியே இருப்போம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களே! நல்லது கெட்டது என்பதை நடுவாக இருந்து தீர்ப்பளிக்கும் இறைவனின் இறுதி ஓலை எமன் கையில் கிடைத்து இவ்வுயிரைக் கொண்டு போனால் மண்ணால் செய்த ஓடு பெறும் விலை கூட பெறாது ஒரு காசுக்கும் உதவாது இவ்வுடம்பு என்பதைக் கண்டு அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள். ஆதலின் இவ்வுடலில் ஈசன் இருக்கும் போதே அவனை உங்களில் கண்டுணர்ந்து தியானியுங்கள்.

27. ஓடம் உள்ள போதலோ ஓடியே உலாவலாம்
ஓடம் உள்ள போதலோ உறுதி பண்ணிக் கொள்ளலாம்
ஓடமும் உடைந்த போது ஒப்பிலாத வெளியிலே
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லையானதே.

ஓடமாகிய இவ்வுடம்பு இருந்தால்தான் அங்கும் இங்கும் ஓடி உலாவலாம். இந்த உடம்பில்தான் உயிர் உள்ளது என்பதையும் அதிலேதான் இறைவன் இருக்கிறான் என்பதையும் அறிந்து பிராணாயாமம், வாசியோகம், தியானம், தவம் போன்றவைகளை அறிந்து புரிந்து இவ்வுடம்பை உறுதியான கல்பதேகமாக மாற்றிக் கொள்ளலாம். இதை உணராது இவ்வுடலை விட்டு உயிர்போய் ஆகாயத்தில் மறைந்துவிட்டால் அப்போது இவ்வுடலில் ஆடிக்கொண்டிருந்த உயிரும் இல்லை, அதனை மேய்த்துக் கொண்டிருந்த ஈசனும் இல்லை என்றாகி தம் மனைவி மக்களோ, சொந்த பந்தங்களோ யாரும் இல்லாது போய்விடும். ஆகவே இவ்வுடம்பில் உயிர் இருக்கும் போதே இறைவனை அறிந்து தியானம் செய்யுங்கள், பிறவிப் பெருங்கடலைக் கடந்து கரை சேரலாம்.

28. அண்ணலே அனாதியே அனாதிமுன் அனாதியே
பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்
கண்ணில் ஆணின் சுக்கிலம் கருவில் ஓங்கும் நாளிலே
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாறு எங்ஙனே.

நம் ஆருயிரில் ஆதி, அனாதி, அந்தமாக உள்ளவன் சிவனே. அவனே அநாதிக்கும் முன் தோன்றிய அநாதியாக என்றும் நம் ஆன்மாவில் உறைகின்றான். பிறப்பதற்கு முன் எல்லா ஆன்மாக்களும் ஓரெழுத்தாக ஒன்றாகவே இருந்தது. அவைகளுக்கு ஆண், பெண் என்ற பேதம் ஏதும் கிடையாது அது கண்ணில் நினைவாகத் தோன்றி ஆணிடம் சுக்கிலமாக உற்பத்தியாகி உருவாகின்றது. அப்போதே ஆன்மாவில் ஆண்டவன் நுழைந்து விடுகின்றான். பின்னரே உருவாகி ஆன்மா வளர்கின்றது. இப்படித்தான் மண்ணில் வாழும் மனிதர்களாகவும், விண்ணில் சேரும் தேவர்களாகவும் அனைவரும் வந்தனர் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**29. பண்டுநான் பறித்து எறிந்த பன்மலர்கள் எத்தனை?
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை?
மிண்டனாய்த் திரிந்த போது இரைத்த நீர்கள் எத்தனை?
மீளவும் சிவாலயங்கள் சூழ வந்தது எத்தனை?**

தன் வாழ்நாளில் முன்பு வீணாய்ப் பறித்து எறிந்த பல்வகை மலர்கள் எத்தனையோ? மற்றவரை பாழாக்குவதற்கு செபித்து விட்ட மந்திரங்கள் எத்தனையோ? இளைஞனாய்த் திமிரெடுத்துத் திரிந்த போது சிற்றின்பத்தில் இரைத்த நீர்கள் எத்தனையோ? இம்மாதிரி செய்ய தகாதவைகளைச் செய்து அதனால் ஏற்பட்ட பாவங்கள் அகல சுற்றி வந்த சிவாலயங்கள் எத்தனையோ என்பதை உணர்ந்தறியுங்கள்.

**30. அண்டர்கோன் இருப்பிடம் அறிந்து உணர்ந்த ஞானிகள்
பண்டறிந்த பான்மை தன்னை யார் அறிய வல்லரோ?
விண்ட வேதப் பொருளை அன்றி வேறு கூற வகையிலா
கண்ட கோயில் தெய்வமென்று கையெடுப்பது இல்லையே.**

அண்டங்கள் யாவினுக்கும் அரசனான ஈசனை, அவன் கோனாக அமர்ந்து தனக்குள் ஆட்சி செய்யும் இடம் இதுவென அறிந்து, உணர்ந்த ஞானிகள் அவனையே தியானித்து இருப்பர். அவர்கள் இந்த உண்மையை அறிவதற்காக பட்ட பாட்டினையும், இழந்த பொருளையும், அலைந்த அனுபவங்களையும், அலைந்து தேடியதையும் யாராவது அறிய முடியுமா? வேதங்கள் வெளிப்படுத்தும் மெய்ப்பொருளை ஈசனாக அறிந்தவர்கள் தனக்குள்ளே இறைவனைக் கண்டு, கண்ட அதே தெய்வம் என உணர்ந்தவர்கள் காணுகின்ற கோயில்களில் எல்லாம் தெய்வம் இருப்பதாக எண்ணி கைதொழ மாட்டார்கள்.

**31. நெருப்பை மூட்டி நெய்யை விட்டு நித்தம் நித்தம் நீரிலே
விருப்பமோடு நீர் குளிக்கும் வேத வாக்யம் கேளுமின்
நெருப்பும் நீரும் உம்முளே நினைந்து கூற வல்லிரேல்
சுருக்கம் அற்ற சோதியை தொடர்ந்து கூடல் ஆகுமே.**

நாள் தோறும் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு நெருப்பை மூட்டி அதில் நெய்யை வார்த்து வேதங்களை ஓதும் வேதியரே! அந்த வேதங்கள் சொல்கின்ற மெய்ப்பொருளை உணருங்கள். சிகாரமான அதை சிவயநம என்ற பஞ்சாட்சரத்தால் நினைத்து கூறி வந்து தியானிப்பவர்களானால் அம்மெய்ப்பொருள் சுருக்கமே அற்ற சோதியாக இருப்பதை உணருங்கள். இதனை முறையாக தொடர்ந்து செய்து வந்தால் சோதி நிலைத்து ஈசன் அருள் பெற்று அவனோடு சேர்ந்து வாழலாம்.

32. பாட்டிலாத பரமனை பரமலோக நாதனை
நாட்டில்லாத நாதனை நாரிபங்கன் பாகனை
கூட்டிமெல்ல வாய் புதைத்து குணுகுணுத்த மந்திரம்
வேட்டகாரர் குசுகுசுப்பை கூப்பிடா முடிந்ததே.

பாட்டுகள் யாவும் பரமனையே பாடுகின்றது. எல்லா லோகங்களுக்கும் அவனே நாதன். எல்லா நாடும் அவன் நாடே. மௌனமாக விளங்கும் பரம்பொருளே நாதமாகவும், விந்தாகவும் விளங்குகின்றது. நாரணன் தங்கையான சக்திக்குத் தன் இடப்பாகம் தந்த சிவனை தம் உடம்பிலேயே இருப்பதை அறிந்துகொண்டு வாய் மூடி மௌனமாக இருந்து உச்சரிக்க வேண்டிய மந்திரமே ஓம் நம சிவய. அவனை எண்ணி தியானம் செய்ய வாசியோகம் தெரிய வேண்டும். அது இரவில் வேட்டைக்குச் செல்லும் வேட்டைக்காரர்கள் மற்றவரிடம் பேசி தெரிவிக்க குசு குசு வென்றே கூப்பிடுவர். இந்த இரகசியமான பாஷையை அறிந்து கொண்டு அதன்படி வாசியோகப் பயிற்சி செய்து வந்தால் இப்பிறவிப் பிணி முடிய அதுவாகிய ஈசன் திருவடி கிட்டும்.

33. செய்ய தெங்கிலே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே.

தென்னை மரத்தின் மேலே காய்க்கும் தேங்காயின் உள்ளே இளநீர் எப்படி சேர்ந்துள்ளதோ, அது போலவே ஈசன் எனது உள்ளத்தில் புகுந்து கோயில் கொண்டு இருக்கின்றான். என் உள்ளம் என்பதையும் அதிலே என் ஐயன் புகுந்து கோயில் கொண்ட இடம் எது என்பதையும் தெரிந்து கொண்டபின் இவ்வுலகத்தில் உள்ள ஆசைவயப்பட்ட மாந்தர்கள் முன்னம் வாய் திறந்து பேசா மௌனியானேன்.

**34. மாறுபட்ட மணி துலக்கி வண்டின் எச்சில் கொண்டு
போய் ஊறுபட்ட கல்லின்மீதே ஊற்றுகின்ற மூடரே
மாறுபட்ட தேவரும் அறிந்து நோக்கும் என்னையும்
கூறுபட்டு தீர்க்கவோ குருக்கள் பாதம் வைத்ததே.**

செம்பு, பித்தளை, வெண்கலம் போன்றவைகளின் கலப்பினால் மாறுபட்டு செய்த ஓசை மணியை ஒலித்து, வண்டின் எச்சிலாகிய தேனைக் கொண்டு உளியினால் பற்பல வகையில் உடைத்து செதுக்கப்பட்ட கற்சிலையின் மீது ஊற்றி அபிஷேகம் செய்து அதன் உட்பொருளை அறியாத மூடர்களே! மெய்ப்பொருளாகிய ஈசன் நம்மிடமே மாறுபட்ட அண்டக்கல்லாக இருப்பதை அறிந்து அதிலேயே அபிஷேகம் செய்து அதனையே நோக்கி தியானிக்கவும், செய்த பாவங்கள் யாவையும் கூறுபட்டு தீர்க்கவும் மெய்குருவின் திருவடிகளை சிந்தையில் வைத்து தவம் செய்யுங்கள்.

**35. கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே.**

கோயில் என்பது என்ன? குளங்கள் ஆவது எது? என்பதை அறியாமல், புறத்தில் அமைந்துள்ள கோயில் குளங்களில் தீர்த்தமாடி வணங்கிவரும் எம்குல மக்களே! நமது உடம்பினுள் கோயிலாகவும், குளமாகவும் மனமே அமைந்துள்ளது. அம்மனதை நிலைநிறுத்தி தியானித்தால் ஆன்மாவை அறிந்து கொள்ளலாம். அவ்வான்மா என்றும் நித்தியமாக உள்ளது என்பதையும் அது உற்பனம் ஆவதும் இல்லை உடம்பைப் போல் அழிவதும் இல்லை என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

**36. செங்கலும் கருங்கலும் சிவந்த சாதிலிங்கமும்
செம்பிலும் தராவிலும் சிவன் இருப்பன் என்கிறீர்
உம்பதம் அறிந்து நீர் உம்மை நீர் அறிந்தபின்
அம்பலம் நிறைந்த நாதர் ஆடல்பாடல் ஆகுமே!**

செங்கற்களாலும், கருங்கல்லினாலும், சிகப்பு நிறம் பொருந்திய சாதி லிங்கத்திலும், செம்பிலும், தராவினாலும் செய்த சிலைகளிலும் சிவன் இருக்கின்றான் என்கின்றீர்களே! உம்மிடம் சிவன் இருப்பதை அறிவீர்களா? உம்மை நீர் அறிந்து உமக்குள்ளே

உயிரை உணர்ந்து அதில் கோயில் கொண்டு விளங்கும் சிவனின் திருடியைப் பற்றி அதையே நினைந்து ஞான யோகம் செய்து தியானத்தால் திறந்து நான் யார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நமக்குள்ளேயே திருச்சிற்றம்பலமாக விளங்கும் இடத்தில் ஈசனின் நடனத்தையும் அதனால் அடையும் நாதலயமும் கிடைத்து இன்புறலாம்.

37. பூசை பூசை என்று நீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுள்ள தன்னிலே பூசைகொண்டது எவ்விடம்
ஆதி பூசைகொண்டதோ அனாதி பூசைகொண்டதோ
ஏது பூசை கொண்டதோ இன்னதென்று இயம்புமே!

கால நேரம் தவறாமல் பூசை செய்யும் பக்தர்களே! பூசை என்றால் என்ன என்பதை அறிவீர்களா? பூ என்பது நம் ஆன்மாவே 'சை 'என்பது அசையாமல் நிறுத்துவது இதுவே உண்மையான பூசையாகும். இந்த பூசையை நமக்குள்ளேதான் செய்யவேண்டும். ஆன்மாவான பூவை அது எந்த இடத்தில் இருக்கிறதோ அங்கேயே நினைத்து நினைந்து நிறுத்தி அசையாமல் இருத்துவதே பூசை என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதை யோக தியானத்தால்தான் நமக்குள்ளே செய்ய வேண்டும். இதைவிட்டு நீங்கள் செய்கின்ற பூசைகள் யாவும் புறச்சடங்குகளே. ஆதியான சக்தியோ அனாதியான சிவனோ இந்த பூசையை ஏற்றுக்கொண்டார்களா? ஆதலால் அப்பூசை செய்து தியானியுங்கள். அதனை ஆதியாகவும் அனாதியாகவும் நம் உயிரில் உறையும் சிவனும், சக்தியும் ஏற்றுக்கொள்வார்கள்.

38. இருக்கு நாலு வேதமும் எழுத்தை அறவோதினும்
பெருக்க நீறு பூசிலும் பிதற்றினும் பிரான் இரான்
உருக்கி நெஞ்சை உட்கலந்து உண்மை கூற வல்லிரேல்
சுருக்கம் அற்ற சோதியைத் தொர்ந்து கூடலாகுமே.

இருக்கும் நான்கு வேதங்களில் உள்ள எழுத்துக்கள் யாவையும் மனப்பாடம் செய்து நன்கு ஓதுவதினாலோ, உடம்பு முழுமையும் நிறைத்து பதினாறு பட்டைகள் போட்டு விபூதி பூசுவதினாலோ, சிவசிவ என வெறும் வாயால் பிதற்றுவதிலோ எம்பிரானாகிய சிவன் இருப்பதில்லை. நமக்குள்ளேயே உள்ள சிவனை அறிந்து நெஞ்சுருகி, கண்ணில் நீர் மல்கி கசிந்து நினைந்து தியானிக்க வேண்டும். அந்த உண்மையான மெய்ப்பொருளைஉணர்ந்துகொண்டு தியானம் தொடர்ந்து செய்தால் சுருக்கம் இல்லாத சோதியான அப்பரம் பொருளோடு கூடி வாழ்வோம்.

39. **கலத்தில் வார்த்து வைத்த நீர் கடுத்த தீ முடுக்கினால்**
கலத்திலே கரந்ததோ கடுத்த தீ குடித்ததோ
நிலத்திலே கரந்ததோ நீள் விசும்பு கொண்டதோ
மனத்தின் மாசை நீக்கியே மனத்துள்ளே கரந்ததோ.

வெண்கலப் பானையில் பிடித்து வைத்த நீரை அடுப்பில் வைத்து தீயை மூட்டி அதிகமாக எரியவிட்டால், அப்பானையில் உள்ள நீர் முழுவதும் சுண்டிப்போய் ஆவியாகிவிடும். அப்பானை முழுவதும் வைத்த நீரை அதிலேயே கரைந்து மறைந்ததா? கடுமையாக எரியவிட்ட தீ குடித்ததா? அல்லது நிலமாகிய மண்ணில் கரைந்ததா? அனைத்தும் அடங்கிய ஆகாயத்தை அடைந்ததா? என்பதைச் சிந்தியுங்கள். அந்த நீர் ஆவியாகி ஆகாயத்தை அடைந்ததுவே உண்மை என்பதைப் புரிந்து கொண்டு நம் மனதின் உள்ளே உள்ள மாயையான பாவங்களையும், குற்றங்களையும் நீக்கி அதே மனத்தை இறைவன்பால் செலுத்தி தியானம் செய்து வந்தால் நம் ஆன்மாவை மனமாகிய ஆகாயத்தில் கரைக்கலாம். எப்படி நீரானாது பானையில் தீயால் மறைந்ததோ, அதுபோல தியானத் தீயால் ஆகாயம் ஆளலாம்.

40. **பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா**
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப்பாரும் உம்முள்ளே.

பறைச்சி என்பதும் பார்ப்பனத்தி என்பதும் ஏனடா? அவர்கள் அனைவருமே பெண்கள் தானே. யாவருக்கும் தசை, தோல், எலும்பு யாவும் ஒரே மாதிரிதானே அமைந்துள்ளது. அதில் எதிலாவது இவள் தாழ்ந்த சாதி, அவள் உயர்ந்த சாதி என்று எழுதப்பட்டா இருக்கிறது. பெண்கள்பால் கிடைக்கும் சிற்றின்பம் யாவருக்கும் ஒன்றாகவே அனுபவம் கிடைக்கின்றது. இவையாவையும் நன்கு பகுத்தறிந்து உனக்குள்ளே இருக்கும் இறையை உணர்ந்து தியானம் செய்து பாருங்கள்.

41. **வாயிலே குடித்தநீரை எச்சில் என்று சொல்லுறீர்**
வாயிலே குதப்பு சொல் வேதமென படக்கடவதோ
வாயில் எச்சில் போகவென்று நீர்தனை குடிப்பீர்காள்
வாயில் எச்சில் போன வண்ணம் வந்திருந்து சொல்லுமே.

மற்றவர் வாய்வைத்த நீரை எச்சில் என்று சொல்லி கீழே கொட்டுகின்றீர்களே! உங்கள் வாயால் எச்சிலோடு கலந்து சொல்லும் வார்த்தைகளை மட்டும் வேதம் என்கின்றீர்கள். வாயில் உள்ள எச்சில்போக அவ்வாயினால் நீரைக் குடிக்கின்றீர்கள். வாயில் உள்ள எச்சிலும் நீர்தான். அதனால் வாயில் உள்ள எச்சில் எவ்வாறு எவ்வண்ணம் போனது என்பதை எனக்கு வந்திருந்து சொல்லுங்கள்.

42. **ஓதுகின்ற வேதம் எச்சில் உள்ள மந்திரங்கள் எச்சில்**
போதகங்களானது எச்சில் பூதலங்கள் ஏழும் எச்சில்
மாதிருந்த விந்து எச்சில் மதியும் எச்சில் ஒலியும் எச்சில்
ஏதில் எச்சில் இல்லதில்லை இல்லை இல்லை இல்லையே.

வாயினால் ஓதுகின்ற வேதம், மந்திரங்களாக உள்ளவை, உண்ணும் உணவு, ஏழு உலகங்கள், பெண்களிடம் விட்ட விந்து, அறிவு, சப்தங்கள் யாவுமே எச்சில்தான். ஆகவே அனைத்தும் நீராகிய எச்சிலால் ஆனது என்பதை அறிந்து கொள்ளுங்கள், நீரில்லாமல் ஏதும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

43. **பிறப்பதற்கு முன்னெல்லாம் இருக்குமாற தெங்கனே**
பிறந்து மண்ணிறந்து போய் இருக்குமாற தெங்கனே
குறித்து நீர் சொலாவிடில் குறிப்பில்லாத மாந்தரே
அறுப்பனே செவியிரண்டும் அஞ்செழுத்து வாளினால்

பிறப்பதற்கு முன்பு நாம் எங்கிருந்தோம், பிறந்து வளர்ந்து வாழ்ந்து இறந்த பின் எங்கே போய் இருப்போம் என்பதை எண்ணிப் பாருங்கள். இப்பிறவியின் மேன்மையை உணராமல் எந்த இலட்சியமும் இல்லாமல் மறைந்து போகும் மானிடர்களே! உங்கள் பிறவியை அறுக்கவும் மீண்டும் பிறவாமல் இருக்கவும் அஞ்செழுத்து என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை உங்கள் காதுகளில் ஓதுகின்றேன்.

44. அம்பலத்தை அம்புகொண்டு அசங்கென்றால் அசையுமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ
இன்பமற்ற யோகியை இருளும் வந்து அணுகுமோ
செம்பொன் அம்பலத்துளே தெளிந்ததே சிவாயமே.

அம்பலமாய் இருக்கின்ற ஆகாயத்தை அம்பைவிட்டு அசை என்றால் அசையுமா? கலங்கமில்லாத திருப்பாற்கடலை கலங்க முயன்றால் கலங்குமா? அதுபோல் உலக இன்பங்களைத் துறந்து செவ்வனே யோக, தியானம் பயின்று வந்த யோகிகளிடம் துன்பமாகிய இருள்கிட்டே அணுகுமா? செம்மையான பொன்னம்பலத்தில் சோதியாக விளங்கும் சிவனை அறிந்து தெளிந்து 'சிவாயநம' எனத் தியானம் செய்து உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.

45. சித்தம் ஏது சிந்தை ஏது சீவன் ஏது சித்தரே
சத்தி ஏது சம்பு ஏது சாதிபேதம் அற்றதேது
முத்தி ஏது மூலம் ஏது மூலமந்திரங்கள் ஏது
வித்திலாத வித்திலே இன்னதென்று இயம்புமே.

சித்தர் என்றும் அவதாரம் என்றும் சொல்லித்திரியும் ஞானிகளே! சித்தம் என்று சொல்லும் இடம் எது? சிந்தனை எங்கு தோன்றுகிறது? சீவனாகிய உயிர் எங்குள்ளது? சத்தியாகிய வாலை இருப்பிடம் எது? சம்பு எனப்படும் ஈசன் உலாவும் இடம் எது? சாதிபேதம் இல்லாதது எது? முத்தியை அளிப்பது எது? உடம்பு உயிருக்கு மூலம் எது? மூலமந்திரமான ஓரெழுத்து எது? என்பதை எல்லாம் அறிவீர்களா? வித்தே இல்லாமல் வித்தாக என்றும் நித்தியமாய் விளங்கும் உளதாய் இலதாய் உள்ள பொருளை இதுதான் அது என்று விளக்கமாக இயம்புங்கள்.

46. சித்தமற்று சிந்தையற்று சீவனற்று நின்றிடம்
சத்தியற்று சம்புவற்று சாதிபேதமற்று நன்
முத்தியற்று மூலமற்று மூலமந்திரங்களும்
வித்தை இத்தை ஈன்ற வித்தில் விளைந்ததே சிவாயமே.

தியான நிலையில் சித்தத்தையும், சிந்தையையும், சீவனையும் அறிந்து அது நின்ற இடத்தில் மனதை நிறுத்தவேண்டும். அங்கு வாலையாகிய சத்தியையும் அறிவாகிய சிவனையும் சாதிபேதம் ஏதுமின்றி இரண்டும் ஒன்றான மெய்ப்பொருளில் சேர்க்க

வேண்டும். அதுவே முக்திக்கு வித்தாகும். இந்த உண்மையை உணர்ந்து மூலாதாரத்தில் மூலமந்திரமான ஓரெழுத்தை மேலே ஏற்றி ஆறு ஆதாரங்களையும் கடந்து சகஸ்தர தலத்தில் சேர்க்க வாசி என்ற யோக வித்தையை அறிந்து பயிற்சி செய்ய வேண்டும். ஞான வித்தையான பிரமமான ஓரெழுத்தெனும் வித்தில்தான் அஞ்செழுத்தும் விளைந்து பஞ்பூதங்களாய் விரிந்து நிற்கின்றது.

47. சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகம் பொன் ஒன்றலோ
சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே

ஆண், பெண் என்பது தானே சாதி, இதில் பல சாதிகள் ஏதப்பா? இவ்வுலகம் முழுமையும் நீர்தான் நிரம்பியுள்ளது. அதுபோல் உயிரும் நீராகத்தான் உள்ளது. உடம்பில் பத்தாம் வாசலாகவும் பஞ்சபூதமாகவும், பஞ்சாட்சரமாகவும் உள்ள பொருள் ஒன்றே. அது நகைகளில் காதில் அணியும் தோடாகவும், மூக்குத்தியாகவும், வளையல் போன்ற பல வகையாகவும் இருப்பது தங்கம் ஒன்றே. இதை அறியாமல் எல்லா உயிர்களும் இறைவனிடம் இருந்து வந்ததை உணராமல் சாதி பேதம் பேசுகின்ற உங்கள் தன்மைகளை என்னென்பேன்!

48. கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா
விரிந்தபூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா
இறந்தவர் பிழைப்பதில்லை இல்லை இல்லை இல்லையே.

பசுவின் மடியில் இருந்து கரந்த பால் மீண்டும் முலைக் காம்பில் சேராது. மோரிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்வெணய் மீண்டும் மோராகாது. உடைந்து போன சங்கிலிருந்து ஓசை வராது. உடம்பிலிருந்து வெளியேரும் உயிர் மீண்டும் உவ்வுடலாகிய சங்கில் புகாது, விரிந்த பூ மொட்டாகாது. மரத்திலிருந்து உதிர்ந்த காய் மீண்டும் மரத்தில் ஒட்ட முடியாது. அதுபோல்தான் நம் உடம்பை விட்டு உயிர் போய்விட்டால் மீண்டும் அவ்வுடம்பில் சேர்ந்து பிழைக்க வைக்க முடியவே முடியாது. ஆகவே உடம்பில் உயிர் உலாவிக் கொண்டிருக்கும் போதே யோக தியானம் செய்து இறைவனை அடைந்து பிறவா நிலை அடையுங்கள்.

49. அறையினில் கிடந்தபோது அன்று தூமை என்கிறீர்
துறை அறிந்து நீர் குளித்த அன்று தூமை என்கிறீர்
பறையறைந்து நீர் பிறந்த அன்று தூமை என்கிறீர்
புரை இலாத ஈசரோடு பொருந்துமாறது எங்ஙனே?

பெண்கள் அறையில் ஒதுங்கிக்கிடந்தால் தீட்டு, அவர்கள் குளிக்கும் அறையில் குளித்தால் தீட்டு, பிறந்தால் தீட்டு, இறந்தால் தீட்டு என்று சொல்கிறீர்களே! இவ்வுடம்பில் உயிரில் உள்ள தீட்டோடுதானே ஈசன் பொருந்தி இருக்கின்றான். அதனை அறியாமல் தீட்டு என்று ஒதுக்குவதில் என்ன பயன் கண்டீர்கள்

50. தூமை தூமை என்றுளே துவண்டு அலையும் ஏழைகாள்
தூமையான பெண்ணிருக்க தூமை போனது எவ்விடம்
ஆமைபோல மூழ்கி வந்து அநேகவேதம் ஓதுறீர்
தூமையும் திரண்டுருண்டு சொற்குருக்கள் ஆனதே.

தீட்டாகி விட்டதே என்ற சொல்லி துவண்டு வருந்தி அலையும் ஏழைகளே! தூமையான வாலைப் பெண் உனக்குள்ளேயே இருக்கும்போது தீட்டு என்பது உன்னை விட்டு எவ்விடம் போகும். அதுபோனால் உயிரும் உடலைவிட்டுப் போய்விடும். ஆமையைப் போல் நீரில் தலையை மூழ்கிவிட்டு தீட்டுப் போய் விட்டதாகக் கூறி அனேகவித வேத மந்திரங்களை ஓதுகின்றீர்கள். அந்த வேத சாஸ்திரங்களை உங்களுக்குச் சொல்லித் தந்த சொற்குருக்களும் இந்த தூய்மையினால் தான் உருவாகி வளர்ந்து திரண்டுருண்டு ஆனவர்கள் தான் என்பதை அறிந்துணருங்கள்.

51. சொற்குருக்கள் ஆனதும் சோதிமேனி ஆனதும்
மெய்க்குருக்கள் ஆனதும் வேண பூசை செய்வதும்
சற்குருக்கள் ஆனதும் சாத்திரங்கள் சொல்வதும்
செய்க்குருக்கள் ஆனதும் திரண்டுருண்ட தூமையே.

சொற்குருக்கள் ஆனவர்களும், சோதியான ஈசன் உடம்பில் ஆவதும், மெய்க்குருக்கள் ஆனவர்களும் வேண்டிய பூசை செய்வதும் சற்குருக்கள் ஆனவர்களும் சாஸ்த்திரங்கள் யாவும் சொல்வதும் செய்குருக்கள் ஆனவர்களும் ஆகிய அனைவருமே தூமையில் கருவாகி திரண்டுருண்டு உருவானவர்களே.

**52. கைவடங்கள் கொண்டு நீர் கண்சிமிட்டி நிற்கிறீர்
எவ்விடங்கள் கண்டு நீர் எண்ணி எண்ணிப் பார்க்கிறீர்
பொய் இறந்த சிந்தையை பொருந்தி நோக்க வல்லிரேல்
மெய்கடந்து உம்முளே விரைந்து கூடல் ஆகுமே.**

எவ்வளவோ கை முறைகள் கொண்டு யோக ஞானம் கற்றாலும் நம் மெய்யில் மெய்யான இடம் எதுவென அறியாமல் கண்களைச் சிமிட்டி நிற்கிறீர். ஈசன் இருக்கும் இடம் எங்கே என்று தெரிந்து கொள்ளாமல் எவ்விடத்தில் மனதை இறுத்தி தியானம் செய்கிறீர். பொய்யான யாவையும் ஒழித்து மெய்ப்பொருளை நன்கு உணர்ந்து, அங்கேயே சிந்தையைப் பொருத்தி அதையே நோக்கி தியானிக்க வல்லவர்களானால் மெய்ப்பொருளில் சோதியாக விளங்கி எல்லாவற்றையும் கடந்து நின்ற ஈசனை உங்களுக்குள்ளேயே கண்டு விரைவில் சேர்ந்து கூடி இறவா நிலையைப் பெறுங்கள்.

**53. ஆடு காட்டி வேங்கையை அகப்படுத்து மாறுபோல்
மாடுகாட்டி என்னைநீ மதிமயக்கல் ஆகுமோ
கோடு காட்டி யானையைக் கொன்றுரித்த கொற்றவா
வீடு காட்டி என்னை நீ வெளிப்படுத்த வேணுமே.**

ஆட்டைக் கட்டிவைத்து, வலை விரித்து வேங்கைப் புலியைப் பிடிப்பது போல் மாடு, மக்கள், மனை, செல்வம் என்ற ஆசை வலைக்குள் என்னை அகப்படுமாறு மயங்கச் செய்வது முறையோ! தாருகாவனத்து முனிவர்கள் எல்லாம் நம் அறிவால் எதையும் சாதிக்கும் சக்தி நமக்கு இருக்க நாம் ஏன் ஈசனை வணங்க வேண்டும் என ஆணவம் பெருகி இறைவனை மதியாது யாகம் செய்தனர். ஈசன் பிச்சாடனராக நிர்வாண கோலத்தில் தாருகாவனம் சென்றார். ஈசனைக் கண்ட ரிஷி பத்தினிகள் அனைவரும் அவர் அழகில் மயங்கிய வண்ணம் அப்படி அப்படியே தங்கள் நிலைமையை மறந்து பின் தொடர்ந்தனர். இதனைக் கண்ட முனிவர்கள் இறைவனை உணராது கோபம் கொண்டு யாகத்தீயிலிருந்து யானையை உருவாக்கி ஈசனைக் கொல்ல ஏவினர். ஈசன் அதனைக் கொன்று அதன் தோலை உரித்து அணிந்து கொண்டார். அதுபோலன்றி ஆணவம் அகங்காரம் என்னைப் பற்றாமல் என் அறிவை மயக்காமல் மெய்யான வீட்டை எனக்குக் காட்டி அந்த வெளியிலே தியானம் கூட்டி உன்னை அடையும் வழியைக் காட்டி என்னை வெளிப்படுத்த வேண்டும்.

54. இடதுகண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூழ மான்மழு
எடுத்தபாதம் நீள்முடி எண்திசைக்கும் அப்புறம்
உடல் கடந்து நின்ற மாயம் யாவர்காண வல்லரோ!

உனது இடது கண் சந்திரன், வலது கண் சூரியன். இடது கையில் சங்கு சக்கரமும் வலது கையில் மான் மழுவுவையும் கொண்டு பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி காண இயலாமல் பூமிக்கும் வானத்திற்கும், எட்டு திசைகளுக்கும் அப்புறமாய் நின்ற சிவனே! நீ என் உடம்பில் கலந்து நின்ற மாயத்தை யார் காண வல்லவர்கள்? என் உடம்பினில் மனதை அறிந்து மாயையை நீக்கி, அறிவாய் நீ உள்ளதை அறிந்து கொண்டேன்.

55. நாழியப்பும் நாழியுப்பும் நாழியான வாறுபோய்
ஆழியோனும் ஈசனும் அமர்ந்து வாழ்ந்திருந்திடும்
ஏறில் ஏறும் ஈசனும் இயங்கு சக்ர தரனையும்
வேறு கூறு பேசுவார் வீழ்வர்வீண் நரகிலே.

ஒரு படி நீரில் ஒரு படி உப்பை சேர்த்தால் அது அந்நீரிலேயே கரைந்து ஒருபடி உப்பு நீராகத்தான் இருக்கும். அதுபோல்தான் திருப்பாற் கடலில் பள்ளி கொண்ட விஷ்ணுவும் திருச்சிற்றம்பலத்தில் நடனமிடும் ஈசனும் ஒன்றாகவே நம் உள்ளத்தில் அமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தை அறிந்து கொள்ளுங்கள். எருதாகிய நந்தியில் ஏறும் ஈசனையும், சக்கராயுதத்தை உடைய விஷ்ணுவையும் அதுதான் பெரிது, இதுதான் பெரிது என்று வேறுபடுத்தி கூறுபவர்கள் மெய்ப்பொருளை அறிய மாட்டாது கொடுமையான நரகக்குழியில் வீழ்வார்கள்.

56. தில்லை நாயகன் அவன் திருவரங்கனும் அவன்
எல்லையான புவனமும் அமர்ந்து ஏகமுத்தியானவன்
பல்லுநாவும் உள்ளபேர் பகுத்து கூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே.

தில்லையில் ஆடும் நடராஜனும் அதுவே. திருவரங்கத்தில் பள்ளி கொண்ட நாராயணனும் அதுவே. எல்லா உலகங்களுக்கும் எல்லையான ஆகாயமாகவும், பிரம்மம் ஆன ஏகமாகவும், முத்தீயாகவும் இருப்பது அதுவே. பல்லும் தீ நாக்கும் உள்ளவர்கள் சிவனே பெரியவன் என்றும் அல்ல பெருமாளே பெரியவன் என்றும்

அவரவர் எண்ணம் போல் படித்ததை மட்டும் வைத்துப் பேசி மகிழ்வார்கள். புராணக் கதைகளில் நடந்த வல்லபங்களைக் கூறி வேறுபடுத்தி பேசுபவர்கள் தன் ஆன்மாவை அறியமாட்டாது வாய்புழுத்து மடிவார்கள்.

57. எத்திசைக்கும் எவ்வுயிர்க்கும் எங்களப்பன் எம்பிரான்
முத்தியான வித்துளே முளைத்தெழும் தவச்சுடர்
சித்தமும் தெளிந்து வேத கோயிலும் திறந்தபின்
அத்தனாடல் கண்டபின் அடங்கலாடல் காணுமே.

எட்டு திசைகளுக்கும், எல்லா உயிர்களுக்கும் தந்தையாக இருப்பவன் எம்பிரானாகிய ஈசனே. சக்தியாகிய நம் உடம்பில் வித்தாகவும், உயிராகவும், அறிவாகவும் விளங்கும் வாலையை அறிந்து தியானம் செய்ய செய்ய அருட்பெருஞ் சோதியாக ஆண்டவன் வருவான். சித்தம் தெளிந்து, அறிவை அறிந்து நான்கு வேதங்களும் கூறும் உள்ளமாகிய கோயிலின் வாசலைத் திறந்து ஈசனின் நடனங்கண்டு ஆனந்தம் அடைந்து அமைதி பெறலாம்.

58. உற்ற நூல்கள் உம்முளே உணர்ந்துணர்ந்து பாடுவீர்
பற்றறுத்து நின்றுநீர் பராபரங்கள் எய்துவீர்
செற்றமாவை யுள்ளரைச் செருக்கறுத்து இருந்திடில்
சுற்றமாக உம்முளே சோதி என்றும் வாழுமே.

இறைவனுக்கு உற்ற நூல்களை உணர்ந்துணர்ந்து பாடுங்கள். பற்றுக்களை அறுத்து, தவத்தில் நின்று பராபரமான ஈசனைச் சேருங்கள். பகைமைகளை ஒழித்து உள்ளத்தில் மாசுகளை அறுத்து, பத்தாம் வாசலைத் திறந்து ஆணவத்தையும், கர்வத்தையும் அழித்து மெய்ப்பொருளை அறிந்து தியானம் செய்து வந்தால் உனக்குள் பரிசுத்தமான மெய்ப்பொருளில் ஈசன் சோதியாக என்றும் நிலைத்து வாழ்வார், மரணம் இல்லா பெருவாழ்வில் வாழலாம்.

59. போதடா எழுந்ததும் புனலதாகி வந்ததும்
தாதடா புகுந்ததும் தானடா விளைந்ததும்
ஓதடா அஞ்சுமூன்றும் ஒன்றதான வக்கரம்
ஓதடா இராமராம ராமவென்னும் நாமமே.

காலைப் பொழுதில் எழுந்து அது என்ன என்பதையும், நீராகி, நின்று வந்த அது என்ன என்பதையும் நாத விந்தான தாதுவாய்

புகுந்து நெருப்பாகி விளைந்த அது என்ன? என்பதை எல்லாம் நமக்குள் நன்கு அறிந்து அது மெய்ப்பொருளே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அது பஞ்சபூத தன்மையைக் காட்டும் நமசிவய எனும் ஐந்தெழுத்தாகவும், அறிவு, உணர்வு, நினைவு என்பவைகளை உணர்ந்தும் அகாரம், உகாரம், இகாரம் என்ற மூன்றெழுத்து ஓம் எனும் ஓங்காரமாக உள்ளதை உணர்ந்து ஓம் நமசிவய எனும் அச்சரத்தை உங்களுக்குள் ஓதி உயர்வடையுங்கள். ஓரெழுத்தான வித்திலிருந்து ஐந்து மூன்றும் எட்டாகி உடம்பாக விளங்குவதை உணர்ந்து அதுவே ராம மந்திரமாக இருப்பதை அறிந்து ராமநாமத்தை ஓதி தியானியுங்கள்.

60. அகாரம் என்ற அக்கரத்துள் அவ்வுவந்து உதித்ததோ
உகாரம் என்ற அக்கரத்துள் உவ்வுவந்து உதித்ததோ
அகாரமும் உகாரமும் சிகாரமின்றி நின்றதோ
விகாரமற்ற யோகிகாள் விரித்துரைக்க வேணுமே.

அகாரம் என்ற 'அ' எழுத்தில் ஓரெழுத்தான அவ்வு தோன்றியதோ! உகாரம் என்ற 'உ எழுத்தில் ஊமையயெழுத்தான உவ்வு வந்து தோன்றியதோ! இந்த எட்டிரண்டுமான 'அ' – வும் 'உ' – வும் 'சி' என்ற சிகாரம் இன்றி தோன்றியிருக்க முடியுமா? இதனை எவ்வித மன விகாரமும் அற்ற யோகிகளே விரிவாக எடுத்துரைத்து விளக்க வேண்டும். எந்த மொழி எழுத்துகளுக்குள்ளும் முதல் எழுத்தாக இருப்பது (.) புள்ளியாகவும், பேசும் எழுத்தாக மாறும் போது 'சி' யாகவும் உள்ளது. ஆதலால் சிகாரம் இல்லாமல் எந்த எழுத்தும் நிற்காது என்பதை புரிந்துகொண்டு அந்த ஓரெழுத்தை உணர்ந்து தியானியுங்கள்.

61. அறத்திறங்களுக்கும் நீ அகண்டம் எண்திசைக்கும் நீ
திறத்திறங்களுக்கும் நீ தேடுவார்கள் சிந்தை நீ
உறக்கம் நீ உணர்வு நீ உட்கலந்த சோதி நீ
மறக்கொணாத நின் கழல் மறப்பினும் குடிகொளே.

ஈஸ்வரா! தர்மக்காரியங்கள் யாவும் நீ, அகண்டங்கள் அனைத்துக்கும் எட்டுத் திசைகளுக்கும் காரணமானவன் நீ, உன்னை அடையவேண்டும் என்று தேடுவார்களின் சிந்தையில் மெய்யறிவாகவும் உள்ளவன் நீ. மெய்ஞான விஞ்ஞான திறன்களுக்கும் அதில் ஆராய்ந்து சாதிக்கும் திறமைகளுக்கும் காரணம் நீ. தூக்கத்தில் கிடைக்கும் சுகம் நீ. உன்னை உணரும்

உணர்வும் நீ. என் உடலில் உட்கலந்து நிற்கும் சோதியும் நீயே. கனவிலும் நனவிலும் மறக்கக் கூடாத நின் திருவடியை அடியேன். அறியாது மறந்து போனாலும் என் உடலாகிய வீட்டில் மனத்தாமரையில் வந்து குடியிருந்து ஆண்டு கொள்.

62. அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூல மானோன் நீ
கண்டம் நீ கருத்தும் நீ காவியங்கள் ஆனோன் நீ
புண்டரீக மன்றுளே புணருகின்ற புண்ணியர்
கொண்ட கோலமான நேர்மை கூர்மை என்ன கூர்மையே.

நாராயணா! இவ்வுலகம் நீ அகண்டங்கள் யாவும் நீ. முதலையின் பிடியில் அகப்பட்ட கஜேந்திரன் என்ற யானை ஆதி மூலமே என்று அபயக் குரலிட்டு அலற அதனைக் காத்து ரட்சித்து அனைத்திற்கும் ஆதிமூலமானவன் நீ. ஆபத்து வரும் காலத்தில் காப்பவன் நீ. என் கருத்தினுள்ளே தெளிவாகத் திகழுபவன் நீ. இதிகாச காவியங்களான இராமாயண, மகாபாரத்தின் நாயகன் நீ. ஆயிரம் இதழ் தாமைரையான சகஸ்ரதளத்தில் நின்று யோக தியானம் செய்யும் புண்ணியோர்கள் புண்டரீகம் எனும் மெய்ப்பொருளில் சேர்ந்து அதிலேயே தவக்கோலம் பூண்டிருப்பர். நடுவாக அமைந்த கூர்மையொத்த இடத்தில் உன்னைக் கண்டு ஆனந்தம் பெற்று உன்னுடைய கூர்ம அவதாரத்தை எண்ணி ஆமையைப் போல் ஐம்புலன்களை உள்ளடக்கி சமாதி எனும் பேரின்ப நிலையை அடைவார்கள்.

63. மை அடர்ந்த கண்ணினார் மயக்கிடும் மயக்கிலே
ஐ இறந்து கொண்டு நீங்கள் அல்லல் உற்றிருப்பீர்கள்
மெய் அறிந்த சிந்தையால் விளங்கு ஞானம் எய்தினால்
உய்யறிந்து கொண்டு நீங்கள் ஊழிகாலம் வாழ்விரே.

மை தீட்டிய அழகிய கண்களை உடைய இளம் பெண்கள் ஆடவரை காம வலை வீசி மயக்கிடும் பாழ்வாழ்வெனும் இம்மாயையில் அகப்பட்டு வீணான சந்தேகங்களினாலும், எம வேதனை பயத்தினாலும் பீடிக்கப்பட்டு நீங்கள் துன்பப்பட்டு வாழ்ந்து உழன்று வருகின்றீர்கள். உங்கள் உடம்பிலேயே உள்ள உயிரை அறிந்து அதில் விளங்கும் மெய்ப்பொருளை உணர்ந்து அதையே சிந்தையில் நினைந்து தியானியுங்கள். இதுவே இப்பிறவி உய்வடையும் வழி என்பதை அறிந்து ஞானத்தினால் நீங்கள் தவம் புரிந்து வந்தால் மரணமிலாப் பெரு வாழ்வைப் பெற்று இறைவனோடு எக்காலமும் நித்தியமாய் வாழ்வீர்கள்.

64. **கருவிருந்த வாசலால் கலங்குகின்ற ஊமைகாள்**
குருவிருந்து சொன்ன வார்த்தை குறித்து நோக்க வல்லிரேல்
உருவிலங்கு மேனியாகி உம்பராகி நின்று நீர்
திருவிலங்கு மேனியாகி சென்று கூடலாகுமே

பெண்களின் மீதுள்ள சிற்றின்ப ஆசையால் வாழ்வில் ஏற்படும் பல துன்பங்களாலும், நோய்களினாலும் பாதிக்கப்பட்டு வெளியே சொல்ல முடியாமல் கலங்கித் தவிக்கும் ஊமை மக்களே! நல்ல குருவாக இருந்து வாழ்ந்து காட்டியவர்கள் சொன்ன உபதேச வார்த்தைகளை நன்கு புரிந்துகொண்டு அந்த ஒன்றையே குறித்து நோக்கி தியானம் செய்ய வல்லவர்களானால் அருவாக இருந்த அப்பொருளே உருவாக இலங்கி சோதி மேனியாகி நின்ற ஈசருடன் ஒன்றாகி இணைக்கும். அதுவே உங்களை உத்தமராக ஆக்கி உள்ளத் தாமரைத் திறந்து ஈசன் திருவாக விளங்கித் திகழும் பொன் மேனியில் பொன்னம்பலத்தில் சென்று கூடி பேரின்பத்தைக் கூட்டிவைக்கும்.

65. **தீர்த்தம் ஆட வேண்டுமென்று தேடுகின்ற தீனர்காள்**
தீர்த்தம் ஆடல் எவ்விடம் தெளிந்து நீர் இயம்பிலீர்
தீர்த்தமாக உம்முளே தெளிந்து நீர் இருந்த பின்
தீர்த்தமாக உள்ளதும் சிவாயம் அஞ்செழுத்துமே.

தலம், தீர்த்தம், மூர்த்தம் என்றும், நல்ல தீர்த்தங்களில் மூழ்கி நீராடினால் அனேக பாவங்களும் அகன்றுவிடும் என்றும் காவிரி, கங்கா, யமுனை என்று தீர்த்தங்களைத் தேடி ஓடும் அன்பர்களே! அப்படியெல்லாம் தேடி தீர்த்தமாடியதால் செய்த பாவம் யாவும் போய்விட்டதா? பாவங்கள் அகல தீர்த்தமாடுவது எந்த இடம் என்பதை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். உங்களுக்குள் தெளிந்த தீர்த்தமாக உள்ள நீரையும் அது இருக்கும் இடத்தையும் தெரிந்து கொண்டீர்களா? அவ்வாறு அனைத்து பாவங்களையும் போக்க வல்லதாக உள்ள தீர்த்தமாகிய அது பஞ்சாட்சரம் என்ற மெய்ப்பொருள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதிலேயே பஞ்சபூதங்களும் உள்ளதை உணர்ந்து சிவயநம என்று அஞ்செழுத்தை ஓதி அதையே நினைந்து நெகிழ்ந்து நீராடும் வழியை அறிந்து தியானம் செய்யுங்கள்.

66. கழுத்தையும் நிமிர்த்தி நல்ல கண்ணையும் விழித்து நீர்
பழுத்தவாய் விழுந்து போன பாவமென்ன பாவமே
அழுத்தமான வித்திலே அனாதியாய் இருப்பதோர்
எழுத்திலா எழுத்திலே இருக்கலாம் இருந்துமே.

கழுத்தையும் நிமிர்த்து அலறிக்கொண்டே நல்ல கண்களையும் விழித்துக் கொண்டே பாம்பின் வாய் அகப்பட்ட தவளையைப் போல் நீங்கள் மரணத்தின் வாயில் அகப்பட்டு இம்மாய வாழ்வில் வாழ்ந்து கொண்டிருப்பது என்ன பாவமோ! ஓ மனிதர்களே! இந்த மாயப்பொய் வாழ்வு பாம்பின் வாய் வீழ்ந்து இரையாகும் தவளை போன்று நாம் சிறிது சிறிதாகச் சாவதாக அல்லவா அமைந்துள்ளது. இப்படிப்பட்ட இம்மரணத்தை வென்று மீண்டும் பிறவாதிருக்க நம் ஆன்மாவில் அழுத்தமான வித்தாக விளங்கும் மெய்ப்பொருளை உணர்ந்து அது அனாதியாய் உள்ள ஓரெழுத்தாக இருப்பதை அறிந்து அந்த உணர்வுறு மந்திரத்திலேயே மனதை நிறத்தி வாசியால் இருத்தி தியானம் செய்து வாருங்கள். மாயை நீங்கி சிவத்தோடே என்றும் இருக்கலாம்.

67. கண்டு நின்ற மாயையும் கலந்து நின்ற பூதமும்
உண்டுறங்கு மாறு நீர் உணர்ந்திருக்க வல்லிரேல்
பண்டை ஆறும் ஒன்றுமாய்ப் பயந்த வேத சுத்தராய்
அண்ட முத்தியாகி நின்ற ஆதிமூலம் ஆவிரே.

இவ்வுலக வாழ்வில் மாயையான உடம்பில் கலந்து நின்ற பஞ்சபூதங்களையும் கண்டு தியானித்திருங்கள். உண்பதையும் உறங்குவதையும் அனுபவித்து அறிவது போல் உங்களுக்குள் உள்ள உண்மைப் பொருளை உணர்ந்து அதிலேயே மனதை நிறுத்தி தியானித்திருக்க வல்லவர்களானால் ஆறு ஆதாரங்களும் ஒன்றாக ஆகி வேதங்கள் கூறும் பரிசுத்தமான இடத்தில் மெய்ப்பொருள் இருப்பதை அறிந்து கொள்ளலாம். அதை அறிந்து கொண்டாலே இந்த அண்டத்தில் முக்தி அடையலாம். அதிலேயே நின்று யோக ஞான சாதகத்தால் மூன்று தீயையும் இணைத்து தவம் புரிந்தால் ஆதிமூலமான அப்பரம் பொருளை அடைவீர்கள்.

68. ஈன்ற வாசலுக்கு இரங்கி எண்ணிறந்து போவீர்காள்
கான்ற வாழை மொட்டலர்ந்த காரணம் அறிகிலீர்
நான்ற வாசலைத் திறந்து நாடி நோக்க வல்லிரேல்
தோன்று மாயை விட்டொழிந்து சோதி வந்து தோன்றுமே.

பெண்கள் மேல் கொண்ட மையலினால் அவர்களுக்கு இரங்கி வாழ்நாள் முழுதும் உழைத்து இளைத்து மாண்டு போகின்ற மனிதர்காள்! வாழையடி வாழையாக வாழை மரம் கன்று ஈன்றதையும் பூ பூத்து காய்க்கும் காரணத்தை அறவீர்களா! மனிதர்க்கும் வாழைக்கும் நீரே வித்தான காரணத்தை அறிந்து கொள்ளுங்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும் இருக்கும் நந்தியின் வாசலைத் திறந்து மெய்ப்பொருளையே நாடி நோக்கியிருந்து தியானித்திருக்க வல்லவர் ஆனால் மனத்தினால் தோன்றுகின்ற மாயைகள் யாவும் நம்மைவிட்டு ஒழிந்து நம்முள் அருட்பெருஞ்சோதியாக ஈசன் வந்து தோன்றுவான்.

69. உழலும் வாசலுக்கு இரங்கி ஊசலாடும் ஊமைகாள்
உழலும் வாசலைத் துறந்து உண்மை சேர எண்ணிலீர்
உழலும் வாசலைத் துறந்து உண்மை நீர் உணர்ந்த பின்
உழலும் வாசல் உள்ளிருந்த உண்மை தானும் ஆவீரே.

வீடு, மனைவி, மக்கள், செல்வம் என்று அதற்காகவே அலைந்து உலக வாழ்வில் இன்ப துன்பங்களில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஊமை மக்களே! நம்மை மீண்டும் பிறவிப் பிணியில் ஆட்படுத்தி உழலும் அந்த வாசலைத் துறந்து உண்மையை உணர்ந்து மெய்ப்பொருளைச் சேர்ந்து மீண்டும் பிறவா நிலை பெற எண்ணம் வையுங்கள். அனைத்தையும் துறந்து அவனே கதியென சரணடைந்து தன்னைத் தான் அறிந்து தனக்குள்ளேயே இறைவன் இருக்கும் உண்மையை உணர்ந்து தியானியுங்கள். நம்முள் இருக்கும் பத்தாம் வாசலில் உள்ளிருந்து உழலும் சோதியான மெய்ப்பொருளையே பற்றி இருங்கள். நீயே அதுவாகிய பேருண்மையாக ஆவீர்கள்.

70. மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாலு நாழி உம்முளே நாடியே இருந்த பின்
பாலனாகி வாழலாம் பரப்பிரமம் ஆகலாம்
ஆலமுண்ட கண்டர் ஆணை அம்மை ஆணை உண்மையே.

மூல நாடியான சுழுமுனையில் வாசியோகம் செய்து அதனால் வரும் நாத சப்தத்தால் அங்கே தோன்றி எழுந்த சோதியில் மனம் பொருந்தி நான்கு நாழிகை நேரம் தியானம் செய்ய வேண்டும். இதனைத் தொடர்ந்து நாடி செய்து தவம் புரியும் யோக ஞான சாதகர்கள் என்றும் இளமையோடு பாலனாக வாழ்வார்கள்.

அதன் பலனாய் அவர்களே பரப்பிரமமாய் ஆவார்கள். இது ஆலகால விஷம் உண்ட நீலகண்டர் மீதும் அம்மையான உமையவள் மீதும் ஆணையிட்டுச் சத்தியம் என்று சொல்கிறேன்.

71. **இருக்கவேண்டும் என்றபோது இருத்தலாய் இருக்குமோ**
மரிக்கவேண்டும் என்றலோ மண்ணுளே படைத்தனர்
சுருக்கமற்ற தம்பிரான் சொன்ன அஞ்செழுத்தையும்
மரிக்குமுன் வணங்கிடீர் மருந்தெனப் பதம் கெடீர்.

நாம் எப்பொழுதும் இப்படியே இருக்கவேண்டும் என்று நினைத்தால் இருக்க முடியுமா? இருந்து இறக்க வேண்டும் என்றுதானே இப்பூமியில் நம்மைப் படைத்தனர். குறுகிய எண்ணம் இல்லாத என் குருநாதன் எனக்கு உபதேசித்த சிவயநம என்ற அஞ்செழுத்தையும் இறப்பதற்கு முன் அறிந்து கொண்டு வணங்கி செபம் செய்து தியானம் செய்யுங்கள். அதுவே இப்பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தாக இருப்பதை உணராமல் இறைத்திருவடியை மறந்து கெடுகிறீர்கள்.

72. **அம்பத்தொன்றில் அக்கரம் அடக்கம் ஓர் எழுத்துளோ**
விண்பரந்த மந்திரம் வேதம் நான்கும் ஒன்றலோ
விண்பரந்த மூல அஞ்செழுத்துளே முளைத்ததே
அங்கலிங்க பீடமாய் அமர்ந்ததே சிவாயமே.

நமசிவய என்ற அஞ்செழுத்துக்கும் (9+11+4+15+12 = 51) எண்களைக் கொடுத்து ஐம்பத்தோர் அட்சரங்களாக்கி அமைத்து அதை ஓரெழுத்தான சி யில் அடக்கினர். ஆகாயத்தில் பரந்து நின்ற சோதியான சிகாரமும் வேதங்கள் நான்கும் கூறும் சிகாரமும் ஒன்றே. மூலாதாரத்திலிருந்து ஆஞ்ஞா வரை ஓம் நமசிவய என்று உச்சரித்து தியானியுங்கள். நம் உடம்பிலேயே இலிங்கமாகவும், பீடமாகவும் அமைந்திருப்பது சிவமே என்பதை உணருங்கள்.

73. **சிவாயம் என்ற அட்சரம் சிவன் இருக்கும் அட்சரம்**
உபாயம் என்று நம்புதற்கு உண்மையான அட்சரம்
கபாடம் உற்ற வாசலைக் கடந்து போன வாயுவை
உபாயம் இட்டு அழைக்குமே சிவாய அஞ்செழுத்துமே.

சிவயநம என்ற மந்திரமே சிவன் இருக்கும் அட்சரமாகும். நமக்கு ஆபத்து வரும் காலங்களில் உபாயமாக வந்து காப்பதற்கு நம்பி உபாசிக்க உண்மையாக உள்ள மந்திரம் இதுவே. நம் பிராணனிலிருந்து கடந்து போன பிராண வாயுவை மீண்டும் நம் பிராணனிலேயே சேர்த்து ஆயுளைக் கூட்ட பிராணயாமம் செய்தால் அதற்கு உற்ற துணையாக இருப்பது சிவாயநம எனும் அஞ்செழுத்து மந்திரமே. ஆதலின் அதை ஓதி தியானியுங்கள். அதுவே உங்களுக்கு உபாயமாக என்றும் வரும்.

74. உருவும் அல்ல வெளியும் அல்ல ஒன்றை மேவி நின்றதல்ல
மருவும் அல்ல காதம் அல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசும் ஆவி தானும் அல்ல
அரியதாகி நின்ற நேர்மை யாவர் காண வல்லரே.

உருவாக உள்ளது ஆனால் உருவும் அல்ல. வெளியாக இருப்பது ஆனால் வெளி அல்ல. ஐம்புலன்களில் ஒன்றை சேர்ந்து இருப்பது ஆனால் அதைச் சார்ந்து நிற்கவில்லை. மருவாக உள்ளது ஆனால் தூரம் அல்ல. பஞ்சபூதங்களில் எல்லாம் உள்ளது ஆனால் மற்றதல்ல. பாசம் அற்றிருப்பது ஆனால் பாசம் அற்றதல்ல. மிகவும் பெரியது ஆனால் பெரியது அல்ல. மிகவும் சிறியது ஆனால் சிறயது அல்ல. பேசும் தன்மை கொண்டது ஆனால் பேசாதது. ஆன்மா தானாகி தற்பரமாய் நின்ற அதை அறிவதற்கு அரிய மெய்ப்பொருளின் உண்மைகளை யார் அறிந்து கொண்டு தியானம் செய்து காண வல்லரோ.

75. ஆத்துமா அனாதியோ அனாத்துமா அனாதியோ?
மீத்திருந்த ஐம்பொறி புலன்களும் அனாதியோ?
தர்க்கமிக்க நூல்களும் சதாசிவமும் அனாதியோ?
வீக்கவந்த யோகிகாள் வரைந்து உரைக்க வேணுமே!

உனக்குள் இருக்கும் ஆன்மா அனாதியா? அனைத்திலும் இருக்கும் ஆண்டவன் அனாதியா? உனக்குள் ஐம்பொறியாகவும், ஐந்து புலன்களாகவும், இருப்பவை அனாதியா? தத்துவ விளக்கங்கள், உண்டென்றும் இல்லையென்றும் தர்க்கம் செய்யும் வேதாகம நூல்கள் அனாதியா? அல்லது ஆஞ்ஞாவில் உள்ள சதாசிவம் அனாதியா என்பதை யோக ஞானம் விளக்க வரும் யோகிகளே! எது அனாதி என்பதையும் எது நித்தியம் என்பதையெல்லாம் அனைவரும் உணரும் வண்ணம் விரைந்து வந்து கூறவேண்டும்.

**76. அறிவிலே பிறந்திருந்த ஆகமங்கள் ஓதுகிறீர்
நெறியிலே மயங்குகின்ற நேர்மை ஒன்று அறிகிலீர்
உறியிலே தயிர் இருக்க ஊர் புகுந்து வெண்ணெய் தேடும்
அறிவிலாத மாந்தரோடு அணுகுமாறது எங்கனே.**

அறிவிலே பிறந்தவையான ஏடுகளைப் படித்து மனனம் செய்து வேத ஆகமங்கள் ஓதுவார்கள், யோக ஞான நெறியிலே நின்று தியானம் செய்து மயக்கத்தை ஒழித்து மெய்ப்பொருளை அறியமாட்டார்கள். தனது வீட்டின் உறியிலேயே தயிரை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் அலைந்து வெண்ணெய் தேடுகின்ற மூடரைப் போல் உனக்குள்ளேயே இருக்கும் இறைவனை அங்கும் இங்குமாய் தேடி அலையும் அறிவை அறியாதவர்க்கு எப்படி எடுத்துரைத்து அணுகுவது.

**77. இருவர் அரங்கமும் பொருந்தி என்புருகி நோக்கிலீர்
உருவரங்கம் ஆகி நின்ற உண்மை ஒன்றை ஓர்கிலீர்
கருவரங்கம் ஆகி நின்ற கற்பனை கடந்து பின்
திருவரங்கம் என்று நீர் தெளிந்திருக்க வல்லிரே.**

சத்தியாகிய உடலும் சிவனாகிய உயிரும் ஒரே நினைவோடு அன்பால் என்புருகி தியானம் செய்யுங்கள். நமக்குள் உருவாக அரங்கத்தில் ஒளியாய் நின்று ஒன்றாய் இருக்கும் உண்மையை உணர்ந்து அதுவே இறைவன் குடியிருக்கும் கோயிலாக இருப்பதைக் கண்டு தெளிந்து அத்திருவரங்கத்தில் உடலையும் உயிரையும் இணைத்து சிவத்தில் கரைய தவம் புரியுங்கள்.

**78. கருக்குழியில் ஆசையாய்க் காதலுற்று நிற்கிறீர்
குருக்கிடுக்கும் ஏழைகள் குலாவுகின்ற பாவிகாள்
திருத்துருத்தி மெய்யினால் சிவந்த அஞ்செழுத்தையும்
உருக்கழிக்கும் உம்மையும் உணர்ந்துணர்ந்து கொள்ளுமே.**

பெண்ணின் ஆசையால் காதல் வயப்பட்டு அதே நினைவிலேயே நிற்கின்றீர்கள், அந்த குறிப்பைத் தவிர அதனால் வரும் துன்பங்களை அறியாத ஏழைகளே! பெண்ணின்பத்தையே பெரிதாகப் போற்றி குலாவுகின்ற பாவிகளே! அதனால் உங்கள் உடம்பு உருக்குலைந்து உயிர் போய் விடுமே. ஆதலால் நல்ல குருநாதர் உன்னைத் திருத்தி, கற்றுக்கொடுக்கும் உண்மையான யோகத்தை செய்து நமது மெய்யில் பஞ்சாட்சரமாக இருக்கும் மெய்ப்பொருளை அறிந்து சிவயநம என்ற அஞ்செழுத்தை ஓதி உனக்குள்ளேயே உணர்ந்து தியானித்து அறிந்து கொள்ளுங்கள்.

**79. மண்ணிலே பிறக்கவும் வழக்கலாது உரைக்கவும்
எண்ணிலாத கோடி தேவர் என்னது உன்னது என்னவும்
கண்ணிலே மணி இருக்கக் கண் மறைந்தவாறு போல்
எண்ணில் கோடி தேவரும் இதின் கணார் விழிப்தே.**

இருவினை பாவ புண்ணியத்தால் மண்ணில் பிறக்கிறோம். கடவுள் உண்டென்றும் இல்லையென்றும் வழக்குகள் பேசுகின்றோம். எண்ணிலாத கோடி தேவர்களையும் என்னுடையது உன்னுடையது என்றும் உரிமை கொண்டாடுகின்றோம். அதனால் இறைவனை அறிந்து கொண்டீர்களா? அவன் உனக்குள்ளேயே அதுவாக இருப்பதை உணருங்கள். கண்களில் இருக்கும் கண்மணியால் எல்லாம் காணப்பட்டாலும் அதனை அக்கண்ணே மறைப்பது போல் தனக்குள் இருக்கும் ஆன்மாவை காணமுடியாது மாயை மறைக்கின்றது. இதனைத் தியானத்தால் அகக்கண் திறந்து பார்த்தால் எல்லா தெய்வங்களும் இதன் கண் இருப்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**80. மண்கலம் கவிழ்ந்தபோது வைத்து வைத்து அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்தபோது வேணும் என்று பேணுவார்
நண்கலம் கவிழ்ந்தபோது நாறும் என்று போடுவார்
எண்கலந்து நின்ற மாயம் என்ன மாயம் ஈசனே.**

மண்பானை உடைந்து போனால் அது தேவைப்படும் என எடுத்து அடுக்கி வைப்பார்கள். வெங்கலப் பானை வீழ்ந்து நசுங்கிப் போனால் அது வேணும் என்று பாதுகாப்பார்கள். ஆனால் நமது உடம்பை விட்டு உயிர்போய் கிடக்கும் போது அதனை பிணம் என்று இகழ்ந்து அது கிடந்தால் நாறும் எனக்கூறி குழிவெட்டி மூடிவிடுவார்கள். இப்படி ஒரு காசுக்குக் கூட உதவாத எண்சாண் உடம்பில் நீ நின்று ஆடிய மாயம்தான் என்ன மாயமய்யா ஈசனே.

**81. மிக்க செல்வம் நீர் படைத்த விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்தி மேனி வெந்து போவது அறிகிலீர்
மக்கள் பெண்டிர் சுற்றம் மாயை காணும் இவையெலாம்
மறலி வந்து அழைத்தபோது வந்து கூடலாகுமோ?**

பாவச் செயல்கள் செய்து நிறைந்த செல்வங்களைப் பெற்றும் நிம்மதியின்றி வாழும் பாவிகளே! நீர் இறந்து போனால் சுடுகாட்டிற்குக் கொண்டுபோய் விறகு, விராட்டியினால் அடுக்கி,

தீவைத்து எரித்து இவ்வுடம்பு ஒருபிடி நீரும் இல்லாது சாம்பலாவதை அறிய மறந்தீர்களே! மக்கள், மனைவி, உறவு என்பவைகள் யாவும் வெறும் மாயை என்பதை உணருங்கள். எமன் வந்து இவ்வுயிரை எடுத்துப்போகும் போது நீ செய்த புண்ணிய பாவமன்றி வேறு யாரும் கூட வரமாட்டார்கள்.

82. ஒக்கவந்து மாதுடன் செறிந்திடத்தில் அழகியே
ஒருவராகி இருவராகி இளமை பெற்ற ஊரிலே
அக்கணித்து கொன்றை சூடி அம்பலத்தில் ஆடுவார்
அஞ்செழுத்தை ஓதிடில் அனேக பாவம் அகலுமே.

ஒத்து வாழும் பெண்ணுடன் சிற்றின்பத்தில் ஈடுபடும்போது அதையே யோகமாக்கி பேரின்பம் அடையும் பட்டணம் ஒன்று என்றும் இளமையோடு இருக்கின்றது. அந்த இடத்தில் ருத்திராட்ச மாலையும் கொன்றை மலரையும் சூடி ஈசன் உள்ளமாகிய அம்பலத்தில் நடனம் ஆடிக்கொண்டிருக்கிறார். அவனை அறிந்து அஞ்செழுத்து மந்திரத்தை ஓதி தியானம் செய்தால் செய்த அனேக பாவங்கள் யாவும் அகன்றுவிடும்.

83. மாடு கன்று செல்வமும் மனைவி மைந்தர் மகிழவே
மாட மாளிகைப்புறத்தில் வாழுகின்ற நாளிலே
ஓடி வந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல் கிடந்து உயிர் கழன்ற உண்மை கண்டும் உணர்கிலீர்.

மாடமாளிகைகள் கட்டி மாடு, கன்று போன்ற சகல செல்வங்களையும் சம்பாதித்து தம் மனைவி மக்களொடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் நாட்களில், திடீரென விபத்து நடப்பதுபோல் எமதூதர்கள் ஒரு நொடியில் உயிரைக் கொண்டு போனபின் அவ்வுடல் பிணமாகக் கிடப்பதைக் கண்டும் உயிர் போனதை உணர்ந்தும் உயிரை அறியாமல் இருக்கின்றீர்கள். அவ்வுடலில் உயிராய் நின்று ஈசன் ஆட்டுவித்த உண்மையை உணர்ந்து, இறவா நிலைபெற்று இறைவனை சேர தியானம் செய்யுங்கள்.

84. பாடுகின்ற உம்பருக்கு ஆடுபாதம் உன்னியே
பழுதிலாத கர்ம கூட்டம் இட்ட எங்கள் பரமனே
நீடு செம்பொன் அம்பலத்துள் ஆடு கொண்ட அப்பனே
நீலகண்ட காலகண்ட நித்திய கல்லியாணனே.

பரமனையே பாடுகின்ற உத்தம பக்தர்கள் இறைவனின் ஆடுகின்ற திருவடியையே தியானிப்பார்கள். குற்றமில்லாத கர்ம யோகிகள் கூட்டம் அரஹர என கோஷம் இட்டு கூவி நாதோபாசனையால் அழைப்பதும் எங்கள் பரமனையே. என்றென்றும் உள்ள செம்மையான பொன்னம்பலத்துள் சோதியாக நின்று நடராஜனாக ஆடல் புரியும் எங்கள் அப்பனே, நீயே ஆலம் உண்ட நீலகண்டன், நீயே காலனை உதைத்த காலகண்டன், நீயே நித்தியமாய் ஆனந்தம் தரும் கல்யாண குணத்தவன்.

85. **கானமற்ற காட்டகத்தில் வெந்தெழுந்த நீறுபோல்**
ஞானமற்ற நெஞ்சகத்தில் நல்லதேதும் இல்லையே
ஊனமற்ற சோதியோடு உணர்வு சேர்த்து அடங்கினால்
தேனகத்தின் ஊறல்போல் தெளிந்ததே சிவாயமே.

இவ்வுடம்பை சுடுகாட்டில் வைத்து எரிக்கும் போது அது ஒன்றுக்கும் உதவாத ஒரு பிடி சாம்பலாகும். அது போல் ஞானம் சிறிதும் இல்லா நெஞ்சம் உடையவர்களிடம் நல்லது ஒன்றும் இருக்காது. அறிவாக சுடர் விடும் சோதியை அறிந்து அங்கேயே உன் உணர்வையும், மனத்தையும் நிலை நிறுத்தி தியானம் செய்து வந்தால் தேனில் ஒடுங்கியிருந்த ருசியானது நாவில் ஊறுவது போல் ஈசனின் அருளால் ஆனந்தம் கிடைக்கும்.

86. **பரவி ஓடி உம்முளே பறந்து வந்த வெளிதனை**
நிரவியே நினைந்து பார்க்கில் நின்மலம் அதாகுமே
உருகி ஓடி எங்குமாய் ஓடும் சோதி தன்னுளே
கருதுவீர் உமக்கு நல்ல காரணம் அதாகுமே.

ஆகாயமாய் நமக்குள் இருக்கும் மனம் எங்கும் பரவி ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த மனத்தை குவித்து நம்மில் வெட்டவெளியான இடத்தில் நிறுத்தி நினைவால் நினைந்து தியானம் செய்ய மனத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி அது சுத்த நிர்மலமாய் ஆகும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிற்கும் சோதியை தனக்குளே கண்டு பரம்பொருளையே எப்போதும் கருத்தில் வைத்து தியானியுங்கள். அதுவாகிய மெய்ப்பொருளே இறவாநிலை பெற காரணமாகும்.

87. சோதி பாதி ஆகி நின்று சத்தமும் பலித்து வந்து
போதியாத போதகத்தை ஓதுகின்ற பூரணா
வீதியாக ஓடி வந்து விண்ணடியின் ஊடுபோய்
ஆதிநாதன் என்று அனந்த காலம் உள்ளதே.

பூரணமாகிய சோதியில் ஆண் பாதி பெண் பாதியான அர்த்தநாரியாக நின்றது எது எனவும், எனக்குள் பரிசுத்தமான இடம் எது எனவும் காட்டி, எனக்கு யோகம் தியானம் செய்யும் முறைகளையும் போதித்து உபதேசித்த மெய்குருநாதனே! வாசி யோகத்தில் குண்டலினி சக்தியானது மூலாதாரத்திலிருந்து முதுகுத்தண்டின் வீதி வழியாக மேலேறி சகஸ்ரதளத்தை அடைந்து வெளியாக விளங்கும் இடத்தின் அடியில் சென்று சேருகிறது. அங்கே சோதியாகவும், நாதனாகவும், ஆதியாகவும் ஈசன் அனாதியாக எப்போதும் இருக்கின்றான்.

88. இறைவனால் எடுத்த மாடத் தில்லையம் பலத்திலே
அறிவினால் அடுத்த காயம் அஞ்சினால் அமைந்ததே
கருவு நாதம் உண்டுபோய் கழன்ற வாசல் ஒன்பதும்
ஒருவராய் ஒருவர் கோடி உள்ளுளே அமைந்ததே.

நமது உடம்பிலேயே சிவன் இருக்கும் சிதம்பரமாகிய ஆகாயத்தலத்தில் அறிவாக விளங்கும் சித்தத்தை அறியுங்கள். அவ்வறிவால் அமைந்த இவ்வுடலானது மண, நீர், தீ, காற்று, ஆகாயம் என பஞ்சபூதங்களால் அடுக்காக ஆறாதாரங்களாய் அமைந்துள்ளது. தாயின் கருவிலே புகும் விந்து நாதத்தை உண்டு உருவாகி ஒன்பது வாசல் கொண்ட உடலுயிர் வளர்ந்து இப்பூமியில் வெளிவரும். அப்படி வரும் கோடிக்கணக்கான உயிர் ஒவ்வொன்றிலும் சிவனே அதனுள் அமர்ந்துள்ளான்.

89. நெஞ்சிலே இருந்திருந்து நெருங்கி ஓடும் வாயுவை
அன்பினால் இருந்து நீர் அருகிருத்த வல்லிரேல்
அன்பர் கோயில் காணலாம் அகலும் எண் திசைக்குளே
தும்பி ஓடி ஓடியே சொல்லடா சுவாமியே!

நெஞ்சிலே இருந்து ஓடிக்கொண்டிருக்கும் பிராணவாயுவை யோகப்பயிற்சியினால் நிறுத்தி அன்பெனும் பக்தியுடன் தியானம் செய்து வாசியை உங்களுக்குள்ளேயே இருத்த வல்லவர்களானால் அவ்வாசியானது நம் பிராணனில் கலந்து இறைவன் இருப்பிடத்தை காட்டும். செய்த பாவவினைகள் யாவும் அகலும். எண்திசைகள் யாவிலும் இயங்கும் ஈசனை அறிந்துணர்ந்து, தும்பியானது ரீங்காரம் இடுவதுபோல் உனக்குளே வாசியை ஓட்டி தியானம் செய்து இறைவனை அடையுங்கள்.

90. தில்லையை வணங்கி நின்ற தெண்டனிட்ட வாயுவே
எல்லையைக் கடந்து நின்ற ஏக போக மாய்கையே
எல்லையைக் கடந்து நின்ற சொர்க்கலோக வெளியிலே
வெள்ளையும் சிகப்புமாகி மெய் கலந்து நின்றதே!

தில்லையில் ஆடும் ஈசன் நம் உடலில் இடம்கொண்டு ஆகாய எல்லையில் ஆடி நம்மை ஆட்டுவிக்கின்றான். வாசிக் காற்றை மேலேற்றி செய்யும் பயிற்சியினால் அவ்வாசியானது ஈசனை வணங்கி அவனுடன் சேர்கிறது. மனமெனும் எல்லையைக் கடந்து ஏகமாக நின்று எல்லா இன்ப போகங்களையும் அடையச் செய்வது மாயையே. மனமே வாசியாகி எல்லையாக இருக்கும். ஆகாயத்தையும் கடந்து இறையைச் சேர்வதுவே ஆனந்தம். அவ்விறையே வெள்ளையும் சிகப்புமாக நம் உடலில் அணுக்களாகி மெய்ப்பொருளாக நிற்கின்றது.

91. உடம்பு உயிர் எடுத்ததோ உயிர் உடம்பு எடுத்ததோ
உடம்பு உயிர் எடுத்தபோது உருவம் ஏது செப்புவீர்
உடம்பு உயிர் எடுத்தபோது உயிர் இறப்பது இல்லையே
உடம்பு மெய் மறந்து கண்டு உணர்ந்து ஞானம் ஓதுமே.

உடம்பானது உயிர் எடுத்து வந்ததா, அல்லது உயிரானது உடம்பு எடுத்துக் கொண்டு வந்ததா? உடம்புதான் உயிர் எடுத்ததென்றால் உயிர் வந்த பிறகுதானே உடம்பே தோன்றுகிறது. உடம்பில் உள்ள உயிருக்கு உருவம் எது என்று சொல்லுங்கள். உடம்பு உயிரும் கூடிய மனிதன் இறந்த பின்னும் அவன் ஆன்மா அழிவது இல்லை. ஆகவே இவ்வுடம்பு உண்மையல்ல என்பதை உணர்ந்து ஆன்மாவே மெய் என்பதை அறிந்து உடம்பில் மெய்ப்பொருளாக இறைவன் இருப்பதைக் கண்டு தன்னை மறந்த தியான நிலையில் இருந்து உணர்ந்து கொண்டு ஞானம் போதியுங்கள்.

92. அவ்வெனும் எழுத்தினால் அகண்டம் ஏழும் ஆகினாய்
உவ்வெனும் எழுத்தினால் உருத்தரித்து நின்றனை
மவ்வெனும் எழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே!

ஓம் என்ற ஓங்காரத்தில் தான் அனைத்தும் தோன்றுகின்றது. ஓம் என்பதில் அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்று தத்தவங்கள் எழுத்துகளாக அமைந்துள்ளன. அதில் 'அ' எனும் ஆகாயத் தத்துவத்தில் ஏழு உலகமும் ஆகி நிற்கின்றது. 'உ' எனும் விந்து தத்தவத்தால்தான் உருவம் தரித்து உருவாகின்றது. 'ம' எனும் மாயா தத்துவத்தினால் இவ்வுலகம் முழுதும் மயங்குகின்றது. இதில் அவ்விலும் உவ்விலும் மவ்விலும் அமர்ந்து இருப்பது 'சி' எனும் சிகாரமே என்பதை அறியுங்கள்.

93. **மந்திரங்கள் உண்டுநீர் மயங்குகின்ற மானிடர்**
மந்திரங்கள் ஆவது மறத்தில் ஊறல் அன்றுகாண்
மந்திரங்கள் ஆவது மதித்தெழுந்த வாயுவை
மந்திரத்தை உண்டவர்க்கு மரணம் ஏதும் இல்லையே.

மந்திரங்கள் யாவையும் படித்து ஒதி மயங்குகின்ற மனிதர்களே! மந்திரம் என்பது மனதின் திறமே, மந்திரங்கள் தர்ம வழியையே பின்பற்றும், மந்திரங்களை உணர்ந்து உச்சரிக்கும் போது அதில் எழும் சப்தங்களின் அதிர்வலைகள் மூலாதாரத்தில் மோதி அங்கிருக்கும் கனலான வாயுவை எழுப்புதற்கென்றே அமைக்கப்பட்டது. அதனால் வாசி மேலே ஏறி பிராணசக்தி கூடி மரணமில்லா பெரு வாழ்வு அடைவார்கள். மந்திரங்களை முறையாக அறிந்து ஓதி ஆறு ஆதாரங்களிலும் நிறுத்தி தியானிப்பவர்களுக்கு மரணம் ஏதும் இல்லையே!

94. **என்ன என்று சொல்லுவேன் இலக்கணம் இலாததை**
பண்ணுகின்ற செந்தமிழ் பதம் கடந்த பண்பென
மின்னகத்தில் மின் ஒடுங்கி மின்னதான வாறு போல்
என்னகத்தில் ஈசனும் யானும் அல்லது இல்லையே.

இலக்கணம் இல்லாத தமிழைப் போல் இலட்சியம் ஏதும் இல்லாத மனிதர்களை என்னவென்று சொல்வது. பண்ணிசைத்துப் பாடும் செந்தமிழ் பாடல்கள் யாவும் பரம்பொருளின் பாதம் பற்றி இறைவனை அடைவதே குறிக்கோள் என்பதே மனிதனின் பண்பு எனக் கூறுகின்றது. மின்னலானது தோன்றி மின்னலிலேயே ஒடுங்கி மின்னலாக மறைந்தது. அது எங்கிருந்தும் ஒளியைப் பெற்றுக் கொள்ளாமல் மேக மூட்டங்களின் மோதலாய் தானே தோன்றி ஒடுங்குதைப் போல எனக்குள் மன ஓட்டத்தை நிறுத்தி வாசியால் கனலும் அனலும் கலந்து என்னுள் சோதியான ஈசனைக் கண்டு தியானம் செய்தேன். அங்கு என்னையும் ஈசனையும் தவிர வேறு யாரும் இல்லையே.

95. ஆலவித்தில் ஆல்ஒடுங்கி ஆலமான வாறுபோல்
வேறு வித்தும் இன்றியே விளைந்து போகம் எய்திடீர்
ஆறு வித்தை ஓர்கிலீர் அறிவிலாத மாந்தரே
பாரும் இத்தை உம்முளே பரப்பிரமம் ஆவிரே.

மிகச்சிறிய ஆல விதைக்குள் பெரிய ஆலமரம் ஒடுங்கியிருந்து வளர்ந்து மிகப்பெரிய ஆலமரமாக ஆகின்றது. அதுபோல் பரம்பொருளே ஓரெழுத்து வித்தாக இருந்து விளைந்து இன்ப துன்பமுறும் உடலாக உலாவுகின்றது. ஓரெழுத்தே பிரமமாக நமக்குள் இருப்பதை அறிந்து அதனை நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களிலும் வாசியை ஏற்றி இறக்கி யோகவித்தை செய்வதை அறியாமல் இருக்கும் அறிவிலாத மனிதர்களே உமக்குள்ளேயே இந்த வாசியோகத்தைச் செய்து பாருங்கள். மெய்பொருளை அறிந்து பார்ப்பானைப் பார்த்து வித்தாக உள்ள ஈசனை தியானம் செய்யுங்கள். நீங்களே அந்த பரப்பிரம்மமாய் ஆவீர்கள்.

96. அவ்வுதித்த மந்திரம் அகாரமாய் உகாரமாய்
எவ்வெழுத்து அறிந்தவர்க்கு ஏழுபிறப்பு அது இங்கிலை
சவ்வுதித்த மந்திரத்தை தற்பரத்து இருத்தினால்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே.

ஓரெழுத்து மந்திரமே முதல் எழுத்தாகிய அகாரம் தோன்றுவதற்கும் உயிர் எழுத்தாகி உகாரம் தோன்றுவதற்கும் காரணமாய் உள்ளது. அது எவ்வாறு என்பதை அறிந்து தியானிப்பவர்களுக்கு இங்கு எழு பிறப்பு என்பது இல்லை என்றாகிவிடும். தொண்டைச் சவ்வில் உதிக்கும் அந்த மந்திரத்தை 'ம்' என்று ஓதி தன்னிடமே உள்ள பரம்பொருளில் இருத்தி தியானியுங்கள். அகாரத்திலும் உகாரத்திலும் மகாரத்திலும் சிகரமாய் அமர்ந்திருப்பது ஊமையெழுத்தே என்பதை உணருங்கள்.

97. நவ்விரண்டு காலதாய் நவின்ற மவ் வயிறதாய்
சிவ்விரண்டு தோளதாய் சிறந்த வவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் அமர்ந்து நின்ற நேர்மையில்
செவ்வை ஒத்து நின்றதே சிவாயம் அஞ்செழுத்துமே!

பஞ்சாட்சரம் நமது உடம்பில் நகாரம் இடுப்பிலிருந்து கால்கள் வரையிலும், மகாரம் வயிறாகவும், சிகாரம் நெஞ்சிலிருந்து இரண்டு தோள்களாகவும், வகாரம் தொண்டை வாயாகவும், யகாரம்

இரண்டு கண்களாகவும் அனைவருக்கும் நேர்மையாக அமைந்துள்ளது. தூலத்தில் இவ்வாறு அமைந்துள்ள அஞ்செழுத்து சூட்சுமத்தில் செம்மையான மெய்ப்பொருளாக அதே பஞ்சாட்சரமாக ஒத்து இருப்பதை அறிந்து தியானித்து சிவமே அஞ்செழுத்தாக இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

98. இரண்டுமொன்று மூலமாய் இயங்கு சக்கரத்துளே
சுருண்டு மூன்று வளையமாய் சுணங்கு போல் கிடந்ததீ
முரண்டெழுந்த சங்கின் ஓசை மூலநாடி ஊடுபோய்
அரங்கன் பட்டணத்திலே அமர்ந்ததே சிவாயமே!

மூலாதார சக்கரத்தின் உள்ளே பாம்பைப் போல் சுருண்டு மூன்று வளையமாக குண்டலினி சக்தி கனலான தீயாக இருந்து தூங்கிக் கொண்டுள்ளது. அதனை வாசியோகத்தில் விழிப்புறச் செய்தால் அச்சக்தியானது சங்கின் ஓசையுடன் கிளம்பும், அவ்வாசியை சுழுமுனை எனும் மூலநாடியால் முதுகுத்தண்டின் வழியாக மேலேற்றி சகஸ்ரதளத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். அது சக்தியும் சிவனும் ஒன்றாகி இயங்கும் அரங்கன் பள்ளி கொண்ட இடத்தில் சிவமாக அமர்ந்திருப்பதை அறிந்து யோகஞான சாதகத்தால் தியானம் செய்து உணர்ந்து கொள்ளுங்கள்.

99. கடலிலே திரியும் ஆமை கரையிலே ஏறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமான வாறு போல்
மடலுளே இருக்கும் எங்கள் மணியரங்க சோதியை
உடலுளே நினைத்து நல்ல உண்மையானது உண்மையே!

கடலில் வாழும் ஆமையானது கரையில் ஏறி முட்டையிட்டு மணலைப் போட்டு மூடி விட்டு கடலுக்கே சென்றுவிடும். பின் கடலில் திரிந்து கொண்டே நினைவாலேயே அடைகாக்கும். அதனால் முட்டைகள் பொரிந்து அவை ரூபமாக வெளிவரும். அதன் பின்னரே தாயுடன் சேர்ந்து ஆமை குஞ்சுகளும் கடலில் திரியும். அவை ரூபம் அடைவதற்கு தாய் ஆமையின் நினைவே காரணமாய் இருந்தது போல், நம் உள்ளமாகிய தாமரையில் இருக்கும் மணியாக விளங்கும் அருட்பெருஞ்சோதியான ஆண்டவனை உடலுக்குள்ளேயே மெய்ப்பொருளாக இருப்பதை எண்ணி நினைத்து தியானியுங்கள்.

100. மூன்று மண்டலத்திலும் முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும் நவின்றெழுந்த அட்சரம்
ஈன்ற தாயும் அப்பனும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றும் ஓர் எழுத்துளே சொல்ல எங்கும் இல்லையே.

அக்னி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்கள் நம் உடற் தத்துவத்தில் உள்ளது. சந்திர கலை, சூரிய கலை, சுழுமுனை நாடிகளில் ஓடும் காற்றை வாசியாக்கி மூலாதாரத்தில் செலுத்தி தூணாகிய முதுகுத்தண்டினில் முட்டி மேலேற்ற வேண்டும். பாம்பைப் போல் சுருண்டு உறங்கும் குண்டலினி சக்தியை ஓங்காரத்தில் எழும் அகார உகார அட்சரத்தால் எழுப்பி உண்ணாக்கில் வைத்து ஓதவேண்டும். இந்த மந்திரமே பெற்றதாயும் தந்தையும் எடுத்துரைத்த ஓங்காரமாகும். அதுவே ம் என்ற நாத ஒலியுடன் சோதியான பிரம்மத்தில் சேரும், ஓரெழுத்தில் தோன்றுவதே ஓங்காரம். இதனை சொல்லித்தர யாரும் எங்கும் இல்லையே.

101. மூன்று மூன்று மூன்றுமே மூவர் தேவர் தேடிடும்
மூன்றும் அஞ்செழுத்துமாய் முழங்கும் அவ்வெழுத்துளே
ஈன்ற தாயும் அப்பனும் இயங்குகின்ற நாதமும்
தோன்றும் மண்டலத்திலே சொல்ல எங்கும் இல்லையே.

ஓம் என்ற ஓங்காரத்தில் ஒன்பது வகையான சூரியன், சந்திரன், அக்னி, நட்சத்திரம், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி என அனைத்தும் தோன்றியது. இதனை மூவர்களும் தேவர்களும் தேடினார்கள். அது அ, உ, ம் என்ற மூன்றெழுத்தாகவும் நமசிவய அஞ்செழுத்தாகவும் அனைத்தும் அடங்கிய ஓரெழுத்தாகவும் இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இந்த ஓங்காரமே நமையீன்ற தாய் தந்தையாகவும் நாத விந்தாகவும் இயங்கி வருகின்றது. அதுவே மூன்று மண்டலத்திலும் அ,உ,ம் என்ற எழுத்தாக இருந்து வருகின்றது. இந்த ஓங்கார உட்பொருளையும் ஓரெழுத்து உண்மையையும் சொல்ல எங்கும் யாரும் இல்லையே. ஆதலால் ஓங்காரத்தின் அனுபவ உண்மைகளை அனைவரும் அறிந்து தியானியுங்கள்.

102. சோருகின்ற பூதம் போல் சுணங்குபோல் கிடந்த நீர்
நாறுகின்ற கும்பியில் நயந்தெழுந்த மூடரே
சீறுகின்ற ஐவரைச் சிணுக்கறுக்க வல்லிரேல்
நூறுகோடி வேணியார் ஆறில் ஒன்றில் ஆவிரே!

உண்ணும் உணவின் சக்தியினால் பஞ்சபூதங்களால் உருவான சுக்கிலமானது விந்து பையில் சேருகிறது. அதனைக் காம வேட்கையால் நாறுகின்ற சாக்கடையில் வீழ்ந்து எழுவதைப் போல் சிற்றின்பத்திதை விரும்பி வீணாக்கும் மூடர்களே! காமத்தைத் தூண்டும் ஐம்புலன்களையும் ஐந்தெழுத்தால் அடக்கி வாசியோகத்தால் அந்நீரை அனலாக மாற்றி மேலேற்றி காம, கோபத்தை அறுக்க வல்லவர்களானால் மனிதர்களில் கோடியில் ஒருவராகி ஆறு ஆதாரங்களையும் கடந்து ஒன்றாக ஒளிரும் சோதியாக ஆவீர்கள்.

103. **வட்டமென்று உம்முளே மயக்கிவிட்ட திவ்வெளி**
அட்டரக் கரத்துளே அடக்கமும் ஒடுக்கமும்
எட்டும் எட்டும் எட்டுமாய் இயங்கு சக்கரத்துளே
எட்டலாம் உதித்து எம்பிரானை நாம் அறிந்தபின்.

பிரம்மம் உனக்குள்ளே வட்டமாக நின்று ஆட்டுவித்து வெளியான ஆகாயத்தில் திகழ்கின்றது. ஓம்நமசிவய எனும் எட்டு அட்சரத்துக்குள்ளே தான் ஐம்புலன் அடக்கமும் தியான ஒடுக்கமும் நிறைந்துள்ளது. எண்சாண் உடம்பில் எட்டாகிய அகாரத்தில் எட்டுத்திசைகளாகவும் பதினாறு கோணமுமாக இயங்கும். வெட்டாத சக்கரத்துளே சோதியாக உதிப்பவன் ஈசன். நாம் இதனை நன்கு அறிந்து அந்த இடத்திலேயே ஓம் நமசிவய என்று ஓதி தியானிப்போம்.

104. **பேசுவானும் ஈசனே பிரமஞானம் உம்முளே**
ஆசையான ஐவரும் அலைத்தலைகள் செய்கிறார்
ஆசையான ஐவரை அடக்கி ஓர் எழுத்திலே
பேசிடாது இருப்பிரேல் நாதன் வந்து பேசுமே.

மனசாட்சியாக இருந்து பேசுபவன் ஈசன். உனக்குள் பிரமத்தை அறிந்து ஞானம் பெற தியானம் செய்யுங்கள். ஆசைகள் ஐம்புலன்களால் வெளிப்பட்டு ஞானமடைய தடை செய்து, நம்மை அலைக்கழித்து துன்புறுத்துகின்றது. அவ்விச்சையை விட்டு ஐம்புலன்களையும் அடக்கி ஓரெழுத்திலேயே மனதை நிறுத்தி மௌனமாக இருந்து தவம் செய்து வந்தால் உள்ளிருக்கும் ஈசனே குருநாதனாக வந்து பேசுவான்.

105. **நமசிவாய அஞ்செழுத்தும் நல்குமேல் நிலைகளும்**
நமசிவாய அஞ்சில் அஞ்சும் புராணமான மாயையும்
நமசிவாய அஞ்செழுத்து நம்முளே இருக்கவே
நமசிவாய உண்மையை நன்கு உரை செய் நாதனே.

நமசிவய என்ற அஞ்செழுத்து மந்திரத்தை அனுதினமும் உபாசித்து வந்தால் எல்லா வளமும் நலமும் மேலான நிலைகளும் கிடைக்கும். நமசிவாய எனும் அஞ்செழுத்தே பஞ்சபூதங்களாகவும், புராணங்களாகவும், மாயையாகவும் அமைந்துள்ளது. இந்த அஞ்செழுத்து நமக்குள்ளேயே ஆறாதாரங்களிலும், பஞ்சாட்சரமான மெய்ப்பொருளாகவும் இருப்பதை அறிந்து அது எப்போதும் நித்தியமாய் உள்ளது என்பதை உணர்ந்து நமசிவாய உண்மையை நன்றாக உபதேசியுங்கள் குருநாதரே.

106. **பரம் உனக்கு எனக்கு வேறு பயம் இலை பராபரா**
கரம் எடுத்து நித்தலும் குவித்திடக் கடவதும்
சிரம் உருகி ஆர்த்தலும் சிவபிரானே என்னலும்
உரம் எனக்கு நீ அளித்த ஓம் நமசிவாயவே!

நீயே பரம்பொருள் என தெளிந்து என் உடல், பொருள், ஆவியை உனக்கே என ஒப்படைத்துவிட்டேன். அதனால் எனக்கு வேறு பயம் ஏதும் இல்லாதிருக்கிறேன் பராபரனே. உன்னை தினமும் கைகூப்பி வணங்கிடவும், மெய் பக்கியினால் சிரம் உருகி கண்ணீர்விட்டு ஆர்த்தார்த்து அழுதிடவும், எந்நேரமும் என் பிராணனை சிவ சிவ என வாசியிலேற்றி தியானித்திடவும் என் உயிருக்கும் உடலுக்கும் உறுதுணையாக வந்து நான் வாழ உரமாக இருப்பது, நீ எனக்கு உபதேசித்த ஓம்நமசிவய எனும் மந்திரமே.

107. **பச்சை மண் பதுப்பிலே புழுப்பதிந்த வேட்டுவன்**
நிச்சலும் நினைத்திட நினைந்த வண்ணம் ஆயிடும்
பச்சைமண் இடிந்து போய் பறந்ததும்பி ஆயிடும்
பித்தர்காள் அறிந்துகொள் பிரான் இயற்று கோலமே!

தும்பியான குளவியானது ஈரமண்ணைக் கொண்டு அழகிய கூடுகட்டி உணர்வுள்ள புழுவை வேட்டையாடி கொண்டு வந்து அடைக்கும். பின் எந்நேரமும் தன்னைப் போல் மாற்றுவதற்கு ரீங்கார ஓசையுடன் கொட்டிக்கொண்டிருக்கும். இப்படி ஒரே நினைவோடு செய்யும் அதன் செயலால் அப்புழுவானது குளவி நினைத்தவாறே குளவியாக மாறிவிடும். அற்ப உயிராக இருந்த

புழு குளவியாகி அக்கூட்டை உடைத்துக்கொண்டு தும்பியாக பறந்து செல்லும். இதனை அறிந்து கொண்டு ஒரே நினைவோடு பிராணனை இறைவனோடு இணைக்க தியானம் செய்யுங்கள், ஈசன் நடத்தும் நாடகமே எல்லாம் என்பதை உணருங்கள்.

108. **ஒளியதான காசிமீது வந்து தங்குவோர்க்கெலாம்**
வெளியதான சோதிமேனி விஸ்வநாதனானவன்
தெளியு மங்கை உடன் இருந்து செப்புகின்ற தாரகம்
எளியதோர் இராம ராம ராமவிந்த நாமமே!

வெளியில் காசிமாநகரில் ஜோதிர்லிங்கமாக இருப்பவன் விஸ்நாதன். நம் உடம்பில் ஒளிவீசும் இடமான புருவமத்தியையே கங்கை ஆறு ஓடும் காசி எனப்புகலப்படும். அவ்விடத்தில் ஈசனைக் கண்டு தியானம் செய்பவர், வெட்டவெளியாக சோதிமேனி கொண்டு விளங்கும் விஸ்வநாதனாக காட்சி தருவான். அங்கு இடகலையும், பிங்கலையும் இணைந்து சுழுமுனையில் வாசியை ஏற்றி இறக்கி நிறுத்தி தியானிப்பதற்கு எளியதான மந்திரம் இராம நாமமே.

109. **விழியினோடு புனல் விளைந்த வில்வவல்லி யோனியும்**
வெளியிலே பிதற்றலாம் விளைவு நின்றது இல்லையே
வெளிபரந்த தேசமும் வெளிக்குள் மூல வித்தையும்
தெளியும் வல்ல ஞானிகாள் தெளிந்திருத்தல் திண்ணமே.

கண்களில் கண்ணீர் சிந்தி அன்பால் விளைந்த கரும்புவில்லைக் கொண்ட மனோன்மணி ஆத்தாளை ஐந்தாவது யோனியில் பிறந்து அறிந்து கொள்ள வேண்டும். வெளியிலே அவள் சக்தியை உணராமல் எப்படி வேண்டுமானாலும் பிதற்றலாம். ஆனால் அவளுடைய அருட்செயல்களால் ஏற்படும் விளைவுகள் யாவும் எப்பபோதும் நிற்பதில்லை. பரந்து காணப்படும் ஆகாயம் நம் மனமாக இருப்பதை அறிந்து தன் ஆன்மாவில் மூல வித்தாக ஈசன் மெய்ப்பொருளாக இருப்பதை உணர்ந்து தெளிந்த ஞானிகள் திண்ணமாக தியானத்தில் இருப்பார்கள்.

110. **ஓம் நமசிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்**
ஓம் நமசிவாயமே உணர்ந்து மெய் தெளிந்த பின்
ஓம் நமசிவாயமே உணர்ந்து மெய் அறிந்த பின்
ஓம் நமசிவாயமே உட்கலந்து நிற்குமே!

ஓம் நமசிவாய என்பதை நன்றாக உணர்ந்து அதை நம் உடலில் உணர்ந்து கொள்ளவேண்டும். ஓம் நமசிவாய என்பது என்ன என்பதை எல்லாம் உணர்ந்து அதன் மெய்யான தன்மைகளைச் சிந்தித்து தெளிந்து கொள்ளவேண்டும். ஓம் நமசிவாய என்பது நம் உடம்பில் உயிராக உள்ள மெய்ப்பொருளே என்பதை அறிந்து கொள்வேண்டும். இப்படி அனைத்துமாய் இருக்கும் பஞ்சாட்சரம் நம் உடப்பிலும் உயிரிலும் கலந்து நிற்பதை அறிந்தபின் ஓம் நமசிவாய என ஓதி தியானியுங்கள்.

111. அல்லல் வாசல் ஒன்பதும் அடைத்தடைந்த வாசலும்
சொல்லும் வாசல் ஓர் ஐந்தும் சொம்மிவிம்மி நின்றது
நல்ல வாசலைத்திறந்து ஞானவாசல் ஊடு போய்
எல்லை வாசல் கண்டவர் இனிப்பிறப்பது இல்லையே!

ஓன்பது வாசல் கொண்ட இவ்வுடம்பு இவ்வுலக வாழ்வில் அல்லல் படுத்துகின்றது. அறுத்தடைத்த வாசலாகவும் சொர்க்க வாசலாகவும் உள்ள பத்தாம் வாசலை அறிந்து கொள்ளுங்கள். அங்குதான் ஓரெழுத்து பஞ்சாட்சரமாக மின்னிக்கொண்டு நிற்கிறது. அந்த நல்ல வாசலில் ஐந்தெழுத்தை ஓதி ஐம்புலன்களையும் அடக்கி தியானம் செய்ய நம் தீயாக இருக்கும் நந்தி விலகி ஈசன் உறையும் ஞான வாசலில் சேர்ந்து இன்புறலாம். இதுவே இறைவன் இருக்கும் எல்லைவாசல் எனக் கண்டறிந்து தியானமும் தவமும் புரிபவர்கள் இனி இப்பூமியில் பிறப்பது இல்லையே.

112. ஆதியானது ஒன்றுமே அநேக அநேக ரூபமாய்
சாதி பேதமாய் எழுந்து சர்வ ஜீவன் ஆனது
ஆதியோடு இருந்து மீண்டு எழுந்த ஜென்மம் ஆனபின்
சோதியான ஞானியாகிச் சுத்தமாய் இருப்பனே!

ஆதியிலிருந்தே பிரமமான ஒன்றிலிருந்தே அனேக அனேக ரூபங்களாகி மனித சாதி, மிருக சாதி, பறவை சாதி எனப் பல பேதங்களாகத் தோன்றி சகல உயிர்களாக ஆனது. முன் பிறவியில் ஆதியை அறிந்து தியானித்தவர்கள் நிலையடையாது மீண்டும் ஜென்மம் எடுத்தவர்கள் விட்ட குறை பற்றி வந்து மெய்ப்பொருளை அறிந்து கொள்வார்கள். யோக ஞான சாதகத்தை தொடர்ந்து செய்து சுத்த சோதியான ஈசனை உணர்ந்து சுத்த ஞானியாகி இறைவனை அடைய பாடுபட்டு வாழ்ந்திருப்பர்.

113. மலர்ந்த தாது மூலமாய் வையகம் மலர்ந்ததும்
மலர்ந்த பூ மயக்கம் வந்து அடுத்ததும் விடுத்ததும்
புலன்கள் ஐந்தும் பொறி கலங்கி பூமிமேல் விழுந்ததும்
இலங்கலங்கி நின்ற மாயம் என்ன மாயம் ஈசனே!

மூலமான வித்திலிருந்து இயங்கும் நாத விந்து எனும் தாதுக்களால் இந்த பூமியும் உயிர்களும் தோன்றியது. இவ்வுலக வாழவில் வரும் இன்ப துன்பங்களின் அனுபவங்களால் இறைவனை அடுத்தும் விடுத்தும் வாழ்ந்து, மலர்ந்த பூக்கள் உதிரவது போல் வாழ்வு முடிந்ததும் ஐம்புலன்களும் பொறிகளும் கலங்கி பூமியில் மரணமடைகின்றனர். பிறப்பு, இறப்பு எனும் இவ்வுலக மாயையில் சிக்கி உழலும் மனிதர்கள் உடம்பில் நீ நின்று ஆட்சி செய்யும் மாயம் என்ன மாயம் ஈசனே.

114. பாரடங்க உள்ளதும் பரந்த வானம் உள்ளதும்
ஓரிடமும் இன்றியே ஒன்றி நின்ற ஒண்சுடர்
ஆரிடமும் இன்றியே அகத்திலும் புறத்துளும்
சீரிடங்கள் கண்டவன் சிவன் தெளிந்த ஞானியே.

பூமியில் அடங்கியுள்ள யாவிலும் ஆகாயமாக விரிந்துள்ள அனைத்திலும் அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்த பரம்பொருளே சோதியாக உள்ளது. அச்சோதியே எல்லா உயிரிலும் வியாபித்து அவரவர் மனத்துள்ளும் புற உடம்பிலும் மெய்ப்பொருளாக விளங்கி நிற்கின்றது. அதனை அறிந்து தன் சீவனிலேயே சிவனைக் கண்டு தியானிக்கும் யோகி தெளிந்த ஞானியே.

115. மண்கிடாரமே சுமந்து மலையுள் ஏறி மறுகுறீர்
எண்படாத காரியங்கள் இயலும் என்று கூறுகிறீர்
தம்பிரானை நாள்தோறும் தரையிலே தலைபடக்
கும்பிடாத மாந்தரோடு கூடி வாழ்வது எங்ஙனே!

மண்பாண்டமாகிய இவ்வுடலைச் சுமந்து ஏறாத மலையில் எல்லாம் ஏறி துன்புறுகின்றீர். என்னால் ஆகாத காரியங்கள் யாவையும் செய்ய முடியும் என ஆணவத்தோடு கூறுகிறீர்கள். தமக்குள் இருக்கும் ஈசனை அறிந்து கொள்ளாமல் இருந்தாலும் கோயிலில் சென்று நாள்தோறும் இறைவனை தரிசித்து தரையில் தலைபட வணங்கவும் மாட்டீர்கள். இப்படிப்பட்ட மனிதர்களோடு என்னால் எப்படி சேர்ந்து வாழ முடியும்.

116. நாவினூல் அழிந்ததும் நலம்குலம் அழிந்ததும்
மேவுதேர் அழிந்ததும் விசாரமும் குறைந்ததும்
பாவிகாள் இதென்ன மாயம் வாமநாடு பூசலாய்
ஆவியார் அடங்கு நாளில் ஐவரும் அடங்குவார்.

நாவில் பேச்சு அழிந்ததும் நலமுடன் வாழ்ந்த மனிதகுலம் அழிந்ததும் தான் பயன்படுத்தி மேன்மையாக பாதுகாத்த வாகனங்கள் அழிந்ததும் இவைகளால் ஏற்படும் மன உலைச்சல்களால் இறை விசாரம் குறைந்ததும் இயற்கையாகவே எப்போதும் நடந்து வரும் மாயம் என்பதை அறியாமல் வாழும் பாவிகளே! வாமநாடு எனும் வலப்பக்கமாய் இருந்து உழன்ற நம் ஆன்மா போகும் நாளில் பஞ்சபூதங்களும் ஒவ்வொன்றாக மறைந்துவிடும்.

117. வீடெடுத்து வேள்வி செய்து மெய்யரோடு பொய்யுமாய்
மாடு மக்கள் பெண்டீர் சுற்றம் என்றிருக்கும் மாந்தர்காள்
நாடு பெற்ற நண்பர் கையில் ஓலை வந்து அழைத்த போது
ஆடு பெற்றதவ்விலை பெறாது காணும் இவ்வுடல்.

உண்மையையும், பொய்யினையும் பேசி சம்பாதித்து புது வீட்டைக் கட்டி யாகங்கள் செய்து குடி புகுந்து செல்வம், மக்கள், மனைவி, சுற்றத்தினர் என்று மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும் மாந்தர்களே! உயிர்போகும் ஓலையின்படி உங்கள் உயிரைக் கொண்டுபோக எமன் வந்து அழைத்துப் போகும் போது அவையெல்லாம் கூட வருமா? ஒன்றுக்கும் உதவாமல் உதிர்ந்து போகும் இலைகள் கூட ஆடு, மாடுகள், தின்பதற்காவது உதவும். ஆனால் இந்த உடலைவிட்டு உயிர்போய் விட்டால் ஒன்றுக்கும் உதவாது போகும் இவ்வுடல் என்பதை உணர்ந்து உங்கள் உயிரில் உள்ள ஈசனைக் கண்டு தியானியுங்கள்.

118. இல்லை இல்லை என்று நீர் இயம்புகின்ற ஏழைகாள்
இல்லை என்று நின்றதொன்றை இல்லை என்னலாகுமோ
இல்லை அல்ல ஒன்றுமல்ல இரண்டும் ஒன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்ட பேர் இனி பிறப்பது இல்லையே!

கடவுள் இல்லை இல்லை என்று இயம்புகின்றவர்கள் எதுவும் இல்லா ஏழைகளாவார்கள். இல்லையென்றும் உண்டென்றும் சொல்லுமாறு தனக்குள்ளேயே நானாக நின்ற

ஆன்மாவையும், ஆன்மாவுள் ஆண்டவனையும் அறியாமல் இல்லை என்று சொல்ல என்ன ஆகுமோ? அது இல்லாததும் இல்லை, ஒன்றும் உள்ளதும் அல்ல. சக்தியாகவும், சிவனாகவும் இரண்டும் ஒன்றி நின்ற மெய்ப்பொருளை அறிந்து உணர்ந்து நினைந்து தியானித்து சும்மா இருக்கும் சமாதிநிலை என்ற எல்லையைக் கண்ட தவசீலர்கள் மரணமிலா பெருவாழ்வடைந்து இறைவனுடன் இரண்டறக் கலப்பார்கள். அவர்கள் இனி இம்மாயா உலகில் பிறப்பெடுக்கமாட்டார்கள்.

119. **காரகார கார கார காவல் ஊழி காவலன்**
போரபோர போர போர போரில் நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கள் ஏழும் எய்தஸ்ரீ
ராமராம ராமராம ராம என்னும் நாமமே!

எப்படி மாற்றிப் போட்டும் நாம செபம் செய்தாலும் அது உண்மையை உணர்த்தும் உண்மையாக உச்சரிக்கும் மந்திரங்களின் உட்கருத்து மாறாது. அது அகங்காரத்தை அழித்து தீரத்தைக் கொடுக்கும். உலகங்கள் யாவையும் காத்து ரட்சிக்கும் இறைவன், இராவண வதம் செய்ய போரில் நின்ற புண்ணியன், வாலியை வதம் செய்ய மராமரங்கள் ஏழையும் பாணத்தில் துளைத்தவன் ராமன் அதுபோல் நம் உடலில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞா, சகஸ்ராரம் என்ற ஏழு சக்கரங்களையும் ஸ்ரீராம நாமத்தில் பரிசுத்தமாக்கி அவைகளின் ஆற்றலால் தியானம், தவம் மேலோங்கி பிறவா நிலையடைய துணையாக நிற்பது ராம நாமமே.

120. **நீடுபாரிலே பிறந்து நேயமான காயந்தான்**
வீடுபேறு இது என்றபோது வேண்டி இன்பம் வேண்டுமோ
பாடி நாலு வேதமும் பாரிலே படர்ந்ததோ
நாடு ராம ராமராம ராம என்னும் நாமமே.

இப்பூவுலகில் பல பிறவிகள் எடுத்து பிறந்த இவ்வுடம்பை இது என்னுடையது என எண்ணி இருக்கின்றோம். இது வீடுபேறு எனும் இறை இன்பம் பெறவேண்டினால் கிடைக்குமோ? அதற்கு நான்கு வேதங்களையும் நன்கு பாடிப்பழகி இவ்வுலகமெங்கும் இறை நிறைந்திருக்கும் இயல்பை அறிந்து தன் உடம்பையும், உயிரையும் உணர்ந்து யோக ஞான நாட்டமுடன் தியானம் கடைபிடியுங்கள். அதற்கு உற்ற துணையாக வருவது ராமநாமம். இராம நாமத்தில் ஓரெழுத்தும் ஓங்காரமும் உள்ளதை உணருங்கள்.

**121. உயிரு நன்மையால் உடல்எடுத்து வந்து இருந்திடும்
உயிர் உடம்பு ஒழிந்தபோது ரூபரூபமாயிடும்
உயிர் சிவத்தின் மாயை ஆகி ஒன்றை ஒன்று கொன்றிடும்
உயிரும் சத்திமாயை ஆகி ஒன்றை ஒன்று தின்னுமே.**

உயிரானது நல்வினை, தீவினைக்கேற்ப உடலைப்பெற்று இப்புவியில் வந்து வாழ்ந்து வருகின்றது. உடம்பைவிட்டு உயிர்போனபோது அது உருவம் ஒழிந்து அரூபமாக ஆகின்றது. உயிர் என்பது சிவம் என்ற பரம்பொருளின் மாயையாகி மெய்ப்பொருளாகி அனைத்தையும் தன்னுள் மறைத்து மறைந்திடும். உயிர் சிவனாகவும் உடம்பு சக்தியாகவும் இருப்பதை அறிந்து தியான தவத்தால் ஒன்றிணைத்து சமாதி இன்பம் அடைபவர் உடம்பை உயிரில் கரைத்து இரண்டும் ஒன்றாகி சிவத்தை அடைவர்.

**122. நெட்டெழுத்து வட்டமோ நிறைந்தமல்லி யோனியும்
நெட்டெழுத்தில் வட்டமொன்று நின்ற தொன்றும் கண்டிலேன்
குற்றெழுத்தில் உற்றதொன்று கொம்பு கால் குறித்திடில்
நெட்டெழுத்தின் வட்டம் ஒன்றில் நேர்படான் நம் ஈசனே.**

'அ' முதல் 'ஔ' வரை உள்ள நெட்டெழுத்துகள் யாவும் வட்டத்தில் இருந்து தோன்றுவதைப் போல் வட்டமான பிரமத்திலிருந்தே நால்வகை யோனிகளிலும் உயிர்கள் உலகுக்கு வருகின்றது. எல்லா எழுத்திலும் ஓரெழுத்து நின்றதை கண்டுகொள்ளுங்கள். ஒற்றெழுத்தாகிய 'க' முதல் 'ன' வரையில் அகார ஒலியில் உற்றிருப்பதை உணருங்கள். அதில் கொம்புகால் ஆகியன சேர்த்தால் எழுத்துகளின் ஒலி மாறுவதை அறியுங்கள். உதாரணமாக ச என்பதில் கொம்பு போட்டால் சி என்ற சிவனாகவும் 'சீ' என்ற சீவனாகவும் கொம்பு கால் சேர்த்தால் செ, சே, சு, சூ, சா, சோ, சொ என்று ஒலி மாறுகிறது. இப்படி விளங்கும் எழுத்துக்கள் யாவும் ஓரெழுத்தில் இருந்தே உற்பத்தி ஆகி மொழியில் நிற்பதைப் போல் பிரம்மமான ஈசனிடம் இருந்தே அனைத்தும் ஆகி நிற்பதை உணர்ந்து தியானியுங்கள்.

123. **விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்**
கண்ணிலாணியாகவே கலந்து நின்றதென் பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்த பின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வது உண்மையே.

அமிர்தம் உண்டு அழியாமல் வானுலகில் இருக்கும் தேவர்களும் அறியமுடியாதது மெய்ப்பொருள். அதனை ஈசன் எனக்கு அறிவித்து கண்ணில் ஆணியைப் போல் கலந்து நிற்கிறான் என் குருபிரான். மெய்ப்பொருளை அறிந்தாலே இம்மண்ணில் பிறப்பு, இறப்பு இல்லாது போகும். ஈசனின் திருவடிகளைச் சிந்தையில் வைத்துத் தியானியுங்கள். இந்த ஞானத்தைப் பெற்ற யோகியரிடத்தில் அண்ணலாக ஈசன் சோதி வடிவாய் அமர்ந்து வாழ்வதும் சத்தியமே.

124. **விண்கடந்து நின்ற சோதி மேலை வாசலைத் திறந்து**
கண்களிக்க உள்ளுளே கலந்து புக்கிருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமும் மறந்துபோய்
எண்கலந்த ஈசனோடு இசைந்திருப்பது உண்மையே!

உனக்குள் விண்வெளியாக இருக்கும் மனத்தைக் கடந்து அப்பால் சோதியாக உலாவும் ஈசனை அறிந்து மேலைவாசல் எனும் பத்தாம் வாசலை யோகஞானத்தால் திறந்து தியானிக்க வேண்டும். அப்போது கண்களிக்க உனக்குள்ளே கலந்து புகுந்திருக்கும் இறைவனை தரிசிக்கலாம். இம்மண்ணிலே பிறவி எடுக்கும் மாயமும், மயக்கத்தைத் தருகின்ற சுக போகங்கள் யாவும் மறைந்து போய்விடும். விண்ணில் நிற்கும் சூரியனைப் போல் என்னில் அகாரத்தில் கலந்து நிற்கும் ஈசனோடு இணைந்து இருப்பது உண்மையாகும்.

125. **மூலமான மூச்சதில் மூச்சறிந்து விட்டபின்**
நாலுநாளு முன்னிலோரு நாட்டமாகி நாட்டிடில்
பாலனாகி நீடலாம் பரப்பிரமம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர் ஆணை அம்மை ஆணை உண்மையே.

இவ்வுடலுக்கு மூலமாக இயங்கும் பிராணவாயுவை அறிந்து பிராணாயாமம் எனும் மூச்சுப்பயிற்சியை செய்யவேண்டும். நம் பிராணனில் இருந்து வெளியேறும் நாலு அங்குலமூச்சை இந்த யோகத்தில் நாட்டம் வைத்து ரேசகம், கும்பகம், பூரகம் என்று

வாசியை நாட்டி செய்து வந்தீர்களானால் என்றும் இளமை பெற்று பாலனாக வாழலாம். பரப்பிரம்மத்தை அறிந்து தியானித்து நீயே அதுவாக ஆகலாம். இது ஆலகால விஷம் உண்ட நீலகண்டர் மீதும் அவ்விஷத்தை தடுத்த என் அன்னையின் மீதும் ஆணையிட்டுக் கூறுகிறேன்.

126. மின் எழுந்து மின் பரந்து மின் ஒடுங்கும் வாறுபோல்
என்னுள் நின்ற என்னுள் ஈசன் என்னுள்ளே அடங்குமே
கண்ணுள் நின்ற கண்ணில் நேர்மை கண் அறிவிலாமையால்
என்னுள் நின்ற என்னை யானும் யான் அறிந்தது இல்லையே.

மின்னல் வானில் தோன்றி மின்னலாக ஒளிவீசி மின்னலுக்குள்ளே ஒடுங்கிவிடுகின்றது. அதுபோல் என் உடலில் நின்று என் உயிருள் உள்ள ஈசன் நானாக எனக்குள்ளேயே ஒடுங்கி அடங்கியுள்ளான். கண்ணிலே நின்று கண்ணிலே நேர்படும் பிம்பத்தை கண்கள் அறியாத தன்மையினால் கண்ணைப் பற்றிய அறிவு இல்லாமையால் என்னுள் நின்ற ஆன்மாவையும் அதனுள் நின்றிலங்கும் ஆண்டவனையும் நான் எனும் ஆணவத்தால் யான் அறிய முடியாமல் ஆனதே.

127. இருக்கலாம் இருக்கலாம் அவனியில் இருக்கலாம்
அரனுமால் பிரமனும் அண்டம் ஏழு அகற்றலாம்
கருக்கொளாத குழியிலே காலிலாத கண்ணிலே
நெருப்பறை திறந்த பின்பு நீயும் நானும் ஈசனே!

இந்த அவணியில் தியான தவத்தை மேற்கொண்டு அதனால் சித்தி பெற்று சித்தர்களைப் போல் எப்போதும் இருக்கலாம். அரன், அரி, பிரமன் என்ற மூவர்களையும் கண்டு வணங்கி அண்டங்கள் ஏழும் சுற்றி வரலாம். ஐந்தாவது யோனியில் பிறந்து அது கருக்கொளாத குழி, நாற்றமில்லா யோனி என்பதை உணர்ந்து புருவமத்தி எனும் மூன்றாவது கண்ணில் சுழுமுனை தாளைத் திறந்து நெருப்பாற்றைக் கடந்து சோதியில் கலந்து பின்பு நீயும் ஈசனே என்று அறிந்து கொள்ளலாம்.

128. ஏகபோகம் ஆகியே இருவரும் ஒருவராய்
போகமும் புணர்ச்சியும் பொருந்துமாறது எங்ஙனே
ஆகிலும் அழகிலும் அதன் கண் நேயம் ஆனபின்
சாகிலும் பிறக்கிலும் இவை இல்லை இல்லையே!

ஏகமனதுடன் ஆணும் பெண்ணும் கூடி இருவரும் ஒருவராகி புணர்ந்து போகம் செய்கின்ற சிற்றின்பம் எல்லா உயிர்களுக்கும் பொதுவாக பொருந்தி ஒத்து இருக்கின்றதே அது எங்கனம்? அதுபோல் ஏகமாக உனக்குள் செய்யும் யோகத்தால் சக்தியும் சிவனும் ஒன்றாகி கலந்து பேரின்ப அனுபவத்தை ஞானிகளும், சித்தர்களும் பொதுவாக இருப்பதை உணர்ந்தனர். அனைத்தும் ஆவதற்கும் அழிவதற்கும் அழகிற்கும் காரணம் சிவமே என்பதை அறிந்து அன்பு வைத்து தியானியுங்கள், தன்னம்பிக்கையுடன் பாடுபட்டு மெய்நிலை அடைந்தவர்களுக்கு இப்பூவுலகில் சாவதும் பிறப்பதும் இல்லாது போகும்.

129. **வேதம் நாலும் பூதமாய் விரவும் அங்கி நீரதாய்**
பாதமே லிங்கமாய் பரிந்து பூசை பண்ணினால்
காதினின்று கடைதிறந்து கட்டறுத்து ஞானிகள்
ஆதி அந்தமும் கடந்து அரிய வீடு அடைவரே!

நான்கு வேதங்களில் உள்ள மெய்ப்பொருள் பஞ்சபூதங்களாய் விரிந்து நம் உடம்பில் நீராய் நிற்கின்றது. அதுவே ஈசன் திருவடியாகவும் இலிங்கமாகவும் இருப்பதை அறிந்து ஆன்மா எனும் பூவை அசையாமல் நிறுத்தி தியானிக்க வேண்டும். அப்போது வாசியானது லயமாகி நாத சப்தத்துடன் நம் காதுகளில் கேட்கும். அந்நாத ஒலியால் மெய் வாசலைத் திறந்து மனமெனும் பேயை தவத்தால் கட்டறுத்த ஞானிகள் ஆதி அந்தமும் கடந்து அனாதியாய் உள்ள சிவத்தை அடைந்து அரிய வீடு பேறை அடைவார்கள்.

130. **பருத்தி நூல் முறுக்கிவிட்டு பஞ்சி ஓதும்மாந்தரே**
துருத்தி நூல் முறுக்கிவிட்டு துன்பம் நீங்க வல்லீரேல்
கருத்தில் நூல் கலைபடும் காலநூல் கழிந்திடும்
திருத்திநூல் கவலறும் சிவாய அஞ்சு எழுத்துமே.

நைந்துபோன பருத்தி நூலினால் நெய்த ஆடைகளை உடுத்தி பஞ்சப்பாட்டுப் பாடி வாழும் மனிதர்களே! உங்களுக்குள் இருக்கும் குண்டலினி சக்தியை வாசியோகத்தால் துருத்தி கொண்டு ஊதுவதுபோல் ஊதி விழிப்புறச் செய்து மேலேற்றினால் துன்பங்கள் யாவும் தானே நீங்கும். இந்த யோகத்தால் தியானிப்பவர் சிந்தையில் கருத்துள்ள நல்ல நூல்களும் உதிக்கும். பல கலை ஞானத்திலும் சிறந்து விளங்குவர்.

காலன் எனும் எமன் அணுகான். வாழ்நாள் காலங்கள் திருத்தி ஆயுள் அமையும். கவலைகள் யாவும் அற்றுப் போகும். ஆகவே சிவயநம என அஞ்செழுத்தை ஓதி தியானம் செய்யுங்கள்.

131. சாவதான தத்துவச் சடங்கு செய்யும் ஊமைகாள்
தேவர் கல்லும் ஆவரோ சிரிப்பதன்றி என் செய்வேன்
மூவராலும் அறியொணாத முக்கணன் முதற்கொழுந்து
காவலாக அம்முளே கலந்திருப்பன் காணுமே.

ஒன்றுக்கும் உதவாத தத்துவச் சடங்குகள் செய்து செத்துப் போகும் உண்மையை உணராத ஊமை மனிதர்களே! வெறும் கல்லுக்குச் செய்யும் சடங்குகள் இறைவனைச் சேருமா? எல்லாம் படைத்த ஈசன் கல்லாகவா இருப்பான்! இதைக் கண்டு சிரிக்காமல் வேறு என்ன செய்வேன். அறிவு, உணர்வு நினைவு என்ற மூன்றாலும் அறிய முடியாத முக்கண்ணனான ஈசனின் முதல் பிள்ளையான கணேசன் உனக்கு காவலாக உனக்குள்ளேயே பிண்டக்கல்லாக அகாரத்திலே கலந்திருப்பதைக் கண்டு தியானம் செய்யுங்கள்.

132. காலை மாலை நீரிலே முழுகும் அந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே கிடந்த தேரை என் பெறும்
காலமே எழுந்திருந்து கண்கள் மூன்றில் ஒன்றினால்
மூலமே நினைப்பிராகில் முத்தி சித்தி யாகுமே.

காலையும் மாலையும் மனச்சுத்தம் செய்யத் தெரியாமல் உடல் சுத்தம் மட்டுமே செய்து நீரில் மூழ்கி குளித்துவிட்டு மோட்சம் அடைவோம் எனக்கூறும் மூடர்களே! எப்போதும் நீரிலேயே வாழும் தவளையால் முத்தி அடைய முடியுமா? அதிகாலையிலே எழுந்து தியானம் செய்து மூன்றாவது கண்ணாகிய புருவமத்தியில் ஒன்றி யோக ஞானப்பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை வாசியால் மேலேற்றி மெய்ப்பொருளை நினைத்து தியானித்து இருப்பிராகில் அதுவே முத்தி அடைவதற்கும் சித்தி பெறுதற்கும் வழியாகும்.

133. எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ
இங்கு மங்குமாய் இரண்டு தேவரே இருப்பரோ
அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ
வங்கவாரம் சொன்ன பேர்கள் வாய்புழுத்து மாள்வரே.

எங்கள் கடவுள் இது என்றும் உங்கள் கடவுள் அது என்றும் இரண்டு கடவுளா இருக்கின்றது. இங்கொன்று அங்கொன்று இரண்டு தெய்வம் இருக்குமா? அங்கும் இங்கும் எல்லாமாய் ஆகி நின்ற ஆதிமூர்த்தியான சிவம் ஒன்றல்லவா. எங்கும் உள்ள கடவுள் ஒருவரே. இது பெரியது என்றும் உங்களது சிறியது என்றும் கூறி இறைவனின் உண்மையை உணராது வாதம் பேசுபவர்கள் வாய்புழுத்து மாள்வார்கள்.

134. அறையறை இடைக்கிடந்த அன்று தூமை என்கிறீர்
முறை அறிந்து பிறந்த போதும் அன்று தூமை என்கிறீர்
துறை அறிந்து நீர்குளித்தால் அன்று தூமை என்கிறீர்
பொறை இலாத நீசரோடும் பொருந்துமாறது எங்கனே.

இளம்பெண்களை மாதத்தில் மூன்று நாட்கள் அறையில் ஒதுக்கி வைப்பது ஏன் என்றால் அவள் தீட்டு என்று சொல்கிறார்கள். பத்து மாதம் கருவிலிருந்து பிறந்த குழந்தைகளுக்கும் தீட்டு என்கிறார்கள். இறந்த சாவுக்குப் போய்விட்டு குளத்தின் துறைகளில் குளிக்கும் காரணம் கேட்டால் அதற்கும் தீட்டு என்கிறார்கள். இப்படி எதற்கெடுத்தாலும் தீட்டு எனும் பொருமை இல்லாத நீசர்களோடும் நீ தீட்டாகவே பொருந்தி இருப்பது எவ்வாறு இறைவா.

135. சுத்தம் வந்த வெளியிலே சலமிருந்து வந்ததும்
மத்தமாகி நீரிலே துவண்டு மூழ்கும் மூடரே
சுத்தம் ஏது சுட்டதேது தூய்மை கண்டு நின்றது ஏது
பித்தர் காயம் உற்றதேது பேதம் ஏது போதமே.

சுத்தமான ஆகாயத்திலிருந்து சுத்தமான மழைநீர் பெய்கிறது. இதனை உனக்குள் அறியாது சிற்றின்ப நீரிலே மூழ்கி அதனாலேயே பல துன்பங்களுக்கு ஆட்பட்டு விந்து விட்டு நொந்து கெடும் மூடரே நீரிலே மூழ்குவது மட்டும் சுத்தம் அல்ல. மனதிலுள்ள மாசுகளை நீக்குவதே சுத்தம். சுத்தம் எது? தீயாக சுட்டது எது? என்பதை அறிந்து அது பேதம் ஏதும் இல்லாத மெய்ப்பொருளாய் இருப்பதை உணர்ந்து மனதை அதிலேயே இருத்தி தியான போதத்தில் திளைத்திடுங்கள்.

136. மாத மாதம் தூமைதான் மறந்து போன தூமைதான்
மாத மற்று நின்றலோ வளர்ந்து ரூபம் ஆனது
நாதம் ஏது வேதம் ஏது நற்குலங்கள் ஏதடா
வேதம் ஓதும் வேதியா விளைந்தவாறு பேசடா.

மாதம் தோறும் பெண்களுக்கு இயற்கையாய் வரும் தூமையே அவள் தூய்மையானவள் என்பதற்கு சான்று. அது நின்று போனால் அவள் கருவை தாங்கியிருக்கின்றாள் என்பதே காரணம். அத்தீட்டில் கலந்தே உடலும் உயிரும் வளர்ந்து உருவமாகி ஜனிக்கின்றது. நாதமும் விந்தும் கலந்தே உயிர்கள் யாவும் உண்டானது. இதில் நாதம் ஏது? வேதம் ஏது? நற்குலங்கள் ஏது? எல்லாம் அத்தூமையில் இருந்தே தோன்றியுள்ளது என்பதை அறியாமல் வேதங்களை வெறும் வாயால் ஓதுவதால் மட்டும் உயர்ந்த குலம் எனப் பேசும் வேதியரே! நீங்கள் இப்புவியில் இவை இல்லாமல் தானே விளைந்தீர்களா? அது எப்படி எனக் கூறுங்கள்.

137. **தூமை அற்று நின்றலோ சுதீபமுற்று நின்றது**
ஆண்மை அற்று நின்றலோ வழக்கமற்று நின்றது
தூண்மை அற்று ஆண்மை அற்று சஞ்சலங்கள் அற்று நின்ற
தூமை தூமை அற்ற காலம் சொல்லும் அற்று நின்றதே.

பெண்ணின் தூமை என்ற மாதவிலக்கு நின்ற பிறகுதான் அங்கே கருவாகி ஆண், பெண், அலி என்ற தன்மையற்று பிண்டமாக உயிர் நிற்கிறது. அதன் பின் அப்பிண்டம் சிசுவாகி கருவறையில் வளர்ந்து குழந்தையாக வெளிவருகிறது. அது வளர்ந்து வாழ்க்கையில் அடையும் இன்ப துன்பங்களைப் பெற்று தான் என்ற ஆணவத்தால் பல சஞ்சலங்களை அடைந்து மரணம் அடைகிறது. அத்தூமையால் ஆன உடம்பில் உயிர் போன பின் பிணம் என்ற பேர்பெற்றது தூமை அற்றதால் என்பதை அறியுங்கள். ஆகவே தீட்டில்லாத உடம்பு சவமே.

138. **ஊறி நின்ற தூமையை உறைந்து நின்ற சீவனை**
வேறு பேசி மூடரே விளைந்தவாறது ஏதடா
நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்கள் ஆவன
சீறுகின்ற மூடனே அத்தூமை நின்ற கோலமே.

தாயின் கருவறையில் சுக்கில சுரோணித கலப்பால் தூமையில் ஊறி நின்று உருவான உயிர் மனிதகுலத்திற்குப் பொதுவாக அமைந்துள்ளதை அறியாமல் நீ வேறு குலம் நான் வேறு குலம் என்று வேறுபடுத்தி பேசுகின்ற மூட்டர்களே! அதனால் நீங்கள் அடைந்த பலன் என்ன? நாற்றம் வீசும் தூமையில் பிறந்தவர்கள் தான் மனிதனில் ஞானியராகவும் சித்தர்களாகவும், நற்குலங்களாகவும் உள்ளார்கள்.

இதை உணராது கோபப்படும் முட்டாள்களே! அத்தூமையில் பரிசுத்தனாய் நின்ற ஈசனின் கோலத்தைக் கண்டுணர்ந்து ஒன்றி தியானம் செய்யுங்கள்.

139. **தூமை கண்டு நின்ற பெண்ணின் தூமை தானும் ஊறியே**
சீமை எங்கும் ஆணும் பெண்ணும் சேர்ந்து உலகம் கண்டதே
தூமை தானும் ஆசையாய் துறந்திருந்த சீவனை
தூமை அற்று கொண்டிருந்த தேசம் ஏது தேசமே!

தீட்டு நின்ற பெண்ணின் தீட்டில் ஊறி வளர்ந்த உயிரே ஊர்கள் எங்கும் ஆண்களும் பெண்களுமாய் சேர்ந்து வாழ்ந்து வருவதை இவ்வுலகம் முழுமையும் காண்கிறோம். காம ஆசையால் தீட்டில் தோன்றி உருவாகி நின்ற தன்னை அறிந்தவர்கள் எல்லா ஆசைகளையும் துறந்து இவ்வுலகில் சிவனையே தியானித்து இருப்பார்கள். இருக்கும் அனைத்து சீவனிலும் தீட்டு இல்லாமல் இருக்கும் தேசம் எங்காவது உள்ளதா.

140. **வேணும் வேணும் என்று நீர் வீண் உழன்று தேடுவீர்**
வேணும் என்று தேடினாலும் உள்ளதல்லது இல்லையே
வேணும் என்று தேடுகின்ற வேட்கையைத் துறந்த பின்
வேணும் என்ற அப்பொருள் விரைந்து காணல் ஆகுமே.

உலகில் பிறப்பெடுத்த மனிதர்கள் இறைநிலை அடைவதற்கும், எட்டு சித்திகளைப் பெறுதற்கும் பிறவிப் பிணிமுதல் வரும் பிணிகள் யாவையும் நீக்குவதற்கும், பொன் செய்யும் வித்தைகள் செய்வதற்கும் மெய்ப்பொருள் கிடைக்கவேண்டும். அது கிடைத்தால் எல்லாம் செய்து வளமோடு வாழலாம் என்று வீணாசை கொண்டு பல இடங்களிலும் அலைந்து தேடுகிறார்கள். அது வேணும் என்று எங்கு சென்று தேடினாலும் கிடைக்காது. உனக்குள்ளேயே உள்ளதாகவும், இல்லாததாகவும் இருப்பதை அறிந்து கொண்டு வேணும் என்ற ஆசைகள் யாவையும் துறந்து தியானம் செய்யுங்கள். உண்மையான யோக ஞான சாதகர்களுக்கு வேண்டும் என்ற அந்த மெய்ப்பொருள் கிடைக்கப் பெற்று விரைவில் சோதியான ஈசனைக் காண்பார்கள்.

141. **சிட்டர் ஓது வேதமும் சிறந்த ஆகமங்களும்**
நட்ட காரணங்களும் நவின்ற மெய்மை நூல்களும்
கட்டி வைத்த போதகம் கதைக்குகந்த பித்தெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானை யான் அறிந்தபின்.

வேத பண்டிதர்கள் ஓதும் நான்கு வேதங்களும் சிறந்ததாக விளங்கும் ஆகம சாஸ்திரங்களும், கோயில் கட்டி அதன் கருவறையில் கற்சிலைகள் நட்டு வைத்து கும்பாபிஷேகம் செய்யும் காரணங்களும், திருமந்திரம், திருக்குறள், திருவாசகம் போன்ற உண்மையான நூல்களும், யோக தவத்தால் கட்டிச் சேர்த்து வைத்த போதப் பொருளும், இராமாயணம், மகாபாரதம், புராணம் போன்ற இவையாவும் எனக்குள் இருக்கும் எம்பிரான் ஈசனை அறிந்தபின் எனக்குள்ளே பொட்டாக ஒரே மெய்ப்பொருளாகவே முடிந்திருக்கிறதே என்பதை உணர்ந்து கொண்டேன்.

142. **நூறுகோடி ஆகமங்கள் நூறுகோடி மந்திரம்**
நூறுகோடி நாள் இருந்தும் ஓதினால் அதன்பயன்
ஆறும் ஆறும் ஆறுமாய் அகத்தில் ஓர் எழுத்துமாய்
ஏறுசீர் எழுத்தை ஓத ஈசன் வந்து பேசுமே.

எவ்வளவோ ஆகமங்கள், அதில் எத்தனையோ மந்திரங்கள் வாழ்நாள் காலம் முழுதும் இருந்து ஓதிவந்தாலும் அதனால் மெய்நிலை அடைய முடியுமா? அதன் பயனால் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பதினெட்டு படிகளையும் கடந்து அகத்தில் ஓர் எழுத்தாக மெய்ப்பொருளை அடைந்து அதையே நினைந்து சிவயநம என்று ஓதி தியானிக்க சோதியாக உலவும் ஈசனே உன் குருவாக வந்து பேசுவான்.

143. **காலை மாலை தம்மிலே கலந்த நின்ற காலனார்**
மாலை காலை யாச்சிவந்த மாயம் ஏது செப்பிீர்
காலை மாலை அற்று நீர் கருத்துளே ஒடுங்கினால்
காலை மாலை ஆகி நின்ற காலன் இல்லை இல்லையே.

இரவும் பகலும் தனக்குள்ளேயே கலந்து நிற்கும் இறைவனார் இரவும் பகலுமாய் சிவந்த சோதியாக நின்றிலங்கும் மாயம் எப்படி என்பதைச் சொல்லுங்கள். அது மெய்ப்பொருளாக இருப்பதை அறிந்து இரவும் பகலும் எந்நேரமும் கருத்துக்கள் உதிக்கும் சிந்தையிலேயே நினைவு ஒடுங்கி சிவத்தியானம் செய்து வந்தால் இராப் பகல் இல்லாத இடத்தில் ஈசன் சோதியாக திகழ்வான். அதனால் எமன் வருவான் என்பதோ எமபயம் என்பதோ தியானம் செய்பவர்களுக்குக் கிடையாது.

144. எட்டு மண்டலத்துளே இரண்டு மண்டலம் வளைத்து
இட்ட மண்டலத்துளே எண்ணி ஆறு மண்டலம்
தொட்ட மண்டலத்திலே தோன்றி மூன்று மண்டலம்
நட்ட மண்டபத்திலே நாதன் ஆடி நின்றதே.

எட்டாகிய எண்சாண் உடம்பிலே இரண்டாகிய உயிர் உள்ளது. இப்படி எட்டும் இரண்டுமாய் இணைந்த இத்தேகத்தில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞா ஆகிய ஆறு ஆதாரங்கள் உள்ளன. இவ்வுடம்பில் சூரிய மண்டலம், சந்திரமண்டலம், அக்னி மண்டலம் என்ற மூன்று மண்டலங்கள் இருக்கின்றன. இப்படி உள்ள உடம்பாகிய மண்டலத்தில் நடுவாக இருந்து நாதனாகிய ஈசன் ஆடி நின்று ஆட்டுவிக்கின்றான்.

145. நாலிரண்டு மண்டலத்துள் நாத நின்றது எவ்விடம்
காலிரண்டு மூலநாடி கண்டதங்கு உருத்திரன்
சேரிரண்டு கண்கலந்து திசைகள் எட்டு மூடியே
மேலிரண்டு தான் கலந்து வீசி ஆடி நின்றதே.

எண்சாண் உடம்பில் நாதன் நின்றது எந்த இடம். இடகலை, பிங்கலை எனும் மூச்சில் மூலநாடியான சுழுமுனையில் ஏற்றி இறக்கி, வாசிப்பயிற்சியினால் தீயாக விளங்கும் ருத்திரனை கண்டு அங்கு சந்திர சூரியனாக விளங்கும் இரண்டு கண்களையும் ஒன்றாக இணைத்து எட்டு திசைகளையும் மூடி அகக்கண்ணைத் திறந்து தியானம் செய்யுங்கள். மேலான அவ்வாசலில் சக்தியும் சிவனும் தான் கலந்து சிவமாக ஆடி நிற்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

146. அம்மை அப்பன் அப்புநீர் அறிந்தே அறிகிலீர்
அம்மை அப்பன் அப்புநீர் அரிஅயன் அரனுமாய்
அம்மை அப்பன் அப்புநீர் ஆதியாகி ஆனபின்
அம்மை அப்பன் அன்னை அன்றி யாரும் இல்லை ஆனதே.

தாயாகவும் தந்தையாகவும் நாத விந்துதான் அப்புவான நீராக இருப்பதை அறிந்தும் நாதவிந்தை அறியாமல் உள்ளீர்களே. அப்பு எனும் நீரே விஷ்ணு, பிரம்மா, சிவன் எனும் மும்மூர்த்திகளாக இருக்கின்றனர். அந்த நீரே ஆதிக்கும் ஆதியான அனாதியாகவும் பிரமமாகவும் இருப்பதை உணர்ந்து அது ஒன்றையே எண்ணி தியானியுங்கள். அதுவே அம்மையாவும் அப்பனாகவும் வாலை அன்னையாகவும் இருந்து அருளும்.

147. உருத்தரிப்பதற்கு முன் உடல் கலந்தது எங்ஙனே
கருத்தரிப்பதற்கு முன் காரணங்கள் எங்ஙனே
பொருத்தி வைத்த போதமும் பொருந்துமாறது எங்ஙனே
குருத்திருத்தி வைத்த சொல் குறித்துணர்ந்து கொள்ளுமே.

ஆன்மா உருத்தரிப்பதற்கும் உடம்பு எடுப்பதற்கும் முன் தாய் தந்தை உடல் கலந்தது எவ்வாறு? அது நினைவு எனும் ஆகாயத்தில். அதானல் தோன்றிய சுக்கில சுரோணித கலப்பால் நீராகி தாயின் கருவில் சிசுவாக வளர காரணங்கள் என்ன? அது உகாரமாகிய உணர்வால் இரு வினைக்கு ஒப்பவே இவ்வுடலில் பொருந்தி வைத்த போதப் பொருள் பொருந்தி இருப்பது எவ்விடம்? அது அகாரமாகிய அறிவாகி மெய்ப்பொருளாக உடம்பில் உள்ளது. இவை யாவையும் குரு திருத்தமாக சொல்லித்தந்து உபதேசித்ததை அறிவால் அறிந்து நினைவால் நினைந்து உணர்வால் அதையே குறித்து தியானித்து இறவா நிலை பெறுங்கள்.

148. ஆதி உண்டு அந்தம் இல்லை அன்றி நாலு வேதம் இல்லை
சோதி உண்டு சொல்லும் இல்லை சொல்லிறந்ததேதும் இல்லை
ஆதியான மூவரில் அமர்ந்திருந்த வாயுவும்
ஆதி அன்று தன்னையும் யார் அறிவது அண்ணலே.

ஆதியை அறிந்து அது ஒன்றையே பற்றி தவம் புரியும் ஞானிகள்அழிவது இல்லை. அவர்களுக்கு நான்கு வேதமும் தேவை இல்லை. அவர்கள் சோதியான ஈசனைக் கண்டு அங்கே சொல் ஏதும் இல்லாமல் சொல்லிறந்த தன்மையும் இல்லாமல் மௌனத்தில் ஊன்றி சும்மா இருப்பார்கள். ஆதியான அணுவில் அயன், அரி, அரன் என மூவரும் இருப்பதை உணர்ந்து பிராணசக்தியாக வாலை அமர்ந்தே தானாகி நிற்பதையும் உணர்ந்து தியானத்தில் இருப்பார்கள். இதனை வேறு யார் அறிவார்கள் அண்ணலே.

149. புலால் புலால் அதென்று பேதமைகள் பேசுறீர்
புலாலை விட்டு எம்பிரான் பிரிந்திருப்பது எங்ஙனே
புலாலுமாய்ப் பிதற்றுமாய் பேருலாவும் தானுமாய்
புலாலிலே முளைத்தெழுந்த பித்தன் காணும் அத்தனே.

நாறும் இறைச்சியாலான இவ்வுடம்பு இதுவென்று அறிந்தும் வேறுபடுத்தி இகழ்ச்சியாகப் பேசுகிறீர். இறைச்சியிலான உடம்பை இறைவன் பிரிந்து தானாகி இருந்து எவ்வாறு உடம்பாகவும்,

உயிராகவும் இருந்து வாசியாகி உலாவிக்கொண்டு தானாகி நின்ற பரம்பொருள் இவ்வுடம்பில்தான் வித்தாக முளைத்து முதலாக உள்ளது. இதனை நன்கு உணர்ந்து கொண்டு இவ்வான்மாவை மேம்படுத்த சோதியாக எழுந்த ஈசனை கண்டு தியானம் செய்யுங்கள்.

**150. உதிரமான பால் குடித்து ஒக்க நீர் வளர்ந்ததும்
இதரமாய் இருந்தது ஒன்று இரண்டு பட்டது என்னலாம்
மதிரமாக விட்டதேது மாமிசப்புலால் அதென்று
சதிரமாய் வளர்ந்ததேது சைவரான மூடரே.**

தாயின் இரத்தத்திலிருந்து உருவான பாலைக் குடித்துதான் நீங்கள் வளர்ந்தீர்கள். சதையாக இருந்த ஒன்றிலிருந்தே பிண்டம் உருவாகி வெளிப்பட்டு தாயாகவும், சேயாகவும் இரண்டானது. அமிர்தமாகிய தாய்ப்பால் கொடுப்பதும் மாமிசப்புலாலான சதைதானே. மாமிசத்தில் இருந்தே உருவாகி மாமிசமாகவே வளர்ந்த நீங்கள் மாமிசமல்லாத சதுரமான நான்கில் நின்று வளராமல் இருந்தது எது என்பதை அறிவீர்களா? மற்றவரை சைவர் இல்லையென வெறுக்காது சைவத்தைக் கடைபிடியுங்கள்.

**151. உண்ட கல்லை எச்சில் என்று உள்ளெறிந்து போடுறீர்
கண்ட எச்சில் கையலோ பரமனுக்கும் ஏறுமோ
கண்ட எச்சில் கேளடா கலந்த பாணி அப்பிலே
கொண்ட சுத்தம் ஏதடா குறிப்பிலாத மூடரே.**

புறச்சடங்குகளால் செய்யப்படும் பூஜைகளில் நிவேத்தியமாக படைக்கும் பிரசாதங்களை ஒரு குழந்தை அறியாது எடுத்துத் தின்றுவிட்டால் அதை எச்சில் பட்டுவிட்டது என்று சொல்லி யாருக்கும் பயனில்லாது கீழே எறிந்துவிட்டு வேறு பிரசாதம் செய்து படைக்கின்றார்கள். கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கை பட்டு எச்சிலான இவர்கள் கையால் செய்த பிரசாதங்களை மட்டும் இறைவன் ஏற்று உண்பானோ? எச்சிலாலே தோன்றிய உடம்பில் தானே கைகள் கலந்து இருக்கிறது. அதனைச் சுத்தமான நீரில் கழுவி கைகளைத் துடைத்தால் சுத்தம் வந்துவிடுமா? குறிக்கோள் ஏதும் இல்லாத மூடரே! சுத்தம் என்பது என்ன? இவ்வுடலில் பரிசுத்தனாய் ஈசன் இருக்கும் இடம் எது என்பதை அறிந்து மனமாகிய அகத்தைச் சுத்தம் செய்து இறைவனைத் தியானியுங்கள்.

**152. ஓதி வைத்த நூல்களும் உணர்ந்து கற்ற கல்வியும்
மாது மக்கள் சுற்றமும் மறக்க வந்த நித்திரை
ஏதுபுக்கொளித்ததோ எங்குமாகி நின்றதோ
சோதிபுக் கொளித்த மாயம் சொல்லடா சுவாமியே!**

படித்தறிந்து பாதுகாக்கும் நூல்களும், உணர்ந்து கற்ற கல்வியும், மனைவி, மைந்தர், சுற்றத்தினர் என யாவையும் மறக்கும் படியான மரணம் என்று ஒன்று வந்ததே! அது ஏன் என்பதைச் சிந்தியுங்கள். உடலோடிருந்து உலாவிய உயிர் மரணம் வந்ததும் எங்காவது சென்று ஒளிந்து கொண்டதா? அல்லது எங்குமான வானத்தில் நின்றதா? சோதியான ஈசனை அடைந்ததா ஒளியாக நின்ற உயிர் ஒளிந்த மாயம் எங்கு என்பதை சுவாமி வேடம் போட்டு திரிபவர்களே சொல்லவேண்டும். எல்லாம் ஈசன் செயல் என்பதை உணர்ந்து மரணமிலாப் பெரு வாழ்வை அடைய முயற்சியுங்கள்.

**153. ஈணெருமையின் கழுத்தில் இட்ட பொட்டணங்கள் போல்
மூணுநாலு சீலையில் முடிந்தவிழ்க்கும் மூடர்காள்
மூணுநாலு லோகமும் முடிவிலாத மூர்த்தியை
ஊணி ஊணி நீர்முடிந்த உண்மை என்ன உண்மையே.**

கன்று ஈன்ற எருமை மாட்டின் கழுத்தில் கண் திருஷ்டி படக்கூடாது என்பதற்காக மூன்று பொட்டணங்களை வைத்து முடிச்சுப் போட்டு வைப்பார்கள். அதுபோல பிராமணர்கள் குளிக்கும்போது ஒரு துண்டில் மூன்று முடிச்சுப்போட்டு கழுத்தில் போட்டுக்கொண்டு நீரில் மூழ்குவார்கள். பின் அந்த முடிச்சுகளை அவிழ்த்துத் தண்ணீரிலே போட்டுவிட்டு முன்ஜென்மம், இந்த ஜென்மம், மறுஜென்மம் ஆகிய முப்பிறவிகளின் கர்ம வினையைத் தொலைத்துவிட்டேன் என்று சொல்லி தலை மூழ்குவார்கள். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை விட்டுவிட்டேன் என்றும் விளக்கம் சொல்வார்கள். இதனால் அவைகள் அகன்று விடுமா? ஏழு உலகங்களிலும் ஆதியந்தம் இல்லாத அனாதியான ஈசனை உங்கள் ஊண் உடம்பிலே உணர்ந்து அதிலே ஊன்றி அறிவு, உணர்வு, மனம் ஆகிய மூன்றையும் முடிந்து தியானியுங்கள். மும்மலங்களும், மூவினைகளும் தானே விலகும். இதுவே உண்மையாக இறைவனை அடையும் வழி.

154. சாவல் நாலு குஞ்சது அஞ்ச தாயதான வாறுபோல்
காயமான கூட்டிலே கலந்து சண்டை கொள்ளுதே
கூவமான கிழநரிக்கூட்டிலே புகுந்த பின்
சாவல் நாலு குஞ்சது அஞ்சும் தான் இறந்து போனவே.

நான்கு சாவல்களையும் ஐந்து குஞ்சுகளையும் அதன் தாய்க் கோழியையும் ஒரே கூட்டில் அடைத்து வைத்தால் அவை ஒன்றுக்கொன்று கூவி கொத்தி சண்டை போடுகின்றது. அக்கூட்டில் ஒரு கிழநரி புகுந்துவிட்டால் அவை யாவும் இறந்து போய்விடும். அதுபோலவே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் பஞ்சபூதங்களும் ஆன்மாவும் நம் உடம்பான கூட்டில் இருந்து ஐம்புலன்களாக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வுயிரை உடம்பில் புகுந்து எமன் கொண்டு போய்விட்டால் அந்தக் கரணங்கள் நான்கும் பஞ்சபூதங்களும் மறைந்து போய்விடும் என்பதையும், எல்லாத் தத்துவங்களும் ஆன்மாவில் அடங்கிவிடும் என்பதையும் அறந்து கொள்ளுங்கள்.

155. மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலு கட்டு அறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர் பாதம் அம்மை பாதம் உண்மையே.

அதிகாலையில் எழுந்து நமது மூலாதார சக்கரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை பிராணாயாம பயிற்சி செய்து கோரையைப் போல் முளைக்கும் கோழையாகிய எமனைக் கட்டறுத்து வெளியேற்ற வேண்டும். பின் வாசியோகம் செய்து பிராண சக்தியை மேலேற்றி ரேசக பூரக கும்பகம் என்று மூச்சை கட்டுப்படுத்தி மனதை இறைவனுடன் இருத்தி நான்கு நாழிகை நேரம் முயற்சியுடன் தியானப் பயிற்சியைத் தொடர்ச்சியாக தினமும் செய்து வரவேண்டும். இதனை விடாமல் தொடர்ந்து செய்து வரும் யோகிகள் பாலனாகி வாழ்ந்து பரப்பிரமம் ஆவார்கள். ஆலம் உண்ட நீலகண்டர் பாதமும் அம்மை பாதமும் நம்முள் அமர்ந்திருப்பதை உண்மையாய் உணர்ந்து தியானியுங்கள்.

156. செம்பினில் களிம்பு வந்த சீதரங்கள் போலவே
அம்பினில் எழுதொணாத அணியரங்க சோதியை
வெம்பி வெம்பி வெம்பியே மெலிந்து மேல் கலந்திட
செம்பினில் களிம்பு விட்ட சேதி ஏது காணுமே.

செம்பினில் களிம்பு வந்து சேர்ந்தது போல் நீ செய்த பாவங்கள் உயிரில் சேர்ந்து அது அழிவதற்கு காரணமாகிறது. ஆகவே இச்சீவனைப் பாவங்கள் சேராவண்ணம் சிவனோடு சேர்த்து தியானியுங்கள். அச்சிவன் நம் உடம்பில் எழுதா எழுத்தாகவும் அணி அரங்கமான அழகிய சிற்றம்பலத்தில் சோதியாக உள்ளான். அதனை அறிந்து அவனையே நினைந்து வெம்பி வெம்பி அழுது உன் உயிரும் ஊனும் உருக உணர்ந்து தியானம் செய்து வாருங்கள். செம்பினில் களிம்பு போனால் தங்கமாவது போல் நீயும் பாவங்கள் நீங்கி இறைவனோடு சேர்ந்து இன்புறலாம்.

157. **நாடி நாடி நம்முளே நயந்து காண வல்லிரேல்**
ஓடி ஓடி மீளுவார் உம்முளே அடங்கிடும்
தேடி வந்த காலனும் திகைத்திருந்து போய்விடும்
கோடி காலமும் உகந்து இருந்தவாறு எங்கனே.

இறைவனை அடைவதற்கான வழி, அவனையே நாடி அவன் புகழைப் பாடி அவனை நயந்து தேடி நமக்குள்ளேயே கண்டு கொண்டு யோகமும் தியானமும் பழகவேண்டும். அதனால் பிராணசக்தி கூடி உயிரிலேயே அடங்கிவிடும். இப்படியே தினமும் செய்ய வல்லவர்களுக்கு ஆயுள் கூடி தேடி வரும். எமனே திகைத்துத் திரும்பிவிடுவான். அவர்கள் கல்பகோடி காலமும் ஈசனோடு உகந்து இருப்பார்கள். ஆகவே யோக ஞான சாதனங்களைக் கைக்கொண்டு பிறவாநிலை பெறுங்கள்.

158. **பிணங்குகின்றது ஏதடா பிரஞ்ஞை கெட்ட மூடரே**
பிணங்கிலாத பேரொளி பிராணனை அறிகிலீர்
பிணங்கும் ஓர் இருவினைப் பிணக்கு அறுக்க வல்லிரே
பிணங்கிலாத பெரிய இன்பம் பெற்றிருக்கலாகுமே.

கோபம் கொள்வது எது என்பதை அறியாத மூடரே! சாந்தமான பேரொளியாக ஈசன் உன் பிராணனில் இருப்பதை அறியாமல் இருக்கிறீர்கள். இவ்வுலகில் பிறக்கவைக்கும் நல்வினை தீவினை எனும் இரு வினைகளை யோக ஞானத்தால் பிணக்கு அறுத்து தியானம் செய்ய வல்லவர்களானால் ஈசன் அருளால் பேரின்பம் பெற்று மரணமில்லாப் பெருவாழ்வில் இருக்கலாகுமே.

159. மீன் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மீன் இருக்கும் நீரல்லோ மூழ்வதும் குடிப்பதும்
மான் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மானுரித்த தோலலோ மார்பு நூல் அணிவதும்.

மீன் இறைச்சி வேதம் ஓதும் பிராமணர்கள் எப்பொழுதும் உண்பதில்லை. அசைவத்தை உண்பதால் அசுத்தம் வந்துவிடும் என்றிடுவர். அவர்கள் மீன் இருக்கும் நீரில்தான் குளிக்கின்றார்கள். அதையே தான் குடிக்கின்றார்கள். திண்ணாமல் குடிப்பதில் மட்டும் சுத்தமாகிவிடுமா? மான் இறைச்சியை உண்பதில்லை என்று சொல்லும் பிராமணர்கள் அந்த மானை உரித்த தோலில் பூனூல் அணிகிறார்களே. இறைச்சி உண்ணாமல் இருப்பதால் மட்டும் இறைவனை அடைய முடியாது. சுத்தம் என்பது அவரவர் எண்ணத்தில்தான் இருக்கின்றது.

160. ஆட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றம் வேதியர்
ஆட்டிறைச்சி அல்லவோ யாகம் நீங்கள் ஆற்றலே
மாட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மாட்டிறைச்சி அல்லவோ மரக்கறிக் கிடுவது.

ஆட்டின் இறைச்சியை அந்தணர்கள் உண்பதில்லை. ஆனால் ஆட்டை பலியிட்டு அவ்விறைச்சியை யாகத்தில் போட்டு செய்வது ஏன்? அக்காலத்தில் யாகங்களில் ஆட்டிறைச்சி இட்டு செய்தார்கள் வேதியர்கள். இக்காலத்தில் மாட்டின் பாலிலிருந்து உண்டான நெய்யை இட்டு செய்கின்றனர். மாட்டிறைச்சி தின்பதில்லை வேதியர். ஆனால் அவர்கள் உண்ணும் காய்கறிகளுக்கு உரமாக போடுவது மாட்டிறைச்சியே. உணவுப் பழக்கத்தினாலோ, ஆசார அனுட்டானங்களாலோ இறைவனை அடைந்துவிடமுடியாது.

161. அக்கிடீர் அனைத்துயிர்க்கும் ஆதியாகி நிற்பதும்
முக்கிடீர் உமைப்பிடித்து முத்தரித்து விட்டதும்
மைக்கிடில் பிறந்து இறந்து மாண்டு மாண்டு போவதும்
ஒக்கிடில் உமக்கு நான் உணர்த்து வித்தது உண்மையே.

(அக்கிடீர் - நீரும் நெருப்பும்) ஆதியாக உள்ள மெய்ப்பொருளே அனைத்து உயிர்களிலும் நீராகவும், நெருப்பாகவும் இருக்கின்றது. அதுவே உங்களிடம் அறிவு, உணர்வு,

மனம் என்று மூன்றாக தரித்து முப்பொருளாய் உள்ளது. இப்பிறவியின் அருமையை அறியாது, இறவா நிலை பெற மெய்ப்பொருளை உணராது இப்பூமியில் பிறந்து இறந்து பிறந்து மாண்டு போகிறார்கள். ஆகவே மெய்ப்பொருளை அறிந்து அதையே ஒத்து தியானம் செய்வதுவே இப்பிறவித் தளையிலிருந்து ஆன்மா விடுதலை அடைவதற்கான வழி என நான் உங்களுக்கு உணர்த்துவிக்கும் உண்மையாகும்.

162. ஐயன் வந்து மெய்யகம் புகுந்தவாறது எங்ஙனே
செய்ய தெங்கு இளங்குரும்பை நீர் புகுந்த வண்ணமே
ஐயன் வந்து மெய்யகம் புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு வாய் திறப்பது இல்லையே.

ஈசன் என் உடம்பின் உள்ளே புகுந்து எங்ஙனமெனில் தென்னை மரத்தின் மேலே இளங்குரும்பையில் நீர் புகுந்து இருப்பது போல்தான். இறைவன் என் மெய்யாகிய உடம்பில் உள்ளமாகிய கோயிலில் உறைவதை நான் அறிந்து கொண்டபின் அந்த மெய்ப்பொருள் நாட்டத்திலேயே ஒன்றி தியானம் செய்வதைத் தவிர வேறு எண்ணம் ஏதுமில்லை. ஆதலால் இவ்வுலகில் மதத்தாலும் இனத்தாலும் சாதியாலும் பிரிந்து தீங்கையே செய்து தீவிகைளைச் சேர்த்துக் கொண்டு இறக்கப்போகும் மாந்தர்களோடு நான் வாய் திறந்து பேசுவதில்லை.

163. நவ்வு மவ்வுவையும் கடந்து நாடொணாத சியின் மேல்
வவ்வு யவ்வுளும் சிறந்த வண்மை ஞான போதகம்
ஒவ்வு சுத்தியுள் நிறைந்து உச்சியூடுருவியே
இவ்வகை அறிந்த பேர்கள் ஈசன் ஆணை ஈசனே.

அஞ்செழுத்தில் 'ந' என்ற சுவாதிட்டானத்தையும் 'ம' என்ற மணிபூரகத்தையும் கடந்து அடுத்ததான அனாகதத்தில் உள்ள 'சி' யின் மேல் இருக்கும் விசுத்தியில் 'வ' வும் ஆஞ்ஞாவில் ய வும் ஓதி உணரவேண்டும். இந்த நமசிவய என்ற அஞ்செழுத்து நம் உடம்பில் மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களாக இருப்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். மூலாதாரத்தில் ஓம் என்ற அட்சரத்தால் குண்டலினி சக்தியை வாசியால் மேலேற்றி நினைவால் ஓம் நமசிவய என்று ஓதி ஒவ்வொரு சக்கரத்திலும் அதற்குரிய எழுத்தை நிறுத்தி அப்பியாசித்து வரவேண்டும்.

தூலத்தில் ஓம் நமசிவய எனும் இந்த பஞ்சாட்சரமே உள்ளே சூட்சமமாகவும் எல்லா வல்லமையும் உள்ள சிறந்த ஞான போதப் பொருளாகவும் இருக்கிறது. அதுவே உச்சியில் உள்ள மெய்ப்பொருள், இதற்குள் ஈசன் சோதியாக இருப்பதை உணர்ந்து சிவயநம ஓம் என்ற பஞ்சாட்சரத்தை அங்கு நிறுத்தி தியானிக்கவேண்டும். இப்படி மூலாதாரத்திலிருந்து உச்சி வரை முதுகுத்தண்டின் வழியாக ஊடுருவி வாசியை மெய்ப்பொருளில் உள்ள சோதியில் சேர்க்கவேண்டும். ஓம் நமசிவய என்ற பஞ்சாட்சரமே நம் உடம்பில் தூலமாகவும் உயிரில் சூட்சுமாக இருப்பதை அறிந்து யோக ஞானத்தை உணர்ந்து தவம் புரிபவர்கள் ஈசனாகவே ஆவார்கள். இது அந்த பஞ்சாட்சரமாக விளங்கும் ஈசன் மீது ஆணை.

164. **அக்கரம் அனாதியோ ஆத்துமம் அனாதியோ**
புக்கிருந்த பூதமும் புலன்களும் அனாதியோ
தர்க்கமிக்க நூல்களும் சாத்திரம் அனாதியோ
தற்பரத்தை ஊடறுத்த சற்குரு அனாதியோ!

அட்சரங்களாக இருக்கும் மந்திரங்கள், ஆன்மா எனும் உயிர், உலகத்தில் உள்ள பஞ்சபூதங்கள், உடலில் உள்ள ஐம்புலன்கள், தத்துவங்ளை அலசி ஆராய்ந்து இயற்றிய நூல்கள், வேத சாஸ்திரங்கள் ஆகியவைகள் யாவும் அனாதியாக என்றும் எங்கும் எப்போதும் இருப்பது. இவற்றின் அனைத்து நுட்பங்களும் நமக்குள்ளேயே தற்பரமாக விளங்கும் சற்குருவான ஈசனே அனாதி என்பதை அறிந்து தியானியுங்கள்.

165. **பார்த்ததேது பார்த்திடில் பார்வையூடழித்திடும்**
கூர்த்ததாய் இருப்பிரேல் குறிப்பில் அச்சிவம் அதாம்
பார்த்த பார்த்த போதெலாம் பார்வையும் இகந்துநீர்
பூத்த பூத்த காயுமாய் பொருந்துவீர் பிறப்பிலே.

எல்லாவற்றையும் பார்த்து எது என்பதை அறிந்து, அதையே பார்த்துத் தியானிக்க பார்வை ஒடுங்கி அகக்கண் திறந்திடும். அதையே குறியாகக் கொண்டு மெய்ப்பொருளை உணர்ந்து சுழுமுனையில் கூர்மையான நினைவைக் குவித்திருந்தால் சோதியைக் காணலாம். அதுவே சிவம் ஆகும். ஆகவே தியானம் செய்யும் போதெல்லாம் பார்ப்பானையே பார்த்திரு. அதைவிடுத்து நினைவை பல இடங்களில் வைத்து பார்வையை பல விதங்களில் செலுத்தி தியானத்தை இகழ்ந்து மறந்தால் நீங்கள் மீண்டும் பூத்த பூவும் காயுமாய் பிறப்பில் உழலுவீர்.

166. நெற்றி பற்றி உழலுகின்ற நீலமா விளக்கினைப்
பற்றி ஒற்றி நின்று நின்று பற்றறுத்து என்பலன்
உற்றிருந்த பாரடா உள்ஒளிக்கு மேல் ஒளி
அத்தனார் அமர்ந்திடம் அறிந்தவன் அனாதியே!

நெற்றியைப் பற்றி உழன்று கொண்டிருக்கின்ற ஒரு நீல நிறம் உடைய விளக்கை குரு தொட்டுக்காட்ட உணர்ந்து கொள்ளுங்கள். பின் அதையே பற்றி அறிவு உணர்வு நினைவு என்ற மூன்றையும் ஒன்றாக்கி நின்று தியானிக்க உலகப் பற்றுக்கள் யாவும் நீங்கும். அதனால் அனேக பலன்கள் கிடைக்கும். அதுவே இறைவனை அடையும் வழி என்பதை அறிந்து அந்நீல விளக்கையே உற்று நோக்கி தியானிக்க உள்வெளிக்குள் பரம்பொருள் ஒளி பொருந்திய சோதியாக ஒளிரும். அதுவே ஈசன் அமர்ந்திருக்கும் இடம் என்தை அறிந்து தவம் புரிவார்கள், என்றும் அனாதியாக உள்ள ஈசனை அடைவார்கள்.

167. நீரை அள்ளி நீரில் விட்டு நீ நினைத்த காரியம்
ஆரை உன்னி நீரெல்லாம் அவத்திலே இறைக்கிறீர்
வேரை உன்னி வித்தை உன்னி வித்திலே முளைத்தெழுந்த
சீரை உன்ன வல்லிரேல் சிவபதங்கள் சேரலாம்

பிராமணர்கள் குளித்து முடித்த பின்னர் அந்நீரில் நின்றபடியே மூன்று முறை தண்ணீரை கைகளில் அள்ளி அத்தண்ணீரிலேயே மந்திரங்களை முணுமுணுத்து விடுவார்கள். இதற்கு வாக்கு, மனம், செயல் என்ற மூன்றையும் திரிகரண சுத்தி செய்வதாகச் சொல்லுவார்கள். இவையெல்லாம் இறைவனுக்கே செய்கின்ற சடங்குகள்தானே. இதனால் இறைவனை அடைய முடியுமா? உனக்குள்ளேயே வேராக இருக்கும் ஆன்மாவையும் வித்தாக இருக்கும் இறைவனையும் அறிந்து அதிலே முளைத்து எழுகின்ற சிகரத்தை உணர்ந்து 'சிவயநம' என்று உனக்குள் பரவச் செய்து தியானம் செய்ய வல்லவர்களானால் சிவத்தின் திருவடியில் சேரலாம்.

168. **நெற்றியில் தியங்குகின்ற நீலமா விளக்கினை**
உய்த்துணர்ந்து பாரடா உள்ளிருந்த சோதியை
பத்தியில் தொடர்ந்தவர் பரமயம் அதானவர்
அத்தலத்தில் இருந்த பேர்கள் அவர் எனக்கு நாதரே !

விளக்கில் எரியும் தீபத்தை உற்றுப்பார்த்தால் அதன் நடுவில் நீல நிறம் பொருந்தி ஒளி வீசுவதை உணரலாம். அதுபோல நமது நெற்றியில் இயங்கிக்கொண்டிருக்கின்ற நீல நிறமாக விளங்கும் ஆன்மாவை அறிந்து கொள்ளுங்கள். அதுவே இப்பிறவி உய்யும் வழி என உணர்ந்து அதன் உள்ளேயே அருட்பெருஞ் சோதியாகி விளங்கும் ஈசனையே தியானித்துப் பாருங்கள். அவனே அனைத்திற்கும் நாதன் என்பதை உணர்ந்து பக்தியால் பாடியும், ஆடியும் கண்ணீர்விட்டுக் கசிந்து தொடர்ந்து தியானியுங்கள். நீங்களே அப்பரம்பொருளாக ஆவீர்கள். அதிலேயே இருந்து தியானமும் தவமும் செய்பவர்கள் எனக்கும் குருநாதன் ஆவார்கள்.

169. **கருத்தரிக்கும் முன்னெல்லாம் காயம் நின்றது எவ்விடம்**
உருத்தரிக்கும் முன்னெல்லாம் உயிர்ப்பு நின்றது எவ்விடம்
அருள் தரிக்கு முன்னெல்லாம் ஆசை நின்றது எவ்விடம்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர்.

தாயின் வயிற்றில் கருவாகத் தரிப்பதற்கு முன்பு உடம்பு எங்கு எவ்வாறு இருந்தது. உருவாகி வளர்வதற்கு முன்பு உயிர் இருந்த இடம் எது, இறை அருள் கிடைப்பதற்கு முன்பு ஆசைகளின் மனம் நின்றது எவ்விடம், என்பதை யாவும் சந்தேகங்கள் ஏதுமின்றி தீர்க்கமுடன் தெரிந்து கொண்டு சிவயநம என்ற அஞ்செழுத்தாக இருப்பதை அறிந்து கொண்டு பஞ்சாட்சரத்தை சொல்லி தியானியுங்கள்.

170. **கருத்தரிக்கு முன்னெலாம் காயம் நின்றது தேயுவில்**
உருத்தரிக்கு முன்னெலாம் உயிர்ப்பு நின்றது அப்புவில்
அருள்தரிக்கு முன்னெலாம் ஆசை நின்றது வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர்.

ஆகாயத்திலிருந்து ஆன்மா கருத்தரிக்கும் முன்பு காயமான உடம்பு தாய் தகப்பனின் உஷ்ணத்தில் தீயாக நின்றிருந்தது. உருவாக ஆவதற்கு முன்பு உயிர் சுக்கில சுரோனித நீராகி நின்றது.

இறை அருளால் உயிர் உடம்பாகி வெளிவருவதற்கு முன்பு மனமானது ஆசையாக காற்றில் நின்றது. பின் தாயின் கருவறை என்ற மண்ணில் சிசுவாக வளர்ந்து உடலுயிராய் பிறவி வந்தது என்பதைத் திருத்தமாக தெரிந்து கொண்டு சிவயநம என்ற பஞ்சாட்சரத்தை உணர்ந்து சொல்லி தியானம் செய்யுங்கள்.

171. தாதர் செய் தீமையும் தலத்தில் செய் கீழ்மையும்
கூத்தருக்கு கடைமக்கள் கூடி செய்த காரியம்
வீதி போகும் ஞானியை விரைந்து கல் எறிந்ததும்
பாதகங்கள் ஆகவே பலித்ததே சிவாயமே.

மக்கள் தொண்டு மகேசன் தொண்டு என்று தொண்டு செய்ய வந்தவர்கள் சுயநலமாக செய்யும் தீமைகளும், தலம் எனப்படும் கோயில், பள்ளி, ஆஸ்ரமம் போன்ற அறச்சாலைகளில் நடக்கும் கீழான செயல்களும், கூத்தாடிப் பிழைப்பவர்க்கு இழிவான கடைமக்கள் கூடிச் செய்கின்ற தீங்கும், வீதி வழியாகப் போகும் ஞானியைப் பழித்துரைத்துக் கல்லால் எறிந்து அடித்ததும் தப்பாமல் திரும்பி வந்து அவர்களுக்குப் பாதகங்கள் ஆகவே பலித்து துன்புற்றுச் சாவார்கள். நீங்கள் செய்த பழிபாவங்கள் நீங்க 'சிவயநம' என்ற அஞ்செழுத்தை ஓதி பாதகங்கள் செய்யாது வாழுங்கள்.

172. ஓடி ஓடி பாவிழைத்து உள்ளங்கால் வெளுத்ததும்
பாவியான பூனை வந்து பாவிலே குதித்ததும்
பணிக்கன் வந்து பார்த்ததும் பாரம் இல்லை என்றதும்
இழை அறுந்து போனதும் என்ன மாயம் ஈசனே.

நெசவு செய்யும் பாவைப்போல் அங்கும் இங்கும் ஓடிஓடி உழைத்து மூச்சானது ஓடி ஓய்ந்து உயிர்போகின்ற தருணத்தில் உங்கள் உள்ளங்கால் வெளுத்துப் படுக்கையில் படுத்ததும், அச்சமயம் ஓடிய நெசவுப் பாவிலே பூனை வந்து குதித்ததும், பாவிழை அறுந்து போவது போல், எமன் வந்து உயிரை எடுத்துப் போனதும் மூச்சு நின்றதும், மருத்துவன் வந்து பார்த்து உயிர் போய்விட்டது என்பதும், பாவிலே நூல் இழை அறுந்து தறி ஓட்டம் நின்ற போவது போல் உடலைவிட்டு உயிர் மூச்சு நின்று போவதும் யாவும் உன் மாயமே ஈசனே.

173. **சதுரம் நாலு மறையும் எட்டுதான தங்கி மூன்றுமே**
எதிரதான வாயு ஆறு எண்ணும் வட்ட மேவிய
உதிரந்தான் வரைகள் எட்டும் எண்ணும் என் சிரசின் மேல்
கதிரதான காயகத்தில் கலந்தெழுந்த நாதமே.

சதுரம் எனப்படும் நான்கு வேதங்களும் எண்சாண் உடம்பில் தங்கி மூன்றான ஓங்காரமாய் இருக்கின்றது. அதையே பிரணவமாக்கி மூன்றெழுத்தால் ஆறு ஆதார வட்டங்களிலும் வாசியினால் மேலேற்றி பயில வேண்டும். உயிரிலிருந்தே உதிரங்கள் எட்டாகி உடம்பு முழுவதும் ஓடிக்கொண்டிருப்பதை உணர்ந்து அகார உகாரத்தை உயிரில் அறிந்து சிரசு எனும் தலை உச்சியில் சூரியனாக இருக்கும் சூட்சம உடம்பில் சுழுமுனையில் அவ்வாசியைச் சேர்க்க நாத ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும்.

174. **நாலொடாறு பத்து மேல் நாலு மூன்றும் இட்டபின்**
மேலு பத்து மாறுடனூமே திரண்ட தொன்றுமே
கோலி அஞ்செழுத்துடே குருவிருந்து கூறிடில்
தோலு மேனி நாதமாய்த் தோற்றி நின்ற கோசமே.

மூலாதாரத்தில் நான்கு இதழ் கமலமாகவும் ‘ஓம்’ என்ற மூன்று எழுத்தாகவும், சுவாதிட்டானத்தில் ஆறு இதழ் கமலமாகவும் ‘ந’ என்ற மண் பூதமாகவும், மணி பூரகத்தில் பத்து இதழ் கமலமாகவும் ‘ம’ என்ற நீர் பூதமாகவும், அனாகதத்தில் பனிரெண்டு இதழ் கமலமாகவும் ‘சி’ என்ற நெருப்பு பூதமாவும், விசுத்தியில் பதினாறு இதழ் கமலமாகவும் ‘வ’ என்ற காற்று பூதமாகவும், ஆஞ்ஞாவில் இரண்டு இதழ் கமலமாகவும் ய என்ற ஆகாய பூதமாகவும் உயிர் ஒன்றாகவும் உங்கள் உடம்பில் அஞ்செழுத்து அமைந்துள்ளது. இதனை உண்மையான குரு விரும்பி உபதேசித்து அதை உன் உடம்பிலேயே உணர்ந்து உபாசித்தால் நாத ஒலி தோன்றும். அந்த நாதம் ஓம் நமசிவய பஞ்சகோசமாக எழுந்து நிற்கும்

175. **கோசமாய் எழுந்ததும் கூடுருவி நின்றதும் தேசமாய்**
பிறந்ததும் சிவாயம் அஞ்செழுத்துமே
ஈசனார் இருந்திடம் அனேகனேக மந்திரம்
ஆசனம் நிறைந்து நின்ற ஐம்பத்தோர் எழுத்துமே.

ஐயும், கிலியும், சவ்வும், றீயும், ஸ்ரீயும் என்ற பஞ்சகோச அட்சரங்களாக எழுந்து கூடாகிய உடலுக்குள் ஊடுருவி நின்று இத்தேசத்தில் தேகம் எடுத்துப் பிறந்ததும் 'நமசிவய' என்ற அஞ்செழுத்து மந்திரத் தத்துவத்தாலே தானே, சோதியான ஈசனையும் அவன் நம் உடம்பில் தற்பரமாய் நின்ற இடத்தையும் தான், அனைத்து மந்திரங்களும் வேதங்களும் சொல்கின்றன. அதனை ஐந்து ஐந்து கட்டங்களாக வரைந்து 'நமசிவய' என்ற அஞ்செழுத்தின் பீஜ அட்சரமாக அ, இ, உ, எ, ஓ என்ற எழுத்தையும் கோச அட்சரங்களால் ஐயும், கிலியும், சவ்வும், றீயும், ஸ்ரீயும் எழுத்தை அமைத்து 9, 11, 4, 15, 12 என்ற எண்ணையும் கொடுத்து அது மொத்தம் ஐம்பத்தொன்று என்தையே ஐம்பத்தோர் அட்சரம் என்பார்கள்.

176. அங்கலிங்க பீடமாய் ஐம்பத்தோர் எழுத்திலும்
பொங்கு தாமரையிலும் பொருந்துவார் அகத்திலும்
பங்கு கொண்ட சோதியும் பரந்த அஞ்செழுத்துமே
சிங்கநாத ஓசையும் சிவாயம் அல்லது இல்லையே.

உடம்பில் உள்ள அங்கத்தைப் பீடமாக கொண்டிருக்கும் இலிங்கமே ஐம்பத்தோர் அட்சரமாகவும் உள்ளது. சகஸ்ரார தலமான தாமரையில் மனதை நிறுத்தி தியானத்தில் பொருந்துவார்கள் அகத்தில் சக்தியும் சிவனுமாய் பங்கு கொண்டிருக்கும் சோதியாக பரந்து இருப்பதும் பஞ்சாட்சரமே. இந்த அஞ்செழுத்தில் சிகாரமாகவும் நாத ஒலியாகவும் இருப்பதும் பஞ்சாட்சரமே. இதை அறிந்துணர்ந்து ஒலியையும் ஒளியையும் ஒன்றாக்கி தியானியுங்கள்.

177. உவமையிலா பேரொளிக்குள் உருவமானது எவ்விடம்?
உவமையாகி அண்டத்தில் உருவி நின்றது எவ்விடம்?
தவமதான பரமனார் தரித்து நின்றது எவ்விடம்?
தற்பரத்தில் சலம் பிறந்து தாங்கி நின்றது எவ்விடம்?

எதனோடும் ஒப்பிட முடியாத தனித்தன்மையான பேரொளி நம்முள் உருவமாக இருப்பது எந்த இடம்? ஆகாயத்திற்கு உவமையான மனம் அண்டத்திலும் பிண்டத்திலும் அமைந்திருப்பது எந்த இடம்? தவத்திற்கு உரிமையான பரமனார் மெய்ப்பொருளாய் தரித்து நின்றது எவ்விடம்? தன் உடம்பில் நீராக நின்று தாங்கி தற்பரமாய் இருப்பது எந்த இடம்.

178. சுகமதாக எருது மூன்று கன்றை ஈன்றது எவ்விடம்
சொல்லு கீழு லோகம் ஏழும் நின்றவாறது எவ்விடம்
அவளதான மேருவும் அம்மைதானது எவ்விடம்
அவனும் அவளும் ஆடலாம் அருஞ்சீவன் பிறந்ததே.

மாடான மனதில்தான் புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய மூன்றும் பிறந்தது. அந்த நான்கு அந்தக் கரணங்களும் உடம்பில் எங்கு இருக்கின்றது. சொல்லும் வார்த்தைகள் தோன்றுவதும், ஏழு உலகங்களாக நின்றதும் அதுவாக இருப்பதும் எவ்விடம். அவளதான வாலை மேரு சக்கரமாகவும் அம்மையான மனோன்மணியாகவும் அமர்ந்திருப்பது எந்த இடம். அவனும் அவளும் ஆடியே அருஞ்சீவன் அவதரித்தது. எல்லாம் சிவ சக்தியின் திருவிளையாடல் என்பதை புரிந்து தியானம் செய்து இச்சீவனை சிவனோடு சேருங்கள்.

179. உதிக்குகின்றது எவ்விடம் ஒடுங்குகின்றது எவ்விடம்
கதிக்குகின்றது எவ்விடம் கண்ணுறக்கம் எவ்விடம்
மதிக்க நின்றது எவ்விடம் மதி மயக்கம் எவ்விடம்
விதிக்கவல்ல ஞானிகள் விரித்துரைக்க வேணுமே.

மனம் உதிப்பதும் ஒடுங்குவதும் எவ்விடம். கதியாகிய வாசி இருப்பது எந்த இடம். கண்ணுறக்கம் கொள்வது எந்த இடம். யாவரும் மதிக்கும்படி நின்றது எவ்விடம். மதியாகிய அறிவும் மயக்கமான மாயையும் தோன்றிய இடம் எது என்பதையெல்லாம் விதியை வெல்ல ஞானம் போதிக்க வந்த குருமார்களே சீடர்கள் அறியும் வண்ணம் விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

180. திரும்பி ஆடு வாசல் எட்டு திறம் உரைத்த வாசல் எட்டு
மருங்கிலாத கோலம் எட்டு வன்னியாடு வாசல் எட்டு
துரும்பிலாத கோலம் எட்டு சுற்றி வந்த மருளரே
அரும்பிலாத பூவும் உண்டு ஐயன் ஆணை உண்மையே!

மீண்டும் மீண்டும் இப்பூவுலகில் பிறந்திறந்து உழலும் உடல் எண்சாண் அளவே. அந்த எட்டான உடலில் திறமாக செயல்படும் உயிர் எட்டாகிய அகாரத்தின் வாசலில் உள்ளது. அது ஆகாயமான எட்டாகி இருக்கும் கோலமும் அதிலே வன்னி எனும் தீயாக ஈசன் இருந்து ஆடும் இடம் அகாரம். அந்த எட்டான அகாரத்தில் ஒரு தூசோ துரும்போ அண்டாது.

பரிசுத்தமான கோலமாய் உள்ள இடமாகிய அகாரத்தில்தான் சோதி உள்ளது. இதனை யாவும் எட்டாக விளங்கும் தன் உடம்பிலே காணாமல் வேறு எங்கெங்கோ சுற்றி வருகின்ற மருள் பிடித்த மனிதர்களே! அரும்போ மொட்டோ இல்லாத பூவாக உன் ஆன்மா உனக்குள் இருப்பதை உணர்ந்து அதிலேயே தியானித்து பிறவா நிலை பெற வாருங்கள். இது என் ஐயன் மீது ஆணையிட்டு உண்மையாகச் சொல்லுகிறேன்.

181. தானிருந்து மூல அங்கி தனல் எழுப்பி வாயுவால்
தேனிருந்து அறை திறந்து தித்தி ஒன்று ஒத்தவே
வானிருந்து மதிய மூன்று மண்டலம் புகுந்த பின்
ஊனிருந் தளவு கொண்ட யோகி நல்ல யோகியே.

யோக ஞான சாதகத்தால் உடம்பில் உள்ள மூலாதாத்தின் தீயாக இருக்கும் குண்டலினியை அங்கிருக்கும் தனஞ்செயன் என்ற பத்தாவது வாயுவால் மேலே எழுப்பி கபாலத்தில் உள்ள கோழையை அகற்றி அமுர்தம் உண்ணவேண்டும். அது தேனைப் போல் ஆயிரம் மடங்கு தித்திப்பைக் கொடுப்பது. ஆகாயத் தாமரையில் உள்ள இவ்வமுதத்தை வாசியோகத்தால் கறந்து சந்திர மண்டலம், ஆதித்த மண்டலம், அக்னி மண்டலம் ஆகிய மூன்று மண்டலத்திலும் கரைத்து தம் உடம்பில் தினந்தோறும் அளவுடன் சேர்க்கும் யோகிகள் நல்ல யோகியே.

182. முத்தனாய் நினைந்தபோது முடிந்த அண்டத்துச்சிமேல்
பத்தனாரும் அம்மையும் பரிந்து ஆடல் ஆடினார்
சித்தரான ஞானிகாள் தில்லை ஆடல் என்பீர்காள்
அத்தன் ஆடல் உற்றபோது அடங்கல் ஆடல் உற்றவே.

முக்தியைப் பெற நினைந்து முனைந்து தியானம் புரிகின்ற போது ஆதி அந்தமாக முடிந்த ஆகாயத்தாமரையின் உச்சியில் அப்பனும் அம்மையும் பரிவுடன் நடனம் ஆடுவதை அறியலாம். இதனை தவம் முடித்த சித்தர்களும் ஞானிகளும் தனக்குள் நின்று பரம்பொருள் ஆடுவதையே தில்லையில் ஈசனுக்கும் ஈஸ்வரிக்கும் நடந்த ஆட்டம் இதுவே என்பார்கள். இந்த வண்ணம் உடலில் நின்று ஆட்டுவிக்கும் அம்மை அப்பன் ஆட்டம் நின்று போனால் உயிர் போய் உடம்பு ஆடிய ஆட்டம் எல்லாம் அடங்கிடும். ஆகவே இதனை நன்கு அறிந்து உணர்ந்து நினைந்து தியானியுங்கள்.

183. ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே அனாதியானது ஒன்றுமே
கன்றல் நின்ற செம்பொனைக் களிம்பறுத்து நாட்டினால்
அன்று தெய்வம் உம்முளே அறிந்ததே சிவாயமே.

சக்தியும் சிவனும் ஒன்றாகி இந்த உலகம் அனைத்திலும் ஒன்றான சிவமே எல்லாமாய் இருக்கின்றது. இதனைச் சக்தியாகிய உடலையும் சிவனாகிய உயிரையும் ஒன்றில் ஒன்றாக்கி ஒன்றி தியானித்து சிவம் ஆகிய மெய்ப்பொருளை உணர்ந்து கொள்ளுங்கள். அன்றும் இன்றும் ஒன்றே தெய்வம் ஒருவனே தேவன். அவன் அனாதியாக என்றும் எப்போதும் நிலையான ஒன்றாக இருப்பவன். என்றும் இளமை மாறாமல் நின்ற செம்பொன்னம்பலத்தைக் கண்டு செம்பில் களிம்பறுத்து பொன்னாக்குவது போல் நீங்கள் செய்த பாவங்கள் யாவையும் நீக்கி சோதியில் மனதை நாட்டி தியானித்தால் அப்போது தெய்வம் உமக்குள்ளே இருப்பதை அறிவீர்கள் அது சிவம் என்று. (கன்றல் – இளமை)

184. நட்ட தாவரங்களும் நவின்ற சாத்திரங்களும்
இட்டமான ஓமகுண்டம் இசைந்த நாலு வேதங்களும்
கட்டி வைத்த புத்தகம் கடும்பிதற்று இதற்கெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானை யான் அறிந்தபின்.

மரம் நடுவது போன்ற புண்ணியச் செயல்களும், தர்ம சாஸ்திரங்கள் சொல்லும் உயர்ந்த பரம் பொருளும், ஹோமங்கள் செய்ய அமைத்த யோனி குண்டங்களும், வேள்வியில் ஓதுகின்ற நான்கு வேத மந்திரங்களும், மிகவும் முக்கியமான நூல்கள் என்று பாதுகாத்து வைக்கும் புத்தகங்களும், ஞானியர் உபதேசிக்கும் யோக ஞானங்களும், அது பெரியது இது பெரியது என செய்யும் வாதங்களும் ஆகிய இவைகள் யாவுமே என் உடம்பில் பொட்டாக விளங்கும் பிரமத்தையே போதிக்கின்றது என்பதையே என் பிரானாகிய ஈசனை அறிந்த பின் யான் தெளிந்து உணர்ந்து கொண்டேன்.

185. வட்டமான கூட்டிலே வளர்ந்தெழுந்த அம்புலி
சட்டமீ படைத்திலே சங்கு சக்கரங்களாய்
விட்டது அஞ்சுவாசலில் கதவினால் அடைந்தபின்
முட்டையில் எழுந்த சீவன் விட்டவாறது எங்ஙனே.

உடம்பாகிய கூட்டுக்குள்ளே வட்டமான பூரண நிலவாக வளர்ந்து எழுந்து நிற்கின்றது பிரமம். அதுவே இப்பூமியெங்கும் சங்கு சக்கரங்களாக திகழ்கின்றது. இதனை அறிந்து ஐம்புலன்களையும் அஞ்செழுத்தால் அடக்கி அண்டமாக விளங்கும் முட்டையில் எழுந்துள்ள உயிராகிய சீவனை சிவனுடன் சேருங்கள். இறவா நிலையடைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெறலாம்.

186. **கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்றது ஏதடா**
வாயினால் தொழுது நின்ற மத்திரங்கள் ஏதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே.

கோயில் என்பதும் மெய் கல்வி கற்க வேண்டிய பள்ளி என்பதும் எது. மெய்ப்பொருளைக் குறித்து நின்றது எது. கோயில் என்பது இறைவனைத் தொழுவதற்குப் பள்ளி என்பது அறிவை வளர்க்கவும் உள்ள இடங்களே. வெறும் வாயினால் மட்டும் சொல்லும் மந்திரங்களால் மட்டும் இறைவனைக் காண முடியுமா? இறைவனும் அறிவும் கோயிலாகவும் பள்ளியாகவும் உங்கள் உள்ளத்தில் உள்ளதை உணருங்கள். யோக ஞானத்தால் அதனை அறிந்து இறை நாட்டத்துடன் நன்மையாய் வணங்கினால் மந்திரங்களைச் செபித்துத் தியானித்தால் இறைவனைக் காணலாம்.

187. **நல்ல வெள்ளி ஆறதாய் நயந்த செம்பு நாலதாய்**
கொல்லு நாகம் மூன்றதாக குலாவு செம்பொன் இரண்டதாய்
வில்லின் ஓசை ஒன்றுடன் விளங்க ஊத வல்லிரேல்
எல்லை ஒத்த சோதியானை எட்டு மாற்ற தாகுமே!

நல்ல வெள்ளி ஆறுபங்கும் செம்பு நாலு பங்கும் துத்தநாகம் மூன்று பங்கும் தங்கம் இரண்டு பங்கும் சேர்த்து துருத்தி கொண்டு ஊதி உருக்கினால் அது எட்டுமாமாற்று தங்கமாகும் என்று பொருள் கண்டு ஏமாந்து போனவர்கள் அனேகர்.

நான்கு இதழ் கமலமான மூலாதாரத்தில் உள்ள குண்டலினியை மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கு அந்தக் கரணங்களாலும் இணைத்து, ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களையும் நீக்கி, நம்முள் செம்பொன்னம்பலமாக விளங்கும் சோதியில் அகாரம் உகாரம்

என்ற எட்டிரண்டால் வாசியை வில்லில் இருந்து அம்புவிடும் போது தோன்றும் ம் என்ற ஓசை லயத்துடன் உண்மை விளங்கி ஊத வல்லவர்களானால் ஆறு ஆதாரங்களையும் கடந்து அப்பாலாய் சோதியாய் நிற்கும் ஈசனிடம் சேரலாம். இப்படி யோக ஞான தியானம் செய்யும் சாதகர்களின் உடம்பு பொன்போல மின்னும். இது எல்லையில்லா அந்த பரம்பொருளால் ஆகும்.

188. மனத்தகத்து அழுக்கறாத மவுன ஞான யோகிகாள்
வனத்தகத்து இருக்கினும் மனத்தகத் அழுக்கறார்
மனத்தகத்து அழுக்கறுத்த மவுன ஞானி யோகிகள்
முலைத்தடத்து இருக்கினும் பிறப்பறுத்து இருப்பரே!

மனத்தின் உள்ளே இருக்கும் பாவம், ஆசை என்னும் மாசை நீக்காமல் வாய்மூடி மவுனத்தில் இருக்கும் ஞான யோகி என்போர் காட்டிற்குள் சென்று ஆஸ்ரமம் அமைத்து இருந்தாலும் அவர்களின் மனத்தில் அழுக்கு அகலாது. காம கோப தாபங்களை விட்டு மனதின் ஆசைகளை ஒழித்து உண்மையான மவுனத்தை அறிந்த ஞான யோகியர் கலவி இன்பத்தில் பெண்ணின் முலைத்தடத்தில் கிடந்தாலும் அவர்களின் எண்ணம் முழுதையும் இறைவனிடத்திலேயே இருத்தி பிறப்பு இறப்பு எனும் மாயையில் சிக்காது இறைநிலை அடைவார்கள்.

189. உருவும் அல்ல ஒளியும் அல்ல ஒன்றதாகி நின்றதே
மருவும் அல்ல கந்தம் அல்ல மந்த நாடி உற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசும் ஆவி தானும் அல்ல
அரியதாக நின்ற நேர்மை யாவர் காண வல்லிரே.

மெய்ப்பொருள் என்பது உருவும் அல்ல ஒளியும் அல்ல உருவும் ஒளியும் சேர்ந்து ஒன்றாகி நிற்பதே. அது மருவாக இருப்பதல்ல வாசனை பொருந்திய மணமாக வீசுவதல்ல சுழுமுனை எனும் நாடியில் ஓடுவதல்ல. பெரியதும் அல்ல சிறியதும் அல்ல பேசுகின்ற ஆவியும் அல்ல. யாதுக்கும் நடுவாக இருந்து அறிவதற்கு அரியதாகி நிற்பதால் அந்த மெய் பொருளை அறிந்து அதன் பெருமையை உணர்ந்து தியானித்து சோதியான ஈசனை யாவர் காண வல்லவர்கள்.

190. ஓரெழுத்து உலகெலாம் உதித்த அட்சரத்துளே
ஈரெழுத்து இயம்புகின்ற இன்பமேது அறிகிலீர்
மூவெழுத்து மூவராய் மூண்டெழுந்த மூர்த்தியை
நாளெழுத்து நாவிலே நவின்றதே சிவாயமே.

பிரம்மமே ஓரெழுத்து அட்சரமாக உதித்து உலகமெல்லாம் நின்று உடம்பாகியது. அதில் ஈரெழுத்தாக இயங்கும் ஒலியையும் ஒளியையும் அறிந்து அகார உகார அட்சரத்தின் உண்மையை உணர்ந்து வாசி எனும் யோக ஞானத்தால் இறை இன்பத்தை அடையும் வழியை அறியாமல் இருக்கின்றீர்கள் . மூவெழுத்தான அகார உகார மகாரம் எனும் ஓங்காரத்தில் பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய மூவராக மூண்டெழுந்த சிவத்தை நாள்தோறும் அதிகாலையில் எழுந்து மனம் மொழி மெய்யால் ஓம் சிவயநம என உச்சரித்து நினைவால் நினைந்து தியானம் செய்யுங்கள்.

191. ஆதி அந்த மூல விந்து நாதம் ஐந்தும் பூதமாம்
ஆதி அந்த மூல விந்து நாதம் ஐந்தும் எழுத்துமாய்
ஆதி அந்த மூல விந்து நாதம் மேவி நின்றதும்
ஆதி அந்த மூல விந்து நாதம் சிவாயமே.

ஆதியான தோற்றத்திற்கும் அந்தமான முடிவிற்கும் மூலமாக இருப்பது விந்து நாதம். அதுவே ஐந்து பூதங்களாகவும் விரிந்து ஐந்து எழுத்துமாகவும் அமைந்தது. அந்த நாத விந்தே ஒலியாகவும், ஒளியாகவும் நம் உடலில் மேவி நிற்கின்றது. ஆதியாகவும் அந்தமாகவும், விந்தாகவும், நாதமாகவும், சிவனாகவும், சக்தியாகவும், ஒலியாகவும், ஒளியாகவும் உள்ளவை யாவுமே சிவம் என்ற பரம்பொருளால் ஆனதே.

192. அன்னம் இட்ட பேரெலாம் அனேக கோடி வாழவே
சொன்ன இட்ட பேரெலாம் துரைத்தனங்கள் பண்ணலாம்
வின்னம் இட்ட பேரெலாம் வீழ்வர் வெந்நரகிலே
கன்னம் இட்ட பேரெலாம் கடந்து நின்ற திண்ணமே.

அரும்பசிக்கு அன்னதானம் செய்தவர்கள் கோடி வளம் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வேண்டும். அன்னதானம் செய்வதற்குப் பொருள் வேண்டி செல்வந்தர்களிடம் சென்ற உதவி கேட்டால் அவர்கள் அதிகாரம் செய்து இல்லை என்று விரட்டலாம். அன்னதாம் செய்வதை குற்றம் சொல்லி வில்லங்கம் செய்பவர்கள் பாழும் நரகக்குழியில் வீழ்ந்து அல்லலுறுவார்கள்.

அனைத்து உயிரிலும் ஆண்டவன் இருப்பதை அறிந்து அவனை தனக்குள்ளேயே கண்டு கள்வர்கள் கன்னமிடுவதைப் போல் யோக ஞான சாதனத்தால் தியானிப்பவர்கள் பத்தாம் வாசலைக் கடந்து கடவுளை அடைவது நிச்சயம்.

193. **ஓதொணாமல் நின்ற நீர் உறக்கம் ஊணும் அற்ற நீர்**
சாதி பேதம் அற்ற நீர் சங்கையின்றி நின்ற நீர்
கோதிலாத அறிவிலே குறிப்புணர்ந்து நின்ற நீர்
ஏதும் இன்றி நின்ற நீர் இயங்குமாறது எங்ஙனே.

ஓதாது உணரும் ஓரெழுத்தாக நின்றது நீர். உறக்கம் என்பதோ உணவு என்பதோ அற்று நிற்பது நீர். சாதி பேதம் அற்று சகலருக்கும் ஒன்றாக உள்ளது நீர். சங்கோசமின்றி நிர்வாணமாக நிற்பது நீர். குற்றமேதுமில்லாத அறிவாகவும் ஆயுளின் குறிப்பையும் உணர்ந்து நிற்பது நீர். இப்படி யாவும் எனக்குள்ளே நீராக நின்று இயங்குவது ஈசா உன் செயலே. (சங்கை – வெட்கம்)

194. **பிறந்த போது கோவணம் இலங்கு நூல் குடுமியும்**
பிறந்துடன் பிறந்ததோ பிறங்கு நாள் சடங்கெலாம்
மறந்த நாலு வேதமும் மனத்துளே உதித்ததோ
நிலம் பிறந்து வான் இடிந்து நின்றது என்ன ஈசனே.

பிறந்த போதே கோவணமும் பூனூலும் குடுமியும் கூடவே பிறக்கின்றதா? பிறக்கும் போது இறைவனைத் தவிர வேறு எதையும் கொண்டு வருவது இல்லை என்பதை மறந்துவிட்டு வெறும் சடங்குகளை எல்லாம் குரங்கு பிடியாக பிடித்துக்கொண்டு அதிலேயே மனம் வைத்து ஈசனை அறியாமல் இருக்கிறார்கள். நான்கு வேதங்களும் மனத்தினுள்ளே உதித்ததா அறிவிலே உதித்ததா! பிரம்மாவும் விஷ்ணுவும் தானே பெரியவன் என்ற சர்ச்சையில் ஈசன் நிலத்திற்கும் வானத்திற்கும் லிங்கோத்பவராக நின்று தானே அனாதி என நிரூபித்ததை அறிந்து அவ்வீசனை உங்களுக்குள் உணர்ந்து அவனை அடைய தவம் முயலுங்கள்.

195. **துருத்தியுண்டு கொல்லன் உண்டு சொர்ணமான சோதியுண்டு**
திருத்தமாய் மனத்தில் உன்னித்திகழ ஊத வல்லிரேல்
பெருத்ததூண் இலங்கியே பிழம்பதாய் விரிந்திடும்
நிருத்தமான சோதியும் நீயும் அல்லது இல்லையே.

நாம் விடும் மூச்சில் வாசியைக் கண்டு அதனை யோகமாக்கி செய்ய உடம்பு உண்டு. அதில் உள்ள ஆன்மாவில் பொன்னார் மேனியாகிய ஈசன் விளங்கும் சோதி உண்டு. இந்த வாசியோகத்தை தினமும் முறை பிசகாமல் மனதில் நிறுத்தி இறைவனையே எண்ணி ஊத ஊத மனம் இலயமாகி பெருத்த தூணாக மறைக்கும் நந்தி விலகி நெருப்பாறு ஒளிப்பிழம்பாக விரிந்து நிற்கும். அங்கு மயிர் பாலம் எனும் பிரம்மரந்திரத்தில் ஏறி கடந்தால் கோடி சூர்ய பிரகாசமான சோதியில் சிவனும் சீவனுமின்றி வேறு எதுவும் இல்லை. நீயே அந்த பரம்பொருள் என்பதை உணர்ந்து யோக தியானம் செய்து ஈசனைச் சேருங்கள்.

196. வேடமிட்டு மணிதுலக்கி மிக்க தூப தீபமாய் ஆடறுத்து
கூறுபோட்ட அவர்கள் போலும் பண்ணுறீர்
தேடி வைத்த செம்பெலாம் திரள்படப் பரப்பியே
போடுகின்ற புட்பபூசை பூசை என்ன பூசையே.

ஆச்சாரமாக வேடம் போட்டு ருத்திராட்சம் படிகம் போன்ற மணிகளால் ஆன மாலைகளைக் கழுத்தில் போட்டு, மணி ஓசையுடன் இறைவனுக்குத் தூப தீபங்கள் காட்டுகிறீர். ஆட்டை அறுத்து கூறுபோட்டு விற்பவர் போல் சடங்குகள் பண்ணுகிறீர்கள். தேடிக் கொணர்ந்து வைத்து சொம்புகளில் நீர் நிரப்பி அதனை அங்கு திரளாக பரப்பி பூக்களால் அர்ச்சித்து செய்வதாக போடும் பூசைதான் என்னபூசையோ.உயிரை வளர்க்க செய்யும் பூசையை அறியாமல் வயிறு வளர்க்கச் செய்யும் பூசை என்ன பூசையோ.

197. முட்டு கண்ட தூமையின் முளைத்தெழுந்த சீவனை
கட்டி கொண்டு நின்றிடம் கடந்து நோக்க வல்லிரேல்
முட்டும் அற்று கட்டும் அற்று முடிவில் நின்ற நாதனை
எட்டுத்திக்கும் கையினால் இருந்த வீடதாகுமே.

தாயின் கருவில் தூமையினால் உருவாகி பிறந்த உயிரானது உடலாகி வளர்ந்துள்ளது. உடம்பிலேயே நாத விந்தாக ஒன்று சேர்ந்து இலிங்கமாக கட்டிக்கொண்டு நின்று கொண்டிருக்கிறது. அதனை அறிந்து கொண்டு அதனுடன் முட்டாமலும் கட்டாமலும் ஒட்டாமலும் தனித்திருக்கும் முடிவாக நின்ற ஈசனை உணர்ந்து மனதை அங்கேயே இருத்தி அதையும் கடந்து சென்று நினைவு, உணர்வு, அறிவு என மூன்றையும் ஒன்றாக்கி தியானம் செய்ய வல்லவர்கள் தனக்குள் நின்ற நாதனான ஈசனைக் கண்டு அருள்

பெறுவார்கள். அவ்வீசன் நின்ற இடமே கைலாயம். அது உனக்குள்ளேயே எட்டு திசைகளாகவும் நான்கு வேத கைளாக இருக்கும் இடமே ஈசன் வாழும் வீடாகும்.

198. அருக்கனோடு சோமனும் அதுக்கும் அப்புறத்திலே
நெருக்கி ஏறு தாரகை நெருங்கி நின்ற நேர்மையை
உருக்கி ஓர் எழுத்துளே ஒப்பிலாத வெளியிலே
இருக்க வல்ல பேரலோ இனிப்பிறப்பது இல்லையே.

சூரியகலை சந்திரகலை எனும் பிராணாயாமத்திற்கு அப்பால் சுழுமுனை எனும் அக்னி கலையால் மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தியை முதுகுத்தண்டின் வழியாக வாசியை மேலேற்றும் நேர்மையை உள்ளுணர்ந்து செய்யவேண்டும். வாசி ஒடுங்கும் ஓர் எழுத்தாக உனக்குள் இருக்கும் பிரம்மத்தில் சேர்க்கவேண்டும். அந்த ஓரெழுத்து உனக்குள் ஒப்பற்ற வெளியாக இருப்பதை உணர்ந்து வாசியோகம் செய்து தியானத்தில் இருக்கும் உத்தம யோக ஞானிகள் இறவா நிலை பெற்று இறைவனுடன் சேர்ந்து இனி இப்பூமியில் பிறப்பெடுக்கமாட்டார்கள்.

199. மூலவட்டம் மீதிலே முளைத்த அஞ்சு எழுத்தின் மேல்
கோல வட்டம் மூன்றுமாய் குலைந்தலைந்து நின்ற நீர்
ஞாலவட்டம் மன்றுளே நவின்ற ஞானம் ஆகிலோ
ஏல வட்டம் ஆகியே இருந்ததே சிவாயமே.

மூல வட்டம் எனும் பிரம்மத்திலிருந்து தோன்றிய பஞ்ச பூதங்கள் உடலாகிய கோலத்தில் மூன்று வட்டங்களாகி சூரிய, சந்திர, அக்னி மண்டலங்களாக உயிராகி நீராக நின்றது. அது இவ்வுலகம் முழுமையும் சொல்கின்ற ஞானமாக உனக்குள்ளேயே புருவமத்தி எனும் மன்றினுள் ஏகமாகி ஓரெழுத்தாக இருந்தது சிவமாகிய மெய்பபொருளே. இதனை ஞானிகளின் போதனைகளால் அறிந்து யோக ஞான சாதகத்தால் சிவயநம என்று தியானியுங்கள்.

200. சுக்கில திசையுளே சுரோணிதத்தின் வாசலுள்
முச்சதுரம் எட்டுளே மூலாதார வரையிலே
அச்சமற்ற சவ்வுளே அரி அரன் அயனுமாய்
உச்சரிக்கும் மந்திரம் உண்மையே சிவாயமே.

சுக்கில சுரோணித கலப்பால் ஆணவம் கன்மம் மாயை எனும்

மும்மலங்களால் உருவாகி தோன்றிய எண்சாண் உடம்பினுள் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை சகஸ்ராரதளத்தில் கொண்டு சேருங்கள். அச்சமற்ற வாசியை தொண்டை சவ்விலே வைத்து ஊதி உண்ணாக்கின் வழியாக மேலேற்றுங்கள். அங்கே வெட்ட வெளியாக விஷ்ணு, சிவன், பிரம்மா என மூவரும் ஒன்றாய் அமர்ந்துள்ளார்கள். அதனைஅறிந்து மனதை ஒருமுகப்படுத்தி தியானத்தில் அமர்ந்து மூலாதாரத்திலிருந்து ஆஞ்ஞா வரை ஆறு ஆதார சக்கரங்களையும் கடந்து சகஸ்ரார தளத்தில் சேர்க்க உச்சரிக்க வேண்டிய மந்திரம் சத்தியமாக விளங்கும் 'ஓம் நம சிவாயமே'.

201. **பூவும் நீரும் என்மனம் பொருத்து கோயில் என் உளம்**
ஆவி ஒடி லிங்கமாய் அகண்டம் எங்கும் ஆகினாய்
மேவுகின்ற ஐவரும் விளங்கு தூப தீபமாய்
ஆடுகின்ற கூத்தனுக்கோர் அந்தி சந்தி இல்லையே.

பூவாகவும், நீராகவும் இருப்பது என் மனம். அதில் ஈசன் பொருத்தி கோயில் கொண்டிருப்பது என் உள்ளம். ஆவியான ஆன்மா இலிங்கமாக அமைந்து என் உடலிலும் இவ்வுலகங்கள் யாவிலும் நிறைந்து நின்றுள்ளது. இந்த அகிலம் எங்கும் நிறைந்து ஐந்து பூதங்களும் என் உடலில் மேவி ஐம்புலன்களாக மனமாகவும் சோதியாகவும் விளங்கி ஆட்டுவிக்கின்ற ஈசன் எனக்குள் நடராஜனாக இரவு பகல் இல்லாது எப்போதும் ஆடிக்கொண்டு இருக்கின்றான். அவனை இராப்பகல் இல்லா இடத்தே கண்டுகொண்டு தியானம் செய்யுங்கள்.

202. **உருக்கலந்த பின்னலோ உன்னை நான் அறிந்தது**
இருக்கில் என் மறக்கில் என் நினைந்திருந்த போதெலாம்
உருக்கலந்து நின்ற போது நீயும் நானும் ஒன்றலோ
திருக்கலந்த போதலோ தெளிந்ததே சிவாயமே.

ஈஸ்வரா ! நான் ஆன்மாவாக இருந்து உருவாகி வளர்ந்து உன்னைக் கலந்து இவ்வுடம்பைக் பெற்றேன். என் உடலில் உருவாக நின்ற என்னை என்னிலே இருந்து என்னிலே மறந்து என்னிலே நினைந்து என்னிலேயே அறிந்து கொண்டேன். உன் உருவை அறிந்து என் உடல் பொருள் ஆவியை உன்னிடம் ஒப்படைத்து என் ஊண் உருகி உயிர் உருகி தியானித்து உன்னுடன் கலக்கும் போது நீயும் நானும் ஒன்றாகி நிற்பதை உணர்ந்து கொண்டேன். உன் திருவருளால் ஞானம் பெற்று தவம் செய்யும் போது சிவமே உண்மை என்பதை தெளிந்து கொண்டேன்.

203. சிவாயம் அஞ்செழுத்திலே தெளிந்து தேவர் ஆகலாம்
சிவாயம் அஞ்செழுத்திலே தெளிந்து வானம் ஆளலாம்
சிவாயம் அஞ்செழுத்துளே தெளிந்து கொண்ட வான்பொருள்
சிவாயம் அஞ்செழுத்துளே தெளிந்து கொள்ளும் உண்மையே

சிவாயநம எனும் அஞ்செழுத்து மந்திரத்தின் உட்பொருளை உணர்ந்து ஓதி செபிப்பவர்கள் தேவர்கள் ஆவார்கள். சிவாயம் என்ற அஞுசெழுத்து அறிந்து அதுவே சிவகதி என தெளிந்து வாசியோகம் செய்யும் யோகிகள் தன் மனமே ஆகாயம் என்பதை உணர்ந்து வானத்தையே ஆட்சி செய்வார்கள். சிவயநம எனும் அஞ்செழுத்துக்குள்ளே ஓரெழுத்தை உணர்ந்து தியானித்து தெளிந்து கண்டு கொண்ட வான் பற்றி நின்ற மெய்ப்பொருளை அறிவார்கள். சிவயநம எனும் அஞ்செழுத்துக்குள்ளே அனைத்தும் அடங்கியிருக்கும் உண்மைகள் யாவையும் தெளிந்து கொண்டு தியானம் செய்து சிவத்தை சேர்வார்கள்.

204. பொய்க்குடத்தில் ஐந்தொதுங்கி போகம் வீசுமாறு போல்
இச்சடமும் இந்திரியமும் நீரு மேல் அலைந்ததே
அக்குடம் சலத்தை மொண்டு அமர்ந்திருந்த வாறுபோல்
இச்சடம் சிவத்தை மொண்டு உகந்து அமர்ந்து இருப்பதே.

பொய்க்குடமாகிய மானுட உடம்பில் ஐந்து பூதங்களும் அமைந்து மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும் சுகபோகங்களை அனுபவிக்கின்றது. இந்த உடம்பும் இந்திரியங்களும் நாதவிந்தாக நீரினால் அமைந்தே அலைந்து கொண்டிருக்கின்றது. மண் குடத்தில் நீரை ஊற்றி வைத்தால் அது எப்படி உறுதியாக சாயாமல் இருக்கின்றதோ அது போலவே பொய்குடமான இந்த உடம்பில் மெய் பொருளாக சிவம் உகந்து அமர்ந்திருப்பதால் தான் இவ்வுலகில் உயிர்கள் நிலைத்திருக்கிறது. சிவம் போனால் சவமே!

205. பட்டமும் கயிறுபோல் பறக்க நின்ற சீவனை
பார்வையாலே பார்த்து நீ படு முடிச்சுப் போடடா
திட்டவும் படாதடா சீவனை விடாதடா
கட்டடா நீ சிக்கெனக் களவறிந்த கள்ளனை.

பட்டத்தைப் போன்று உயிர் பறந்து கொண்டும் கயிறைப் போல் உடம்பு இருந்து கொண்டும் அதனை இயக்கும் ஈசனால் இயங்கிக் கொண்டுள்ளது. பட்டம் அந்தரத்தில் பறப்பது போல் உன் அரங்கத்தில் உயிர் பறந்து கொண்டு இருக்கிறது. அதில் மூச்சானது நூல் கயிற்றைப் போல் ஓடிக்கொண்டுள்ளது. பார்ப்பான் ஆகிய ஈசனை உன் பார்வையினாலேயே பார்த்து மூச்சுக் காற்றை கும்பகத்தால் நிறுத்தி

படுமுடிச்சுப் போடவேண்டும். யோக ஞான சாதகத்தால் பூரக, கும்பக, ரேசகம் செய்து வாசியைப் பிடிக்கத் தெரியாமல் யாரையும் மனம் நோக வையாதீர்கள். சீவனாகிய உயிரையும் உடம்பையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தியானத்தைக் கடைப்பிடித்து உயிரின் உண்மையை உணர்ந்து அதில் உறையும் இறைவனைச் சிக்கெனப் பிடித்து அனைத்தையும் அறிந்த உள்ளங்கவர்ந்த கள்வனான ஈசனை அன்பினால் கட்டுங்கள்.

206. அல்லிறந்து பகலிறந்து அகம் பிரமம் இறந்து போய்
அண்டரண்டமும் கடந்த அனேகனேக ரூபமாய்
சொல்லிறந்து மனமிறந்த சுக சொரூப உண்மையைச்
சொல்லியாற என்னில் வேறு துணைவரில்லை ஆனதே.

அல்லும் பகலும் அனுதினமும் அவனையே நினைந்து அகமும் பிரமமும் ஒன்றி இணைந்து தவம் புரியுங்கள். அண்டரண்டங்கள் அனைத்தையும் கடந்து ஈசனை அறிந்து அனேக அனேக வடிவங்களாய் இவ்வுலகம் யாவிலும் விளங்கும் ஆன்மா ஒன்றே என்பதை உணருங்கள். அறிவையும் உணர்வையும் நினைவையும் ஒன்றிணைத்து மெய்ப்பொருளையே தியானிக்க மௌனம் எனும் சொல்லும் மனமும் இறந்து சுகம் கிடைத்து சமாதி என்ற பேரின்ப நிலையில் ஈசன் சொரூபத்தின் உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். இப்படி அவன் அருளால் நான் அனுபவித்த சுகத்தை வெளியில் ஒருவரிடம் சொல்லியாற அனுபவித்தறிந்த உன்னைத்தவிர எனக்கு வேறு நண்பர்கள் இல்லை.

207. ஐயிரண்டு திங்களாய் அடங்கி நின்ற தூமைதான்
கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டும் ஆகியே
மெய்திரண்டு சத்தமாய் விளங்கி ரச கந்தமும்
தூய்ய காயம் ஆனதும் சொல்லுகின்ற தூமையே.

பத்து மாத காலங்கள் தாயின் கருவறையில் அடங்கி நின்ற தீட்டினால்தான் உயிர் வளர்ந்து கைகள் இரண்டும் கால்கள் இரண்டும் கண்கள் இரண்டும் ஆகி மெய்யாகிய உடம்பு திரண்டு உருவானது. அதில் சத்தம் கேட்கும் காதுகளும் ரசமாகிய சுவை உணர வாயும் கந்தமாகிய நாற்றம் உணர மூக்கும் தோன்றி சுத்தமான உடம்பு ஆனதும் உலகோர் சொல்லும் தீண்டத்தகாத தீட்டினால் உருவானதே என்பதே உண்மை.

208. அங்கலிங்க பீடமும் அசவை மூன்று எழுத்தினும்
சங்கு சக்கரத்திலும் சகல வானகத்திலும்
பங்கு கொண்ட யோகிகள் பரம வாசல் அஞ்சினும்
சங்க நாத ஓசையும் சிவாயம் அல்லது இல்லையே.

நம் அங்கத்தில் சூட்சமாக இலிங்க பீடமாக இருப்பதும், அசபை மந்திரம் எனும் அ, உ, ம் என்ற மூன்று எழுத்தாக இருப்பதும், சங்கு சக்கரங்களாகவும் சகல சராசரங்களாகவும் இருப்பதும் மெய்ப்பொருளான சிவமே. இதனை அறிந்து ஆகாயமான தன் மனத்தில் ஈசனையே நினைந்து வாசியோகம் செய்யும் யோகிகள் பத்தாவது வாசல் எனும் பரமபத வாசலில் நாத ஓசையை சேர்த்து பரமனைக் கண்டு ஐம்புலன்களையும் ஐந்தெழுத்தால் அடக்கி தியானத்தில் இருப்பார்கள்.

209. அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் என்றுரைக்கும் அன்பர்காள்
அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் அல்ல காணும் அப்பொருள்
அஞ்செழுத்து நெஞ்சழுத்தி அவ்வெழுத்தறிந்த பின்
அஞ்செழுத்தும் அவ்வின் வண்ணம் ஆனதே சிவாயமே.

அஞ்செழுத்து பஞ்சாட்சரம் என்றும் மூன்றெழுத்து ஓங்காரம் என்றும் உரைத்து அதனை ஓதி உச்சரிக்கும் அன்பர்களே! நீங்கள் காண்கின்ற அந்த மெய்ப்பொருள் அஞ்செழுத்தாகவோ மூன்றெழுத்தாகவோ இருப்பதில்லை. அஞ்செழுத்தின் அனைத்து உட்பொருளை யாவும் அறிந்து அதனை உடம்பில் நெஞ்செழுத்தாக இருக்கும் சிகாரத்தில் இருந்து சிவயநம என்று உள்ளத்தில் இருத்தி தியானியுங்கள். அப்போது பிரமம் ஓரெழுத்தாகவும் உயிராகவும் உள்ளதை உணர்ந்து கொள்ளுங்கள். ஓரெழுத்திலேயே ஐந்தெழுத்தும் அடங்கி இருப்பதையும் அவ்வெழுத்தே பஞ்சாட்சரமாக ஐந்து வண்ணங்கள் ஆகி நிற்பதையும் அதிலேயே ஐந்து பூதங்களும் உள்ளதையும் அறிந்துணர்ந்து அஞ்செழுத்தை உள்ளத்திலேயே ஓதி மெய்ப்பொருளை சேர்ந்து தியானம் செய்யுங்கள்.

210. ஆதரித்த மந்திரம் அமைந்த ஆகமங்களும்
மாதர் மக்கள் சுற்றமும் மயக்க வந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ எங்கும் ஆகி நின்றதோ
சோதிபுக் கொளித்திடம் சொல்லடா சுவாமியே.

காலந்தோறும் சொல்லி வந்த மந்திரங்கள் அமைந்துள்ள ஆகம நெறிகளைக் கடைபிடித்து வாழ்ந்து வரும் போது மனைவி மக்கள் உறவுகள் நட்புகள் என அனைத்தையும் மறக்கும் படியாக ஒரு நொடியில் மயக்க வந்த மரணம் எவ்வாறு ஏற்பட்டது? உடலில் உலாவிய உயிர் எங்கு போனது? ஆன்மா உடலிலேயே ஒளிந்து கொண்டதா? அல்லது அதுவே எங்குமான ஆகாயத்தில போய் நின்றதா? ஆன்மாவில் சோதியாக துலங்கிய ஈசன் உடம்பை விட்டு எங்கு சென்று ஒளிந்து கொண்டான்? சோதி மறைந்த இடம் எங்கு என்பதை யாவும் சுவாமியாக வருபவர்கள் சொல்லி இறவா நிலை பெற உபதேசிக்கவேண்டும்.

211. அக்கரம் அனாதியோ ஆத்துமா அனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களும் அனாதியோ
தக்க மிக்க நூல்களும் சதாசிவம் அனாதியோ
மிக்க வந்த யோகிகாள் விரைந்துரைக்க வேணுமே.

உடம்பு அனாதியா? உயிர் அனாதியா? ஐம்பூதமும் ஐம்புலன்களும் அனாதியா? ஆராய்ந்தறிந்த தகுந்த நூல்கள் அனாதியா? ஆஞ்ஞா எனும் ஆகாயத்தில் உள்ள சதாசிவம் அனாதியா? யோக ஞானம் விளக்க வரும் யோகிகளே ! எது அனாதி என்பதை விரைந்து விளக்க வேண்டும். எது தொடக்கமும் முடிவும் அற்று இருக்கின்றதோ, எது சுய ஒளி படைத்து விளங்குகின்றதோ, எது உள்ளதும் இல்லாததாகவும் உள்ளதோ அதுவாகிய சிவமே அனாதி. எங்கும் எப்போதும் என்றென்றும் எக்காலத்தும் நித்தியமாய் உள்ளதே அனாதி.

212. ஒன்பதான வாசல்தான் ஒழியுநாள் இருக்கையில்
ஒன்பதாம் ராம ராம ராம என்னும் நாமமே
வன்மமான பேர்கள் வாக்கில் வந்து நோய் அடைப்பராம்
அன்பரான பேர்கள் வாக்கில் ஆய்ந்தமைந்து இருப்பதே.

ஒன்பது வாசல் கொண்ட உடம்பு ஒரு நாள் அழியும் என்பதுவே உண்மை என்றுணர்ந்து எந்நேரமும் ராமநாமம் செபித்து அவன் பாதம் பற்றியிருங்கள். இராம நாமம் மரணபயம் போக்கும். வஞ்சக நெஞ்சம் கொண்டவர்கள் இறக்கும் தருவாயில் நோய் வந்து அவர்கள் வாக்கில் இப்புண்ணிய நாமத்தை சொல்ல மாட்டாது இறப்பார்கள்.

இது அன்பே சிவம் என வாழும் அன்பர்கள் வாக்கில் எப்போதும் அமைந்திருக்கும் அவர்கள் இராமநாமம் என்பது என்ன என்பதை புரிந்து ஆராய்ந்து அறிந்து தியானம் தவம் செய்வார்கள்.

213. **அள்ளிநீரை இட்டதேது அங்கையில் குழைத்ததேது**
மெள்ளவே மிணமிணென்று விளம்புகிற்கு மூடர்கள்
கள்ளவேடம் இட்டதேது கண்ணை மூடி விட்டதேது
மெள்ளவே குருக்களே விளம்பிள் விளம்பிள்.

உள்ளங்கையில் விபூதியை எடுத்து அதில் நீரைவிட்டு குழைத்து உடம்பு முழுவதும் பட்டைகள் போட்டு மெள்ளவே வாய்க்குள்ளேயே முணுமுணுவென்று மந்திரங்களைச் சொல்லி விளம்பும் மூடர்களே! உங்களுக்குள் கள்ள வேடமாக சூட்சமமாக விளங்கும் பொருள் எது? மரணம் நேர்ந்த போது கண்ணை மூடி விட்டதற்குக் காரணம் எது? என்பதை குருவாக வருபவர்களே மெதுவாக விளக்கிக் கூறிடுங்கள்.

214. **அன்னை கர்ப்பத் தூமையில் அவதரித்த சுக்கிலம்**
மின்னையே தரித்ததும் பனித்துளி போலாகுமே
உன்னி தொக்குள் உழலும் தூமையுள் அடங்கிடும்
பின்னையே பிறப்பதும் தூமை காணும் பித்தரே.

தாயின் கர்ப்பத்தில் உள்ள தூமையில் சேர்ந்த சுக்கிலம் மின்னலைப் போன்ற ஒளியால் தரித்து பனித்துளி அளவே ஆகி உயிர் உண்டாகும். அவ்வுயிரே சிசுவாக வளர்ந்து தாயின் வயிற்றுக்குள் உழன்று ஐம்புலன்களுடன் கூடிய உடம்பு உண்டாகி தூமையின் உள்ளேயே அடங்கி இருக்கும். பத்து மாதங்கள் தாயின் தூமையான நீரிலேயே மிதந்து வளர்ந்து அதன் பின்னரே உலகில் உயிர் உடம்பு பிறக்கின்றது. இப்படி நாம் பிறந்ததே தீட்டினால் தான் என்பதை அறிந்து கொண்டு யாரையும் தீட்டு என்று ஒதுக்காதீர்கள். ஏனெனில் அத்தூமையை உடம்பில் ஒட்டியே பிரம்மம் இருக்கிறது என்பதைக் கண்டு அச்சிவத்தைச் சேரத் தியானியுங்கள்.

215. **அழுக்கறத் தினங்குளித்து அழுக்கறாத மாந்தரே**
அழுக்கிருந்த அவ்விடம் அழுக்கிலாதது எவ்விடம்
அழுக்கிருந்து அவ்விடத்து அழுக்கறுக்க வல்லிரேல்
அழுக்கிலாத சோதியோடு அணுகி வாழலாகுமே.

அழுக்குப் போக வேண்டும் என்று தினந்தினம் நீரில் குளித்தும் அழுக்கு அகலாத மனிதர்களே ! அழுக்கான உடம்பில் அழுக்கு இல்லாத இடம் எது என்பதை அறிந்தீரா ? அவ்விடத்தில் மனதை நிறுத்தி அம்மனதில் உள்ள ஆசைகளையும், பாவங்களையும் பக்தி, தொண்டு, யோகம், ஞானம் என்ற சாதனங்களால் அறவே ஒழித்து தியானிக்க வல்லவர்களானால், அழுக்கே இல்லாத பரிசுத்தமான அவ்விடத்தில் சோதியாக விளங்கும் ஈசனோடு இணைந்து மரணமிலா பெருவாழ்வில் வாழலாம்.

216. **அணுத்திரண்ட கண்டமாய் அனைத்து பல் யோனியாய்**
மனுப்பிறந்து ஓதி வைத்த நூலிலே மயங்குறீர்
சனிப்பது ஏது சாவது ஏது தாபரத்தின் ஊடுபோய்
நினைப்பது ஏது நிற்பது ஏது நீர் நினைந்து பாருமே.

அணுக்களால் திரண்டு உருவானது உடம்பு. அது இவ்வுலகில் அனைத்தும் பலவிதமான உயிரினங்களாக விளங்குகின்றது. நால்வகை யோனிகளால் வெளிவரும் உயிரில்தான் மனிதன் பிறக்கின்றான். இப்படி வந்த மனிதர்களின் அறிவில் உதித்த மனுதர்மம், சாஸ்த்திரங்கள் போன்ற நூல்களைப் படித்து உண்மையை உணராது மயங்குகிறீர்கள். ஆத்மா பிறப்பதோ இறப்பதோ இல்லை. ஒன்று மற்றொன்றாக மாறி வருகின்றது. இவை யாவும் நன்குணர்ந்து தன்னை அறிந்து தற்பரமாய் இருக்கும் பரம்பொருளைப் பற்றி நினைவாக நினைப்பது எது ? என்றும் நிலையாக நிற்பது எது என்பதையும் அது நீராக இருப்பதுவே என்பதையும் உணர்ந்து அவ்விடத்திலேயே தியானியுங்கள். நினைவுதனை நினைவுகொண்டு நினைந்து பாருங்கள்.

217. **ஆதியாகி அண்டரண்டம் அப்புறத்தும் அப்புறம்**
சோதியாகி நின்றிலங்கு சுருதி நாத சோமனை
போதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகள்
சாதிபேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே.

ஆதியாக அண்டங்கள் யாவிலும் தோன்றி அப்பாலுக்கு அப்பாலாய் நின்று சோதியாக இயங்கும் ஈசனை சுருதியுடன் கூடிய இசையோடும் நாதலயமாகவும் தனக்குள் யாரும் போதிக்காமல் ஓதாதுணர்ந்த மெய் ஞானிகள் சோமசுந்தரனையே தியானித்திருப்பார்கள். அவர்கள் எல்லோருக்குள்ளும் இறைவன்

இருப்பதை உணர்ந்ததால் சாதி பேதம் என்பதை எங்கும் எப்போதும் யாரிடமும் பார்க்கமாட்டார்கள். சற்றும் பேதம் இல்லாது விளங்கும் பரம்பொருளையே அனைவரிடமும் பார்ப்பார்கள்.

218. ஆக்கை முப்பது இல்லையே ஆதி காரணத்திலே
நாக்கை மூக்கையுள் மடித்து நாதநாடி யூடுபோய்
எக்கறுத்தி றெட்டையும் இறுக்கமுத்த வல்லிரே
பார்க்க பார்க்க திக்கெல்லாம் பரப்பிறம்மம் ஆகுதே.

ஆக்கை என்ற வாழ்வில் ஆதியான ஆன்மாவிற்கு மூப்பு என்பதில்லை. ஆன்மா ஆதியாக இருப்பதால் உடம்பு மூப்பு அடைந்தாலும் அது என்றும் இளமையோடே இருக்கின்றது. நாக்கை உள் மடித்து உண்ணாக்கில் வாசியை வைத்து ஊதி நாதத்தை உண்டு பண்ணி நடு நாடியான சுழுமுனை வாசலை திறக்கவேண்டும். இடகலை பிங்கலையாக ஓடும் மூச்சுக்காற்றை எக்கி எட்டு ரெண்டு அட்சரத்தால் இறுக்கி சுழுமுனையில் வாசியை அழுத்தி தியானிக்க வல்லவர்கள் ஆனால் தவம் கூடி மெய்ப்பொருளில் சேர்ந்து பார்க்கும் திசைகளில் எல்லாம் பரப்பிரம்மம் காட்சி தரும். நீயே அதுவாக ஆவாய்.

219. அஞ்சும் அஞ்சும் அஞ்சும் அஞ்சும் அல்லல் செய்து நிற்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே அமர்ந்துளே இருப்பதும்
அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே ஆதரிக்க வல்லிரேல்
அஞ்சும் அஞ்சும் உம்முளே அமர்ந்ததே சிவாயமே.

மானுட உடம்பில் ஐந்து பூதங்களும் ஐந்து புலன்களும் ஐந்து கோஷங்களும், ஐந்து அவஸ்தைகளாகவும் இருந்து அல்லல் செய்து நிற்கின்றது. அஞ்செழுத்தே நமசிவய என்ற பஞ்சாட்சரமாக அமர்ந்து நமக்குள் இருக்கின்றது. ஐந்து பூதங்களாகவும் ஐந்து புலன்களில் இயங்கும் அஞ்செழுத்தை நமசிவய என்று உச்சரித்து செபித்து தியானிக்க வேண்டும் அஞ்செழுத்தின் உட்பொருள் யாவையும் நன்கு உணர்ந்து உடலையும் உயிரையும் பாதுகாத்து அஞ்செழுத்தை ஓதி வருபவர்க்கு அஞ்செழுத்தும் ஐந்து வண்ணங்களாக இருந்து உனக்குள்ளேயே உகாரமாக அமர்ந்திருப்பது மெய்ப் பொருளாக விளங்கும் சிவமே என்பதை அறிந்து அஞ்செழுத்தால் தியானம் செய்யுங்கள்.

220. அஞ்செழுத்தின் அனாதியாய் அமர்ந்து நின்றது ஏதடா
நெஞ்செழுத்தி நின்று கொண்டு நீ செபிப்பது ஏதடா
அஞ்செழுத்தின் வாளதால் அறுப்பதாவது ஏதடா
பிஞ்செழுத்தின் நேர்மைதான் பிரிந்துரைக்க வேண்டுமே.

அஞ்செழுத்தின் ஓர் எழுத்தாய் அனாதியாய் அமர்ந்து நின்றது சிகாரமே. அதை நெஞ்சமாகிய அனாகத சக்கரத்தில் நின்று சிவயநம என செபிக்க வேண்டும். இது பஞ்சாட்சரமாக பிஞ்செழுத்து எனும் ஊமையெழுத்தாக இருப்பதை உணர்ந்து அங்கேயே மனதை நிறுத்தி நினைவால் நமசிவய, சிவயநம, யநமசிவ, மசிவயந, வயநமசி என ஐம்பத்தோர் அட்சரங்களாக பிரித்து செபித்து தியானிக்க வேண்டும்.

221. உயிரிருந்தது எவ்விடம் உடம்பெடுப்பதின் முனம்
உயிரதாவது ஏதடா உடம்பாவது ஏதடா
உயிரையும் உடம்பையும் ஒன்றுவிப்பது ஏதடா
உயிரினால் உடம்பெடுத்த உண்மை ஞானி சொல்லடா.

உடம்பை எடுப்பதற்கு உயிர் எங்கு இருந்தது? உயிராவது எது? உடம்பாக ஆவது எது? உயிரையும் உடம்பையும் ஒன்றாக்குவது எது? உயிரினால் உடம்பெடுத்த ஞானியே உண்மையைக் கூறவேண்டும். உடம்பாக உருவெடுக்கும் முன்பு உயிர் நினைவு என்னும் ஆகாயத்தில் இருந்தது. உயிர் சிவனாகவும் உடம்பு சக்தியாகவும் இருக்கின்றது. உயிரையும் உடம்பையும் ஒன்றுவிப்பது சிவம். அச்சிவமே ஞானம். அதுவே மெய்ப்பொருள். அதுவே அனாதியான சோதி. ஆதலின் உடல் தத்துவங்களையும், உயிர் தத்துவங்களையும் நன்கு அறிந்து கொண்டு சிவத்தை சேர தியானியுங்கள்.

222. சுழித்தவோர் எழுத்தையும் சொன்முகத்து இருத்தியே
துன்ப இன்பமுங் கடந்து சொல்லு மூல நாடிகள்
அழுத்தமான அக்கரம் அங்கியுள் எழுப்பியே
ஆறுபங்கயம் கலந்து அப்புறத் தலத்துளே.

சுழித்தவோர் எழுத்தான அக்கரத்தை கண்டத்தில் வைத்து சொற்கள் உதிக்கும் முகமான மூலாதாரத்தில் செலுத்தி இருத்தி பின் உகாரத்தால் குண்டலினியை எழுப்பி மேலேற்ற வேண்டும். இதனால் ஏற்படும் இன்ப துன்பங்களை கடந்து மூல நாடியான சுழுமுனையில் அழுத்தி சிகாரத்தால் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களிலும் கலந்து வாசியை செலுத்தி அப்புறத்தலமான சகஸ்ராரத்தில் சேர்க்க வேண்டும். இதுவே சித்தர்களின் வாசியோகம்.

223. உருத்தரிப்பதற்கு முன் உயிர் புகுந்த நாதமும்
கருத்தரிப்பதற்கு முன் காயம் என்ன சோணிதம்
அருள் தரிப்பதற்கு முன் அறிவு மூலாதாரமாம்
குறித்தறிந்து கொள்ளுவீர் குணங்கெடும் குருக்களே.

உடம்பு உருவாவதற்கு உயிரானது ஆகாயத்தில் நாதமாக புகுந்திருந்தது. கருத்தரிப்பதற்கு முன்பு உடம்பு தாயின் கருவறையில் சுக்கில சுரோணித நீராய் இருந்தது. உடலும் உயிரும் சேர்ந்து வளர்வதற்கு இறையருள் அறிவான சோதியாக மூலாதாரத்தில் இருந்தது. இப்படி வெளிவந்த உடம்பில் உயிர் சூட்சமாக இருப்பதைக் குறித்தறிந்து கொண்டு அதிலே இறைவனே குருவாக உறைவதை உணர்ந்து கொள்ளுங்கள்.

224. எங்கும் உள்ள ஈசனார் எம்முடல் புகுந்த பின்
பங்கு கூறு பேசுவார் பாடு சென்று அணுகிலார்
எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்றிரண்டு பேதமோ
உங்கள் பேதம் அன்றியே உண்மை இரண்டும் இல்லையே.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஈசன் எனது உடலில் கர்த்தாவாக புகுந்திருந்தான் என்பதை என்னிலேயே உணர்ந்து கொண்டேன். ஒன்றாய் உள்ள இறைவனுக்குப் பல பெயரிட்டுப் பங்கு போட்டு பேசுவோர்கள் அவனை அடைவதற்குரிய உண்மையான வழியை அறிந்து மெய்ப்பாடுபடுவதற்கு அணுகமாட்டார்கள். எங்கள் தெய்வமே பெரிதென்றும் உங்கள் தெய்வம் சிறிது எனவும் பேசி இறைவனை பேதப்படுத்துவார்கள். அது உங்களது அறியாமையால் விளைந்த பேதமேயன்றி இதுவே இறைவனின் பேதம் இல்லை. உண்மையாக உள்ள இறைவன் ஒருவனேயன்றி இரண்டு பேதங்கள் ஏதும் இல்லை. அவன் எங்கும் எப்போதும் எல்லோர்க்கும் பொதுவாக ஒன்றாகவே விளங்குகின்றான்.

225. அரியுமாகி அயனுமாகி அண்டமெங்கும் ஒன்றதாய்
பெரியதாகி உலகுதன்னில் நின்ற பாதம் ஒன்றலோ
விரிவதென்று வேறு செய்த வேடமிட்ட மூடரே
அறிவினோடு பாரும் இங்கும் அங்கும் எங்கும் ஒன்றதே.

விஷ்ணுவாலும் பிரம்மாவாலும் தேடிக்காண முடியாத அடி முடியை, யாவர்க்கும் பெரியவனாக நின்ற ஈசன் அண்ட சராசரங்கள் எங்கும் ஒன்றாக விளங்குகின்றான். ஈசன் ஒருவனே அனாதியானவன். இந்த உலகம் யாவும் உள்ள உயிர்கள் எல்லாவற்றிலும் பொருந்தி நின்ற பாதம் ஒன்று அல்லவோ. எல்லாமே அவனுக்குள் அடங்கி யாதும் ஒன்றாக இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். விஷ்ணு பிரம்மா சிவன் என மூவரையும் வேறுபடுத்தி விரிவுரைகள் செய்து வாய் ஜாலத்தால் வேடம் போட்டு திரியும் மூடர்களே ! மூவரும் ஒன்றாக உனக்குள்ளேயே இருப்பதை அறிவை அறிவால் அறிந்து உண்மையை உணர்ந்து தெளிந்து பாருங்கள். இங்கும் அங்கும் எங்குமே ஒன்றான மெய்ப்பொருள் சிவமே.

226. வெந்த நீறு மெய்க்கணிந்து வேடமும் தரிக்கிறீர்
சிந்தையுள் நினைந்துமே தினம் செபிக்கும் மந்திரம்
முந்த மந்திரத்திலோ மூல மந்திரத்திலோ
எந்த மந்திரத்திலோ ஈசன் வந்து இயங்குமே.

வேகா தலை சாகாக்கால் போகப் புனலாக இருக்கும் திருநீறை அறியாது வெந்த விபூதியை நீராக்கி உடம்பு முழுவதும் பூசி வேடம் போடுகிறீர். நீராக நின்ற மந்திரத்தில் நெருப்பாக ஈசன் இயங்குவதை அறிந்து அதையே சிந்தையுள் வைத்து சிவனை நினைந்து சிவயநம என தினமும் செபித்து தியானம் செய்யுங்கள். அதுவே அனைத்துக்கும் முந்தி தோன்றிய மந்திரம், மூலமந்திரம். பஞ்சாட்சரத்தில்தான் ஈசன் இருந்து இயங்குகின்றான்.

227. அகார காரணத்திலே அனேகனேக ரூபமாய்
உகார காரணத்திலே உருத்தரித்து நின்றனன்
மகார காரணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகார காரணத்திலே தெளிந்ததே சிவாயமே.

ஓங்காரமே அனைத்தும் தோன்றுவதற்குக் காரணம். அதில் அகாரம் உகாரம் மகாரம் என்ற மூன்றும் அடங்கியுள்ளது. இதில் யாவிலும் சிகரமாக இருப்பது சிகாரம். அகரமே உடம்பாகி அனேகனேக ரூபங்களாவதற்குக் காரணமாய் ஆனது. உகாரமே உயிராகி உருதரித்து நிற்பதற்கு காரணமாயிற்று. மகாரமே மனமாகி இந்த வையகம் முழுவதும் மயங்குவதற்குக் காரணமாய் ஆனது. இவையாவிற்கும் ஆதியாக சிகாரமே காரணம் என்பதை அறிந்து சிவமே பொருளாய் இருப்பதை உணர்ந்து கொண்டு தியானியுங்கள்.

228. அவ்வெழுத்தில் உவ்வு வந்து அகாரமும் சனித்ததோ
உவ்வெழுத்து மவ்வெழுத்தும் ஒன்றை ஒன்றி நின்றதோ
செவ்வை ஒத்து நின்றலோ சிவபதங்கள் சேரினும்
மிவ்வையொத்த ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.

ஓம் என்ற ஓங்காரத்தில் அ, உ, ம் என்ற மந்திரங்கள் மூன்றெழுத்தாக இருக்கின்றது. இதனைச் சித்தர்கள் அவ், உவ், மவ் என்றும் அம், உம், இம் என்றும் சொல்கிறார்கள். அவ்வும் உவ்வும் மவ்வும் ஆகிய உயிரும் மனமும் ஒன்றாகி ஒன்றி நிற்கின்றது. இப்படி ஓங்காரம் உடலுயிராய் நிற்பதை உணர்ந்து அது செம்மையான பொருளாய் இருப்பதை அறிந்து மின்னலைப் போன்ற சோதியில் கலந்து தியானத்தால் சிவத்தின் திருவடியில் சேரலாம். இவ்விதமாக செய்து வரும் நற்குணம் நிறைந்த ஞானிகள் விரிவாக உபதேசிக்க வேண்டும்.

229. ஆதியான அஞ்சிலும் அனாதியான நாலிலும்
சோதியான மூன்றிலும் சொரூபம் அற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலே நிறைந்து நின்ற வஸ்துவை
ஆதியான தொன்றுமே அற்றதஞ் செழுத்துமே.

ஆதியாக உள்ள பஞ்சபூதங்கள் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய அஞ்சிலும், அனாதியாக உள்ள அந்தக்கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கிலும் சோதியான ஓங்காரத்தில் அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்றிலும், சொரூபம் அற்ற உயிர் உகாரத்தில் சூரிய சந்திர கலையில் இரண்டிலும் எல்லோர்க்கும் பொது நீதியாக விளங்கும் ஒன்றிலே நிறைந்து நின்ற வஸ்துவான மெய்ப்பொருளை அறிந்து கொள்ளுங்கள். இதுவே ஆதியான ஒன்றாக இருப்பதை உணர்ந்து அதிலேயே ஒன்றி அஞ்செழுத்தால் ஓதி தியானியுங்கள்.

230. வானிலாதது ஒன்றுமில்லை வானுமில்லை வானிடில்
ஊனிலாதது ஒன்றுமில்லை ஊனுமில்லை ஊனிடில்
நானிலாத ஒன்றுமில்லை நானுமில்லை நண்ணிடில்
தானிலாதது ஒன்றுமே தயங்கி ஆடுகின்றதே.

ஆகாயம் இல்லாதது எதுவும் இல்லை. ஒன்றும் இல்லாததே ஆகாயம் என்பதை அறிந்து அதலேயே நாடி தியானம் செய்.

உடம்பு இல்லாத உயிர் ஒன்றுமில்லை உடம்பு இல்லை என்ற நிலையில் உடம்பிலேயே யோகம் செய். நான் என்பது என்ன என்பதை உணர்ந்து நான் என்ற ஆணவமில்லாது நான் நீயாக ஞான சாதகம் செய். நான் என்பதற்று தானாக நின்றது ஒன்றான சிவமே உன் உடம்பில் தங்கி இயங்கி ஆடுகின்றது. அத்திருவடி பற்றி இறவா நிலை அடையுங்கள்.

231. சுழித்ததோர் எழுத்தை உன்னி சொல் முகத்து இருத்தியே
துன்ப இன்பமுங் கடந்து சொல்லும் நாடி யூடுபோய்
அழுத்தமான வக்கரத்தின் அங்கியை எழுப்பியே
ஆறு பங்கயம் கடந்து அப்புறத்து வெளியிலே.

பூஜ்யமாகி ஓரெழுத்தாக உள்ள பிரம்மத்தை அறிந்துஅதையே உன்னிப்பாக பார்த்து குரு சொல்லித்தந்த முகத்தில் இருத்தி, துன்பத்தையும் இன்பத்தையும் அனுபவித்தது அது என உணர்ந்து சுழுமுனை நாடியில் மவுனத்திலேயே ஊன்றி தியானம் செய்யுங்கள். அறிவு, உணர்வு, மனம் ஆகியவை அமைந்திருக்கும் ஓங்காரத்தில் ஒலியை எழுப்பி ஆறுமுகமாக விளங்கும் சூட்சும உடம்பில் உள்ள ஒளியுடன் இணையுங்கள். அங்கே வெளிக்கு உள் வெளி கடந்து அருட்பெருஞ்சோதியான ஆண்டவனை தரிசித்து சும்மா இருக்கும் சுகம் பெறலாம்.

232. விழித்த கண் குவித்த போது அடைந்துபோய் எழுத்தெலாம்
விளைந்துவிட்ட இந்திரசால வீடதான வெளியிலே
அழுத்தினாலு மதிமயங்கி அனுபவிக்கும் வேளையில்
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை ஆனதே.

விழித்திருந்த அகக்கண்களை நோக்கி எண்ணங்களை அங்கேயே குவித்தால் ஓங்காரம் பஞ்சாட்சரம் என்ற எழுத்துக்கள் எல்லாம் அங்கேயே அடைந்துபோய் மெய்யான மவுனம் கிட்டும். இந்திரியங்களால் விளைந்த வீடாகிய உடலில் உள்ள ஆகாயத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கையும் அங்கேயே அழுத்தி நிறுத்தி உடலையும் உயிரையும் ஒன்றாக்கி மதியாகிய சந்திரனில் மயங்கி அங்கே உள்ள அமிர்தத்தை உண்டு அனுபவிக்கும் நேரத்தில் ஈசனாகிய அவனைத் தவிர நான் என்ற உடலில் உயிர் இல்லை வேறு யாரும் இல்லை என்று ஆனது.

233. **நல்ல மஞ்சனங்கள் தேடி நாடி நாடி ஓடுறீர்**
நல்ல மஞ்சனங்கள் உண்டு நாதன் உண்டு நம்முளே
எல்லை மஞ்சனங்கள் தேடி ஏக பூசை பண்ணினால்
தில்லை மேவும் சீவனும் சிவபதத்துள் ஆடுமே.

ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனை செய்யவேண்டும் என்று அதற்குத் தேவையான அபிஷேகப் பொருள்களை நல்லதாகப் பார்த்து நாடி நாடி தேடி ஓடுகின்றீர்கள். நமக்குள்ளேயே நல்ல மஞ்சனங்கள் உண்டு நாதனான ஈசன் உண்டு என்பதை அறிவீர்களா ! நமக்குள் எல்லையாக இருக்கும் மனமாகிய வெளியில் நல்ல எண்ணங்களால் மனமுருகி அபிஷேகம் செய்து ஒரே மனதாக ஈசனை எண்ணித் தியானியுங்கள். தில்லையெனும் ஆகாயத்தலத்தில் சீவனாக விளங்கும் உயிர் சிவனின் திருவடியை சேர்ந்து இன்புறும்.

234. **உயிர் அகத்தில் நின்றிடும் உடம்பெடுத்ததற்கு முன்**
உயிர் அகாரம் ஆயிடும் உடல் உகாரம் ஆயிடும்
உயிரையும் உடம்பையும் ஒன்றுவிப்பது அச்சிவம்
உயிரினால் உடம்புதான் எடுப்பவாறு உரைக்கினே.

உடம்பு எடுப்பதற்கு முன் உயிர் அகத்தில் உள்ள ஆகாயத்தில் நின்றிருக்கும். உயிர் அகாரமான சிவனாகவும் உடம்பு உகாரமான சக்தியாகவும் இருந்திடும். உயிரையும் உடம்பையும் ஒன்று சேர்ப்பது மெய்ப்பொருளாக விளங்கும் சிவம். இவ்வாறு உயிர் உடம்பெடுத்து வந்ததை உணர்ந்து யோக ஞான சாதகங்களால் சிவத்தை தியானித்து பிறப்பில்லா இறவா நிலையை அடையுங்கள்.

235. **அண்டம் ஏழும் உழலவே அனந்த யோனி உழலவே**
பண்டைமால் அயனுடன் பரந்து நின்று உழலவே
எண்திசை கடந்து நின்ற இருண்ட சத்தி உழலவே
அண்டரண்டம் ஒன்றதாய் ஆதி நட்டம் ஆடுமே.

அண்டங்கள் ஏழும் சுற்றிக் கொண்டே இருக்கிறது. அனந்த கோடி யோனியில் பிறந்த உயிர்களும் சுற்றி உழன்று கொண்டிருக்கிறது. உங்கள் உடம்பில் விஷ்ணுவும் பிரமனும் உள்ளே இருந்து உழன்று கொண்டு காத்தும் படைத்தும் வருகிறார்கள். எண் திசைக்கு அப்பாலாய் கடந்து நின்ற இருளான சக்தி உழலவே அண்டரண்டம் அனைத்தும் ஒன்றதாய் நின்ற ஆதி உனக்குள் ஆடி நின்றதை உணருங்கள்.

236. உருவ நீர் உறுப்பு கொண்டு உருத்தரித்து வைத்திடும்
பெரியபாதை பேசுமோ பிசாசை ஒத்த மூடரே
கரியமாலும் அயனுமாக காணொணாத கடவுளை
உரிமையாக உம்முளே உணர்ந்துணர்ந்து கொள்ளுமே.

உருவாக வந்த நாத விந்து நீரே. கை, கால். கண், காது, மூக்கு, வாய் என்ற உறுப்புகளாக வளர்ந்து உடம்பு வெளிவருகின்றது. பற்பல வழிகளிலும் சென்று இறைவனுடன் பேசுவதாகக் கூறும் பிசாசைப் போல் அங்கும் இங்கும் அலைந்து திரியும் மூடர்களே ! மாலும் பிரமனும் தேடிக்காண முடியாத கடவுள் ஈசனை உனக்குள்ளேயே கண்டு உனக்கு உரிமையாளனாக உள்ளதை உணர்ந்து உணர்ந்து நினைந்து நினைந்து தியானம் செய்யுங்கள்.

237. பண்ணிவைத்த கல்லையும் பழம் பொருள் அதென்று நீர்
எண்ண முற்றும் என்ன பேர் உரைக்கிறீர்கள் ஏழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்து வைத்து அளிக்கவும்
ஒண்ணுமாகி உலகளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே.

மனிதனால் கலைநுட்பத்தோடு செய்து வைத்துள்ள சிலைகளுக்குப் பற்பல பெயர்களை வைத்து அதுவே பழமையான மெய்ப்பொருள் என்ற எண்ணம் வைத்து பேசிவரும் ஏழைகளே ! எதனையும் செய்யவும் உண்டாக்கிப் படைக்கவும் காத்து அளிக்கவும் எதற்கும் ஈடு சொல்ல ஒண்ணாத, இந்த உலகைப் படைத்து காத்து அழிக்கும் ஒன்றாகிய மெய்ப்பொருள் ஆன ஈசனை உங்கள் உள்ளத்திலேயே நிறுத்தி நினைத்து நிலையாக நின்று தியானியுங்கள்.

238. நாலதான யோனியுள் நவின்ற விந்தும் ஒன்றதாய்
ஆலதான வித்துளே அமர்ந்தொடுங்கு மாறு போல்
சூலதான உற்பனம் சொல்வதான மந்திரம்
மேலதான ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.

ஊர்வன, பறப்பன, விலங்கின, மனிதன் என்கின்ற நான்கு வகைப்பட்ட யோனிகளில் இருந்து வருகின்ற உயிர் ஒரே விந்தினால் தான் ஆகி நிற்கின்றது.

ஒரு சிறிய ஆல விதைக்குள் தான் மிகப் பெரிய விருட்சமான ஆலமரம் ஒடுங்கி அமர்ந்திருந்தது. அவ்வாறே நாத விந்தால் ஆன உயிரே ஓரமுத்து மந்திரமாக தாயின் கருவில் உற்பனம் ஆகி, உடம்பாக வருகிறது. இதனை அறிந்து வைத்துள்ள மேன்மையான ஞானிகள், குருக்கள் தம் சீடர்களுக்கு விரிவாக விளக்கமாக சொல்லித் தரவேண்டும்.

239. **அருவமாய் இருந்த போது உன்னை அங்கு அறிந்திலை**
உருவமாய் இருந்தபோது உன்னை நான் அறிந்தனன்
குருவினால் தெளிந்து கொண்டு கோதிலாத ஞானமாய்
பருவமான போதலோ பரப்பிரம்மம் ஆனதே.

ஆகாயம், காற்று, நெருப்பு ஆகிய சிவய என்ற அட்சரத்தில் ஆன்மா அருவமாய் இருந்தபோது அங்கு அன்னையால் கூட உன்னை அறிய முடியவில்லை. நீர், மண் ஆகிய நம என்றதில் சேர்ந்து உருவாகி ஐந்தும் சேர்ந்த உடலாகி இருந்தபோது உன்னை நான் அறிந்து கொண்டேன். குரு தொட்டுக்காட்டி சொல்லித்தந்த குறையில்லாத ஞானம் என்னைத் தெளிய வைத்தது. அதை உண்மையாய் உறுதியுடன் கடைப்பிடித்து யோக ஞான சாதகங்களைச் செய்து வந்ததால் உரிய கால நேரத்தில் ஈசன் கருணையினால் பரப்பிரம்மமான சோதியில் கலந்து நானும் அதுவாக ஆனேன்.

240. **பிறப்பதும் இறப்பதும் பிறந்திடாது இருப்பதும்**
மறப்பதும் நினைப்பதும் மறைந்ததைத் தெளிந்தும்
துறப்பதும் தொடுப்பதும் சுகித்து வாரி உண்பதும்
பிறப்பதும் இறப்பதும் பிறந்த வீடு அடங்குமே.

மண்ணில் பிறப்பதும் பின் இறப்பதும் மீண்டும் பிறந்திடாது இறைநிலை அடைந்து இருப்பதும் ஈசன் செயல். தன்னை மறந்தும் நினைந்தும் இருந்ததும், என்னில் மறைந்திருந்த அவனை அறிந்து தெளிந்து யாவையும் துறந்து அவனையே எண்ணி தவம் புரிந்ததும் அதனால் மெய் ஆனந்தம் கிடைத்து அமிர்தம் வாரி உண்பதும் எல்லாம் பிறக்கவும் இறக்கவுமாக இருக்கும் பிறந்த வீடாக விளங்கும் உள்ளத்தில் உள்ள மெய்ப்பொருளில் அடங்கியுள்ளது.

241. **கண்ணிலே இருப்பனே கருங்கடல் கடைந்த மால்**
விண்ணிலே இருப்பனே மேவி அங்கு நிற்பனே
தன்னுளே இருப்பனே தராதலம் படைத்தவன்
என்னுளே இருப்பனே எங்குமாகி நிற்பனே.

மூன்றாவது அகக்கண்ணில்தான் கருமையான இருளை அகற்றி பாற்கடலை கடைந்த பெருமாள் பள்ளி கொண்டுள்ளான். விண்ணாக விளங்கும் மனத்தை மேவி அங்கு நிற்பான் கண்ணன். தனக்குள்ளே இருப்பான் இந்த தராதலம் படைத்த பிரம்மன். எனக்குள்ளேதான் இருக்கின்றான் எங்கும் எல்லாமாகி நிற்கும் பரம்பொருளான ஈசன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இப்படி நமக்குள்ளே இருக்கும் தெய்வசக்திகளை உணர்ந்து கொண்டு மூவரையும் மெய்ப்பொருளில் ஒன்றாக்கி தியானியுங்கள்.

242. ஆடு மாடு தேடினும் ஆனை சேனை தேடினும்
கோடி வாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரை போல் தர்மம் வந்து நிற்குமே.

ஆடு மாடுகள் என்றும் யானை சேனை சேவகர்கள் என்றும் கோடிக்கணக்கான செல்வங்களை தேடித் தேடி சேர்த்து வைத்தாலும் மரணம் நேரும் போது இவையாவும் குறுக்கே வந்து நின்று தடுக்க முடியுமோ? இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் நீங்கள் ஓடி ஓடிச் செய்த உதவிகளும் மனம் உவந்து செய்த அன்னதானம் போன்ற தர்மங்களும் ஆபத்து காலங்களில் சாட்டையால் சாடி விட்ட குதிரையைப் போல் விரைவாக வந்து தலை காத்து நிற்கும். தர்மம் தலைகாக்கும் என்பதை உணர்ந்து உங்கள் பிறவியை ஈடேற்ற தர்ம காரியங்களில் ஈடுபடுங்கள்.

243. எள் இரும்பு கம்பளி இடும் பருத்தி வெண்கலம்
அள்ளி உண்ட நாதனுக்கோர் ஆடைமாடை வஸ்திரம்
உள்ளிருக்கும் வேதியர்க்கு உற்ற தானம் ஈதிரால்
மெள்ள வந்து நோய் அனைத்தும் மீண்டிடும் சிவாயமே.

சாதுக்களுக்கும் சன்னியாசிகளுக்கும் அவர்கள் பசியாற்றி, தானியங்கள், தட்சணைகள், கம்பளிப் போர்வை, பருத்தி ஆடை வஸ்திரதானம், வெண்கலப் பாத்திரங்கள் போன்றவைகளை இருப்பதைத் தானமாக கொடுத்து உபசரித்து தர்மங்கள் செய்து வாழ வேண்டும். முதுமையினால் உடல் நலிந்து வீட்டுக்குள்ளிருக்கும் வேதமோதும் அந்தணர்களுக்குத் தேவையான உதவிகளைத் தேடிச் சென்று தானம் கொடுக்கவேண்டும்.

இப்படியாக தான தர்மங்கள் செய்பவர்களுக்கு வினையால் வந்த நோய்களும் வரும் நோய்களும் அனேக பாவங்களும் அவர்களை விட்டு மெல்ல விலகும். தான தர்மம் செய்வது ஈசனைச் சேர்ந்து பிறவிப் பிணியைப் போக்கும்.

244. ஊரிலுள்ள மனிதர்காள் ஒரு மனதாய்க் கூடியே
தேரிலே வடத்தை விட்டு செம்பை வைத்து இழுக்கிறீர்
ஆரினாலும் அறியொணாத ஆதி சித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் புரளி பாரும் பாருமே.

கோயில் தேர் திருவிழாக்களில் ஊரில் உள்ள மனிதர்கள் எல்லாம் ஒருமனதாய் ஒன்றாகக் கூடி தேரில் வடக்கயிறைக்கட்டி செம்பினால் ஆன சிலைகளை வைத்து இழுக்கிறார்கள். யாரினாலும் அறிய முடியாத ஆதிசித்த நாதனான ஈசனை, தனக்குள் தேகமே தேராகவும் வாசியே கயிறாகவும், உயிரில் சோதியாகவும் இறைவன் இருப்பதை உணராத பேதை மனிதர்கள், பண்ணுகின்ற புரளியைப் பாருங்கள். அதன் உட்கருத்தை உண்மையாய் உனக்குள் கடந்து அதற்கப்பால் சித்தத்தில் ஆதியாக விளங்கும் சோதியில் கலந்து தியானம் செய்யுங்கள்.

245. மருள் புகுந்த சிந்தையால் மயங்குகின்ற மாந்தரே
குருக் கொடுத்த மந்திரம் கொண்டு நீந்த வல்லிரேல்
குருக் கொடுத்த தொண்டரும் குகனொடிந்த பிள்ளையும்
பருத்தி பட்ட பன்னிரண்டு பாடுதான் படுவரே.

அருள் இருந்த சிந்தையில் மருள் புகுந்து மாயையில் சிக்கி மயங்குகின்ற மாந்தர்களே தேடுங்கள், தெளிந்தறியுங்கள். சிந்தையில் சிவம் இருப்பதை உணருங்கள். குருவானவர் தொட்டுக் காட்டி உபதேசித்த ஓம் நமசிவய என்ற மந்திரத்தைக் கொண்டு யோக ஞான சாதனைகள் செய்து தியானம் செய்யுங்கள். பருத்தி, ஆடை ஆவதற்கு முன் பஞ்சானது பனிரெண்டு பாடுபட்டே உடையாக மாறுகிறது. அதுபோல் குருவிடம் சீடர் பன்னிரண்டு ஆண்டுகள் பாடுபட்டு மெய்நிலை அடைந்து என்றும் மாறா இளமையுடன் இருக்கும் ஈசனின் பிள்ளை முருகனைப் போல் நீங்களும் ஆகுங்கள். உங்களுக்குள்ளே குகையில் வீற்றிருக்கும் மெய்ப்பொருளை உணர்ந்து தவம் செய்யுங்கள்.

246. அன்னை கர்ப்ப அறை அதற்குள் அங்கியின் பிரகாசமாய்
அந்தறைக்குள் வந்து இருந்து அரிய விந்து ரூபமாய்
தன்னை ஒத்து நின்ற போது தடையறுத்து வெளியதாய்
தங்கநற் பெருமை தந்து தலைவனாய் வளர்ந்ததே.

தாயின் கர்ப்ப அறையினுள் தீயின் பிரகாசத்துடன் வந்த விந்து அங்கிருந்த நாதத்துடன் சேர்ந்து உருவாகி உடம்பாக வளர்கின்றது. அது பூரணமாக வளர்ச்சியைப் பெற்றுத் தன்னைப் போல் கை, கால், தலை மெய்யாவும் ஒத்து தடையாவையும் அறுத்து வெளிவருகின்றது. பின் அதுவே இப்பூமியில் தங்கி வளர்ந்து பல பெருமைகளையும் பெற்று தலைவனாகவும் வாழ்கின்றது. எல்லாம் விந்து உதித்த போதே வந்துதித்த சோதியில் தான் என்பதை அறியுங்கள். தாயின் வயிற்றில சிசு உருவான போதே எல்லாம் வறையறுக்கப் பட்டுவிடுகின்றது என்பதை உணர்ந்து சிந்தித்து இறவா நிலையடைய முயலுங்கள்.

247. உன்னையற்ப நேரமும் மறந்திருக்கலாகுமோ
உள்ளமீது உறைந்தெனை மறைப்பிலாத சோதியை
பொன்னை வென்ற பேரொளிப் பொருவிலாத ஈசனே
பொன்னடிப் பிறப்பிலாமை என்று நல்க வேணுமே.

இறைவா ! உன்னை ஒரு நொடி நேரம் கூட என்னால் மறந்து இருக்க முடியாது. உள்ளம் எனும் கோயிலிலே உறைந்து மறைப்பில்லாமல் வெட்டவெளியான சோதியாக என்னுள் விளங்கும் ஈசனே ! பொன்னையும் மிஞ்சி சொக்கத் தங்கமான பேரொளியாக பொருந்தி விளங்கும் ஈசனே ! உன் பொன்னார் திருவடி என் தலைமேல் வைத்து பிறவா நிலை நான் பெற அருள்புரிய வேண்டும்.

248. பிடித்ததெண்டும் உம்மதோ பிரமமான பித்தர்காள்
தடித்த கோலம் அத்தைவிட்டு சாதி பேதங் கொண்மினோ
வடித்திருந்ததோர் சிவத்தை வாய்மை கூற வல்லிரேல்
திடுக்கமுற்ற ஈசனைச் சென்று கூடலாகுமே.

உங்களுக்குப் பிடித்தமானவைகள் எல்லாம் என்றும் உமக்கு உரியதோ ! பிரமமே அனைவரிடமும் தடித்த கோலமாக இருப்பதை அறியாமல் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற சாதி பேதங்கள் கொள்ளாதீர்கள்.

உங்களுக்குள்ளேயே ஓர் எழுத்தாக வடிவம் கொண்டிருக்கும் மெய்ப்பொருளாகிய சிவத்தின் உண்மைகள் யாவையும் உணர்ந்து தெளிந்து ஓம் நமசிவய என ஓதி தியானம் செய்ய வல்லவர்களானால் முற்றும் அறிந்து தன்னை உணர்ந்து நினைவால் நினைந்து ஈசனிடம் சென்று கூடலாம்.

249. **சத்தி நீ தயவும் நீ தயங்கு சங்கின் ஓசை நீ**
சித்தி நீ சிவனும் நீ சிவாயமாம் எழுத்து நீ
முத்தி நீ முதலும் நீ மூவரான தேவர் நீ
அத்தி பூரம் உம்முளே அறிந்துணர்ந்து கொள்ளுமே.

சக்தியான வாலை நீ, தயவாகிய கருணை நீ, விஷ்ணுவின் சங்கின் ஓசை நீ, சித்தியாகிய வெற்றி நீ, சீவனில் ஆடும் சிவனும் நீ, சிவாயநம எனும் அஞ்செழுத்தும் நீ, முத்தி தருபவன் நீ, என்னுயிரில் முதலாக விளங்கும் ஆதி நீ, பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் நீ, அத்தீயாக பூரணமாய் என்னுள் இருக்கும் சோதியான ஈசனே ! நீ எனக்குள் சிவமாக மெய்ப்பொருளாக இருப்பதை அறிந்து உணர்ந்து கொண்டேன்.

250. **சட்டையிட்டு மணிதுலங்கும் சாத்திரச் சழக்கரே**
பொஸ்தகத்தை மெத்தவைத்து போதமோதும் பொய்யரே
நிட்டை ஏது ஞானமேது நீறிருந்த அட்சரம்
பட்டை ஏது சொல்லிரே பாதகக் படரே.

பட்டுச் சட்டை பளப்பளக்க அணிந்து கொண்டு கழுத்தில் பொன்மணி மாலைகள் மின்ன வலம் வந்து வாய்ஞானம் பேசும் சாத்திரச்சழக்கரே ! புத்தகங்கள் யாவையும் மொத்தமாக நிரம்பப் படித்து அதனால் அறியும் அறிவால் ஞான போதனை செய்யும் மெய்யை அறியா பொய்யர்களே ! நிட்டை என்பது எது ? ஞானம் என்பது எது ? திருநீராக தெய்வம் இருந்த அட்சரம் எது ? பட்டை போடுவது எதற்காக என்பதை எல்லாம் சொல்லத் தெரியாது பாதகங்களை செய்து உலகில் கபட வேடம் போட்டு திரியாதீர். உண்மையை நீங்களும் உணர்ந்து உலகிற்கும் போதனை செய்யுங்கள்.

251. உண்மையான சுக்கிலம் உபாயமாய் இருந்ததும்
வெண்மையாகி நீரிலே விரைந்து நீரதானதும்
தன்மையான காயமே தரித்து உருவம் ஆனதும்
தென்மையான ஞானிகாள் தெளிந்துரைக்க வேணுமே.

உண்மையான விந்துவே சுக்கிலமாகி உயிர் உருவாக உபாயமாய் இருந்ததையும், அது வெண்மை நிறமாகி செம்மை நிறமாக நாதமான சுரோணிதத்தில் விரைந்து கலந்து நீராகி நின்று உடம்பு உருவானதையும் இருவினைக்கு ஒப்ப உடம்பும் உயிரும் தன்மையாகி உருவம் தரித்து உலகில் பிறந்து வாழ்வதையும் அனைத்தையும் அறிந்துணர்ந்த தெளிந்த ஞானம் பெற்ற குருமார்கள் தெளிவாக சீடருக்குச் சொல்லித்தர வேண்டும்.

252. வஞ்சகப் பிறவியை மனத்துளே விரும்பியே
அஞ்செழுத்தின் உண்மையை அறிவிலாத மாந்தர்கள்
வஞ்சகப் பிறவியை வதைத்திடவும் வல்லிரேல்
அஞ்செழுத்தின் உண்மையை அறிந்து கொள்ளலாகுமே.

வஞ்சகத்தை நெஞ்சில் வைத்து இம்மானிடப்பிறவியின் மேல் ஆசை கொண்டு அல்லல்பட்டு அலையும் மனிதர்களே ! அஞ்செழுத்தால் ஆன இப்பிறவியையும் இதன் அருமையையும், உண்மையையும் அறியாமல் இருக்கின்றீர்கள். இனிப் பிறவா நிலையடைய இவ்வஞ்சகப் பிறவியை யோக ஞான சாதகத்தால் வதைத்து ஆசைகளை வேரறுத்து அன்பினால் உள்ளம் உருகி தியானம் செய்ய வல்லவரானால் அந்த அஞ்செழுத்தே உங்களிடம் சிவமாக இருக்கும் உண்மையை அறிந்து கொள்ளலாம்.

253. காயிலாத சோலையில் கனியுகந்த வண்டுகள்
ஈயிலாத தேனையுண்டு இராப்பகல் உறங்குறீர்
பாயிலாத கப்பலேறி அக்கரைப் படுமுனே
வாயினால் உரைப்பதாகுமோ மவுன ஞானமே.

காயே இல்லாமல் கனிகள் நிறைந்த மாஞ்சோலையில் கனிக்குள் புகுந்த வண்டுகள், அதன் சுவையை உண்டு இரவு பகல் எந்நேரமும் அதிலேயே இருந்து அழிந்துவிடுவதைப் போல் உலக இன்பங்களில் வீழ்ந்து உறங்கி உழலும் மனிதர்களே! உங்களுக்குள் காயிலாத கனிகள் நிறைந்த கற்பகதருவை அறவீர்களா ?

இராப்பகல் இல்லாத இடத்தைத் தனக்குள் அறிந்துணர்ந்த ஞானிகள் கனியைச் சுற்றும் வண்டுகள்போல் தங்கள் நினைவாலேயே ஞான யோகத்தால் சுற்றிச் சுற்றி தமது சகஸ்ரதளத்தில் ஈயில்லா தேனாக இருக்கும் அமுதத்தை உண்டு பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பர். பாய்மரம் இல்லாத கப்பலான உடலில் உள்ள உயிரை அறிந்து இப்பிறவிக் கடல் கடக்க வாசியினால் சிவபோகம் செய்து அமுதம் உண்டு அப்பாலுக்கப்பாலாய் இருக்கும் ஈசனை சேருங்கள். இதுவே மோன ஞான இன்பம். இதனை வாயினாலோ எழுத்தினாலோ விவரித்து சொல்லவே முடியாது. அதைச் சொல்லவும் கூடாது.அவரவர் மெய்ப்பாட்டால் அடையும் சுகமே மவுன ஞானம்.

254. **பேய்கள் பேய்கள் என்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள்**
பேய்கள் பூசை கொள்ளுமோ பிடாரி பூசை கொள்ளுதோ
ஆதி பூசை கொள்ளுமோ அனாதி பூசை கொள்ளுதோ
காயமான பேயலோ கணக்கறிந்து கொண்டதே.

பேய்கள் பிசாசுகள் என்று பொய்களைப் பிதற்றி அதற்கென பூசைகள் போடும் பேய் குணம் கொண்டோர்களே! பேய்கள் பூசைகளை ஏற்றக் கொள்ளுமோ? பிடாரி பூசையை ஏற்றுக் கொள்கிறதா? ஆதிசக்தி பூசையை ஏற்றுக் கொள்ளுமோ? அனாதியான ஈசன் பூசையை ஏற்றுக் கொள்கிறதா? உடலெடுத்து உலாவும் பேராசைப் பேய்களான மனிதனே பூசை செய்து அதனால் பணமும் பொருளும் பறித்து ஏமாற்றி வாழ்ந்து சாகிறார்கள் என்று உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

255. **மூல மண்டலத்திலே முச்சதுரம் ஆதியாய்**
நாலு வாசல் எம்பிரான் நடு உதித்த மந்திரம்
கோலி எட்டிதழுமாய் குளிர்ந்தலர்ந்த தீட்டமாய்
மேலும் வேறு காண்கிலேன் விளைந்ததே சிவாயமே.

நம் உடலில் மூலமண்டலமான உயிரில் மூச்சானது முக்கோண வட்டச் சக்கரத்தில் சதுர்முகமாக ஆதியாக வாலையாய் அமைந்து இயங்குகிறது. நான்கு வாசல் எனும் வித்து. புழுக்கம், முட்டை, கர்ப்பம் ஆகிய வகைகளிலும் வரும் உயிர்கள் அனைத்திலும் எம்பிரான் ஆன ஈசன் நடுவில் அமர்ந்து ஓரெழுத்து மந்திரமாய் உள்ளான். அதுவே வளர்ந்து எண்சான் உடம்பாகவும்

இரண்டான உயிராகவும் குளிர்ந்தலர்ந்த தீட்டாக உள்ள காவியில் கலந்து சோதியான சிவமாய் உறைந்து நிற்கின்றது. இதைத் தவிர வேறு இறைவனைக் காண்கிலேன். இதுவே அனைத்துமாய் விளைந்து இப்பூமியெங்கும் சிவமயமாய் இருக்கின்றது.

256. **ஆதி கூடு நாடி ஓடி காலை மாலை நீரிலே**
சோதி மூலமான நாடி சொல்லிறந்த தூவெளி
ஆதி கூடி நெறியறிந்த அகாரமாதி ஆகமம்
பேத பேதம் ஆகியே பிறந்துடல் இறந்ததே.

ஆதியானதே நம் உடல் உயிரில் தச நாடிகளாகவும் தச வாயுக்களாகவும் ஓடி இரவு பகலாக இயங்கி நீராக நிற்கின்றது. சோதியான ஈசன் மூலமான சுழுமுனை நாடியில் சொல்லிறந்த மவுனமாக சுத்த வெளியான ஆகாயத்தில் உறைகின்றான். ஆதியான ஓரெழுத்தே கூடி அகாரம் என்ற முதல் எழுத்தாகி வேதம் ஆகமம் ஆகிய அனைத்தும் பல நெறிகளும் தோன்றியது. பரம்பொருளாகிய சிவசக்தியின் திருவிளையாடல்களாலேயே பல்வேறு பேதங்களுடன் கூடிய உயிர்கள் யாவும் தோன்றி பிறந்து வளர்ந்து பின் உடம்பு இறக்கின்றது. ஆதலால் மீண்டும் பிறவாதிருந்திடவும் உடலைவிட்டு உயிர் பிரியாதிருந்து இறைவனைச் சேர்ந்திடவும், தியானம் செய்யுங்கள்.

257. **பாங்கினோடு இருந்து கொண்டு பரமன்அஞ்செழுத்துளே**
ஓங்கி நாடி மேல் இருந்து உச்சரித்த மந்திரம்
மூங்கில் வெட்டி நார் உரித்து முச்சில் செய் விதத்தினில்
ஆய்ந்த நூலில் தோன்றுமே அறிந்துணர்ந்து கொள்ளுமே.

ஈசன் பஞ்சாட்சரத்தினுள்ளே பாங்காக இருந்து கொண்டிருக்கின்றான். ஓங்காரத்தினுள்ளும் ஈசனை உணர்ந்து சுழுமுனையின் மேலிருந்து அவனை அடைய நாடி ஓம் நமசிவய என்ற அஞ்செழுத்து மந்திரத்தை ஓதி தியானியுங்கள். ஒரே வகையான மூங்கில் மரங்களை வெட்டி எடுத்து வந்து அதிலிருந்தே நார் உரித்து முறம், கூடை, தட்டு போன்றவைகள் செய்யப்படுவதைப் போலவே ஒரே பிரமத்திலிருந்தே அனைத்து உயிர் உடல்களும் அமைந்துள்ளதை உணருங்கள். இதனை தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருக்குறள், திருப்புகழ், திருஅருட்பா போன்ற சிறந்த நூல்களிலும், சித்தர்கள் ஆராய்ந்து அனுபவித்துரைத்த நூல்களிலும் சொல்லியபடி அறிவை அறிந்து உணர்ந்து கொண்டு பின்பற்றுங்கள்.

258. புண்டரீக மத்தியில் உதித்தெழுந்த சோதியை
மண்டலங்கள் மூன்றினோடு மண்ணுகின்ற மாயனை
அண்டரண்டம் ஊடறுத்து அறிந்துணர வல்லிரேல்
கண்ட கோயில் தெய்வம் என்று கையெடுப்பது இல்லையே.

புண்டரீகம் – இதயத்தாமரை.

இருதய தாமரையாக விளங்கும் ஆன்மாவின் நடுவில் உதித்து எழுந்து நிற்கும் சோதியே ஈசன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவன் சந்திர, சூரிய, அக்னி என்ற மூன்று மண்டலங்களிலும் பின்னிப் பிணைந்து மாயையால் மறைந்து நின்று கொண்டிருக்கிறான். அண்டத்தில் உள்ளவை யாவும் தன் பிண்டத்திலும் உள்ளதை உணர்ந்து அச்சோதியைச் சார்ந்து மெய்ப்பாடுடன் தியான தவம் செய்பவர்கள் கண்ட அதே கோயில் என்பதையும் உள்ளே நடுவாக இருக்கும் சோதியே தெய்வம் என்பதையும் தெள்ளத் தெளிவாக தெரிந்து கொண்டு பிறவற்றை கையெடுத்து வணங்கமாட்டார்கள்.

259. அம்பலங்கள் சந்தியில் ஆடுகின்ற வம்பனே
அன்பனுக்கு அன்பனாய் நிற்பன் ஆதி வீரனே
அன்பருக்குள் அன்பராய் நின்ற ஆதி நாயனே
உன்பருக்கு உண்மையாய் நின்ற உண்மை உண்மையே.

திருச்சிற்றம்பலத்திலும் பொன்னம்பலத்திலும் எப்போதும் எனக்குள் ஆடிக்கொண்டிருக்கும் நடராஜன் நீயே. உன்னை அன்பால் நினைக்கும் அன்பனுக்குள் ஆன்மாவில் அன்பனாய் நிற்கும் ஆதியும் நீ வீரனும் நீ, அன்பர்கள் எனும் அடியார்கள் யாவரினும் அன்பே சிவமாய் நின்ற மெய் பொருளான நாயகன் நீ. உன் மெய் பக்தர்களுக்கு நீ உண்மையாக காட்சி தந்து ஆட்கொண்டது யாவும் உண்மையே. அந்த உண்மையே உண்மை என்பதை உணர்ந்து தியானியுங்கள்.

260. அண்ணலாவது ஏதடா அறிந்துரைத்த மந்திரம்
தண்ணலாக வந்தவன் சகல புராணம் கற்றவன்
கண்ணனாக வந்தவன் காரணத் துதித்தவன்
ஒண்ணதாவது ஏதடா உண்மையான மந்திரம்

அண்ணலாக வருவது குருவே. அவர் அறிந்து உபதேசித்த மந்திரம் மெய்ப்பொருள் ஆகிய பஞ்சாட்சரம்.

அதுவே தானாக தனலாக வந்தது. ஆகவே சகல புராணங்களையும் தத்துவங்களையும் உள்ளடக்கி கற்றது அதுவே. கண்ணனாக வந்தது அதுவே. யாவிற்கும் கராணமாய் உதித்தது. யாவருக்கும் ஓரெழுத்தாகி ஒன்றாக உள்ளது எதுவோ அதுவே உண்மையான மந்திரம் என்பதை அறிந்து அது ஊமை எழுத்தாக இருப்பதை உணர்ந்து அந்த ஒன்றையே பற்றித் தியானியுங்கள்.

261. உள்ளதோ புறம்பதோ உயிர் ஒடுங்கி நின்றிடம்
மெல்ல வந்து கிட்டி நீர் வினவ வேணும் என்கிறீர்
உள்ளதும் புறம்பதும் ஒத்த போது நாதமும்
கள்ள வாசலைத் திறந்து காண வேணும் அப்பனே.

உயிர் ஒடுங்கி நிற்கும் இடம் உடம்பின் உள்ளே உள்ளதா அல்லது உடம்பின் வெளியே உள்ளதா என்பதை மெல்ல என் அருகில் வந்து சொல்ல வேண்டும் என்கிறீர்கள். உள்ளே தீயாகவும் வெளியே நீராகவும் உள்ளது ஒத்து ஒன்றாகி உடம்பாகியது. அவ்வுடம்பில் உயிரை அறிந்து ஒன்றிணைத்து ஒரே நினைவுடன் ஞானயோகத்தால் தியானிக்கும் போது நாத ஒலி கேட்கும். அவ்வொலியை ஒளியாக விளங்கும் மெய்ப்பொருளில் இணைக்க கள்ளவாசல் எனும் பத்தாம் வாசல் திறந்து காண சோதியான ஈசன் உயிரில் ஒடுங்கி இருப்பதை அறியலாம். இதனை அறிந்து உணர்ந்து மெய்ப்பாடுபட்டுக் காணவேண்டும் அப்பனே.

262. ஆரலைந்து பூதமாய் அளவிடாத யோனியும்
பாரமான தேவரும் பழுதிலாத பாசமும்
ஓரொணாத அண்டமும் உலோகலோக லோகமும்
சேர வெந்து போயிருந்த தேகம் ஏது செப்புமே.

உயிரானது பல பிறவிகள் எடுத்து அலைந்து பஞ்சபூதங்களால் எண்ணற்ற யோனிகளில் பிறந்து இச்சுமையான உடம்பையும் பழுதிலாத மனதில் ஆசா பாசங்களையும் கொண்டு உழல்கின்றது. இவ்வுடம்பில் ஒட்டியுள்ள அண்டமாகவும் அனேகவித உலோகங்களையும் சேர வெந்து வேதியல் மாற்றத்தால் பஸ்பமாகச் செய்யும் மருந்தாகவும் சூட்சுமமாக உள்ள தேகம் எது என்பதைச் சொல்லுங்கள். நம் உடலுக்குள்ளேயே மணிமந்திர மருந்தாக உள்ள மெய்ப்பொருளை அறிந்து கொண்டு தியானம் செய்யுங்கள்.

263. என்னகத்துள் என்னை நான் எங்கு நாடி ஓடினேன்
என்னகத்துள் என்னை நான் அறிந்திலாத தாகையால்
என்னகத்துள் என்னை நான் அறிந்துமே தெரிந்தபின்
என்னகத்துள் என்னை அன்றி யாதுமொன்றும் இல்லையே.

என் அகத்தில் நான் ஆக இருந்த என்னை நான் அறியாத காரணத்தால் என் மனதிலேயே நான் என்றாகி நின்ற ஈசனை எங்கெங்கோ சென்று நாடி ஓடி தேடினேன். என் அகத்திலேயே நானாக இருக்கும் என் உயிரையும் என் உயிருக்குள் உறைந்த சோதியான ஈசனையும் நான் முழுமையாக அறிந்து உணர்ந்து தெரிந்து கொண்டதற்குப் பின் என்னுள்ளே நானாக நின்ற என் உயிரில் சிவமாகிய மெய்ப்பொருளே அனைத்துமாய் இருப்பதை அன்றி வேறு யாதுமொன்றும் இல்லை என்பதைத் தெளிவாக அனுபவத்தால் அறிந்து கொண்டேன்.

264. விண்ணினின்று மின்னெழுந்து மின்னொடுங்குமாறு போல்
என்னுள் நின்று எண்ணும் ஈசன் என்னகத்து இருக்கையால்
கண்ணினின்று கண்ணில் தோன்றும் கண்ணறி விலாமையால்
என்னுள் நின்ற என்னையும் யானறிந்து இல்லையே.

விண்ணில் நின்றெழும் மின்னலானது அந்த மின்னலிலேயே ஒடுங்குகின்றவாறு போல எனக்குள் ஆகயமான நினைவில் நின்று நினைக்கும் ஈசன் நானாக என் அகத்தில் இருக்கின்றான். கண்ணில் நின்று கண்ணில் தோன்றும் என் ஈசனை கண்ணைப் பற்றிய அறிவை அறியாத தன்மையினால் என்னுள் நின்று ஆட்டுவிக்கும் ஈசனை யான் அறிந்துகொள்ளாமல் இருக்கின்றேன். உன்னுள் நின்ற நான் ஆகிய என்னை அறிந்து உணர்ந்து தியானியுங்கள். நான் என்பது என்ன என்பதை ஆராய்ந்தறிந்து கொள்ளுங்கள்.

265. அடக்கிலும் அடக்கொணாத அம்பலத்தின் ஊடுபோய்
அடக்கினும் அடக்கொணாத அன்புருக்கும் ஒன்றுலே
கிடக்கினும் இருக்கினும் கிலேசம் வந்து இருக்கினும்
நடக்கிலும் இடைவிடாத நாத சங்கொலிக்குமே.

எவ்வளவு அடக்கினாலும் அடக்க முடியாத மூச்சக்காற்றை வாசியினால் சிற்றம்பலமாகிய உள்ளத்தின் உள்ளே செலுத்தி அதிலேயே நிறுத்தி அடக்க அடங்காத மனதை அன்பினால் உருக்கி அன்பே சிவம் ஆக இருக்கும் ஒன்றான மெய்ப்பொருளையே நின்றும் இருந்தும் கிடந்தும் நினைந்து தியானம் செய்யுங்கள். மனம் உதிக்கும் இடத்திலேயே மனமானது ஒடுங்கும். அறிவு பிரகாசிக்கும். அவ்வமயம் காமம், குரோதம், லோபம் ஆகிய கிலேசங்கள் நீங்கும். இந்த ஞான யோகத்தைத் தொடர்ந்து அப்பியாசம் செய்யும் சாதகர்களுக்கு தியானத்தில் அமர்ந்திருந்தாலும் நடந்து கொண்டிருந்தாலும் அவர்கள் உள்ளே வாசி லயமாகி இடைவிடாத நாதம் சங்கோசையாக ஒலித்துக் கொண்டே இருக்கும்.

266. மட்டுலாவு தண்துழாய் அலங்கலாய் புனல்கழல்
விட்டு வீழில் தாக போக விண்ணில் நண்ணில் வெளியிலும்
எட்டினோடு இரண்டினும் இதத்தினால் மனந்தனைக்
கட்டி வீடிலாது வைத்த காதலின்பம் ஆகுமே.

துளசி மாலையில் மணம் விலகாது வீசுவதைப் போல் எப்போதும் என் மனம் நீராக உள்ள இறைவனின் திருவடிகளை விட்டு விலகாது உள்ளது. ஆகாயமே எனக்குள் மனமாகி வெளியாகத் திகழ்கின்றது. எட்டு இரண்டு எனும் அகார உகார அட்சரத்தால் இதமாக இருத்தி ஞான யோகத்தால் தியானித்தால் மனம் மெய்ப்பொருளாகிய ஈசன் இருப்பிடத்தை அடைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து ஆனந்தமாகிய பேரின்பம் அடையும். ஞான யோகத்தால் மனத்தினை கட்டி அறிவாகிய வீட்டை அடைந்து ஈசனை காதலாகி கசிந்து கண்ணீர் மல்க தியானித்து ஆனந்தம் பெறுங்கள்.

267. ஏகமுத்தி மூன்று முத்தி நாலு முத்தி நன்மைசேர்
போகமுற்றி புண்ணியத்தில் முத்தி அன்றி முத்தியாய்
நாகமுற்ற சயனமாய் நலங் கடல் கடந்த நீ
யாகமுற்றி ஆகி நின்ற தென்கொலாதி தேவனே.

ஏகமாகிய பரம்பொருளை சேர்ந்து முத்தி பெற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களாலும் நன்மைகள் சேர்க்கவேண்டும். வாசியோகத்தினால் உடலையும் உயிரையும் ஒன்றாக்கி சிவனாகிய அறிவையும் உணர்வாகிய சக்தியையும், மனமாகிய நினைவினால் ஒரே இடத்தில் இணைத்து இருத்தி தியானிப்பதுவே சிவபோகம். இதுவே புண்ணியத்தைச் சேர்த்து மூன்று தீயும் ஒன்றாகி சோதியாகி சிவத்தை அடைந்து முத்தியைத் தருமே அன்றி வேறு வழிகளில் முக்தி கிடைக்காது. மூலாதாரத்தில் பாம்பைப் போல் சுருண்டு உறங்கும் குண்டலினி சக்தியைக் கனலாகிய தீயால் எழுப்பி மேலேற்றி திருப்பாற்கடலில் ஆதிசேஷன் என்ற நாகத்தின் மீது பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவை அறிந்து உணர்ந்து அப்பாலாய் உள்ள சிவமாகிய சோதியில் ஒடுங்கி தியானிக்க வேண்டும். இதனை அறிவதற்கே யாகங்களில் தீயை வளர்த்து அனைத்தையும் அவ்வேள்வியில் சேர்த்து ஆதியாகவும் சோதியாகவும் உள்ள ஈசனிடம் ஒப்படைத்துச் செய்கிறார்கள். இப்படி தீயாக என்னுள் விளங்கும் அதிசயம்தான் என்ன ஆதிதேவனே.

268. மூன்று முப்பது ஆறினோடு மூன்று மூன்று மாயமாய்
மூன்று முத்தி ஆகிமூன்று மூன்று மூன்று மூன்றுமாய்
தோன்று சோதி மூன்றதாய் துலக்கமில் விளக்கதாய்
என்ற ஆவின் உள் புகுந்த தென்கொலோ எம் ஈசனே.

மூன்று முப்பது ஆறு	–	தொண்ணூற்றி ஆறு தத்துவங்கள்
மூன்று	–	ஆணவம், கன்மம், மாயை
மூன்று	–	மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை.
மூன்று	–	சந்திர மண்டலம், சூரிய மண்டலம் சுழுமுனை.
மூன்றதாய்	–	ஆண், பெண், அலி.

உடம்பில் உள்ள தொண்ணூற்று ஆறு தத்துவங்களில் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும், மண், பெண், பொன் என்ற மூவாசைகளும் மாயமாய் அமைந்திருக்கிறது. அதில் மூன்று தீயாக சந்திர மண்டலம், சூரிய மண்டலம், சுழுமுனை என்ற நாடிகளில் ஓடும் மூச்சாகி நடந்து வருகிறது. அவ்வுடம்பில் ராஜஸம், தாமஸம், சாத்வீகம் என்ற மூன்று குணங்களும், வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்று பிணிகளும் , லோக ஏடனை, தார ஏடனை, புத்திர ஏடனை என்ற மூன்று ஏடனைகளும் சேர்ந்து ஆண், பெண், அலி என்ற மூன்று சாதியாகி அதில் உள்ள ஆன்மாவில் சோதி விளக்காக ஈசன் இருக்கின்றான். இப்படி என்றன் உயிரின் உள்புகுந்து அஞ்செழுத்தாக வந்த அதிசயம் எவ்வாறு என் ஈசனே.

269. **ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய் அல்லவத்துள் ஆயுமாய்**
ஐந்து மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய் அமைந்தனைத்தும் நின்றநீ
ஐந்தும் ஐந்தும் ஆய நின்னை யாவர் காண வல்லரே.

ஐந்தெழுத்தாகவும் பஞ்ச பூதங்களாகவும் ஐம்புலன்களாகவும் இம்மானுட தேகத்தில் அகாரத்துள் அமைந்த மெய்ப்பொருள் வஸ்துவாய் பஞ்சாட்சரமும் ஓங்காரமும் ஒன்றான ஓரெழுத்தாகி நின்ற ஆதி தேவனே ! அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற பஞ்ச கோசங்களாகவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற பஞ்ச தன் மாத்திரைகளாகவும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற பஞ்ச அவத்தைகளாகவும் அமைந்து அனைத்துமாய் நின்றவனும் நீயே. சிவயநம என்ற பஞ்சாட்சரப் பொருளாகவும் ஐந்து வண்ணங்கள் கொண்ட திருவடியாகவும் நின்ற உன்னை யார் அறிந்து உணர்ந்து நினைந்து காணவல்லவர்.

270. ஆறும் ஆறும் ஆறுமாய் ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
ஏறு சீர் இரண்டு மூன்றும் ஏழும் ஆறும் எட்டுமாய்
வேறு வேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஊறும் ஓசையாய் அமர்ந்த மாயமாயம் மாயனே.

ஆறு ஆறு ஆறும்	-	18
ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்தும்	-	16
ஏறு சீர் இரண்டு	-	32 - 64
		இடகலை
		பிங்கலை
		சுழுமுனை
ஏழும்	-	ஏழு திரைகள்
ஆறும்	-	ஆறு ஆதாரங்கள்
எட்டு	-	ஆகாயம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பதினெட்டு படிகளை கொண்ட நிலைகளை அடைய பதினாறு மாத்திரை அளவு பூரகத்தால் மூச்சுக்காற்றை மேலேற்றி அறுபத்தி நான்கு மாத்திரை அளவு கும்பகத்தில் அடக்கி பின் முப்பத்திரண்டு மாத்திரை அளவில் லேசாக ரேசகம் செய்ய வேண்டும். இதுவே பிராணாயாமம். இதனை இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளையும் அறிந்து செய்துவரவேண்டும். இதனால் புருவ மத்தியில் உள்ள ஏழு திரைகளும் விலகி உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களும் பரிசுத்தமாகி எட்டாகிய வெட்டவெளியாக இருக்கும் சோதியில் உடலும் உயிரும் மனமும் ஒன்று சேர்ந்து ஆனந்தம் கிடைக்கும். இதுவே வேறு வேறு வகைகளில் ஞானமாகி பொய்யான உடம்பில் மெய்யான ஆன்மாவும் அதனுள் இறைவனும் இருப்பதை அறிந்துஇந்த மெய்யான பிராணாயாமம் செய்யுங்கள். அதனால் வாசி ஊறும் நாத ஓசையாகி மாயனாகிய கண்ணன் கை புல்லாங்குழல் இசையோடு இலயமாகி இறையோடு சேரும்.

271. எட்டும் எட்டும் எட்டுமாய் ஓர் ஏழும் ஏழும் ஏழுமாய்
எட்டும் ஒன்றும் மூன்றுமாகி நின்ற ஆதி தேவனே
எட்டுமாய் பாதமோடு இறைஞ்சி நின்ற வண்ணமே
எட்டெழுத்தும் ஓதுவார்கள் அல்லல் நீங்கி நிற்பரே.

எட்டாகிய எண்சாண் உடம்பில் எட்டாகிய அகரமான அறிவாகவும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்சர்யம், இடம்பம், அகங்காரம் எனும் எட்டு ராகங்களாகவும் எண் குணங்களாகி ஒன்றான ஏழாம் நிலையான சகஸ்ராரத்தில் ஏழு திரைகளாகவும், இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம் என்ற ஏழு தாதுக்களாகவும் , சரிகமபதநீ எனும் ஏழிசை ஸ்வரங்களாகவும், எட்டும் ஒன்றும் ஒன்பதான மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், வெப்பமான அனல் நட்சத்திரம் ஆகிய ப்ர+நவம் அகாரம் உகாரம் மகாரம் என்ற மூன்றாகிய ஓங்காரமாகி ஆதியாக நின்ற தேவனே ஈசன். அவனை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி எனும் அட்டாங்க யோகத்தினால் அகரமாகிய திருப்பாதத்தினைப் பற்றி கண்ணீர் மல்கி கரைந்துருகி நினைந்த வண்ணம் எட்டெழுத்தான அ,உ,ம் சிவயநம என்ற அட்சரத்தால் நிலைநிறுத்தி ஓதி தியானிப்பவர்கள் துன்பங்கள் யாவும் நீங்கி இறையருள் பெற்று இன்புடன் வாழ்வார்கள்.

272. பத்தினோடு பத்துமாய் ஓர் ஏழினோடும் ஒன்பதாய்
பத்து நாற்திசைக்கு நின்ற நாடு பெற்ற நன்மையாய்
பத்துமாய் கொத்தமோடும் அத்தலம்மிக் காதி மால்
பத்தர்கட்கலாது முத்தி முத்தி முத்தியாகுமே.

இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குகு எனும் பத்து நாடிகளாகவும், 1. பிராணன், 2. அபாணன், 3. வியானன், 4. உதானன், 5. சமானன், 6. நாகன், 7. கூர்மன், 8. கிருகரன், 9. தேவதத்தன், 10. தனஞ்செயன் என்ற தச வாயுக்களாகவும் ஓர் ஏழினோடும் எட்டாகிய உடம்பில் ஒன்பது வாசல்கள் வழியாக இயங்கி நடந்து வருகின்றது. இதில் நாற்பத்து முக்கோணமாய் விளங்கும் ஞானமாகிய வீட்டில் நிலைநிறுத்தி தியானிப்பதின் நன்மையால் எட்டிரண்டும் பத்தாகிய யகாரமான ஆகாயத்தில் ஆதி அந்தமாகவும் சிவனாகவும் திருமாலாகவும் உள்ள பரம்பொருள் அதுவென அறிந்துணர்ந்து சேர்வார்கள். இது யோக ஞஸனத்தை விரும்பிப் பயிலும் பக்தர்களுக்கு முத்தீயும் ஒன்றான சோதியாகிய ஈசனை சேர்ந்து முத்தி வாய்க்கும்.

273. வாசியாகி நேசம் ஒன்றி வந்தெதிர்ந்த தென்னுக
நேசமாக நாளுலாவ நன்மை சேர் பவங்களில்
வீசி மேல் நிமிர்ந்த தோளி யில்லையாக்கினாய் கழல்
ஆசையால் மறக்கலாது அமரர் ஆகல் ஆகுமே.

மெய் பக்தியனாலும் குரு விசுவாசத்தினாலும் மெய் அன்பினாலும் மெய்ப்பாட்டினாலும் அரிய வாசியோகம் கிட்டி ஞானம் என்னுள் வந்து சேர்ந்தது . இந்த வாசி யோகத்தை நேமுடன் எந்நாளும் விடாது பயிற்சி செய்து வரும் சாதகர்களுக்குப் பாவங்கள் யாவும் அகன்று நன்மைகளும் புண்ணியமும் சேர்ந்து மெய்யனுபவம் கிடைக்கும். அவ்வாசியே உற்ற துணையாகி மேலேறி சகஸ்ரதளத்தில் சேர்ந்து வெளியாக வீசி நிமிர்ந்திருக்கும் சோதியான ஈசன் திருவடியை அடையும். அவன் கழலடியே ஈடு இணை ஏதும் இல்லாத உண்மை என்பதை உணர்ந்து உலக ஆசைகளில் விழாது வாசியை மறக்காது தொடர்ந்து செய்து அமரர்கள் போல் பிறவா நிலை பெற்று பேரின்பம் அடைந்து தேவர்கள் ஆகுங்கள்.

274. எளியதான காய மீதும் எம்பிரான் இருப்பிடம்
அளிவுறாது நின்றதே அகாரமும் உகாரமும்
கொளுகையான சோதியும் குலாவி நின்றது அவ்விடம்
வெளியதாகும் ஒன்றிலே விளைந்ததே சிவாயமே.

எளிமையான என் உடம்பில் உள்ளே ஈசனாகிய எம்பிரான் இருக்கும் இடம் என்றும் நித்தியமாக நிலையாக நிற்கின்ற ஓங்காரமாகி அகாரமாகவும், உகாரமாகவும் அமைந்துள்ளது. அவ்விடத்திலேயே பிறவி அடையும் பேறான ஈசன் அருட்பெருஞ் சோதியாக உலாவி நின்று கொண்டிருக்கிறான். அவன் வெளிப்படையாக ஆகாயமான ஒன்றிலே மெய்ப்பொருளாக விளங்கி சிவயநம என்ற பஞ்சாட்சரமாய் விளைந்து அதுவாக இருப்பதை அறிந்துணருங்கள்.

275. அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் என்றுரைக்கும் அன்பர்காள்
அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் அல்லகாணும் அப்பொருள்
அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி அவ்வெழுத்தை அறிந்த பின்
அஞ்செழுத்தும் மூன்றெழுத்தும் அவ்வுமாம் சிவாயமே.

நமசிவய என்ற அஞ்செழுத்து பஞ்சாட்சரமென்றும் அ,உ,ம் என்ற மூன்றெழுத்து ஓங்காரம் என்றும் கூறி உச்சரிக்கும் அன்பர்களே நீங்கள் காணும் அந்த மெய்ப்பொருள் அஞ்செழுத்தாகவும், மூன்றெழுத்தாகவுமா இருக்கிறது. அஞ்செழுத்தின் நடு எழுத்தான சிகாரத்தை அறிந்து அதனை சிவயநம என செபித்து அவ்வெழுத்தாக இருக்கும் பரம்பொருளை உள்ளத்தில் நிறுத்தி உணர்ந்து தியானித்தால் ஓரெழுத்தாக உயிரில் உறையும் ஈசனே அஞ்செழுத்தாகவும் மூன்றெழுத்தாகவும் ஆகி நிற்பதை அறிந்து கொள்ளுங்கள்.

276. பொய்யுரைக்க போதமென்று பொய்யருக் கிருக்கையால்
மெய்யுரைக்க வேண்டுதில்லை மெய்யர் மெய்க் கிலாமையால்
வையகத்தில் உண்மை தன்னை வாய் திறக்க அஞ்சினேன்
நைய வைத்தது என்கொலோ நமசிவாய நாதனே.

இப்பூவுலகில் தங்களையே சாமியென்றும், ஞானிகள், சித்தர் என்றும் அவதாரம் எடுத்து வந்த ஆச்சாரியார், குருவென்றும் சொல்லிக்கொண்டு ஏமாற்றுவோர்களை ஏமாற்றி பொய்யான உபதேசங்களைக் கொடுத்து அந்தப் பொய்யாலேயே பணம், பொருள் போன்றவைகளைச் சம்பாதித்து சகலவித சௌபாக்கியங்களோடு வளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி பொய் வேடமிட்டு பொய்யையே பிதற்றி திரிந்து இறந்துபோய் எரிகின்ற தீக்கும், மண்ணில் புதைந்து நாய் நரிக்கும் புழுவுக்கும் இரையாக வேண்டும் என்பதே அவர்களுக்கு விதியாக அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட சிலரிடம் உண்மையை விரும்பும் சில நல்லவர்கள் கூட உண்மை ஞானத்தை உணராமல் அடிமைப்பட்டு இறைப்புகழை மறந்து சாகப்போகும் மனிதரை கடவுளாக்கி துதி பாடிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையை அறிந்துணர்ந்த ஞானிகளும் உண்மையானவர்கள் யாரும் உண்மையில் இல்லை என்று உண்மையை உபதேசிப்பதில்லை. இதனால் இறைவனைத் தவிர எதற்கும் அஞ்சாமல் இருந்த நான் மெய்ப்பொருள் உண்மையை வெளியாக சொல்ல முடியாமல் அஞ்சினேன். நமசிவய என்பது என்ன என்பதை எனக்கு ஞானம் போதித்துக் கற்றுத் தந்து தெளிவித்த என் குருநாதனே ! என் மனம் நொந்து போகச் செய்வது ஏனோ ?

277. ஒன்றை ஒன்று கொன்று கூட உணவு செய்து இருக்கினும்
மன்றினூடு பொய் களவு மாறு வேறு செய்யினும்
பன்றி தேடும் ஈசனைப் பரிந்து கூட வல்லிரேல்
அன்று தேவர் உம்முளே அறிந்துணர்ந்து கொள்ளுமே.

இயற்கையிலேயே ஒன்றை ஒன்று கொன்று தின்னும்படியாகவே உணவு அமைந்துள்ளது. தவளையைக் கொன்று பாம்பும் பாம்பைக் கொன்று கீரியும், மானைக் கொன்று புலியும் தின்பதாகவே அமையப்பெற்றுள்ளது. உலக வாழ்க்கையில் பொய், திருட்டு, ஏமாற்று போன்றவைகளை செய்தே வாழ வேண்டியுள்ளது. இவை யாவையும் அறிந்து தெளிந்து இவ்வாழ்வை வெறுத்து மீண்டும் பிறவா நிலை பெற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சாதனையில் ஈடுபடுங்கள். பன்றி வடிவம் எடுத்து பூமியைத் தோண்டி தேடிய விஷ்ணு ஈசனின்திருவடியை நாடியது போல அவ்வீசனை உங்களுக்குள்ளேயே தோண்டி தேடி அறிந்து பரிவுடன் யோக ஞான சாதகம் செய்து தியானியுங்கள். உண்மையை அடைய உறுதியுடன் முயற்சித்துப் பாடுபடுங்கள். அப்போது ஈசன் ஆதிதேவனாய் உங்களுக்குள்ளேயே சோதியாக தோன்றி நினைவாய் நின்று கொண்டிருப்பதை அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

278. மச்சகத்துள்ளேயிருந்து மாயை பேசும் வாயுவை
அச்சகத்துளே இருந்து அறிவுணர்த்தி கொள்வீரேல்
அச்சகத்துளேயிருந்து அறிவுணர்த்தி கொண்டபின்
இச்சை அற்ற எம்பிரான் எங்கும் ஆகி நிற்பனே.

உடம்பின் உச்சியில் இருந்து உயிரில் மறைவாய் இயங்கும் பிராணனான காற்றானாது வெளியேறி உயிர் போக காரணமாகிறது. இதை உணர்ந்து அப்பிராணனை அங்கேயே ரேசக பூரக கும்பகம் எனும் பிராணாயாம பயிற்சியினால் காற்றைப் பிடித்து உயிரை வளர்க்கும் வழியை அறிந்து கொள்ளுங்கள். அவ்வுடம்பிலேயே பிராணாயாமத்தை அப்பியாசித்து ஆன்மாவை அறிந்து கொண்டு அறிவை உணர்ந்து பின்னால் எல்லாம் ஒன்றாக பொருந்தி எந்த ஆசையும் இல்லாத ஈசனே எங்கும் பிரமமாய் ஆகி நிற்பதை எல்லா உயிரிலும் கண்டுகொள்ளுங்கள்.

279. **வயலிலே முளைத்த செந்நெல் களையதான வாறுபோல்**
உலகினோரும் வண்மை கூறில் உய்யுமாறது எங்ஙனே
விரகிலே முளைத்தெழுந்த மெய்யலாது பொய்யதாய்
நரகிலே பிறந்திருந்த நாடு பட்ட பாடதே.

வயலிலே முளைத்து செந்நெல்லே சரியான கவனிப்பின்றி களையாக மாறுகின்றது. அதுபோல பிறவி எடுத்த நோக்கம் அறியாது உயிர் இறைவனை அடையாது பிறவிப் பிணி அடைகிறது. உலகில் உள்ள மனிதர்கள் இவ்வுண்மையை உணராது நான் எனது என்று வன்மைகள் பேசிக்கொண்டிருந்தால் இப்பிறவிப் பிணியிலிருந்து உய்யும் வழி எங்ஙனம். விறகிலே முளைத்து எழுகின்ற தீயைப் போல் நமது உடம்பிலேயே சோதி மெய்யாக இருப்பதை உணராமல் மெய்யாகிய உடலே பொய்யாகி மாண்டு நரகத்திலே விழுந்து மீண்டும் மீண்டும் பிறந்து இருந்து இறப்பதே வழக்கமாய் இவ்வுலகில் துன்புற்றும் இன்புற்றும் மறைவதே நடந்து வருகின்றது.

280. **ஆடுகின்ற எம்பிரானை அங்குமிங்கும் என்று நீர்**
தேடுகின்ற பாவிகாள் தெளிந்த தொன்றை ஓர்கிலீர்
காடு நாடு வீடு விண் கலந்து நின்ற கள்வனை
நாடியோடி உம்முளே நயந்துணர்ந்து பாருமே.

உங்கள் உடலுக்குள்ளேயே நின்று நட்டம் புரிந்து ஆடிக் கொண்டிருக்கும் ஈசனை அறியாமல் அங்கும் இங்கும் இருப்பதாகக் கூறி தேடுகின்ற பாவிகளே ! தெளிந்த மெய்ப்பொருளாக விளங்கும் ஒன்றை அறிந்து அதையே ஒரே நினைவுடன் தியானிக்கத் தெரியாமல் இருக்கிறீர்கள். காட்டிலும் நாட்டிலும் வீட்டிலும் ஆகாயத்திலும் என்று பார்க்குமிடமெல்லாம் பரந்து நின்ற கள்வனான ஈசனை அறிந்து அவனையே நாடி ஓடி தனக்குள்ளேயே நயந்து உணர்ந்து தியானித்துப் பாருங்கள்.

281. **ஆடுகின்ற அண்டர் கூடும் அப்புற மதிப்புறம்**
தேடு நாலு வேதமும் தேவரான மூவரும்
நீடு வாழி பூதமும் நின்ற தோர் நிலைகளும்
ஆடு வாழின் ஒழியலா தனைத்தும் இல்லை இல்லையே.

உடலாகிய கூட்டுக்குள் அண்டமாக ஆடிக்கொண்டிருக்கும் இறைவன் அப்பாலுக்கப்பாலாய் பேரறிவாய் திகழ்கின்றான்.

அவ்வண்டக் கூட்டுக்குள்ளேயே அரன், அரி, அயன் ஆகிய மூவரும் ஓங்காரமாகவும் என்றும் உள்ள பஞ்சபூதங்கள் பஞ்சாட்சரமாகவும் நம் ஆன்மாவில் ஒன்றான மெய்ப்பொருளாக நிலையாக நின்று கொண்டுள்ளது. அதனை அறிந்து ஆடுகின்ற அவன் திருவடியைப் பற்றி அந்த ஒன்றையே தியானித்திருங்கள். அந்த மெய்ப்பொருளின் ஒளியான சோதியினால் தான் அனைத்துமே நடக்கின்றது. நித்தியமாக நிலையாக என்றும் எங்கும் இருப்பது பரம்பொருள் ஒன்றைத் தவிர வேறெதுவும் இல்லை.

282. **ஆவதும் பரத்துளே அழிவதும் பரத்துளே**
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே திசைகளும் பரத்துளே
யாவரும் பரத்துளே யானும் அப்பரத்துளே.

எல்லாம் ஆவதும், அழிவதும், பிறப்பதும், இறப்பதும் மூவரான தேவரும் எட்டுத்திசைகளும் இவ்வுலகில் உள்ள யாவரும் நான் என்ற யானும் யாவும் பரமாகிய பொருளுக்குள் தான் அமைந்து இருக்கிறது. அம்மெய்ப்பொருள் ஒன்றிலிருந்தே அனைத்தும் தோன்றி அதனாலேயே வாழ்ந்து அதிலேயே மறைகின்றது என்ற உண்மையைத் தெளிந்துணர்ந்து அப்பரம்பொருளை அறிந்து யோக ஞான சாதகம் செய்து அதையே தியானித்து உய்யுங்கள்.

283. **ஏழுபார் ஏழுகடல் இபங்கள் எட்டு வெற்புடன்**
சூழுவான் கிரி கடந்து சொல்லும் ஏழுலகமும்
ஆழிமால் விசும்பு கொள் பிர்மாண்ரண்ட அண்டமும்
ஊழியான் ஒளிக்குளே உதித்துடன் அடங்குமே.

அதள, விதள, சுதள, திதள, தளாதள, சுரதள, பாதளம் என்ற கீழ் ஏழு உலகங்களும், எழுகின்ற ஏழு கடல்களும், எட்டுத் திக்குகளும் வெப்பமும், உடம்பில் உள்ள உயிர் வான் மலை கடந்து நிற்பதாக சொல்லும் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் ஆகிய ஏழு மேல் உலகங்களும், ஆழ்கடலில் பள்ளி கொண்ட விஷ்ணுவும் இன்னம் ஆகாயத்தில் உள்ள பிர்மாண்ரண்ட அண்டங்கள் யாவுமே ஊழிக்காலத்தில் ஒளியாகிய சோதிக்குள்தான் ஒடுங்குவதும் பின் உதிப்பதும், இப்படி அனைத்தும் பெருஞ்சோதியாகிய ஒளியில் இருந்தே உதிக்கின்றன. அந்த ஒளிக்குள்தான் ஒடுங்குகின்றன என்தை அறிந்துணர்ந்து அப்பேரொளியாக ஈசன் உனக்குள்ளும் சோதியாக இருப்பதைத் தெளிந்து தியானியுங்கள்.

284. கயத்துநீர் இறைக்குறீர் கைகள் சோர்ந்து நிற்பதேன்
மனத்துள் ஈரம் ஒன்றில்லாத மதிஇலாத மாந்தர்காள்
அகத்துள் ஈரம் கொண்டு நீர் அழுக்கறுக்க வல்லிரேல்
நினைத்திருந்த சோதியும் நீயும் நானும் ஒன்றலோ.

மனத்தின் ஈவு இரக்கம் ஏதுமில்லாத அறிவில்லா மனிதர்களே ! கிணற்றில் உள்ள தண்ணீரை வெறுங்கயிற்றால் மட்டும் இறைத்தால் உங்கள் கைகளில்தான் வலி ஏற்பட்டு சோர்ந்து நிற்பீரேயன்றி அந்நீரை வெளிக்கொணர்ந்து இறைக்க முடியாது. உங்கள் அகத்திற்குள்ளேயே அன்பு எனும் நீரை ஊற்றி பிறப்பதற்கு முன்பும் பிறந்த பின்னும் செய்த பாவங்கள் என்னும் அழுக்கை அறுத்து தியானிக்க வல்வலர்களானால் நீங்கள் நினைவால் நினைந்திருக்கும் சோதியும், நீயானதும் நான் ஆனதும் ஒரே பிரம்மமே என்ற உண்மை விளங்கும்.

285. நீரிலே பிறந்திருந்து நீர் சடங்கு செய்கிறீர்
ஆரை உன்னி நீரெலாம் அவத்திலே இறைக்கிறீர்
வேரை உன்னி வித்தை உன்னி வித்திலே முளைத்தெழும்
சீரை உன்ன வல்லிரேல் சிவபதம் அடைவிரே.

நீராலே உருவாகியே இவ்வுடம்பு என்பதை அறிந்து கொள்ளாமல் நீரிலே இறங்கி நின்று நீரை அள்ளிவிட்டு சடங்குகள் செய்து இறையை உணராமல் வீணாக காலத்தைக் கழிக்கிறீர்கள். இவ்வுடலில் நீரே வேராகவும் உயிராகவும் இருப்பதை அறிந்து அதில் வித்தாக உள்ள மெய்ப்பொருளை உணர்ந்து அந்த வித்திலே முளைத்தெழுந்த சோதியில் சிகாரத்தினால் சீராக மனதை நிறுத்தி திளைத்து தியானித்து தவம் புரிய வல்லவர்களானால் சிவபதமாகிய ஈசன் திருவடியை சேர்ந்து ஆனந்தம்அடைவார்கள்.

286. பத்தொடுற்ற வாசலில் பரந்து மூல வக்கரம்
முத்தி சித்தி தொந்தமென்று இயங்குகின்ற மூலமே
மத்த சித்த ஐம்புலன் மகாரமான கூத்தையே
அத்தியூரர் தம்முளே அமைந்ததே சிவாயமே.

ஒன்பது வாசல் கொண்ட கூடாகிய உடம்பில் பத்தாம் வாசலை அறிந்து, அதுவே யாவிற்கும் மூலமாக நிற்கும் ஓரெழுத்து அட்சரமே பரம்பொருளாக பரந்து நிற்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அதுவே முத்தி பெறுவதற்கும் சத்தி அடைவதற்கும்

மூலமாய் இயங்கும் பிரம்மம். மனம், புத்தி, சித்தம், ஆகங்காரம் எனும் அந்தக்கரணங்களையும், மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும் ம் என்ற மகாரத்தால் ஓரெழுத்தில் கூட்டி சோதியை தியானம் செய்யுங்கள். அத்தீயாக ஈசன் தமக்குள்ளேயே பரம்பொருளாக அமைந்துள்ளதை உண்மையாய் உணர்ந்து சிவபதம் சேருங்கள்.

287. **அணுவினோடும் அண்டமாய் அளவிடாத சோதியை**
குணமதாக உம்முளே குறித்திருக்கில் முத்தியாம்
முணுமுணென்று உம்முளே விரலை ஒன்றி மீளவும்
தினம் தினம் மயங்குவீர் செம்பு பூசை பண்ணியே.

அணுவிற்கு அணுவாகவும் அண்டங்கள் அனைத்துமாகவும் எதனாலும் அளவிட முடியாத சோதியாகவும் இருப்பவன் ஈசன். அவனே எண்குணத்தனாக இருப்பதை உணர்ந்து நற்குணங்கள் பொருந்தி உனக்குள்ளே உகாரமான உயிரையே குறித்து அங்கேயே அதையே எண்ணி தியானிப்பவர்க்கு முத்தி நிச்சயம் வாய்க்கும். அதுவன்றி பிறர் அறிய தனக்குள்ளேயே மந்திரங்களை முனுமுனுத்து விரல்களில் மனம் ஒன்றி எண்ணியும் செம்பு சிலைகளை வைத்து பூசை பண்ணியும் தினந்தோறும் உலகத்தவரை மயக்கி மயங்குவரேயன்றி உண்மையை உணரமாட்டார்கள்.

288. **மூலமான அக்கரம் முகப்பதற்கு முன்னெலாம்**
மூலமாக மூடுகின்ற மூடமேது மூடரே
காலனான அஞ்சுபூதம் அஞ்சிலே ஒடுங்கினால்
ஆதியோடு கூடுமோ அனாதியோடு கூடுமோ ?

அவரவர்க்குள்ளும் மூலமாய் இருக்கும் பிரம்மமே தெய்வப் பிரசாதங்களைப் படைப்பதற்கு முன்பே முகர்ந்து விடுகிறதே ! அப்பிரசாதத்தை ஒரு பாத்திரத்தல் வைத்து மூடி ஒருவரும் முகர்ந்து விடாமல் இறைவர்க்குப் படைப்பதாக திறந்து மூடி நிவேத்தியம் செய்யும் மூடர்களே ! அதனை இறைவர் ஏற்றுக் கொண்டாரா, மனிதர் ஏற்றுக் கொண்டனரா ! எமன் வந்து உயிரை எடுக்கும்போது பஞ்சபூதங்களும் பஞ்சாட்சரப் பொருளில் ஒடுங்கும் போதே அவ்வுயிர் ஆதியோடு சேருமா ? அல்லது அனாதியோடு சேருமா ?

289. முச்சதுர மூலமாகி முடிவுமாகி ஏகமாய்
அச்சதுரம் ஆகியே அடங்கியோர் எழுத்துமாய்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்கு ஞான தீபமாய்
உச்சரிக்கும் மந்திரத்தின் உண்மையே சிவாயமே.

நான்கு வேதங்களுக்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளுக்கும், மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் எனும் நான்கு நிலைகளுக்கும் மூலமாகவும் முடிவாகவும் ஏகமாகவும் விளங்கும் ஈசன் நம் உடம்பிலேயே அச்சதுரமாய் நான்கான வீட்டினுள் அடங்கி ஓரெழுத்தாக இருக்கின்றான். அந்த மெய்யான சதுர வீட்டை மெய்யாகிய உடலுக்குள் மெய்ப்பொருளாக விளங்கும் ஞான தீபமான சோதியை உணர்ந்து தியானியுங்கள். அப்போது நாம் உச்சரித்த பஞ்சாட்சர மந்திரம் உண்மையாக உள்ளதையும் உணர்ந்து அறிந்து கொள்ளுங்கள். அதுவே உன்னை சிவனடியை சேர்க்கும் சிவயநம என்ற உண்மை.

290. வண்டுலங்கள் போலும் நீர் மனத்துமாசு அறுக்கலீர்
குண்டலங்கள் போலும் நீர் குளத்துளே முழுகுறீர்
பண்டும் உங்கள் நான்முகன் பறந்து தேடி காண்கிலான்
கண்டிருக்கும் உம்முளே கலந்திருப்பார் காணுமே.

தேன் வண்டானது வேறெந்த நினைவும் இன்றி நல்ல மனம் மிகுந்த பூக்களை மட்டுமே ரீங்காரமிட்டு தேடி தேனை எடுத்துச் சேர்ப்பதைப் போல் ஒரே நினைவோடு தியானம் செய்து மனத்தில் உள்ள குற்றங்களையும், பாவங்களையும் அன்பெனும் நீர் ஊற்றி அகற்றத் தெரியாமல் பாவம் போக்கவும் அழுக்கை அகற்றவும் மாடுகளைப் போல் குளத்தில் மூழ்குவதால் பலனுண்டா ? ஈசனின் முடியைக் காண சபதம் செய்த பிரமன் பறந்து தேடியும் காண முடியாது திரும்பினான். பார்க்கும் இடத்திலேயே பார்ப்பானாக உனக்குளே இருக்கும் பரம்பொருளைக் கண்டு அறிவையும், உணர்வையும் மனதையும் ஒன்றாக்கி தியானித்தால் ஈசன் உன்னோடு கலந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

291. நின்றதன்று இருந்ததன்று நேரிதன்று கூறிதன்று
பந்தமன்று வீடு மன்று பாவகங்கள் அற்றது
கெந்த மன்று கேள்வியன்று கேடிலாத வானிலே
அந்தமின்றி நின்ற தொன்றை எங்ஙனே உரைப்பதே.

அது ஓரிடத்தில் நின்றது இல்லை இருந்தது இல்லை. அதற்கு சமமாக ஒன்று இல்லை. அதுதான் இதுவென கூறத் தக்கது இல்லை. அதற்கென எந்த பந்தமும் இல்லை எந்த வீடும் இல்லை. புண்ணியப் பொருளாகி எந்த பாவமும் அற்று இருப்பது எல்லா மணமும் பொருந்தி எந்த மணமும் இல்லாதது. கேள்விகள் ஏதும் இல்லாதது சந்தேகமில்லாதது. கெடுதல் ஏதும் இல்லா வானாகி மனமாகி ஆதியும் அந்தமும் இல்லாத அனாதியாக நின்ற ஒன்றை எவ்வாறு எடுத்துரைப்பது!

292. **பொருந்து நீரும் உம்முளே புகுந்து நின்ற காரணம்**
எருதிரண்டு கன்றை ஈன்ற ஏகமொன்றை ஓர்கிலீர்
அருகிருந்து சாவுகின்ற யாவையும் அறிந்திலீர்
குருவிருந்து உலாவுகின்ற கோலம் என்ன கோலமே.

நம் உயிரே நீராகப் பொருந்தி உடம்பிற்குள் புகுந்து நின்ற காரணம் நம் தீயாகிய ஈசன். எருதாகிய நந்தி எனும் சுழுமுனையில் இடைகலை, பிங்கலை எனும் மூச்சுக் காற்றால் உயிரை வளர்க்கும் வழியை ஓர்ந்து யோக ஞான சாதகம் புரியமாட்டீர்கள். உங்கள் அருகிலேயே இருந்து மாண்டு அழிந்து போகும் யாவையும் பார்த்தும், சுடுகாட்டில் மண்பானையில் நீர் நிரப்பி அதன் அடியில் மூன்று ஓட்டைகள் போட்டு நீரை வீணாக வெளியேற்றி உயிர் போனதை உணர்த்துவதை அறியமாட்டீர்கள். மரணத்தைக் கண்டும் மரணமிலாப் பெருவாழ்வடைய நாடி குருவைத் தேட மாட்டீர்கள். குருவாக உங்கள் மெய்யாகிய உடம்பில் மெய்ப்பொருளாக ஈசன் உலாவும் கோலம் என்ன என்பதை உணர்ந்து பிறவா நிலை பெற முயலுங்கள்.

293. **அம்பரத்துள் ஆடுகின்ற அஞ்செழுத்து நீயலோ**
சிம்புளாய் பரந்து நின்ற சிற்பரமும் நீயலோ
எம்பிரானும் எவ்வுயிர்க்கும் ஏகபோகம் ஆதலால்
எம்பிரானும் நானுமாய் இருந்ததே சிவாயமே.

தோல் ஆடையினாலான உடம்பு எனும் அம்பரத்துள் ஆடுகின்ற அஞ்செழுத்து எனும் பஞ்சாட்சரப்பொருள் நீயே அல்லவோ, சிம்புள் என்ற சாதகப் பறவை வானிலேயே வாழ்ந்து கொண்டிருப்பது அது வானிலேயே கருவுற்று இடும் முட்டை கீழே விழும்போதே அதன் குஞ்சு வெளிவந்து இறக்கைகள் முளைத்து பூமியைத் தொடாமலேயே வானில் பறந்து தாயைச் சேரும்.

அது போலவே பூமியைத் தொடாது வானாகிய மனத்தில் பரந்து நின்று இருதயக் கமலத்தில் சிற்றம்பலமான இடத்தில் உள்ள பரம்பொருளும் நீயே அல்லவா. எம்பிரானாகிய ஈசன் எல்லா உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகவும் இன்ப துன்ப அனுபவமாகவும் இருப்பதால் அவனை அறிந்து அவனையே நினைந்து அவனை உள்ளுணர்ந்து தியானியுங்கள். எம்பிரானாகவும் நானாகவும் இருந்த அதுவே சிவாயமாம்.

294. ஈரொளிய திங்களே இயங்கி நின்றது அப்புறம்
ஏரொளிய திங்களே யாவரும் அறிகிலீர்
காரொளிப் படலமும் கடந்து போன தற்பரம்
பேரொளிப் பெரும் பதம் ஏக நாத பாதமே.

இரண்டு ஒளியும் சூரிய சந்திரனாக இயங்கி நின்றதின் அப்புறத்தில் பேரொளியான ஈசன் அறிவாக இருப்பதை யாவரும் அறியமாட்டார்கள். காணும் ஒளிப்படலத்தைக் கடந்து தனக்குள்ளேயே பரம் பொருளாய் அருட்பெருஞ்சோதியாக ஆண்டவன் இருக்கின்றான். அந்த சிவத்தின் திருவடியே மனிதப் பிறவி அடையும் பெரும் பேறு என்பதை உணர்ந்து ஏகநாதனாகிய ஈசனின் பாதம் ஒன்றையே பற்றி நில்லுங்கள்.

295. கொள்ளொணாது மெல்லொணாது கோதறக் குதட்டடா
தள்ளொணாது அணு கொணாது ஆகலான் மனத்துளே
தெள்ளொணாது தெளியொணாது சிற்பரத்தின் உட்பயன்
விள்ளொணாத பொருளை நான் விளம்பு மாறது எங்ஙனே.

கொள்ளவோ, கொடுக்கவோ, மெல்லவோ, குற்றமில்லாது குதப்பவோ, தள்ளவோ, அணுகவோ ஒண்ணாத ஒரு பொருளை மனதை அறிந்து மனதிலேயே நிறுத்தி வைத்து தியானித்து தெள்ளத் தெளிவாக தெளிந்த சிற்றம்பலம் மேவிய பரம்பொருளின் பயனை அறிந்து உங்களுக்குள்ளேயே உணர்ந்து கொள்ளுங்கள். அது வாயால் சொல்லக்கூடாத பொருள். ஆதலால் அதனை நான் எவ்வாறு சொல்லி விளக்குவது ! அது உணர்த்த உணரும் பொருள், அவரவர் அனுபவத்தால் அறிந்து கொள்ளும் உண்மைப் பொருள்.

296. வாக்கினால் மனத்தினால் மதித்த காரணத்தினால்
நோக்கொணாத நோக்கையுன்னி நோக்கை யாவர் நோக்குவர்
நோக்கொணாத நோக்க வந்து நோக்க நோக்க நோக்கிடில்
நோக்கொணாத நோக்கு வந்து நோக்கை எங்கும் நோக்குமே

வாக்கினாலும் மனத்தினாலும் இறைவனை எந்நேரமும் நேசமுடன் பூசித்து யோக ஞானத்தை மதித்து கடைப்பிடித்த காரணத்தினால் உண்மையான பரம்பொருளின் காட்சிகிட்டும். நோக்கொணாத நோக்கை அகக்கண்ணால் நோக்கி தியானிக்கவும் அதையே நோக்கவும் யார் வல்லவர்கள். பார்க்க வொண்ணாத பார்வையை ஊடறுத்து பார்ப்பவனையே பார்த்து பார்க்க பார்க்க பார்த்து இருந்தால் புறப்பார்வை மறைந்து அகக்கண் திறந்து அதுவே அதுவாய் அகிலமெங்கும் நிறைந்து பார்க்கும் இடம் எங்கும் பராபரமாய் விளங்கும்.

297. உள்ளினும் புறம்பினும் உலகம் எங்கணும் பரந்து
எள்ளில் எண்ணெய் போல நின்று இயங்குகின்ற எம்பிரான்
மெல்ல வந்து என்னுட் புகுந்து மெய்த்தவம் புரிந்த பின்
வள்ளலென்ன வள்ளலுக்கு வண்ணமென்ன வண்ணமே.

உள்ளே மனமாகவும் புறத்தே வெளியாகவும் உலகம் எங்கனும் பரந்து நின்று சிறிய வித்தான எள்ளில் இருக்கும் எண்ணெய் போலவே எம் உடம்பிலே நின்று இயங்குகின்றவன் எம் பிரானாகிய ஈசன். அவன் வருந்தா வகையில் மெல்ல வந்து என் உட்புகுந்து இருக்கின்றான் என்பதை அறிந்து அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை உணர்ந்து யோக ஞானப் பற்றுதலும் குரு விசுவாவசமும் கொண்டு தியானம் செய்ய செய்ய மெய்த்தவம் வாய்க்கும். அந்த மெய்த்தவம் புரிந்து வள்ளலுக்கு வள்ளலாய் விளங்கும் ஈசனின் வண்ணம் பொன் வண்ணம் என்பதையும் அவன் திருவடியின் வண்ணம் ஐவண்ணம் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

298. வேதமொன்று கண்டிலேன் வெம் பிறப்பு இலாமையால்
போதம் நின்ற வடிவதாய்ப் புவனமெங்கும் ஆயினாய்
சோதியுள் ஒளியுமாய்த் துரியமோடு அதீதமாய்
ஆதிமூலம் ஆதியாய் அமைந்ததே சிவாயமே.

நான்கு வேதங்களும் சொல்லும் ஒன்றான பரம்பொருளை நான் கண்டிலேன். அதனைக் கண்டு அறிந்து உணர்ந்த பிறகு வெம்மாயப் பிறப்பு என்பது இல்லாமல் போய்விடும். இரவு பகல் இன்ப துன்பம் என்று போதப் பொருளாய் நின்ற வடிவழகாய் ஈரேழு புவனங்கள் எங்கும் பிரம்மமாய் ஆகினாய். சோதியுள் ஒளியாய் துரியமோடு துரியாதீதமாய் ஆதி மூலமான பிரம்மமே என் உயிரில் ஆதியாய் அமைந்திருப்பது சிவம் என்ற சிவாயமே. அந்த ஒன்றையே பற்றித் தியானியுங்கள்.

299. **சாண் இரு மடங்கினால் சரிந்த கொண்டை தன்னுளே**
பேணி அப்பதிக்குளே பிறந்திறந்து உழலுவீர்
தோணியான ஐவரைத் துறந்தறுக்க வல்லிரேல்
காணி கண்டு கோடியாய்க் கலந்ததே சிவாயமே.

இரண்டு சாண் அளவுள்ள ஒரு முழக் கூந்தலைக் கொண்டையிட்டு சரியவிட்டு கடைக்கண்ணால் காம வலை வீசும் பெண்களில் மயங்கி அப்பேரழகே நிலையெனவும் அப்பெண்ணின்பமே பெரிதெனவும் வாழ்ந்து வீழ்ந்து பிறந்து இறந்து பிறந்து உழலும் உலகீரே ! தோணியான உடம்பில் உள்ள ஐம்புலன்களையும் ஐந்தெழுத்தால் ஒடுக்கி அனைத்தையும் துறந்து பாவமெனும் அழுக்கை அகற்றி ஈசனையே தியானிக்க வல்லவர்களானால் இக்காணி முழுதும் கண்களில் கண்டு கோடி கோடியாய் கலந்திருப்பது சிவம் என்பதை உணர்வீர்கள்.

300. **அஞ்சு கோடி மந்திரம் அஞ்சுளே அடங்கினால்**
நெஞ்சு கூற உம்முளே நினைப்பதோர் எழுத்துளே
அஞ்சு நாலு மூன்றதாகி உம்முளே அடங்கினால்
அஞ்சும் ஓர் எழுத்தாய் அமைந்ததே சிவாயமே.

சிவயநம என்று அஞ்செழுத்து மந்திரத்தை மவுனமாக இருந்து கோடி முறை செபித்து ஐம்புலன்களையும் ஈசன் பால் அடங்கி நின்று உனக்குள் உள்ளத்தில் உள்ள நெஞ்செழுத்தாகிய சிகாரமெனும் ஓரெழுத்தில் மனம் ஒன்றி நினைந்து தியானியுங்கள். அஞ்சு பூதங்களும் நான்கு அந்தக்கரணங்களும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் மூன்றெழுத்தான ஓங்காரத்தில் உகாரம் என்ற உயிரில் அடங்கினால் அஞ்செழுத்தும் பஞ்சாட்சரப் பொருளாகி ஓரெழுத்தாய் ஊண் பற்றி நின்ற உணர்வுறு மந்திரமாய் அமைந்தது சிவமே என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

301. அக்கரந்த அக்கரத்தில் உட்கரந்த அக்கரம்
சக்கரத்து சிவ்வையுண்டு சம்புளத் திருந்ததும்
எள் கரந்த எண்ணெய் போல் எவ்வெழுத்தும் எம்பிரான்
உள் கரந்து நின்ற நேர்மை யாவர் காண வல்லரே.

'ஃ' என்ற ஆயுத எழுத்தின் அட்சரத்தில் உள்ளே இருக்கும் ஊமை எழுத்தே வெட்டாத சக்கரமாகி நெருப்பான சிகாரமாய் பேசும் எழுத்தாகி சகத்தின் சகல உயிர்களிலும் இருக்கின்றது. எள்ளுக்குள் எண்ணெய் போல் எந்த எழுத்துகளிலும் (.) எழுத்தாக எம்பிரான் மறைவாகவே இருக்கின்றான். இந்த ஓரெழுத்து இலிங்கமாகி உள்ளே கரந்து நின்ற உண்மையையும் அதுவே சோதியான நேர்மையும் அறிந்துணர்ந்து யாவர் காணவல்லவர்கள்.

302. ஆகமத்தின் உட்பொருள் அகண்டமூலம் ஆதலால்
தாக போகம் அன்றியே தரித்த தற்பரமும் நீ
ஏக பாதம் வைத்தனை உணர்த்தும் அஞ்செழுத்துளே
ஏகபோகம் ஆகியே இருந்ததே சிவாயமே.

ஆகமங்கள் கூறும் உட்பொருள் அகண்டங்களின் மூலமாக உள்ள பரம்பொருளும் ஒன்றேயான ஈசன்தான் விரகதாகமோ சிற்றின்ப போகமோ ஏதும் இன்றி எனக்குள் தானாக தரித்த தற்பரமான சதாசிவன் நீயே. உன்னையே உள்ளில் நினைந்து தியானிக்க உன் ஏகபாத திருவடியை என் தலைமேல் வைத்ததையும் அது அஞ்செழுத்துக்குள் இருப்பதையும் உணர்ந்து கொண்டேன். அந்த ஏக பாதத்தையே உற்றிருந்து தவம் புரிய அதிலேயே சக்தி சிவனும் ஏகபோகமாக இருந்ததையும் அதுவே சிவம் என்பதையும் அறிந்து கொண்டேன்.

303. மூல வாசல் மீதுளே முச்சதுரம் ஆகியே
நாலு வாசல் எண் விரல் நடு உதித்த மந்திரம்
கோலம் ஒன்றும் அஞ்சுமாகும் இங்கலைந்து நின்ற நீ
வேறு வேறு கண்டிலேன் விளைந்ததே சிவாயமே.

மூலவாசலாகிய பத்தாம் வாசலில் உயிரிலிருந்து வெளியேறும் பனிரெண்டங்குலம் பாயும் பிராணன் நாலு வாசல் எனும் இமைகளைக் கடந்து விரல் அங்குஷ்டம் நடுவே உதிக்கும்

சிகாரத்தில் எட்டங்குலம் மீளும். இதனை அறிந்து உயிரில் இருந்து கழிந்த நான்கு அங்குல பிராணனை மீண்டும் உயிரிலேயே சேர்த்து உயிர் வளர்க்கும் கலையான வாசியால் அஞ்செழுத்தை தியானிக்கவேண்டும். அங்கு ஈசன் நின்ற கோலமாய் ஐ வண்ணமாகவும் ஐந்தெழுத்தாகவும் உள்ளதை உணர்ந்து அங்கே அலைந்து நின்ற இறைவனே அனைத்துமாகவும் விளைந்து உலகமெங்கும் இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அந்த பஞ்சாட்சரமே நான் வேறு அது வேறு என்று இல்லாமல் இருப்பதை அறிந்து எல்லாமே சிவமயமே தவிர வேறு இல்லை என்பதை உணர்ந்து தியானியுங்கள்.

304. **சுக்கிலத் தடியுளே சுழித்ததோர் எழுத்துளே**
அக்கரத் தடியுளே அமர்ந்த ஆதி சோதி நீ
உக்கரத் தடியுளே உணர்ந்த அஞ்செழுத்துளே
அக்கரம் அதாகியே அமர்ந்ததே சிவாயமே.

விந்து சக்தியால் உருவாகும் உயிர் சுழித்த ஓரெழுத்தாகி அகாரமான உடம்பில் ஆதியாக அமர்ந்து மெய்ப்பொருளான சோதியாக இருப்பவன் இறைவன். அவனை உகாரமான உயிரில் உணர்ந்து அஞ்செழுத்துக்குள்ளே அவனே ஓரெழுத்தாகி அதுவாக அமர்ந்து இருப்பது சிவம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

305. **குண்டலத்துளே யுளே குறித்தகத்து நாயகன்**
கண்டவந்த மண்டலம் கருத்தழித்த கூத்தனை
விண்டலர்ந்த சந்திரன் விளங்குகின்ற மெய்ப்பொருள்
கண்டு கொண்ட மண்டலம் சிவாயம் அல்லது இல்லையே.

காதில் குண்டலங்கள் தொங்கி ஆடுவதைப் போல் குண்டலத்தின் உள்ளே ஆடிக் கொண்டிருக்கும் ஈசனைக் குறித்தறிந்து கொண்டு அவனே நம் அகத்தில் இருக்கும் நாயகனாக விளங்குவதை உணர்ந்து கொண்டு தியானியுங்கள். கண்ட அந்த மண்டலத்திலே அஞ்ஞானக் கருத்துக்களை அழித்து நமக்குள் நடனமிடும் நடராஜனைக் கண்டு கொள்ளுங்கள். ஆகாயத்தைப் போல் விரிந்த அப்பேரறிவாக விளங்குகின்ற மெய்ப்பொருள் காணும் இடத்தில் கண்டு கொண்ட மண்டலத்தில் சிவத்தைத் தவிர மற்றேதும் இல்லையே. பார்ப்பதையே பார்த்து ஒரே மனதோடு சிவயநம என செபித்துத் தியானியுங்கள்.

306. **சுற்றும் ஐந்து கூடமொன்று சொல்லிறந்ததோர் வெளி**
சத்தியும் சிவனுமாக நின்ற தன்மை ஓர்கிலீர்
சத்தியாவது உம்முடல் தயங்கு சீவன் உட்சிவம்
பித்தர்காள் அறிந்திலீர் பிரான் இருந்த கோலமே.

பஞ்ச பூதங்களின் கூட்டால் சேர்ந்த உடம்பில் சுற்றுகின்ற சிற்றம்பல கூடமாகிய ஒன்றில், சொற்கள் இறந்த மவுனமாகிய வெளியில் சத்தியும் சிவனுமாக நின்ற தன்மையை உணராமல் உள்ளீர்கள். ஞானத்தினால் தவம் செய்து தன்னை அறிந்து தெரிந்து கொள்ளுங்கள். சத்தியாவது உங்கள் உடலே அதிலே தங்கி இயங்கும் சீவனுக்குள் இருப்பதுவே சிவம். இப்படியாக ஈசன் நம்முள் இருந்த கோலமே மெய்ப்பொருள் என்பதை அறியாமல் இருக்கும் பித்தர்களே! உண்மையை உனக்குள்ளேயே கண்டு உணருங்கள்.

307. **மூலம் என்ற மந்திரம் முளைத்த அஞ்செழுத்துளே**
நாலு வேதம் நாவுளே நவின்ற ஞான மெய்யுளே
ஆலம் உண்ட கண்டனும் அரி அயனும் ஆதலால்
ஓலம் என்ற மந்திரம் சிவாயம் அல்லது இல்லையே.

மூல மந்திரமான ஓரெழுத்தில் அஞ்சு பூதங்களும் அஞ்செழுத்தாக முளைத்து எழுந்து தோன்றுகிறது. அதனுள்ளே தான் நான்கு வேதங்களாலும் நாவாலே சொல்லும் ஞானம் உடம்பினுள்ளே மெய்ப்பொருளாக உள்ளது. அதிலேயே ஆலம் உண்ட சிவனும் விஷ்ணுவும் பிரம்மனும் ஓம் என்ற மந்திரத்தில் அடங்கியுள்ளார்கள். ஆதலால் அது சிவம் அல்லது வேறு இல்லையே.

308. **தத்துவங்கள் என்று நீர் தமைக்கடிந்து போவீர்காள்**
தத்துவம் சிவமதாகில் தற்பரமும் நீரல்லோ
முத்தி சீவனாதமே மூல பாதம் வைத்த பின்
அத்தனாரும் உம்முளே அறிந்துணர்ந்து கொள்ளுமே.

இறை உயிர் உடற் தத்துவங்களை அறியாமல் தன்னையும் உணராமல் தம்மையே கடிந்து நொந்து போவீர்கள். தத்துவங்கள் சிவம் அதுவானால் தற்பரம் ஆனது நீங்களல்லவோ ! இந்த உண்மையை உணர்ந்து நீயே அதுவானால் முக்தி என்பது சிவனாகிய உயிரிலும் நாதமான உடம்பிலும் உள்ள மூலபாதமாக வைத்தசோதியில் சேர கிட்டும்.

எல்லா உயிர்களுக்கும் அம்மையப்பனாய் விளங்கும் ஈசன் உனக்குள்ளே இருப்பதை அறிந்துணர்ந்து அவனையே சிக்கெனப் பிடித்து யோக ஞான தவம் செய்து இறைவனைச் சேருங்கள்.

309. **மூன்று முப்பத்து மூன்றையும் மூன்று சொன்ன மூலனே**
தோன்ற சேர ஞானிகாள் துய்ய பாதம் என் தலை
ஏன்று வைத்த வைத்தபின் இயம்பும் அஞ்செழுத்தையும்
தோன்ற ஓத வல்லிரேல் துய்ய சோதி காணுமே.

மூன்று முப்பது மூன்று மூன்று ஆக தொண்ணூற்றி ஆறு தத்துவங்களையும் மூவாயிரம் பாடல்களில் ஒன்பது தந்திரங்களாக திருமந்திரம் சொன்ன திருமூலன் வர்க்கத்தில் தோன்றிய ஞானிகள் பற்றிய துய்ய பாதத்தை நானும் என் தலையாக வைத்துத் தலையில் வைத்துத் தியானித்தேன். பின் அப்பாதமே பஞ்சாட்சரமாக இருப்பதை உணர்ந்து அங்கேயே சிவயநம எனும் அஞ்செழுத்தையும் தோன்ற ஓத வல்லவர்களானால் சுத்த சோதியான ஈசனின் காட்சி கிடைக்கும்.

310. **உம்பர் வானகத்திலும் உலகபாரம் ஏழினும்**
நம்பர் நாடு தன்னிலும் நாவலென்ற தீவினும்
செம்பொன் மாடம் மல்குதில்லை அம்பலத்துள் ஆடுவான்
எம்பிரான் அலாது தெய்வம் இல்லை இல்லை இல்லையே.

எங்கும் நிறைந்த ஆகாயத்திலும் ஈரேழு உலகங்களிலும் நாம் வாழும் நாட்டிலும் நாவலந்தீவு என்ற தீவிலும் இப்படி எங்கு பார்த்தாலும் இறைவனாகிய ஈசன் ஒருவனே. அவன் நம் உடம்பில் செம்பொன் மாடமாகிய தில்லை பொன்னம்பலத்தில் பொன்னார் மேனியான நடராசனாக நடனம் ஆடிக்கொண்டுள்ளார். அவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை இல்லை இல்லையே.

311. **பூவிலாய ஐந்துமாய் புனலில் நின்ற நான்குமாய்**
தீயிலாத மூன்றுமாய் சிறந்த கால் இரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய் வேறு வேறு தன்மையாய்
நீயலாமல் நின்ற நேர்மை யாவர் காண வல்லரே.

இவ்வுலகில் பஞ்ச பூதங்கள் பூமியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையான நிலங்களாகவும்,

புனலாகிய நீரில் ஆற்று நீர், ஊற்று நீர், மழைநீர், கடல்நீர் என்ற நான்கு வகையாகவும், தீயாக சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று வகையாகவும், காற்றில் சிறந்த தென்றலாகவும் சூறாவளிப் புயல் என்ற இரண்டு வகையாகவும். வெளியாகிய ஆகாயம் ஒன்றாகவும் அமைந்து வேறு வேறு தன்மையாய் இருக்கின்றது. அதுவே அஞ்செழுத்தாகி அதில் சிகரமாக நீ நின்ற நேர்மையை யாவர் காண வல்லவர்கள்.

312. அந்தரத்தில் ஒன்றுமாய் அசைவு கால் இரண்டுமாய்
செந்தழலில் மூன்றுமாய் சிறந்த வப்பு நான்குமாய்
ஐந்து பாரில் ஐந்துமாய் அமர்ந்திருந்த நாதனை
சிந்தையில் தெளிந்த மாயை யாவர் காண வல்லரே.

இவ்வுடம்பில் அஞ்செழுத்தாக ஈசன் பஞ்சபூதங்களாய் ஆகாயம் அந்தரத்தில் மனம் என்ற ஒன்றாகவும், காற்று மூச்சாக வெளிச்சுவாசம் உட்சுவாசம் என்று இரண்டு வகையாகவும், நெருப்பு அக்னி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்ற மூன்று வகையாகவும் நீர், இரத்தம், வியர்வை, எச்சில், சிறுநீர் என்ற நான்கு வகையாகவும், மண், எலும்பு, நரம்பு, தசை, தோல், உரோமம் என்ற ஐந்து வகையாகவும் அமைந்திருக்கிறது. இந்த பஞ்சபூதங்களிலும் அஞ்செழுத்தாக பரவி அமர்ந்திருந்த நாதனை சிந்தையில் நினைந்து மாயை தெளிந்து ஞானம் நிறைந்து தியான தவம் புரிந்து காண வல்லவர்கள் யார் ?

313. மன விகாரம் அற்று நீர் மதித்திருக்க வல்லிரேல்
நினைவிலாத மணி விளக்கு நித்தமாகி நின்றிடும்
அனைவர் ஓதும் வேதமும் அகம் பிதற்ற வேணுமேல்
கனவு கண்டது உண்மை நீர் தெளிந்ததே சிவாயமே.

மனம் சந்தேகங்கள் யாவும் தீர்ந்து நீர் இறைவனையே மதித்து தியானிக்க வல்லவரானால் மனமோ, எண்ணமோ, நினைவோ இன்றி அம்மனமே மணியாவும், விளக்காகவும் விளங்கி நித்தியமாகி நின்றிடும். இதனை அறிந்து அனைவரும் சிவயநம எனும் பஞ்சாட்சர மந்திரத்தையே ஓதி வந்தால் நான்கு வேதமும் உணர்த்தும் அகத்திலேயுள்ள மேலான மெய்ப்பொருளை உணரலாம். கனவு கண்டது உண்மையாக உள்ள நீரே என்பதை தெரிந்து தெளிந்திருப்பது சிவமே.

**314. இட்ட குண்டம் ஏதடா இருக்கு வேதம் ஏதடா
சுட்டமண் கலத்திலே சுற்று நூல்கள் ஏதடா
முட்டி நின்ற தூணிலே முளைத்தெழுந்த சோதியை
பற்றி நின்றது ஏதடா பட்டநாத பட்டரே.**

யாகம் செய்ய அமைக்கும் யோனி குண்டம் எதற்காக ? அதிலே ஓதும் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் சொல்வது என்ன ? அங்கு சுட்டமண் கலயங்களிலே நூல் சுற்றி நீர் நிறைத்து வைப்பது எதற்காக ? யாகத்தில் நெய்யூற்றி தீயை வளர்ப்பது ஏன் ? இவை யாவுமே உனக்குள்ளே சோதியாக இருக்கும் ஈசனை அறிவதற்கல்லவா ! உன் உடம்பில் சூரிய சந்திர அக்னி மண்டலங்களில் உள்ள தீ சுழுமுனை எனும் தூணில் முட்டி நின்று அங்கே முளைத்து எழுந்த சோதியைப் பற்றி நின்றது ஏது என்பதை பட்டநாதப்பட்டரே விளக்கிச் சொல்லுங்கள். அது பிரமமே என்பதை உணர்ந்து பற்றி நில்லுங்கள்.

**315. நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓரிலை
நீரினோடு கூடி நின்றும் நீரிலாதவாறு போல
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடி நின்ற பண்பு கண்டு இருப்பிரே.**

தண்ணீரிலேயே முளைத்து வளர்ந்த தாமரை இலையானது நீரோடு கூடி நின்றாலும் நீர் ஒட்டாத தன்மையைப் போல், மண்ணாலான இவ்வுடலில் வித்தாக முளைத்தெழுந்து ஒட்டியும் ஒட்டாமலும் உள்ளது யாவும் அறிந்த பரம்பொருள், இவ்வுலகில் அனைத்திலும் கூடி நின்றும் எதுவும் பற்றாத தன்மையோடு நின்று நம்மைக் கூத்தாட்டுபவனின் பண்பையும் கருணையும் கண்டு அவன் நினைவோடே நினைந்தவண்ணம் தியானித்து இருப்பீர்.

**316. உறங்கில் என் விழிக்கில் என் உணர்வு சென்று ஒடுங்கில்என்
சிறந்த ஐம்புலன்களும் திசைத்திசைகள் ஒன்றில் என்
புறம்புமுள்ளும் எங்கணும் பொருந்திருந்த தேகமாய்
நிறைந்திருந்த ஞானிகாள் நினைப்பது ஏதும் இல்லையே.**

உறங்கினாலும் விழித்தாலும் உணர்வு சென்று அறிவில் ஒடுங்கி இருந்தாலும் சிறந்த ஐம்புலன்களையும் அடக்கி எல்லாத் திசைகளும் ஒன்றென ஒன்றி இருந்தாலும் புறத்திலும் உள்ளிலும் பார்க்கும் இடம் எங்கணும் ஒரே மெய்ப்பொருளாக பொருந்தி

இருப்பதை அறிந்த ஞானிகள், தங்கள் தேகத்திலேயே அம்மெய்ப்பொருளே சிவமாக இருப்பதை உணர்ந்து அதைத் தவிர வேறு எதையும் நினைப்பது இல்லையே. அதுவே சிவம் என நினைந்து தியானியுங்கள்.

317. **ஓதுவார்கள் ஓதுகின்ற ஓர் எழுத்தும் ஒன்றதே**
வேதம் என்ற தேகமாய் விளம்புகின்ற தன்றிது
நாதம் ஒன்று நான்முகன் மாலும் நானும் ஒன்றதே
ஏதுமன்றி நின்ற தொன்றை யான் உணர்ந்த நேர்மையே.

தேவாரம், திருவாசம், வேதம் போன்றவைகளை ஓதுவார்கள் ஓதி சொல்லும் ஓர் எழுத்தான சிகாரமாய் நின்ற ஒன்றே அது. வேத மந்திரங்களைப் போல் வெளிப்படையாக சொல்லக்கூடாதது இது. விந்தும், நாதமும், ஒளியும், ஒலியும் ஒன்றாகி நின்றது அது. பிரம்மா விஷ்ணு நான் என்ற சிவன் ஆகிய மூவரும் உள்ள ஒன்று அது. ஒன்றுமில்லாத வெட்ட வெளியாகி ஒன்றான பரம்பொருளை அறிந்து உணர்ந்து கொண்ட அதுவே மெய்ப்பொருள்.

318. **பொங்கியே தரித்த அச்சு புண்டரீக வெளியிலே**
தங்கியே தரித்தபோது தாது மாதுளையதாம்
அங்கியுள் சரித்த போது வடிவுகள் ஒளியுமாய்க்
கொம்பு மேல் வடிவு கொண்டு குரு இருந்த கோலமே.

உலகில் பிறக்க உருவாகும் உயிர் புண்டரீகம் எனும் தாமரையாக விளங்கும் ஆகாயத்தலத்தில் நினைவிலேயே தங்கி கருவாகி உரு தரித்து சுக்கில சுரோணித கலப்பாகி இருந்து உடம்பாக வெளிவந்தது. ஈசனான சோதியே சிகார வடிவு கொண்டு ஓரெழுத்தாகி குருவாக கோலம் கொண்டது. அதுவே மெய்யாகிய உடம்பில் கொம்பாக வடிவம் கொண்டு உயிராகவும், ஒளியாகவும் விளங்கும் உண்மையான குரு என்பதை அறிந்துணருங்கள்.

319. **மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்த வாறது எங்கெனில்**
கண்ணினோடு சோதி போல் கலந்த நாத விந்துவும்
அண்ணலோடு சத்தியும் அஞ்சு பஞ்சு பூதமும்
பண்ணினோடு கொடுத்தழிப் பாரொடேமும் இன்றுமே.

மண்ணில் மனிதராக தோன்றிய உயிரும் விண்ணில் உள்ள மும்மூர்த்திகளும் வந்து தங்கியிருப்பது எங்கு எவ்வாறு என்பதை அறிந்து கொள்ளுங்கள். கண்ணில் காணும் ஒளி போல கலந்திருந்த விந்து நாதம் உடலும் உயிருமாகி அவ்வுயிரிலேயே சிவனும் சக்தியுமாகி அஞ்சு எழுத்துக்களும் பஞ்சபூதங்களும் சேர்ந்து பண்பாக உருவாகி வளர்ந்து இப்பூமியிலும் புவனங்கள் ஏழிலும் பிறந்தும் இறந்தும் மீண்டும் பிறந்தும் உழன்று வருவதை இன்றாவது உணர்ந்து மீண்டும் பிறவா நிலை பெற்று இறைவனை அடைய முயலுங்கள்.

320. ஒடுக்குகின்ற சோதியும் உந்தி நின்ற ஒருவனும்
நடுத்தலத்தில் ஒருவனும் நடந்து காலில் ஏறியே
விடுத்து நின்ற இருவரோடு மெய்யினோடு பொய்யுமாய்
அடுத்து நின்று அறிமினோ அனாதி நின்ற ஆதியே.

அனைத்தையும் ஒடுக்கி இருக்கின்ற சோதியான ஈசனை அடைய உந்திக்கமலமான மணிபூரகத்தில் நின்ற விஷ்ணுவையும் நடுவாகிய உடம்பில் சுவாதிஷ்டானத்தில் உள்ள பிரம்மனையும் அறிந்து வாசிக்காலால் வணங்கி இரண்டையும் விடுத்து மேலேற்றி அனாகதத்தில் ருத்திரனையும் விசுத்தியில் மகேசுவரனையும் ஆஞ்ஞாவில் சதாசிவனையும் அறிந்து வாசியை மேலேற்றி தியானத்தில் நின்று அனாதியாக உள்ள ஈசனை உணர்ந்து உங்கள் உடம்பிலும் உயிரிலும் ஆதியாக உள்ள மெய்ப்பொருளை அறிந்து கொண்டு அறிவு உணர்வு நினைவு என மூன்றையும் அதில் ஒன்றிணைத்து தவம் புரியுங்கள்.

321. உதித்த மந்திரத்திலும் ஒடுங்கும் அக்கரத்தினும்
மதித்த மண்டலத்திலும் மறைந்து நின்ற சோதி நீ
மதித்த மண்டலத்துளே மரித்து நீர் இருந்த பின்
சிரித்த மண்டலத்துளே சிறந்ததே சிவாயமே.

அஞ்செழுத்து மந்திரத்தால் உதித்த உடம்பினுள் ஓரெழுத்தாகி ஒடுங்கி யாவரும் மதிக்கும் இடமாகிய சூரிய மண்டலத்தில் மறைந்து நின்று இருக்கும் சோதியே ஈசனாகிய நீ. அந்த மதித்த மண்டலமாகிய சூரியனுக்குள்ளேயே அறிவு, உணர்வு, மனம், ஆகிய மூன்றையும் இணைத்து ஒடுக்கி செத்தாரைப் போல் ஒன்றி தியானத்தில் இருந்தால், சிற்றம்பலம் ஆகிய சிகாரமான அக்னி மண்டலத்தில் உள்ளே சோதியாக விளங்கி சிறந்திருந்த அது சிவம் என்தைக் கண்டு தெளிந்து சேருங்கள்.

322. திருத்தி வைத்த சற்குருவைச் சீர் பெற வணங்கிலீர்
குருக்கொடுக்கும் பித்தரே கொண்டு நீந்த வல்லிரோ
குருக்கொடுக்கும் பித்தரும் குருக்கொள் வந்த சீடனும்
பருத்திபட்ட பாடுதான் பன்னிரண்டும் பட்டதே.

எங்கெல்லாமோ அலைந்தும் திரிந்தும் ஆசைக்கடலில் வீழ்ந்தும் பழி பாவங்களுக்கு ஆளாகியும் இருந்த இப்பிறவியை திருத்தி அறிவை அறிய வைத்து உண்மையை உணர வைத்து இறை சொரூபத்தை நமக்குள் காட்டிய சற்குருவை சீர் பெற வணங்குங்கள். அவ்வாறு உண்மை குரு உபதேசிக்கும் மெய்ஞானத்தை உணர்ந்து யோக தியானம் செய்து இப்பிறவிக்கடலை நீந்தி கடந்து இறைவனடி சேர வாருங்கள். குரு கற்றுக் கொடுத்த வண்ணம் சாதகம் செய்து பித்தராகிய சிவனைத் தனக்குள் குருவாக உள்ளதை அறிந்து சீவனையும் சிவனையும் ஒன்றினைத்து தியானியுங்கள். பருத்தி பஞ்சானது பலபாடுகள் பட்டு ஆடை ஆவது போல் ஒவ்வொரு அனுபவங்களையும் கடந்து மெய்நிலை அடைந்து ஈசனைச் சேருங்கள்.

323. விழித்த கண் துதிக்கவும் விந்து நாத ஓசையும்
மேருவும் கடந்த அண்ட கோளமுங் கடந்து போய்
எழுத்தெலாம் அழிந்துவிட்ட இந்திரஞால வெளியிலே
யானும் நீயுமே கலந்த தென்ன தன்மை ஈசனே.

தியானத்தில் இருந்து விழித்த கண்கள் உன்னையே துதித்திருந்தது. அங்கே விந்துவாகிய ஒளியும் நாதமாகிய ஒலியும் கலந்து நின்று பிரணவ ஓசை கேட்டது. மனம் மேரு எனும் சகஸ்ரார தளத்தையும் கடந்து அண்டங்கள் கோளங்கள் என யாவையும் கடந்து போய் மோனமாகிய எழுத்தெல்லாம் அழிந்துவிட்ட இந்திர ஞால வெளியிலே ஒன்றுமில்லாத எல்லாம் உள்ளடக்கிய ஆகாயத்தலத்தில் ஞானத்தால் சூட்சமத்தில் யானும் நீயும் கலந்து இருந்த தன்மையை என்னவென்று எடுத்துரைப்பது ஈசனே !

324. ஓம்நமோ என்றுளே பாவையென்று அறிந்த பின்
பானுடல் கருத்துளே பாவையொன்று அறிந்த பின்
நானும் நீயும் உண்டடா நலங்குலம் அது உண்டடா
ஊனும் ஊனும் ஒன்றுமே உணர்ந்திடா எனக்குளே.

ஓம் என்பதும் நமசிவய என்பதும் நமக்குள்ளே வாலையாய் அமர்ந்த பாவை என்பதை அறிந்து கொள்ளுங்கள். இப்பாரில் உடல் எடுத்ததும் உயிர் நின்றதும் சக்தியான வாலை என்பதை உங்கள் கருத்துக்குள்ளே கண்டு அறிந்து கொள்ளுங்கள். எல்லா உடம்பிலும் வாலை இருக்கும் வரை நானும் உண்டு நீயும் உண்டு நலங்களும் உண்டு குலங்களும் உண்டு. யாவையும் உண்டு பண்ணி காத்து கரை சேர்ப்பவள் என்பதை உணர்ந்து கொண்டு அவ்வாலை ஓரெழுத்தாக ஊண் பற்ற நின்ற சூட்சம தேகத்தையும் தூல தேகத்தையும் ஒரே நினைவால் ஒன்றாக்கி தியானம் செய்து தனக்குள்ளேயே உணர்ந்திருங்கள்.

**325. ஐம்புலனை வென்றவர்க்கு அன்னதானம் ஈவதாய்
நன்புலன்களாகி நின்ற நாதருக்கது ஏறுமே
ஐம்புலனை வென்றிடாது அவத்தமே உழன்றிடும்
வம்பருக்கும் ஈவதும் கொடுப்பதும் அவத்தமே.**

ஐம்புலன்களையும் வென்று தியான தவத்தில் இருக்கும் யோகிகளுக்கும் தவசிகளுக்கும் அவர்கள் இருக்கும் இடம் தேடிக் கண்டு அன்னதானம் செய்து தர்மம் கொடுப்பதுவே சிறந்தது. அது நற்புண்ணியமாக அவர்களுக்குள்ளே நின்ற நாதனாகிய ஈசனைச் சேரும். அது நமக்கும் புண்ணிய பலனைக் கொடுக்கும். அதைவிடுத்து ஐம்புலன்களை அடக்கத் தெரியாது காவி வேடம் பூண்டு பிச்சையெடுத்து ஏமாற்றி அலைந்திடும் வம்பர்களை யோகி ஞானி என எண்ணி அவர்களுக்குத் தர்மம் செய்வதும் தானம் கொடுப்பதும் வீணான பாவமே.

**326. ஆணியான ஐம்புலன்கள் அவையும்மொக்குள் ஒக்குமோ
யோனியில் பிறந்திருந்த துன்பமிக்கு மொக்குமோ
வீணர்காள் பிதற்றுவீர் மெய்மையே உணர்ந்திரேல்
ஊண் உறக்க போகமும் உமக்கெனக்கும் ஒக்குமே.**

பாவ புண்ணிங்களுக்குக் காரணமான ஐம்புலன்களும், உலகில் அனைவர்க்கும் உங்களுக்கு இருப்பது போல ஒக்க அமைந்துள்ளது. எல்லோரும் அன்னையின் வயிற்றில் பத்து மாதம் இருந்து பிறந்த துன்பங்களும் இன்பங்களும் ஒன்றாகத்தான் அமைந்துள்ளது.

உணவு, உறக்கம், போகம் என்ற அனுபவங்களும் உமக்கும் எமக்கும் ஒன்றாகவே அமைந்துள்ளது. அதுபோல் யாவர்க்கும் பொதுவாக அமைந்திருக்கும் மெய்ப்பொருளை உணராமல் வீணர்கள் தான் வேறு வேறு என்று பிதற்றித் திரிவார்கள். மெய்ப்பொருளை உணர்ந்து ஐம்புலனை வென்று மீண்டும் யோனியில் பிறவா நிலைபெற யோக ஞான தியானம் செய்து ஈசனைச் சேர முயலுங்கள்.

327. **ஓடுகின்ற ஐம்புலன் ஒடுங்க அஞ்செழுத்துளே**
நாடுகின்ற நான்மறை நவிலுகின்ற ஞானிகாள்
கூடுகின்ற கண்டித குணங்கள் மூன்றெழுத்துளே
ஆடுகின்ற பாவையாய் அமைந்ததே சிவாயமே

தனக்குள் இயங்கி ஓடிக்கொண்டிருக்கும் ஐம்புலன்களையும் அஞ்செழுத்து மந்திரத்தினால் அடக்கி நான்மறையும் சொல்லுகின்ற வேதப் பொருளையே நாடி தியானம் செய்பவர்கள் ஞானிகள். உங்களுக்குள் கூடுகின்ற கண்டித குணங்கள் ராஜஸம், தாமஸம், சாத்வீகம் என்ற முக்குணங்கள் அகாரம், உகாரம், மகாரம் என்று ஓம் எனும் ஓங்காரத்தினுள் ஆடிக்கொண்டிருக்கும் வாலை என்ற பாவையாக ஆன்மாவில் அமைந்திருப்பது சிவமே என்பதை அறிந்து அதையே தியானியுங்கள்.

328. **புவன சக்கரத்துளே பூத நாத வெளியிலே**
பொங்குதீப அங்கியுள் பொதிந்தெழுந்த வாயுவைத்
தவனசோமர் இருவரும் தாம் இயங்கும் வாசலில்
தண்டு மாறி ஏறிநின்ற சரசமான வெளியிலே.

புவன சக்கரங்களாக விளங்கும் ஆதாரங்களுக்குள் பஞ்ச பூதங்களும் இயங்கும் நாதவெளியான உடம்பிலே மூலாக்னியான மூலாதாரத்தினுள் பொதிந்துள்ள வாயுவான தனஞ்செயனை சூரிய சந்திர கலைகள் இரண்டும் ஒன்றாகி சுழுமுனை வாசலில் இயக்கி முதுகுத்தண்டின் வழியாக எழுப்பி மேலேற்றி தனக்குள்ளே மனம் உலாவும் வெளியான ஆகாயத்தில் சேர்க்க வேண்டும் இதுவே வாசியோகம்.

329. மவுன அஞ்செழுத்திலே வாசி ஏறி மெள்ளவே
வானளாய் நிறைந்த சோதி மண்டலம் புகுந்த பின்
அவனும் நானும் மெய் கலந்து அனுபவித்த அளவிலே
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே.

மவுனத்தில் இருந்து பஞ்சாட்சரத்தால் வாசியை மெள்ள ஏற்றி சுழுமுனையைக் கடந்து ஆகாய வெளிக்குள் நிறைந்திருந்த சோதி மண்டலத்தில் புகுந்து ஈசனை சேர வேண்டும். அங்கே அவனோடு நானும் மெய்ப்பொருளில் கலந்து அனுபவித்த மெய் ஆனந்த நிலையில் அவ்வீசனைத் தவிர நான் என்ற உயிரோ உடம்போ யாருமே இல்லை என்ற அறிவும், பிரபஞ்சம் முழுதுமே நிறைந்து நின்றது அவனே என்பதையும் உணருங்கள்.

330. வாளுறையில் வாளடக்கம் வாயுரையில் வாய்வடக்கம்
ஆளுறையில் ஆளடக்கம் அருமை என்ன வித்தை காண்
தாளுறையில் தாளடக்கம் தன்மையான தன்மையும்
நாளுறையில் நாளடக்கம் நானும் நீயும் கண்டதே.

வாளின் உறைக்குள்ளே வாள் அடங்கி இருப்பதைப் போல் வாய் எனும் கோபுர வாசலாகிய பத்தாம் வாசலில் உள்ள வாயுறையில் நாம் வாழ்நாள் முழுதும் விடும் மூச்சுக்காற்று அடங்கியுள்ளது. மானுட தேகத்திற்குள் நான் எனும் ஆன்மா அடங்கியிருக்கும் அருமை மிகவும் அதிசயமாக உள்ளதை காணுங்கள். நெற்பயிரின் தாளுக்குள்ளே மற்றொரு தாளும் ஒடுங்கி இருக்கின்ற தன்மையையும். ஒரு நாள் சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரை ஒரு நாள் அடங்கியிருப்பதையும் அறிந்து கொள்ளுங்கள். இதுதான் அன்றிலிருந்து இன்றும் என்றும் நீயும் நானும் கண்டு வருவது. ஆதலால் விந்தையாக அமைந்துள்ள ஆன்மாவை அறிந்து கொண்டு தியானம் செய்யுங்கள்.

331. வழுத்திடான் அழித்திடான் மாயரூபம் ஆகிடான்
கழன்றிடான் வெகுண்டிடான் கால கால காலமும்
துவண்டிடான் அசைந்திடான் தூயதூபம் ஆகிடான்
சுவன்றிடான் உரைத்திடான் சூட்ச சூட்ச சூட்சமே.

ஈசனை வழுத்தி நின்ற ஆன்மா உடலுக்குள் உறைகின்றது. ஆதலால் அது அழியாதது.

மாய ரூபம் ஆகி நமக்குள் அது நின்றது. உடலைவிட்டு கழன்றிடாது இருப்பது. பொறாமை கொள்ளாது வெகுளியாய் இருப்பது. காலா காலமும் சாகாக்காலாகவும் போகாப்புனலாகவும் வேகாத்தலையாகவும் நித்தியமாய் உள்ளது. எந்நிலையிலும் துவண்டிடாது ஒரே நிலையில் இருப்பது அசையாத தூய தீபமாக நின்றது. ஒரே அளவில் அனைத்திலும் கவன்றிடாது இருப்பது. அது வெளியாக உரைக்கப்படாதது அது இரகசியமாக மிகவும் சூட்சமாக உள்ள சூட்சம் ஆன்மா.

332. ஆகி கூ வென்றே உரைத்த அட்சரத்தின் ஆனந்தம்
யோகி யோகி என்பர் கோடி உற்றறிந்து கண்டிடார்
யூகமாய் மனக்குரங்கு பொங்கு மங்கும் இங்குமாய்
ஏகம் ஏகமாகவே இருப்பர் கோடி கோடியே.

வாலையின் அட்சரமான அ, இ, உ என்ற மூன்றெழுத்து மந்திரத்தை உச்சரிக்கும் முறையை அறிந்து கொண்டு இறை ஆனந்தம் அடையும் வழியை யோகி யோகி என்று சொல்லித் திரியும் பலர் அதையே உற்று பயிற்சி செய்து கண்டறிந்தார்களா ? அந்த மூன்று அட்சரங்களையும் முற்றும் அறிந்து அதனை உங்களுக்குள் வாசியினால் ஆகி கூ வென்று ஓதி யூகமாய் ஊதி வாசியோக செய்யும் யோகிகள் இங்கும் அங்கும் குரங்கைப் போல் தாவும் மனதை அடக்கி ஏகமாகிய பரம்பொருளை அறிந்து ஏகமனதோடு தியான தவத்தில் இருப்பார்கள்.

333. கோடி கோடி கோடி கோடி குவலயத்தோர் ஆதியை
நாடி நாடி நாடி நாடி நாளகன்று வீணதாய்
தேடி தேடி தேடி தேடி தேகமும் கசங்கியே
கூடி கூடி கூடி கூடி நிற்பர் கோடி கோடியே.

உலகில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் ஆதி என்றால் என்ன ? அதனை அடைந்தால் இறவா வரம் பெறலாம் என்பதை உணர்ந்து அதனை நாடி பூஜைகள் செய்து நாட்கள் கழிந்து வீணாகியதேயன்றி ஆதியை அறியாமலேயே உள்ளார்கள். பலர் பல வழிகளிலும் பற்பல காடு மலை கோயில் என்று தேடி அலைந்தும் அவர்கள் தேகம் மெலிந்து வாடியதேயன்றி ஆதியை அறிந்தாரில்லை. அந்த ஆதியான மெய்ப்பொருள் தன்னிடம் உள்ளதை உணராமல் தனக்குள்ளேயே நாடி தேடாமல் கூடிக் கூடி ஏங்கி நிற்பவர்கள் எண்ணற்ற கோடியே.

**334. கருத்திலான் வெளுத்திலான் பரன் இருந்த காரணம்
இருத்திலான் ஒளித்திலான் ஒன்றும் இரண்டும் ஆகிலான்
ஒருத்திலான் மரித்திலான் ஒழிந்திடான் அழிந்திடான்
கருத்தில் கீயும் கூவும் உற்றோன் கண்டறிந்த ஆதியை.**

ஆதியாக பரன் இருந்த மெய்ப்பொருள் காரணத்தை அறிந்து கொள்ளுங்கள். அது கருப்பும் இல்லை வெளுப்பும் இல்லை. இருப்பதும் இல்லை ஒளிவதும் இல்லை. ஒன்றும் இல்லை இரண்டும் இல்லை. அது பிறப்பதும் இல்லை இறப்பதும் இல்லை. அது ஒழிந்து போவதோ அழிந்து போவதோ இல்லை. அது எந்த விதமான வடிவமோ குணமோ நிறமோ இல்லாத தன்னந்தனியாக நின்ற பொருள் என்பதை கருத்தில் வைத்து தியானத்திலிருந்து வாசியினால் கீயும் கூவும் கொண்டு ஓதி ஊதி அறிவு உணர்வு நினைவு ஆகிய மூன்றையும் ஒன்றாக்கி யோகம் புரியும் சாதகர்கள் தங்களுக்குள் ஆதியாய் அமர்ந்த மெய்ப்பொருளைக் கண்டு அறிந்து கொள்வார்கள்.

**335. வாதி வாதி வாதி வாதி வண்டலை அறிந்திடான்
ஊதி ஊதி ஊதி ஊதி ஒளி மழுங்கி உளறுவான்
வீதி வீதி வீதி வீதி விடை எருப் பொருக்குவோன்
சாதி சாதி சாதி சாதி சாகரத்தை கண்டிடான்.**

வாத வித்தை செய்யும் வாதிகள் அமுரியான வழலையிலிருந்து காய்ச்சி எடுக்கும் வண்டலாகிய உப்பையும் அதை மூப்பு ஆக்குவதையும் முறையாக அறியமாட்டார்கள். வாதம் செய்கிறேன் என்று செம்பை பொன்னாக்க முயற்சித்து உலையில் வைத்து ஊதி ஊதி தனக்குள் உள்ள ஒளி மழுங்கி எதேதோ உளறுவார்கள். வீதி வீதியாகச் சென்று மாட்டின் சாணத்தைப் பொறுக்கி காய வைத்துப் புடம் போடுவார்கள். இப்படி பல வகைகளிலும் முயற்சித்து பத்து மாற்றுத் தங்கம் செய்ய ஆசைப்பட்டு உழன்றும் அதனைக் காண முடியாது நெஞ்சம் புண்ணாகி மாள்வார்கள். சொக்கத் தங்கமாக தனக்குள் விளங்கும் சோதியை உணர்ந்து வாசியோகம் செய்து கற்பம் உண்டு முப்பு முடித்த ஞானிகளே இந்த வாத வித்தையை செய்ய வல்லவர்கள்.

336. ஆண்மை ஆண்மை ஆண்மை ஆண்மை ஆண்மை கூறும்அசடரே
காண்மையான வாதி ரூபம் கால கால காலமும்
பாண்மையாகி மோனமான பாசமாகி நிற்றிடும்
நாண்மையான நரலை வாயில் நங்குமிங்கும் அங்குமே.

ஆண்மை ஆண்மையென்று ஆண்மை பேசுகின்ற அசடர்களே ! பெண்மை இல்லாத ஆண்மை வந்தது கிடையாது. உங்களின் உடலிலே காணும் ஆதியான வாலை ரூபம் தான் காலா காலமும் யாவர்க்கும் இருந்து வருகிறது. அதுவே பாங்கான வண்ணம் மூன்றாகி பசுபதி பாசமாகி நின்றிடும். அந்த வாலை நாறாத யோனியில் நாற்றம் இல்லாத நரலைவெளி வரும் வாசலில் தங்கி இருப்பதை இங்கும் அங்கும் எங்குமே அவளாள் ஆகி நிற்பதை அறிந்து கொள்ளுங்கள்.

337. மிங்கு என்ற அட்சரத்தின் மீட்டுவாகி கூவுடன்
துங்கமாகச் சோமனோடு சோமன் மாறி நின்றிடும்
அங்கமா முனைச் சுழியில் ஆகும் ஏகம் ஆகையால்
கங்குலற்றுக் கியானமுற்று காணுவாய் சுடரொளி.

மிங்கு என்ற அட்சரம் ஓரெழுத்து அதனை வாசியில் ரீங்கார ஓசையுடன் மீட்டி கூ என்ற உகாரத்துடன் கூட்டி ஊதும் போது வாசியானது துல்லியமாக லயமாகி மேலேறும் அது சந்திரகலையில் சந்திரனில் இருக்கும் மனமே அறிவாக மாறி நின்றிடும். அறிவும் மனமும் ஒன்றாகி சூக்கும அங்கத்தின் சுழிமுனையில் புகுந்து செல்வதை உணர்ந்தால் இராப்பகல் இல்லா இடத்தே சேரலாம். அப்போது அறிவு மனம் உணர்வு ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து தியானம் செய்யுங்கள். பரம்பொருள் சுடரொளியாகி ஜோதி காட்சியைக் காணுங்கள்.

338. சுடரெழும்பும் சூட்சமும் சுழிமுனையின் சூட்சமும்
அடரெழும்பி ஏகமாக அமர்ந்து நின்ற சூட்சமும்
திடரதான சூட்சமும் திரியின் வாலை சூட்சமும்
கடலெழும்பு சூட்சந்தன்னை கண்டறிந்தோன் ஞானியே.

தீயான அக்னிகலையில் சோதி எழும்பும் இரகசியத்தையும், சுழிமுனை இருக்கும் இரகசியத்தையும், சூரியனில் உயிர் எழும்பி நானாக ஏகமாக அமர்ந்து நின்ற இரகசியத்தையும்,

திடப்பொருளான அதுவாக உள்ள ஞானப்பொருளின் இரகசியத்தையும், உடம்பாகிய காயத்தின் உயிர் எனும் திரியாக வாலை இருக்கும் இரகசியத்தையும், ஏழு கடலும் அடங்கி நீராக நின்ற இரகசியத்தையும் தன்னை அறிந்து தனக்குள்ளேயே கண்டு தவம் புரிபவர்களே ஞானிகள்.

339. ஞானி ஞானி என்றுரைத்த நாய்கள் கோடி கோடியே
வானிலாத மழை நாளென்ற வாதி கோடி கோடியே
தானிலாத சாகரத்தின் தன்மை காணா மூடர்கள்
முனிலாமல் கோடி கோடி முன்னறிந்த தென்பரே.

தன்னையே ஞானி ஞானி என்று சொல்லித் திரிந்து நின்ற பேர்கள் கோடி கோடியாக நாயாகி பிறப்பார்கள். வானில் இல்லாத மழை நீரே அமுரி என்று நாள்தோறும் கூறி அதனைத் தேடித் தேடி அலையும் வாதிகளும் கோடி கோடியாக வருவார்கள். தன்னந் தனியாக தனக்குள் இருக்கும் தங்கத்தின் தன்மையை அறிந்து காணாத மூடர்கள் தங்கள் முன்னேயே உள்ளதை உணராமல் நாங்கள் அனைத்து இரகசயங்களையும் முன்னமே அறிந்தவைதான் என்று பேசிப் பேசியே மாண்டவர்களே கோடி கோடியாவார்கள்.

340. சூட்சமான கொம்பிலே சுழிமுனைச் சுடரிலே
வீச்சமான வீயிலே விபுலை தங்கும் வாயிலே
கூச்சமான கொம்பிலே குடி இருந்த கோவிலே
தீட்சையான தீவிலே சிறந்ததே சிவாயமே

உடம்பில் சூட்சமான இடத்தில் கொம்பாக உள்ளி சுழி முனையில் உள்ள தீயான சுடரிலே வீசிக்கொண்டு ஆடிய உயிரில் வாலை தங்கிப் பத்தாம் வாசலில் கூச்சம் மிகுந்திருக்கும் கொம்பிலே குரு குடியிருந்த கோயிலான கோனாகிய இடத்திலே தொட்டுக் காட்டி தீட்சை வழங்கிய சோதி விளங்கிய இடத்தில் சிறந்து இருந்த அது சிவமே என்பதை அறியுங்கள்.

341. பொங்கி நின்ற மோனமும் பொதிந்து நின்ற மோனமும்
தங்கி நின்ற மோனமும் தயங்கி நின்ற மோனமும்
கங்கையான மோனமும் கதித்து நின்ற மோனமும்
திங்களான மோனமும் சிவனிருந்த மோனமே.

ஞானம் பொங்கி நின்றது மவுனமே. உடம்பில் ஊமையெழுத்தாகி பொதிந்து நின்றது மவுனமே. உயிரில் தங்கி நின்றது மவுனமே. தயங்கி ஆடும் மனமும் மவுனமே. கங்கையான நீரானது மவுனமே. வாசி எனும் கதிக்குள் நின்றதும் மவுனமே. சந்திரனாகிய மதியும் மவுனமே. சிவன் இருந்த பஞ்சாட்சரமும் மவுனமே என்பதை அறிந்து மோனத்தில் தியானியுங்கள்.

342. **மோனமான வீதியில் முனைச்சுழியின் வாலையில்**
பானமான வீதியில் பசைந்த செஞ் சுடரிலே
ஞானமான மூலையில் நரலை தங்கும் வாயிலில்
ஓனமான செஞ்சுடர் உதித்ததே சிவாயமே.

மோனம் ஆன ஆகாய வீதியில் சுழிமுனையின் பிரம்மம் ஆக விளங்கி நின்றது வாலை. அம்பைப் போன்று கிளம்பி வரும் தனஞ்செயன் வாயு குண்டலினி சக்தியாக முதுகுத்தண்டின் வீதி வழியாக மேலேறி வாலையில் இருக்கும் செஞ்சுடராகிய சோதியில் சேரும். அதை ஞானக் கண்ணால் கண்டு அதன் மூலையில் நரலை எனும் மலம் தங்கும் வாசலில் நின்று ஓங்காரமான செஞ்சுடராக உதித்து நிற்பது சிவமே என்பதை உணர்ந்து தியானியுங்கள்.

343. **உதித்தெழுந்த வாலையும் உயங்கி நின்ற வாலையும்**
கதித்தெழுந்த வாலையும் காலையான வாலையும்
மதித்தெழுந்த வாலையும் மறைந்து நின்ற ஞானமும்
கொதித்தெழுந்து கும்பலாகி கூவும் கீயும் ஆனதே.

உச்சித் திலகமாய் உதித்தெழுந்தது வாலை. நம் உடம்பில் உயிராகி உழன்று நிற்பவள் வாலை. வாசியோக கதியில் நம் கதியாக எழுபவள் வாலை, காலையாகி கதிரவனில் நின்றவள் வாலை. யாவரும் மதிக்க நிற்பவள் வாலை. அவளை மதித்து பூசிப்பதில் எழுந்தவள் வாலை. அவளால் நமக்குள் மறைந்து நின்ற ஞானத்தை தருபவளும் வாலையே. அவளை அறிந்து வாசியினால் கதி எழுப்பி கூவும் ஹூயும் என்ற அட்சரத்தால் ஒன்றாக்கி தியானியுங்கள். அகார உகார இகார நாதத்தால் ஒன்றாகி ஓங்காரமானவளே வாலை.

344.கூவும் கீயும் மோனமாகி கொள்கையான கொள்கையை
மூவிலே உதித்தெழுந்த முச்சுடர் விரிவிலே
பூவிலே நறைகள் போல் பொருந்தி நின்ற பூரணம்
ஆவி ஆவி ஆவி ஆவி அன்பருள்ளம் உற்றதே.

கூ என்பது உகாரம், கீ என்பது இகாரம். இது அகாரத்தில் சேர்ந்து மௌனமாக நின்ற கொள்கையான அது என்ற கொள்கையை உணர்ந்திடுங்கள். மூன்றெழுத்தாக உதித்தெழுந்த வாசி சந்திர சூரிய அக்னி என்ற முச்சுடர் விரிவாக நின்றது. பூவிலே உள்ள மணம் போல நமக்குள் பொருந்தி நின்ற அதுவே பூரணம், அது ஆவியாக ஆன்மாவாகி அன்பே சிவமாக அன்பர்களின் உள்ளத்தில் உற்றிருக்கின்றது.

345. ஆண்மை கூறும் மாந்தரே அருக்கனோடும் வீதியை
காண்மையாகக் காண்பிரே கசடறக்க வல்லிரே
தூண்மையான வாதி சூட்சம் சோபமாகும் ஆகுமே
நாண்மையான வாயிலில் நடித்து நின்ற நாதமே.

ஆண்மை பேசும் மனிதர்களே ! சூரிய கலை ஓடும் வீதியை உற்று நோக்கி மெய்ப்பொருளைக் கண்டு தியானியுங்கள். உடலில் உள்ள மும்மலக் குற்றங்களையும் உயிரில் உள்ள பாவக் கறைகளையும் ஞானத்தால் அகற்ற வல்லவர்களானால் தூணாகி நிற்கும் ஆதியின் சூட்சத்தில் சோதியைக் காணலாம். நான்கு மறையாக உள்ள வாசலில் நாத விந்தாக நடித்து நின்ற நாதனைச் சேரலாம்.

346. நாதமான வாயிலில் நடித்து நின்ற சாயலில்
வேதமான வீதியில் விரிந்து முச் சுடரிலே
கீதமான ஹுயிலே கிளர்ந் நின்ற கூவிலே
பூதமான வாயிலைப் புகலறிவன் ஆதியே.

நாதம் வந்து சேர்ந்து பத்தாம் வாசலில் விந்து நிழலாக நடித்து நின்றது. வேதமான நான்கு வாசல் பொருந்திய வீதியில் விரிந்திருக்கின்ற சூரிய சந்திர அக்னி ஆகிய முச்சுடரில் நாத ஒலி வாசியில் கீதமான ஹ்ரீங்கார ஓசையுடன் கிளர்ந்தெழும்பி உடம்பினுள் உகாரத்திலே நின்றது. ஐந்து பூதங்களும் ஒன்றாகப் பொருந்தி நின்ற அகாரத்தில் புகுந்து அறிவாகிய ஆதியை அறிந்து அனைத்தையும் ஒன்றிணைத்து ஒன்றாக்கித் தியானியுங்கள்.

347. ஆவி ஆவி ஆவி ஆவி ஐந்து கொம்பின் ஆவியே
மேவி மேவி மேவி மேவி மேதினியில் மானிடர்
வாவி வாவி வாவி வாவி வண்டல்கள் அறிந்திடார்
பாவி பாவி பாவி பாவி படியிலுற்ற மாந்தரே.

ஆவி எனும் ஆன்மா ஐந்து புலன்களிலும் கலந்து ஆவியாகவே இருக்கின்றது. அது உலகில் மனிதர்களின் உடம்பில் மேவி சூட்சமமாக நின்றுள்ளது. அ, உ, இ என்பதின் உண்மைகளையும் எல்லாம் போய் எஞ்சியுள்ள வண்டல்களாய் இருந்த உப்பின் தன்மைகளையும் எவரும் அறிந்திடாமல் இடத்தில் இருக்கின்றனர். உப்பை படியில் அளந்து அதனை உண்டு வாழ்ந்து அதன் உண்மையை அறியாது பாவியாகி மாளும் மாந்தர்களே ! உப்பு என்ற மெய்ப்பொருளின் உண்மைகளை உணருங்கள்.

348. வித்திலே முளைத்த சோதி வில்வளையின் மத்தியில்
உத்திலே ஒளிவதாகி மோனமான தீபமே
நத்திலே திரட்சி போன்ற நாதனை அறிந்திடார்
வத்திலே கிடந்துழன்ற வாலையான சூட்சமே.

வித்தாகிய உப்பிலே முளைத்த சோதி வில்வளைவைப் போன்ற புருவ மத்தியில் அமர்ந்திருக்கும். அந்த உத்தமமான ஒளி அதுவாக உள்ளதை அறிந்து யோக ஞான சாதகத்தால் மவுனத்தில் தீபமாக பிரகாசிக்கச் செய்யுங்கள். அதையே உற்று நோக்கி அங்கேயே தவமிருங்கள். நத்தையின் திரட்சி போன்று நமக்குள்ளேயே அதுவாக உள்ள நாதனை அறியாது இருக்கின்றீர்கள். அது நம் உடம்பிலேயே வஸ்துவாக கிடந்து உழலும் சூட்சமாய் உள்ள வாலை என்பதை கண்டுணர்ந்து தியானியுங்கள்.

349. மாலையோடு காலையும் வடிந்து பொங்கும் மோனமே
மாலையோடு காலையான வாறறிந்த மாந்தரே
மூலையான கோணமின் முளைத்தெழுந்த செஞ்சுடர்
காலையோடு பானகன்று தங்கி நின்ற மோனமே.

காலையும் மாலையும் சந்தியா வந்தன காலங்களில் ஈசனையே ஒருமனதாய் தியானிக்க தியானிக்க அனைத்து மன ஆட்டங்களும் வடிந்து மௌனம் பொங்கி மெய்ப்பொருளில் நிற்கும்.

காலையும் மாலையும் மாறி மாறி வருவது போல் பிறப்பும் இறப்பும் தொடர்ந்து நடந்து வருவதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் உடம்பிலேயே முக்கோண வட்டத்தின் மூலையில் முளைத்து எழுகின்ற செஞ்சுடராக விளங்கும் சோதியைக் கண்டு இரவும் பகலும் எந்நேரமும் சூரியனில் தங்கி மௌனத்திலேயே நின்று தியானியுங்கள்.

350. **மோனமான வீதியில் முடுகி நின்ற நாதமே**
ஈனமின்றி வேகமான வேகம் என்ன வேகமே
கானமான மூலையில் கனிந்திருந்த வாலையில்
ஞானமான செஞ்சுடர் நடந்ததே சிவாயமே.

வாசி நடக்கும் வீதியை அறிந்து மௌனத்தினாலேயே நாத ஒலியை ஹ்ரீங்கார ஓசையில் மேலேற்ற மேலேற்ற வாசி இலயமாகி எல்லை காணமுடியா வேகத்தில் ஆறு ஆதாரங்களையும் கடந்து சகஸ்ராதளம் எனும் கபாலத்தில் சுழன்று கொண்டிருக்கும். அது இசையுடன் கூடி உச்சியில் பக்குவத்துடன் இருந்த வாலையின் நடுவில் ஞானமாக விளங்கும் செஞ்சுடராகிய சோதியில் அன்பினால் நடத்தி ஒன்றாக இணையும். அப்படி வாசியும் வாலையும் இணைந்து சோதியாக விளங்கும் மெய்ப்பொருளே சிவமாகிய பரம்பொருளே.

351. **உச்சி மத்தி வீதியில் ஒழிந்திருந்த சாதியில்**
பச்சியுற்ற சோமனும் பரந்து நின்றுலாவுமே
செச்சியான தீபமே தியானமான மோனமே
கச்சியான மோனமே கடந்ததே சிவாயமே.

அண்ட உச்சி எனும் புருவமத்தியில் சாதி பேதம் யாவும் ஒழிந்திருக்கும் மெய்ப்பொருள். அதிலே பரவி மனமாகிய சந்திரனும் பரந்து நின்று உலாவும். அம்மனத்தை அடக்கி சுழுமுனையைத் திறந்து செக்கச் சிவந்த தீபமாக சோதியில் மௌனத்தில் நின்று தியானியுங்கள். மௌனமே கச்சி எனும் சகஸ்ரதளத்தை கடந்து சிவமாய் விளங்கும் பரம்பொருளில் சேர்த்து வைக்கும்.

352. **அஞ்சு கொம்பில் நின்ற நாதம் ஆலை போல் எழும்பியே**
பிஞ்சினோடு பூமலர்ந்து பெற்றியுற்ற சுத்தமே
செஞ்சுடர் உதித்தபோது தேசிகன் சுழன்றுடன்
பஞ்சபூதம் ஆனதே பரந்து நின்ற மோனமே.

ஐந்து புலன்களில் நின்ற நாதம் வாசிப் பயிற்சியினால் ஆலையில் வரும் புகைபோல் மேல் நோக்கி எழும். அது விந்துவுடன் சேர்ந்து பூவாக மலர்ந்து உன் உடம்பிலேயே பரிசுத்தமாகி நின்றிருக்கும். அதில்தான் செஞ்சுடராக சிவம் உதித்து சுழன்று கொண்டுள்ளது. அங்கே பஞ்சபூதங்களும் பரந்து நின்று பஞ்ச வண்ணங்களில் திருவடியாக ஆகி ஊமையெழுத்தான மௌனமாக நிற்கிறது. அதனை அறிந்து அதிலே மௌனத்தில் தியானியுங்கள்.

353. **சுடுதியான கொம்பிலே தத்துவத்தின் ஹீயிலே**
அடுதியான ஆவிலே அரனிருந்த ஹுவிலே
இடுதியென்ற சோலையிலிருந்து முச்சுடரிலே
நடுதியென்று நாதமோடி நன்குற அமைந்ததே.

சடுதியில் மறையும் இவ்வுடம்பில் தத்துவங்கள் எல்லாம் ஓரெழுத்தான 'ஹீ' எனும் சிகாரத்தில் தான் இருக்கின்றது. மூலாதாரத்தீயானது முதுகெலும்பின் வழியே மேலேறி ஹ்ரீங்காரமாக ஒலிக்கும். அது அகாரமாக விளங்கும் உடம்பினில் ஹு வாகவும், ஈசன் இருந்த இடமான உகாரமான உயிரில் ஹீ எனும் அட்சரத்துடனும் வாசியாகி உட்புகும். அது இரு தீயாக விளங்கும் சந்திர சூரியன் எனும் சோலையிலிருந்து சுழுமுனை என்ற மூன்று கலைகளும் ஒன்றாகி முச்சுடராக இருக்கின்றது. அச்சுடரின் நடுவாக விளங்கும் சோதியில்தான் ஆ ஹு ஹீ என்று ஓங்கார நாதம் வாசியில் சேர்ந்து கூடி நன்றாக அமைந்திருக்கின்றது.

354. **அமையுமால் மோனமும் அரனிருந்த மோனமும்**
சமையும் பூத மோனமுந் தரித்திருந்த மோனமும்
இமையுங் கொண்ட வேகமும் இலங்கும் உச்சி மோனமும்
தமையறிந்த மாந்தரே சடத்தையுற்று நோக்கிலார்.

திருமாலும், சிவனும் அமைந்திருந்தது மோனமாகிய ஓரெழுத்தில். ஐந்து பூதங்களும் ஒன்றாகி சமைந்திருப்பதும் அதனால் உடம்பு தரித்திருந்ததும் மௌனத்தில்தான். அதனை தங்கள் உடம்பில் இமயம் எனும் மலையில் வேகங்கொண்ட மனதை வாசியாக்கி உச்சியில் இலங்கிக் கொண்டிருக்கும் மௌனத்தில் தியானித்து இறைபாதம் சேர்ந்து இன்புறுவார்களே தன்னை அறிந்த யோகிகள். மௌனத்திலேயே தியானித்து மௌனத்தையே உற்று நோக்கி தவம் புரியும் ஞானிகள் தங்கள் உடம்பையும் அதுஅழிவதையும் ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்கள்.

355. **பாய்ச்சலூர் வழியிலே பரனிருந்த சுழியிலே**
காய்ச்ச கொம்பினுனியிலே கனியிருந்த மலையிலே
வீச்சமான தேதடா விரிவு தங்கு மிங்குமே
மூச்சினோடு மூச்சை வாங்கு முட்டி நின்ற சோதியே.

மனம் பாய்ந்து செல்லும் இடமான வழியிலேதான் பரம்பொருளான ஈசன் சுழியாகிய முனையில் இருக்கின்றான். காயமான உடம்பினுள்ளே மெய்ப்பொருள் இருக்கின்றது. அது வெட்ட வெளியாக வீசிக் கொண்டிருப்பதும் ஆகாயமாக அனைத்து தத்துவங்களும் விரிவாகி தங்கி இருப்பதும் எங்கும் எல்லா உடம்பிலும் உள்ளதை உணருங்கள். அதனை அறிந்து கொண்டு வெளிச்சுவாசத்தோடு உட்சுவாசத்தை வாசிப்பயிற்சியினால் கூட்டி மேலேற்ற அது அங்கு முட்டி நின்ற தூணிலே விளங்கும் சோதியில் சேர்ந்து தியானியுங்கள்.

356. **சோதி சோதி யென்று நாடித் தோற்பவர் சிலவரே**
ஆதி ஆதி யென்று நாடும் ஆடவர் சிலவரே
வாதி வாதி யென்று சொல்லும் வம்பருஞ் சிலவரே
நீதி நீதி நீதி நீதி நின்றிடு முழுச்சுடர்.

சோதியை உண்மையென்று உணர்ந்து அச்சோதியை உணர்ந்து அச்சோதியையே நாடித் தியானித்து சோதியை அடைய முடியாமல் தோற்பவர்கள் சிலரே. அது ஆதியாக அனைவரிடமும் வாலையாக உள்ளதை அறிந்து அதையே நாடித் தேடும் ஆண்மையாளர்கள் சிலரே. வாத கற்பம் செய்து உண்டு இறைவனை அடையலாம் என்று சொல்லி வாதவித்தை செய்து வம்பு பேசுபவர்கள் சிலரே. அது ஆதியும் அந்தமும் இல்லாது எல்லோர்க்கும் பொதுவான நீதியாக நிற்பது பூரணமான முழுச்சுடர் சோதி என்பதை உணருங்கள்.

357. **சுடரதாகி யெழும்பியங்குத் தூபமான காலமே**
இடரதாய்ப் புவியும் விண்ணும் ஏகமாய மைக்க முன்
படரதாக நின்ற வாதி பஞ்ச பூத மாகியே
அடரதாக அண்டமெங்கு மாண்மையாக நின்றதே.

காலங் காலமாக நீதியாக ஒளி மிகுந்த சுடராக யாவிலும் பொருந்தி இயங்குவது தூய சோதியே.

அச்சோதியிலிருந்து நெருப்புக் கோளத்தில் இருந்தே இப்பூமியும் விண்ணும் உண்டாகி அதுவே ஏகமான மெய்ப்பொருளாகி நமக்குள் அமைந்திருந்தது. அது ஆதியாகி அனைத்திலும் படர்ந்து விரிந்து பஞ்சபூதங்கள் உண்டாயிற்று. அதுவே அகாரமான சூரியனில் இருந்து அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்மையாகி சிவனாக நின்றது.

358. நின்றிருந்த சோதியை நிலத்திலுற்ற மானிடர்
கண்டறிந்து கண்குளிர்ந்து காதலுற்றுலாவுவோர்
கண்டமுற்ற மேன்முனையின் காட்சி தன்னைக் காணுவார்
நன்றியற்று நரலை பொங்கி நாதமும் மகிழ்ந்திடும்.

இவ்வாறு அனைத்திலும் அனாதியாக நின்று கொண்டிருந்த சோதியை இப்பூமியிலே அரும்பிறப்பாக பிறந்த மனிதர்கள் தனக்குள்ளேயே கண்டு அறிவை அறிந்து கண்களில் நீர் மல்க அன்பே சிவமாய் உணர்ந்து யோக ஞான சாதகம் செய்து உலாவுவார்கள். தனக்குள் சூட்சம தேகத்தில் உள்ள அகக்கண்ணினையே நோக்கி அதன் மேல் முனையில் ஞானக் காட்சியையும் கண்டு நானாக உள்ள தன்னைக் காணுவார்கள். அங்கே ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் விலகி நரலை பொங்கி வடிந்திடும். நாதமாகிய உடலும் விந்தாகிய உயிரும் ஒன்றி மகிழ்ந்து ஒலி ஒளி கலப்பால் பேரின்பம் புலப்படும்.

359. வயங்கு மோனச் செஞ்சுடர் வடிந்த சோதி நாதமும்
கயங்கள் போலக் கதறியே கருவூறற்ற வெளியிலே
பயங்கொடின்றி யின்றியே படர்ந்து நின்ற பான்மையே
நயங்கள் கோவென்றே நடுங்கி நங்கையான தீபமே.

நிலையாக இயங்கும் மோனச் செஞ்சுடராகிய சிவத்திலிருந்து வடிந்த சோதியான ஒளியும் நாதமான ஒலியும் தோன்றியது. அதுவே விந்து நாதமாகி இப்புவியில் தொடர்ந்து கதறி அழுது பிறப்பெடுக்கின்றது. அது எதிலும் தோன்றாத சூன்ய வெளியில் பஞ்சபூதங்களும் கோள்களும் தோன்றி படர்ந்து வெகு நேர்த்தியாக நடந்து வருகிறது. இவையாவும் உடம்பிலேயே நயமாக இருந்து நடனமாடிக் கொண்டு கோனாக விளங்கும் இடத்தில் வாலையாகி அதுவே சோதியான தீபமாக உயிரில் சிறந்துள்ளது.

360. தீபவுச்சி முனையிலே திவாகரத்தின் சுழியிலே
கோபமாறு கூவிலே கொதித்து நின்ற தீயிலே
தாபமான மூலையிற் சமைந்து நின்ற சூட்சமுந்
சாபமான மோட்சமுந் தடிந்து நின்றி லங்குமே.

அச்சோதி தீபத்தின் உச்சி முனையிலே சூரியன் விளங்கும் அகாரத்தின் சுழியில் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களையும் கடந்து கோயிலாக இருக்கும் இடத்தை அறிந்து கூ என்ற உகாரத்தால் ஊதி நம் தீயாக கொதித்து நின்ற தீயான சிகாரத்தில் சேருங்கள். கோபமும், காமமும் தீயாகக் கொதித்து நிற்கும் மூலையில் வாலையாக சமைந்து நின்ற சூட்சமத்தை அறிந்து அதிலேயே தவம் செய்யுங்கள். அதனால் சாபங்களையும் பாவங்களையும் ஒழித்து மோட்ச வீடு அது என்று உணர்ந்து தியானியுங்கள். அவ்வாலையில்தான் ஆன்மா நின்று இலங்குகின்றது.

361. தேசிகன் சுழன்றதே திரிமுனையின் வாலையில்
வேசமோடு வாலையில் வியனிருந்த மூலையில்
நேச சந்திரோதயம் நிறைந்திருந்த வாறமில்
வீசி வீசி நின்றதே விரிந்து நின்ற மோனமே.

இத்தேகத்தில் ஈசன் சுழன்று ஆடிக்கொண்டிருப்பது காயத்திரி எனும் உயிரின் முனையில் நிற்கும் வாலையில். மறைவாக வேடமிட்டு நிற்கும் வாலையை அறிந்து அதன் மூலையில் அமர்ந்து இருக்கின்ற ஈசனை அன்பினால் உணர்ந்து பூரணமாக சந்திரன் நிறைந்திருந்தவாறு போல் சந்தியா வந்தணம் செய்து தியானியுங்கள். தேகத்தில் வீசி வீசி நின்று அனைத்திலும் விரிந்து தத்துவங்களாகிய அது பரம்பொருளாகிய மௌனமே என்பதை சும்மா இருந்து தவத்தில் அறியுங்கள்.

362. உட்கமல மோன மீதிலுயங்கி நின்ற நந்தியை
விக்கலோடு கீயுமாக வில்வளைவின் மத்தியில்
முட்பொதிந்த தென்னவே முடுகி நின்ற செஞ்சுடர்
கட்குவைகள் போலவுங் கடிந்து நின்ற காட்சியே.

உட்கமலமாக விளங்கும் பத்தாம் வாசலில் உள்ள ஓரெழுத்தான மௌனத்தில் இயங்கி நின்ற நந்தி என்ற நம் தீயாகிய ஆன்மாவை அறிந்து கொண்டு, வாசியை விக்கலைப் போல் தொண்டையிலிருந்து கீ எனும் சிகாரத்தில் மேலேற்றுங்கள். மூலாதார கமலத்திலிருந்து குண்டலினி சக்தியையும் பரிபாஷை இரகசியங்களையும் உணர்ந்து நம் உடம்பில் வில்வளைவாக இருக்கும் புருவ மத்தியில் முட்களின் கூர்மையைப் போல் பொதிந்து நின்ற மெய்ப்பொருளில் முடிந்து நின்று இயங்கும் செஞ்சுடரில் சேர்க்கவேண்டும். இது யோக ஞானம். அதனால் அண்டக்கல்லை அறிந்து அங்கே கல்லால மரத்தின் கலந்து காட்சி தரும் குரு அதுவென கண்டுணருங்கள்.

363. **உந்தியிற் சுழி வழியில் உச்சியுற்ற மத்தியில்**
சந்திரன் ஒளிக்கிரணந் தாண்டி நின்ற செஞ்சுடர்
பந்தமாக வில்வளைவிற் பஞ்சபூத விஞ்சையாங்
கிந்து போலக் கீயில் நின்று கீச்சீ மூச்சு மென்றதே.

உகாரமான உந்திக்கமலத்தின் சுழியாகிய பிரம்மத்தின் உச்சியான பொருளின் மத்தியில் சந்திரனின் ஒளிக்கிரணம் தாண்டி சூரியனல் வரும் செஞ்சுடர் அகார உகாரத்தைக் கடந்து நின்றதுவே சோதி. அது பந்தமாக வில்வளைவாக இருக்கும். புருவமத்தியில் பஞ்சபூதங்களும் பஞ்ச வண்ணங்களாக ஒரே இடத்தில் ஆச்சர்யமாக அமைந்துள்ளது. அது சிகாரமான ஓரெழுத்தாகி 'கீ' என்ற அட்சரத்தால் மௌனத்தில் இருந்து வாசியை ஏற்றி இறக்கி கும்பகம் செய்து நிறுத்தி தியானியுங்கள்.

364. **செச்சையென் மூச்சினோடு சிகாரமும் வகாரமும்**
பச்சையாகி நின்றதே பரவெளியின் பான்மையே
இச்சையான ஹுவிலே யிருந்தெழுந்த ஹுயிலே
உச்சியான கோணத்தில் உதித்ததே சிவாயமே.

செம்மையான வாசி மூச்சில் சிவ சிவ எனும் சிகார வகாரத்தில் நினைந்து ஏற்றுங்கள். அது பச்சை வண்ணமாக பரவெளியாக மனத்தில் பான்மையாக இருக்கின்றது. வாசியை நோக்கி ஹு என்ற உகாரத்தினால் ஏற்றி ஊத ஊத அதில் இருந்து எழுகின்ற ஹு என்ற சிகாரத்தின் மீது உச்சியான கோணத்தில் சோதியாக உதித்து நின்ற அது எனும் மெய்ப்பொருளாய் இருப்பதுவே சிவம். இதன் நுட்பத்தை உணர்ந்து சிவ சிவ எனும் வாசியால் நாதலயமாகி சோதியாகிய சிவத்தில் சேர்ந்து ஒரே நிலையில் இருந்து தியானியுங்கள்.

365. ஆறு மூலைக் கோணத்தில் அமைந்த ஒன்பதாத்திலே
நாறு மொன்று நங்கையான நாவியுந் தெரிந்திடக்
கூறு மென்று ஐவரங்குக் கொண்டு நின்ற மோனமே
பாறு கொண்டு நின்றது பரந்ததே சிவாயமே.

ஆறு ஆதாரங்களும், கூடிய ஒன்பது வாசல்கள் கொண்ட இந்த உடம்பு இருக்கும் போதும் இறக்கும் போதும் நாற்றமடிக்கின்றது. அப்படி நாறுகின்ற இவ்வுடம்பில் நாறாத வாசலில் நங்கையான வாலையாக நம் ஆவியில் உள்ளது வாலை. அதிலேயே ஐந்து பூதங்களும் இணைந்து ஐவண்ணமாக கொண்டு நிற்கும் மோனமே திருவடி. அத்திருவடியை நம் சென்னியில் வைத்து இவ்வுலகம் முழுதும் உள்ள எல்லா உயிர்களிலும் பரந்து நின்று இயக்குவது சிவமே.

366. பறந்ததே கறந்த போது பாய்ச்சலூரின் வழியிலே
பிறந்ததே பிராணனன்றிப் பெண்ணு மாணு மல்லவே
துறந்ததோ சிறந்ததோ தூய துங்க மானதோ
இறந்தபோ திலன்றதே இலங்கிடுஞ் சிவாயமே.

பறந்து கொண்டு நின்ற உயிர் இறந்த போது பாய்ச்சலாக சென்றது பத்தாம் வாசல் வழியிலே பிறக்கும்போது உயிர் பிராணனாகவே இருந்தது. அது இறையருளாலேதான் பெண்ணாகவும் ஆணாகவும் பிறந்தது. அவ்வுடம்பில் ஆணும் அல்ல பெண்ணும் அல்ல அலியும் அல்லாமல் நின்றது. அப்பிராணனே உடலுக்குள் அமைந்து சிறந்து நின்ற உயிரானது இறந்த போதில் எங்கு அகன்றது என்பதை சிந்தியுங்கள். அனைத்தும் சிவம் இருந்தே ஆட்டுவித்தது என்பதை உணருங்கள். ஆகையால் உடம்பில் இருந்து பறந்து கொண்டிருந்த உயிர் பாய்ச்சலூர் வழியே பறந்து செல்வதை அறிந்து அவ்வழியிலேயே நின்று சிவத்தைக் கண்டு அது நம் உடலில் இருக்கும் போதே உணர்ந்து தியானியுங்கள்.

367. அருளிருந்த வெளியிலே அருக்கனின்ற இருளிலே
பொருளிருந்த சுழியிலே புரண்டெழுந்த வழியிலே
தெருளிருந்த கலையிலே தியங்கிநின்ற வலையிலே
குருவிருந்த வழியினின்று ஹுவும் ஹீயுமானதே.

சிவத்தின் அருள் இருந்தது வெளியாகிய ஆகாயத் தலத்தில், சூரியன் நின்றிருப்பது இருளாகிய மனத்தில். மெய்ப்பொருளாக இருந்தது சுழியாகிய பிரமத்தில். குண்டலினி விழிப்படைந்து புரண்டு எழுந்து மேலேறுவது சுழிமுனை வழியில். இதனை எல்லாம் நன்குணர்ந்து தெளிவு பெற்று வாசிகலையால் அறிவையும் உணர்வையும் நினைவால் ஒன்றிணைத்து தியானியுங்கள். இவை எல்லாம் இயங்கி நின்றது வாலையில் தான் என்பதை குரு இருந்து சொல்லித்தரும் சூட்சும வழியில் நின்று அகாரத்திலிருந்து உகாரத்தை ஹு எனும் நாதத்தால் ஏற்றி ஹீ எனும் சிகாரத்தில் சேர்ப்பதைத் தெரிந்து தியானியுங்கள்.

368. ஆனதோரெழுத்திலே அமைந்து நின்ற ஆதியே
கானமோடு தாளமீதிற் கண்டறிவ தில்லையே
தானுந் தானு மானதே சமைந்த மாலை காலையில்
ஏனலோடு மாறுபோல் விரிந்ததே சிவாயமே.

சிகாரத்தினால் ஆன ஓரெழுத்தில் அமைந்து நின்ற ஆதியை கானல் நீரைப் போல் தன்னுள்ளேயே இருந்ததை இப்பூமியில் யாரும் கண்டு அறியாமல் இருக்கின்றார்களே. தானாகவே ஆகி தானாக நின்ற அதனை இராப்பகல் இல்லாத இடத்தே கண்டு காலையும் மாலையும் கருத்துடன் ஊன்றித் தியானியுங்கள். அது நெருப்பாறாக ஓடி விரிந்து சேர்ந்த இடமே சிவம் என்பதைக் கண்டு அறிந்து கொள்ளுங்கள்.

369. ஆறு கொண்ட வாரியு மமைந்து நின்ற தெயவமுந்
தூறு கொண்ட மாரியுந் துலங்கி நின்ற தூபமும்
வீறு கொண்ட மோனமும் விளங்குமுட் கமலமும்
மாறு கொண்ட ஹுவிலே மடிந்ததே சிவாயமே.

ஆறு உட்கொண்ட திருப்பாற் கடலும் அதில் அமைந்து நின்ற தெய்வமும், தூய்மை கொண்டு விளங்கும் மழை நீராகவும் அதிலே இருந்து துலங்கி நிற்கும் தூபச்சுடராகவும், வீறு கொண்ட விசுவரூப காட்சியாக உள்ள மௌனமாகி பிரமமும், உள்ளத்தாமரையாக விளங்கும் மனமும் எல்லாம் ஒன்றாகி அகார உகாரத்தில் மறைந்து சிவமாகும்.

370. வாயில் கண்ட கோணமில் வயங்கு மைவர் வைகியே
சாயல் கண்டு சார்ந்துந் தலை மன்னா யுறைந்ததுங்
காயவண்டு கண்டதுங் கருவூரங்குச் சென்றதும்
பாயுமென்று சென்றதும் பறந்ததே சிவாயமே.

வாயிலாக விளங்கும் கோயிலைக் கண்டு அக்கோனாகிய இடத்திலேயே ஐந்து பூதங்களும் இருந்து கொண்டு அவ்வீசனின் சாயலான சோதியைக் கண்டு அதிலேயே தியானித்து நில்லுங்கள். தலையில் மன்னனாக உறைந்து நின்ற அதாலே காயமாகிய உடம்பு தோன்றி கருவாகி வளர்ந்தது. அவ்வுடம்பில் இருந்த உயிர் போனதும் பறந்து நின்ற சிவம் பாய்ந்து மறைந்தது.

371. பறந்ததே துறந்தபோது பாய்ச்சலூரின் வழியிலே
மறந்ததே கவ்வுமுற்ற வாணா கையின் மேவியே
பிறந்ததே யிறந்த போதிற் பீடிடாமற் கீயிலே
சிறந்து நின்ற மோனமே தெளிந்ததே சிவாயமே.

உடம்பை துறந்து பறந்த சிவம் பாய்ச்சலூர் வழியிலே சென்றதை அறிந்து கொள்ளுங்கள். வாசி யோகத்தினால் வாணர்கை யாழிசையைப் போல் இடைவிடாது ஏற்றுங்கள். பிறப்பதும் இறப்பதும் அற்று மரணமிலாப் பெரு வாழ்வு பெற கீ எனும் சிகாரத்தில் சோதியாக சிறந்து நின்ற மௌனத்தில் இருந்து தவம் புரிந்து சிவத்தைத் தெளிந்து சேருங்கள்.

372. வடிவு பத்ம ஆசனத்திருத்தி மூல அனலையே
மாருதத்தினா லெழுப்பி வாசலைந்து நாலையும்
முடிவு முத்திரைப்படுத்தி மூல வீணா தண்டினால்
முளரி ஆலயங் கடந்து மூல நாடி யூடுபோம்.

பத்மாசனத்தில் அமர்ந்து மூலாதாரத்தில் கனலாக இருக்கும் குண்டலினி சக்தியை அனலாக்கி வாசிக்காற்றினால் எழுப்பி ஒன்பது வாசல்களையும் ஒக்க அடைத்து யோக முத்திரையில் இருந்து முதுகுத் தண்டின் வழியாக மேலேற்றுங்கள். மூன்று மண்டலங்களைக் கடந்து மூலநாடியான சுழுமுனையின் ஊடே செலுத்தி சிவத்தைச் சேருங்கள்.

373. அடி துவங்கி முடியளவு ஆறு மாநிலங் கடந்து
அப்புறத்தில் வெளிகடந்த ஆதியெங்கள் சோதியை
உடுபதிக்கணமுதருந்தி யுண்மை ஞான உவகையுள்
உச்சிப் பட்டிறங்குகின்ற யோகி நல்ல யோகியே.

அடியெனும் மூலாதாரத்திலிருந்து முடியெனும் சகஸ்ரதளம் வரை வாசியை ஆறு ஆதாரங்களையும் கடந்து செலுத்தவேண்டும். முப்பாலுக்கு அப்பாலாய் அப்புறத்தில் வெளிக்கு உள் கடந்த வெளியில் ஆதியாக விளங்கும் எங்கள் சோதியில் வாசியை சேர்த்து தியானிக்க வேண்டும். அதனால் அமிர்த கலை இயங்கி அம்பிகையின் அமிர்தம் உண்ணாக்கில் இறங்கி உண்மையான ஞான ஆனந்தம் கிட்டி உச்சி முதல் பாதம் உடம்பு முழுவதும் இறங்க வைத்து தியானம் செய்யும் யோகியே நல்ல யோகி என்பேன்.

374. மந்திரங்களுண்டு நீர் மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்களாவதும் மரத்திலூற லன்றுகாண்
மந்திரங்களாவது மதித்தெழுந்த வாயுவை
மந்திரத்தை யுண்டவர்க்கு மரணமேது மில்லையே.

மந்திரங்கள் உண்டு என்பதை அறிந்து அது எது என்பதை அறியாமல் பல மந்திரங்களை ஓதி மயங்குகின்ற மாந்தரே! மந்திரங்கள் என்பது மனதின் திடமே. மந்திரங்கள் மரத்தில் ஊர்வன ஊர்ந்து ஏறுவது போல் மனம் உடம்பில் ஊர்ந்து எழுந்து மெய்ப்பொருளைச் சேரவேண்டும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள். மந்திரங்களை உச்சரிக்கும் தொனியில் ஓத ஓத அது மூலாதாரத்தில் பாம்பு போல் சுருண்டு கிடந்த குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்து தனஞ்செயன் என்ற பத்தாவது வாயுவை கிளப்பி மேலேற்றி உணர்வுறு மந்திரத்தில் சேர்ப்பதுவே உண்மையான மந்திரம். அந்த மந்திரத்தால் கிடைக்கும் அமுதத்தை உண்டவர்கள் மரணம் என்பதை வென்று பிறவாநிலை பெற்று ஈசனை அடைவார்கள்.

375. மந்தரங்கள் கற்று நீர் மயங்குகின்ற மாந்தரே
மந்திங்கள் கற்ற நீர் மரித்போது சொல்வீரோ
மந்திரங்க் உம்முளே மதித்த நீறும் உம்முளே
மந்திரங்கள் ஆவது மனத்தினைந் தெழுத்துமே.

மந்திரங்கள் யாவையும் செம்மையுறக் கற்று மனப்பாடம்செய்தும் உண்மை உணராது மயங்குகின்ற மாந்தர்களே ! இதனை சாத்திர மந்திரங்கள் கற்ற நீங்கள் மரணமடைந்த போது அதனை சொல்லி மீண்டு வர முடியுமா ? மந்திரமாக இருப்பதும் உனக்குள்ளே உள்ள ஊமையெழுத்தே. அதுவே யாவரும் மதிக்கும்படி நீராக உள்ள உயிர் நின்றதும் உனக்குள்ளே உள்ள ஓரெழுத்து மந்திரமே. மந்திரங்கள் ஆவது மனதின் திடமாகி நினைவான ஓரெழுத்தில் உள்ள பஞ்சாட்சரமே என்பதை அறியுங்கள்.

376. **உள்ளதோ புறம்பதோ உயிரொடுங்கி நின்றிடம்**
மெள்ள வந்து கிட்டி நீர் வினவ வேண்டும் என்கிறீர்
உள்ளதும் புறம்பதும் ஒத்த போது நாதமாம்
கள்ள வாசலைத் திறந்து காண வேண்டும் மாந்தரே.

உயிர் இவ்வுடம்பில் உள்ளே ஒடுங்கி இருக்கின்றதா? அல்லது புறம்பாக வெளியே ஒடுங்கி நிற்கின்றதா? என்பதை மெல்ல அருகில் வந்து சொல்லவேண்டும் என்கிறீர்களே ! உயிர் உடம்பின் உள்ளே சோதியாகவும் வெளியே வாலையாகவும் இருந்து இரண்டும் ஒன்றாகிய இடத்தில் நாதமாக ஒடுங்கி நிற்கின்றது. இதனை உணர்ந்து மனமாகிய பத்தாம் வாசலை அறிந்து அதனை யோக ஞான சாதகத்தால் திறந்து காண வேண்டும் மாந்தர்களே!

377. **ஓரெழுத்து லிங்கமா யோது மட்சரத்துளே**
ஓரெழுத்து இயங்குகின்ற வுண்மையை யறிகிலீர்
மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாலெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே.

ஓரெழுத்தே லிங்கமாகி நிற்கின்றது. ஓதுகின்ற அனைத்து அட்சர மந்திரங்கள் உள்ளேயும் ஓரெழுத்து முதலாகவும், நடுவாகவும் முடிவாகவும் இருந்து இயங்குகின்ற உண்மையை அறியாமல் இருக்கின்றீர்கள். அதுவே அகார உகார மகாரமான மூன்றெழுத்தாகி ஓங்காரமாகவும் அரி அரன் அயன் என்ற மூவராகவும் விளங்கி அங்கே முளைத்து எழுகின்ற சோதியை மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களையும் உணர்ந்து நாளும் நாவுள்ளே சிவயநம என்று அஞ்செழுத்தால் ஓதி தியானியுங்கள்.

378. முத்தி சித்தி தொந்தமா முயங்குகின்ற மூர்த்தியை
மற்றுதித்த வப்புலன்களாகு மத்தி மப்புலன்
அத்தர் நித்தர் காளகண்ட ரன்பினால் அனுதினம்
உச்சரித்து ளத்திலே யறிந்துணர்ந்து கொண்மினே.

முத்திக்கும் சித்திக்கும் காரணமான ஈசன் நமக்குள்ளே மன்றில் சோதியாக உதித்து நீராக நின்று ஐம்புலன்களில் நடுவாக அஞ்செழுத்தாகி இருக்கின்றான். காள கண்டராகிய அவனையே பக்தர்களும், ஞானிகளும் அனுதினமும் அன்பினால் அஞ்செழுத்தை ஓதி தியானிப்பார்கள். நித்தியமாய் விளங்கும் அச்சோதீஸ்வரன் அஞ்செழுத்தால் சிவயநம என்று உச்சரித்து உள்ளத்திலேயே தியானித்து அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

379. மூன்றிரண்டு மைந்துமாய் முயன்றெழுந்த தேவராய்
மூன்றிரண்டு மைந்தராய் முயன்றதே யுலகெலாம்
ஈன்ற தாயும் அப்பனும் இயங்குகின்ற நாதமாய்த்
தோன்றுமோ ரெழுத்தினோடு சொல்ல ஒன்றுமில்லையே.

அகார உகார மகாரம் என்ற மூன்றாகிய ஓங்காரமும் நாத விந்து எனும் இரண்டும் சேர்ந்த பஞ்சபூதங்களாகி அதில் முயன்றெழுகின்ற சக்தியே ஈசன். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றினோடு இரு வினைகள் சேர்ந்து ஐம்புலனகளாகவும் அமைந்து மைந்தராகவும் தாயும் தந்தையாகவும் இயங்குகின்ற நாதமாகிய உடம்பே இந்த உலகமெலாம் நிறைந்துள்ளது. இவையாவும் எல்லாமும் தோன்றுவதும் இயங்குவதும் மறைவதும் ஓரெழுத்தினால்தான் என்பதையன்றி வேறு சொல்ல ஒன்றுமில்லையே.

380. வெளியுருக்கி யஞ்செழுத்தும் விந்து நாத சத்தமுந்
தளியுருக்கி நெய் கலந்து சகல சத்தியாகவும்
வெளியிலு மவ்வினையிலுமி ருவரை யறிந்தபின்
தெளிகலந்த தன்மையால் தெளிந்ததே சிவாயமே.

ஆகாய வெளியாகிய மனதை உருக்கி சிவயநம என்று அஞ்செழுத்தை ஓதி தியானிக்க விந்து நாதம் சேர்ந்து ஒளி ஒலி சத்தம் கேட்கும். தயிரைக் கடைந்து நெய் எடுப்பது போல் ஊனினை உருக்கி உயிரினைக் கடைந்து உனக்குள்ளே சகல சக்தியாக உள்ள மெய்ப்பொருளை உணருங்கள்.

வெளியான மனதையும் நல்வினை தீவினையையும் அறிந்து சத்தியான உடம்பையும் சிவனாகிய உயிரையும் ஒன்றாக்கி தியானியுங்கள். அங்கே தெளிவாக சோதி கலந்திருந்த தன்மையை உணர்ந்து அதுவே சிவம் என தெளிந்து பரம்பொருளைச் சேருங்கள்.

381. முப்புறத்தில் அப்புறம் முக்கணன் விளைவிலே
சிற்பரத்து ளுற்பனஞ் சிவாயமஞ் செழுத்துமாந்
தற்பரமுதித்து நின்று தாணுவெங்கு மானபின்
இப்புறமொடுங்கு மோடி யெங்கும் லிங்கமானதே.

சூரிய சந்திர அக்னி எனும் மூன்று மண்டலங்களுக்கு அப்புறத்தில் இருக்கும் முக்கண் ஈசன் அருளால் தான் யாவும் விளைந்தது. உனக்குள் சிற்றம்பலத்தில் உற்பனம் ஆகி உறையும் சிவத்தை அஞ்செழுத்தால் உச்சரித்து அது பஞ்சாட்சரமாக இருப்பதை அறிந்து கொள்ளுங்கள். அது தனக்குள் பரம்பொருளாய் உதித்து தானாகி நின்று தாணு எனும் ஈசனாகி உலகம் எங்கும் ஆகி உள்ளது. அதுவே உனக்குள் ஒடுங்கி ஓடி லிங்கமாக அமைந்துள்ளது.

382. ஆடி நின்ற சிவனோ ரஞ்சு பஞ்ச பூதமோ
கூடி நின்ற சோதியோ குலாவி நின்ற மூலமோ
நாடு கண்டு நின்றதோ நாவு கற்ற கல்வியோ
வீடு கண்டு விண்டிடின் வெட்டவெளி யுமானதே.

உடலில் ஆடி நின்ற சீவனே ஓரெழுத்தாகவும் அஞ்செழுத்தாகவும் பஞ்சபூதங்களாய் விரிந்து நின்றது. அதிலே கூடி நின்றது சோதியாகவும் அங்கே குலாவி நின்ற மூலப்பொருளான ஆதியாகவும் உள்ளது. எல்லா நாட்டிலும் கண்டு நின்றது அதுவே. நாவில் கற்றுத் தெளிந்த மெய்கல்வி அதுவே. அது இருக்கும் சூட்சும வீட்டைக் கண்டு உணர்ந்து சொன்னால் அதுவே வெட்டவெளியாக இருப்பதை நமக்குள் அறியலாம்.

383. உருத்தரித்த போது சீவன் ஒக்க நின்ற வுண்மையுந்
திருத்தமுள்ள தொன்றிலுஞ் சிவாய மஞ்செழுத்துமாம்
இருத்து நின்றுறுத் தடங்கி யோக போக மானபின்
கருத்துனின்று தித்ததே கபாலமேந்து நாதனே.

உருத்தரித்த போதே சிவனும் சீவனும் ஒன்றாகி நின்ற உண்மையை உணர்ந்து அது உனக்குள் திருத்தமுள்ளதாக ஒன்றில் ஓரெழுத்தாகவும் சிவமாகவும் அஞ்செழுத்தாகவும் ஆகி நிற்பதை அறிந்து கொள்ளுங்கள். அந்த ஒன்றிலேயே இருத்தி நின்று வாசியால் ஏற்றுங்கள். மனம் அடங்கி ஒன்றில் ஐம்புலன்களும் ஒடுங்கி கபாலம் ஏந்தும் நாதனாகிய ஈசனையே கருத்தில் வைத்து துதித்து ஏகப் பொருளையே தியானியுங்கள். அதுவே உங்களுக்கு பேரின்பத்தைக் கொடுத்து ஆனந்தம் தரும்.

384. கருத்தரித் துதித்த போது கமல பீடமானதுங்
கருத்தரித் துதித்த போது காரணங்களாவதும்
கருத்தரித் துதித்த போது காணிரண்டு கண்களாய்க்
கருத்தனின்றுதித்ததே கபாலமேந்து நாதனே.

கருத்தரித்து உதித்த போது உயிர் உடம்பில் தாமரையான கமல பீடத்தில் இடங்கொண்டது மெய்ப்பொருள். அதுவே அனைத்திற்கும் காரண குருவாக ஆனது. கருவாக உருவான போதே காணுகின்ற இரண்டு கண்களே முதலில் தோன்றி உடல் ஆனது. கருவாக தரிக்கும் போதே என் கருத்தில் நின்று உதித்தது கபாலம் ஏந்தும் நாதனாகிய ஈசனே.

385. ஆன வன்னி மூன்று கோணமாறிரண்டும் எட்டிலே
ஆன சீவனஞ்செழுத் தகார மிட்டலர்ந்ததும்
ஆன சோதி யுண்மையும் அனாதியான வுண்மையும்
ஆன தான தான தாய வலமாய் மறைந்திடும்.

வன்னியாகிய தீயே சூரிய சந்தர அக்னி கலைகளாக மூன்று கோணமாகி நின்று எண்சாண் உடம்பாகியது. அதிலே ஆன சீவன் அஞ்செழுத்தாகி அகாரத்திலே அமர்ந்திருந்தது. அகாரத்திலே ஆன சோதியின் உண்மையையும் அதிலே அனாதியான ஈசனின் உண்மையையும் உணர்ந்து தியானியுங்கள். அதுவே தனக்குள்ளே தானாகி வலமாய் நின்ற மெய்ப்பொருளால் அனைத்து அவலங்களும் மறைந்திடும்.

386. ஈன்றெழுந்த வெம்பிரான் திருவரங்க வெளியிலே
நான்ற பாம்பின் வாயினால் நாலு திக்கு மாயினான்
மூன்று மூன்று வளையமாய் முப்புரங் கடந்தபின்
ஈன்றெழுந்த அவ்வினோசை யெங்குமாகி நின்றதே.

திருவரங்கம் எனும் வெளியிலே எம்பிரானாகிய ஈசன் சிகாரத்தில் எழுந்து நிற்கின்றான். நான்கு திசைகளாக ஆகி நான் என்ற பாம்பாக பத்தாம் வாசலில் ஆடி நிற்கின்றான். ஆறு ஆதாரங்களையும் சூரிய சந்திர அக்னி மண்டலமான முப்புறங்களையும் கடந்த பின் ஈம் என்ற அவ்வின் ஓசை நாதமாகவும் ஒளி சோதியாகவும் எங்கும் அவனே ஆகி நிற்கின்றான்.

387. எங்குமெங்கு மொன்றலோ வீரேழு லோக மொன்றலோ
அங்கு மிங்கு மொன்றலோ அனாதியான தொன்றலோ
தங்கு தாபரங்களுந் தரித்த வார தொன்றலோ
உங்களெங்கள் பங்கினில் உதித்ததே சிவாயமே.

எங்கெங்கும் ஈரேழு உலகத்திலும் அங்கும் இங்கும் அனாதியாக என்றும் நித்தியமாய் உள்ளது ஒன்றதான். இப்பூமியில் விளையும் தாவரங்களிலும் உயிர் தரிப்பது ஒன்றுதான். அந்த ஒன்றாகிய பரம்பொருளே உங்களிடமும் எங்களிடமும் உடம்பில் பங்கு கொண்டு சோதியாக உதித்து நின்றது சிவமே என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

388. அம்பரத்தி லாடுஞ் சோதியான வன்னி மூலமாம்
அம்பரமும் தம்பரமும் அகோரமிட்டலர்ந்ததும்
அம்பரக் குழியிலே அங்கமிட்டு உருக்கிட
அம்பரத்தி லாதியோட மர்ந்ததே சிவாயமே.

உடலுக்குள் நின்றுலாவி ஆடுகின்ற சோதியான தீயே அனைத்திற்கும் மூலம். உடலுக்குள் உயிர் அகாரத்தில் அமைந்திருக்கின்றது. உடம்பில் உள்ள உயிரை அறிந்து பக்தியால் அங்கம் குலைந்து யோக ஞான சாதகத்தால் உருக்கவும் நினைந்து தியானியுங்கள். உடம்பிலேயே ஆதியாக உள்ள மெய்ப்பொருளில் சோதியாக அமர்ந்திருப்பதே சிவம்.

389. வாடிலாத பூ மலர்ந்து வண்டுரிசை நாவிலே
ஓடி நின்றுரு வெடுத்துகாரமாய லர்ந்ததும்
ஆடியாடி யங்கமு மகப்படக் கடந்த பின்
கூடி நின்று லாவுமே குருவிருந்த கோலமே.

வாடாத பூவாகமலர்ந்திருப்பது அது. வண்டைப் போல் நாவிலே ரீங்காரமிட்டு ஓடி நின்று உருவெடுத்து உகாரமாய் மலர்ந்திருந்தது. அதனை உடலுக்குள் மேலும் கீழும் அகார உகாரத்தினால் ஏற்றி இறக்கி வாசியை செலுத்தி சூட்சம தேகம் கடந்தபின் கோனாகிய இடத்தில் சோதியில் கூடி நின்று உலாவுவது மெய்குரு இருந்த கோலமே.

390. **விட்டடி விரைத்ததோ வேருருக்கி நின்றதோ**
எட்டி நின்ற சிவனுமீரேழு லோகங் கண்டதோ
தட்டுருவமாகி நின்ற சதாசிவத் தொளியதோ
வட்ட வீடறிந்த பேர்கள் வான தேவராவரே.

கடைசி மூச்சை விட்டு உயிர் போனதால் உடல் விரைத்து மரணம் நேர்ந்தது. பின் இருவினைகளைப் பற்றி மீண்டும் பூமியில் பிறப்பெடுக்கின்றது. உடம்பை விட்டு நின்ற உயிர் மீண்டும் உடல் பெற்று பதினான்கு உலகங்களையும் கண்டது. இப்படி எத்தனை லோகங்களிலுமும் எப்படி பிறப்பெடுத்தாலும் உருவமாகி நின்ற அது சதாசிவத்தின் ஒளியினால் தான் இவ்வுடம்பு ஜனன மரண வயப்படுகிறது. இவ்வுடம்பில் வட்ட வீடாக விளங்கும் பிரமத்தை அறிந்தவர்கள் இப்படி பிறப்பு இறப்பு வயப்பட்டு உழல்வதை உணர்ந்து மீண்டும் பிறவாமை என்ற ஆன்மாவை ஈடேற்றி தவம் புரிந்து நிலை பெற்று வானில் உள்ள தேவர்களாவார்கள்.

391. **வானவர் நிறைந்த சோதி மாதுடக் கருவிலே**
வான தேவரத்தனைக்குள் வந்தடைவர் வானவர்
வானகமும் மண்ணகமும் வட்ட வீடறிந்த பின்
வானெலா நிறைந்து மன்னு மாணிக்கங்களானவே.

வானகத்தில் ஈசனாகவும் நிறைந்த சோதி மானுடக் கருவில் உயிருக்குள் அமைந்து உருவானது. வான தேவர்கள் அனைவரும் அச்சோதியாகிய மெய்ப்பொருளில் அமைந்து உறைந்து வானாகிய வெளியில் வந்தடைவார்கள். அதனை அறிந்து தனக்குள்ளேயே அமைந்து நின்ற வானகத்தையும் மண்ணகத்தையும் வட்ட வீடாகிய பிரமத்தில் நின்று யோக ஞானம் செய்து தியானிப்பவர்கள் மனிதரில் மாணிக்கங்களாக திகழ்ந்து வானில் நிறைந்து மின்னும் நட்சத்திரங்கள் ஆவார்கள்.

**392. பன்னிரண்டு கால் நிறுத்திப் பஞ்ச வண்ணமுற்றிடின்
மின்னியே வெளிக்குனின்றுளே வேறிடத்தமர்ந்ததுந்
சென்னியாந்தலத்திலே சீவனின்றியங்கிடும்
பன்னியுன்னி யாய்ந்தவர் பரப்பிரமமானதே.**

பன்னிரண்டு அங்குலம் சூரியகலையில் இருந்து வெளியேறும் காற்றை கும்பகம் செய்து நிறுத்தி சிவயநம என மௌன பஞ்சாட்சரத்தை ஐந்து வண்ணங்கள் கொண்ட திருப்பாதத்தில் வாசியை ஏற்றுங்கள். அங்கு மின்னிய வண்ணம் நின்ற தீ வெளிக்குள் இருந்ததும் அத்தீயே உள்ளே சோதியாக அமர்ந்திருப்தையும் அறிந்து அறிவையும் உணர்வையும் நினைவையும் ஒன்றாக்கித் தியானியுங்கள். சென்னி எனும் தலையில் உள்ள சகஸ்ரதலத்தில் சீவனாகிய உயிரும் சிவனாகிய சோதியும் நின்று இயங்குகின்றது. இதனை வாசியோகம் பண்ணி பரம்பொருள் ஒன்றையே எண்ணி தியானித்து ஆய்ந்தவர்கள் பரம்பொருளைச் சேர்ந்து பரப்பிரம்மம் ஆவார்கள்.

**393. உச்சி கண்டு கண்கள் கட்டி உண்மை கண்ட தெவ்விடம்
மச்சு மாளிகைக்குள்ளே மானிடங் கலப்பிரேல்
எச்சிலான வாசலும் ஏகபோக மாய்விடும்
பச்சை மாலும் ஈசனும் பறந்ததே சிவாயமே.**

பரப்பிரமம் ஆன உச்சியைக் கண்டு கண்களை மூடி தியானித்து உண்மையான மெய்ப்பொருளைக் கண்டது எந்த இடம். நம் உடம்பிலேயே மச்சு மாளிகையான தலைக்குள்ளே உள்ள உயிரை அந்த இடத்திலேயே அறிவு உணர்வு நினைவு என்று மூன்றையும் ஒன்றாக்கி கலந்து தியானியுங்கள். அங்குதான் ஆனந்தம் கிடைக்கும். அந்த இடத்திலேயே பச்சை வண்ணமாகிய திருமாலும் பொன்னார் மேனியாகிய ஈசனும் தங்கி பறந்து கொண்டிருப்பதையும் இருவரும் ஒருவராகி சிவம் ஆகி இருப்பதையும் அறிந்து உணரலாம்.

**394. வாயிலிட்டு நல்லுரிசை யட்சரத் தொளியிலே
கோயிலிட்டு வாவியு மங்கொம்பிலே யுலர்ந்தும்
ஆயிலிட்ட காயமு மனாதியிட்ட சீவனும்
வாயுவிட்ட வன்னியும் வளர்ந்ததே சிவாயமே.**

வாசியை வாயினால் இழுத்து அகார உகார அட்சரத்தை ஒலித்து ஒளியில் நடத்துங்கள். கோயிலாக விளங்கும் ஓங்கார வாசலில் உயிர் தங்கியருப்பது சிகாரமான கொம்பிலே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். மாயையான உடம்பும் அனாதியான உயிரும் வாசியால் நடக்கும் நாதத்தால் நம் தீயாக விளங்கும் சோதியில் இணைத்து தியானியுங்கள். அதனால் உயிர் வளர்ந்து சிவத்தை சேரும்.

395. **அட்சரத்தை யுச்சரித் தனாதியங்கி மூலமாய்**
அட்சரத்தை யுந்திறந்து சோரமிட்டலர்ந்ததும்
அட்சரத்தி லுட்கர மகப்படக் கடந்த பின்
அட்சரத்தி லாதியோ டமர்ந்ததே சிவாயமே.

ஓம் என்ற அட்சரத்தை உச்சரித்து உணர்ந்து ஓத அதில் அனாதியாக இயங்கிய சிகாரமே அனைத்திற்கும் மூலமாக இருக்கின்றது. அதனை யோக ஞானத்தால் அறிந்து அகார உகார அட்சரத்தால் திறந்து 'ம்' என்ற அட்சரத்தில் சோதி அமர்ந்திருப்பதை உணருங்கள். ஓம் என்ற அட்சரத்தில் உட்பொருள் உணர்ந்து ஓரெழுத்தை அறிந்து மாயையைக் கடந்த பின் அந்த ஓங்காரத்தில் ஆதியோடு அமர்ந்திருந்த சிவபதம் சேருங்கள்.

396. **கோயிலுங் குளங்களும் குறியினிற் குருக்களாய்**
மாயிலும் மடியிலு மனதிலே மயங்குறீர்
ஆயனை யரனையும் அறிந்துணர்ந்து கொள்விரேல்
தாயினுந் தகப்பனோடு தானமர்ந்த தொக்குமே.

கோயிலும் குளங்களும் தனக்குள் குறியாக விளங்கும் மெய்க்குருவை அறிவதற்கே அமையப் பெற்றுள்ளது. அந்த உண்மையை உணராமல் உலக மாயையிலும் பெண்ணின் மடியிலும் விழுந்து மனம் போனபடி சென்று பின் மனதிலேயே மயங்கி நிற்கிறீர். ஆயனாகிய நாராயணனையும் அரனாகிய நடராஜனையும் தனக்குள்ளேயே இருப்பதை அறிந்து தியானித்து உணர்ந்து கொள்ளுங்கள். அதுவே தாயாகவும் தகப்பனாகவும் தானாகவும் அமர்ந்திருப்பது நான் என்ற ஈசனாகவும் இருப்பது மெய்ப்பொருளே.

397. கோயிலெங்கும் ஒன்றல்லோ குளங்கள்நீர்கள் ஒன்றல்லோ
தேயு வாயு ஒன்றலோ சிவனுமங்கே ஒன்றலோ
ஆய சீவன் எங்குமாய் அமர்ந்துவார தொன்றலோ
காய மீதறிந்த பேர்கள் காட்சியாவர் காணுமே.

கோயில் எங்கிலும் தெய்வம் உண்டு என்பதை உணர்த்தவே ஒரே விதமாக அமைக்கப்பட்டுள்ளது. குளங்கள் யாவிலும் உள்ள நீரும் ஒன்றே அல்லவா. தேயுவாகிய நெருப்பும் வாயுவாகிய காற்றும் உள்ள இடம் ஒன்றல்லவா. அங்கே சோதியாக உள்ள சிவனும் ஒன்றல்லவா. உலகில் உயிர்த்த உயிர்கள் எங்குமாய் உடம்பில் அமர்ந்து இருப்பதும் ஒன்றாகத்தானே அமைந்துள்ளது. உடம்பில் உள்ள உயிரை அறிந்து சிவத்தை உணர்ந்து யோக ஞானம் செய்பவர்கள் ஞானியாக விளங்கி யாவருக்கும் காட்சியாவர். கண்டு கொள்ளுங்கள்.

398. காது கண்கள் மூக்கு வாய் கலந்த வார தொன்றலோ
சோதியிட்டெடுத்ததுஞ் சுகங்களஞ்சு மொன்றலோ
ஓதி வைத்த சாத்திர முதித்து வார தொன்றலோ
நாத வீடறிந்த பேர்கள் நாதராவர் காணுமே.

காது கண்கள் மூக்கு வாய் ஆகிய யாவும் கலந்து நின்ற இடம் மெய்யில் ஒன்றுதான். சோதியினால் தீயாக உதித்து எண்சாண் உடம்பு எடுத்ததும் அந்த உடம்பில் அடையும் இன்பமாகிய அஞ்செழுத்தும் ஒன்றுதான். ஓதி வைத்த சாத்திரங்கள் யாவிலும் உதித்த நாதமும் ஒன்றுதான். அந்த நாதம் போய் ஒடுங்கும் வீடாகிய சோதியை அறிந்து அதையே தியானிக்கும் யோகிகள் ஏக நாதனாகிய ஈசனைச் சேர்ந்து குருநாதர்கள் ஆவார்கள். கண்டுகொள்ளுங்கள்.

399. அவ்வுதித்த அட்சரத்தி னுட்கலந்த அட்சரம்
சவ்வுதித்த மந்தரஞ் சம்புளத்திருந்ததால்
மவ்வுதித்த மாய்கையால் மயங்குகின்ற மாந்தர்காள்
உவ்வுதித்த தவ்வுமா யுருத்தரித்த உண்மையே.

அ எனும் முதல் எழுத்துக்குள் முன்பு உதித்த ஓரெழுத்து அட்சரத்தின் உட்கலந்து நின்ற அட்சரம் சிகாரம்.

தொண்டைச் சவ்வில் உதித்து ஓம் எனும் மந்திரமே நம் உள்ளத்தில் கோயிலாக இருக்கின்றது. மவ் எனும் ம் உதித்த மாய்கையால் மயங்குகின்ற மாந்தர்களே ! உவ் எனும் உகாரத்தில் உயிராகவும் அவ் எனும் அகாரத்தால் உடம்பாகவும் உருத்தரித்தது உண்மையே.

400. **அகார மென்னு அக்கரத்தி லக்கர மொழிந்ததோ**
அகாரமென்னு மக்கரத்தி லவ்வு வந்துதித்ததோ
உகாரமும் மகாரமும் ஒன்றி நன்று நின்றதோ
விகாரமற்ற ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.

அகாரம் என்னும் தூல தேகத்தில் சூட்சும தேகம் ஒளிந்து உள்ளது. அகாரம் என்னும் உடம்பில் உகாரம் ஆகிய உயிர் உலாவி நிற்கின்றது. உகாரம் என்னும் உணர்வும் மகாரமாகிய மனமும் அறிவில் ஒன்றி நடுவான சோதியாக நன்றாக நிற்கின்றது. இப்படி அகார உகார மகாரம் சேர்ந்து ஓங்காரமாகவும், உடல். பொருள், ஆன்மாவாகவும், அறிவு உணர்வு மனமாகவும், எட்டும் இரண்டும் சேர்ந்த ஒன்றாகவும் உள்ள உண்மைகளை மன விகாரம் அற்ற ஞானிகளே விரிவாக விளக்கி உரைக்க வேண்டும்.

401. **சத்தியாவது உன்உடல் தயங்கு சீவன் உட்சிவம்**
பித்தர்காள் இதற்கு மேல் பிதற்றுகின்ற தில்லையே
சுத்தி ஐந்து கூடமென்று சொல்லிறந்த தோர்வெளி
சத்தி சிவமுமாகி நின்று தண்மையாவது துண்மையே.

சக்தியாக இருப்பது உன் உடம்பு. அதிலே தங்கி இயங்குவது உன் உயிர். அந்த உயிருக்குள் உட்சோதியாக இருப்பது சிவம், இதையறியா பித்தர்களே ! இதற்கு மேல் ஒன்று இருப்பதாக சொல்லிப் பிதற்றுவதற்கு ஏதும் இல்லையே. இதுவே பஞ்சபூதங்களாய் ஐந்து புலன்களாக சுற்றி அமைந்து சொல்லிறந்த மௌன வெளியில் ஓரெழுத்தாக விளங்கும் வாலையை தியானியுங்கள். அச்சக்தியே சிவம் ஆகி நின்ற தன்மையை உணருங்கள். அச்சோதியே உண்மை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

402. **சுக்கிலத் துளையிலே சுரோணிதக் கருவுளே**
முச்சதுர வாசல் தன்னில் முளைத்தெழுந்த வோட்டினில்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்கு ஞான தீபமாய்
உச்சரிக்கும் மந்திரம் ஓம் நமச்சிவாயமே.

சுக்கில சுரோணித கலப்பால் உருவாகி கருவான உயிர் உடம்பில் பனிரண்டு அங்குல அளவு செல்லும் சூரியகலை மூச்சில் சூரிய வாசலில் முளைத்தெழுந்து உச்சியில் நின்று உலாவுகின்றது. அது மெய்யாகிய உடம்பில் சதுரவாசல் எனும் பத்தாம் வாசலில் உள்ள மெய்ப்பொருளில் ஞானதீபமாக சிவம் விளங்கிக் கொண்டிருக்கிறது. அது ஓம் நமசிவய என்ற மந்திரமாக இருப்பதை அறிந்து உணர்ந்து நினைந்து உச்சரித்து யோக ஞான சாதகத்தால் தியானியுங்கள்.

**403. அக்கரம் அனாதியல்ல ஆத்துமம் அனாதியல்ல
புக்கிருந்த பூதமும் புலன்களும் அனாதியல்ல
தக்கமிக்க நூல்களும் சாத்திரம் அனாதியல்ல
ஒக்க நின்று உடன்கலந்த உண்மைகாண் அனாதியே.**

உடம்பு அனாதி இல்லை. ஆன்மா அனாதி இல்லை. இவைகளில் புகுந்திருக்கும் பஞ்சபூதங்களும் ஐம்புலன்களும் அனாதி இல்லை. தகுதி பொருந்திய மெய் நூல்களும் சாஸ்திரங்களும் அனாதி இல்லை. உயிரும் உடம்பும் ஒன்றி நின்று அறிவு உணர்வு நினைவு என்ற மூன்றும் இணைந்து அருட்பெருஞ்சோதியாக உடல் கலந்து உலாவும் சிவமே அனாதி என்ற உண்மையை அறிந்து அத்திருவடி ஒன்றையே பற்றி தியானியுங்கள்.

**404. மென்மையாகி நின்ற தேது விட்டு நின்று தொட்டதேது
உண்மையாக நீயுரைக்க வேணும் எங்கள் உத்தமா
பெண்மையாகி நின்ற தொன்று விட்டு நின்று தொட்டதை
உண்மையாயுரைக்க முத்தி உட்கலந்திருந்ததே.**

மென்மையாகி நின்ற அது நம் உடம்பில் எது ? உடம்பை விட்டு நின்றும் உயிரைத் தொட்டு நின்றும் உள்ளது எது ? உள்தமராக உள்ள அது என்ன என்பதை உண்மையாக உரைக்க வேண்டும் உத்தமரே. பெண்மையாகி வாலையாக நின்ற ஒன்றை உடம்பில் ஒட்டியும் ஒட்டாமலும் தொட்டும் தொடாமலும் இருந்தவாறு உயிரைத்தொட்டு நின்ற அது என்ன என்பதை அறிந்து உண்மையாய் சொல்லிவிட்டால் அதற்குள்ளேயே முத்தியும் சித்தியும் உட்கலந்து சோதியாய் இருக்கின்றது.

**405. அடக்கினால் அடங்குமோ அண்டம் அஞ்செழுத்துளே
உடக்கினால் எடுத்த காயம் உண்மையென்று உணர்ந்து நீ
சடக்கிலாறு வேதமும் தரிக்க ஓதிலாமையால்
விடக்கு நாயு மாய வோதி வேறு வேறு பேசுமோ.**

அஞ்செழுத்துக்குள்ளேயே உலகம் யாவும் அடங்கியுள்ளது. அஞ்செழுத்தினால் அண்டங்கள் யாவையும் அடக்கலாம். விந்துவால் விளைந்த இவ்வுடம்பை உண்மையென்று உணர்ந்து அஞ்செழுத்தினால் ஓதி உயர்வடையுங்கள். சடங்குகளாலும் சாஸ்திரங்களாலும் வேதங்கள் முழுதும் ஓதி வந்தாலும் ஆற்று நீரை நாய் நக்கி குடிப்பது போல்தான். நாயாக அலைந்து உங்கள் உடம்புக்குள்ளே அஞ்செழுத்தாய் அமைந்ததை நன்கு ஆராய்ந்து ஓதி வேறு பேச்சில்லாது மௌனத்தில் ஊன்றி தியானியுங்கள்.

**406. உண்மையான சக்கரம் உபாயமா யிருந்தும்
தண்மையான காயமுந் தரித்த ரூபமானதும்
வெண்மையாகி நீறியே விளைந்து நின்றதானதும்
உண்மையான ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.**

உண்மையாக உள்ள சக்கரமே அனைத்திற்கும் காரணமாயிருந்தும் அந்த வெட்டாத சக்கரத்தின் தன்மையினால் தான் இரவு பகல் என்ற காலங்களும் உருவாகி சந்திர சூரியனாக உருத்தரித்து உடம்பு உருவமானது. அச்சக்கரத்தில் உள்ள விந்தே வெண்மையான நீராகி அதுவே வித்தாகி விளைந்து இவ்வுலகமெங்கும் நிறைந்து நிற்கின்றது. உண்மையான ஞானிகளே இது எவ்விதம் என்பதை உலகிற்கு விரிவாக உபதேசியுங்கள்.

**407. எள்ளகத்தில் எண்ணெய் போல எங்குமாகி எம்பிரான்
உள்ளகத்திலே இருக்க ஊசலாடு மூடர்காள்
கொள்ளை நாயின் வாலைக் குணக்கெடுக்க வல்லிரேல்
வள்ளலாகி நின்ற சோதி காணலாகும் மெய்ம்மையே**

எள்ளுக்குள் இருக்கும் எண்ணெய் போல எங்கும் எல்லாமாகவும் ஆகி நிற்கிறான் எம்பிரானாகிய ஈசன் நம் உள்ளமாகிய கோயிலில் நம்பிரானாகிய ஈசன் இருப்பதை உணராமல் உலகமெங்கும் தேடி ஊசலாடும் மூடர்களே!

திருட்டு நாயின் வாலைப்போல் ஆடிக்கொண்டு இருக்கும் மனதை அறிந்து அதன் குணத்தை அடக்கி தியானிக்க வல்லவர்களானால் எல்லாம் கொடுக்க வல்ல வள்ளலாகிய ஈசன் நமக்குள்ளே சோதியாக நின்றதைக் காணலாகும். அதுவே உண்மையாக விளங்கும் மெய்ப்பொருள்.

408. **வேணுமென்ற ஞானமும் விரும்புகின்ற நூலிலே**
தாணுவுண்டங் கென்கிறீர் தரிக்கிலீர் மறக்கிலீர்
தாணுவொன்று மூலநாடி தன்னுள் நாடியும்முளே
காணுமன்றி வேறியாவுங் கனா மயக்க மொக்குமே.

ஞானம் அடைய வேண்டும் என்று விரும்பி அது சொல்லப்படும் நூல்களை எல்லாம் படித்து விட்டு மட்டும் தாணுவென்ற ஈசன் தனக்குள்ளே அகாரமாக இருக்கின்றான் என்று சொல்கிறீர்கள். ஆனால் தன்னை அறிந்து தனக்குள் இறையை உணர்ந்து தம்மை மறந்து தியானித்து ஈசனைத் தரிசித்து இன்புறாமல் இருக்கின்றீர்கள். தானாகி நின்ற ஒன்று நானாக மூல நாடியில் இருப்பதை தனக்குள் தேடி நாடி அது மெய்ப்பொருளாக இருந்து உனக்குள்ளே இறைக்காட்சி காண்பதையன்றி மற்றவை யாவும் கற்பனையேயன்றி கனாவில் தோன்றும் மயக்கமாகவே இருக்கும்.

409. **வழக்கிலே யுரைக்கிறீர் மனத்துளே தவிக்கிறீர்**
உலக்கிலாது நாழியானவாறு போலு மூமைகாள்
உழக்கு நாலு நாழியானவாறு போல மும்முளே
வழக்கிலே யுரைக்கிறீர் மனத்துளீசன் மன்னுமே.

வெளியில் பல கதைகளையும் தத்துவங்களையும் வழக்காகப் பேசி தனக்குள்ளே இறைவனை அறிய உபதேசிக்கிறீர்கள். ஆனால் உண்மையில் அவன் இருக்கும் இடம் அறியாது மனத்திற்குள்ளேயே மருகித் தவிக்கிறீர்கள். கடல் நீரைச் சுருக்கி உப்பாக்கி அளப்பது போல் உண்மையை உணராமல் ஊமையெழுத்தை அறியாமல் இறைத்தன்மையை தெரிந்து கொள்ளாமல் மனத்திற்குள் ஊமைகளாய் உழல்கின்றீர்கள். கடல் நீரிலிருந்து உப்பாக பரவியிருந்து உப்பான பொருளாக ஆனது போல் கடவுள் தன்மையிலிருந்து உங்கள் உடலுக்குள்ளே உப்பான

மெய்ப்பொருளாய் இறைவன் இருப்பதை உணர்ந்து உம் என்று உள்ளுக்குள் வாசி ஏற்றி வழக்கமாக தியானிக்க மனமே வாசியாகி அதற்குள்ளேயே ஈசன் மறைந்து ஆடிக்கொண்டு உள்ளதை அறிந்து கொள்ளலாம்.

410. அறத்திறங்களுக்கு நீ அண்டம் எண் திசைக்கும் நீ
திறத்திறங்களுக்கு நீ தேடுவார்கள் சிந்தை நீ
உறக்கு நீ உணர்வு நீ உட்கலந்த சோதி நீ
மறக்கொணாத நின்கழல் மறப்பினுங் குடிகொளே.

தர்ம காரியங்கள் யாவும் நீ. உலகமும் எண் திசைகளும் நீ. திறமை நிறைந்த செயல்கள் யாவும் நீ. உண்மையை தேடுகின்றவர்களின் சிந்தையில் அறிவாகவும் நிற்பவன் நீ. உறக்கமும் நீயே உணர்வும் நீயே. என் உட்கலந்து உறையும் சோதி நீ. எக்காலத்திலும் மறக்க முடியாத நின் திருவடிகளை அறியாது மறந்துபோனாலும் என் தலையில் நீ மறக்காமல் குடிகொண்டு விளங்கவேண்டும் ஈசனே.

411. ஆடுகின்ற எம்பிரானை அங்குமிங்கு நின்று நீர்
தேடுகின்ற வீணர்காள் தெளிவ தொன்றை ஓர்கிலீர்
நாடி நாடி உம்முளே நவின்று நோக்க வல்லிரேல்
கூடொணாத தற்பரங் குவிந்து கூடலாகுமே.

நமக்குள் சிற்றம்பலமாகிய இடத்தில் ஆடிக்கொண்டிருக்கின்ற எம்பிரானாகிய ஈசனை அங்கும் இங்கும் நின்று நீராகத் தேடுகின்ற வீணர்களே ! தெளிவான நீராக நின்ற ஒன்றை அறிந்து உணர்ந்து அந்த ஒன்றை ஒன்றி தியானியுங்கள். அதனையே நாடி நாடி உம் என்ற உகாரத்தை உணர்ந்து அகாரத்தையே நோக்கி ஒரே நினைவுடன் தியானிக்க வல்லவர்களானால் எவருக்கும் கூடி கிடைக்காத தற்பரமாகிய மெய்ப்பொருள் கூடி எல்லாமாக குவிந்து நிற்கும் சோதியை சேரலாம்.

412. சுற்றி ஐந்து கூடமொன்று சொல்லிறந்த தோர்வெளி
சத்தியுஞ் சிவமுமாகி நின்ற தன்மை யோர்கிலீர்
சத்தியாவது உம்முடல் தயங்கு சீவன் உட்சிவம்
பித்தர்காள் அறிந்துகொள் பிரான் இருந்த கோலமே.

சுற்றி ஐந்து பூதங்களும் ஒன்றாகி கூடியிருக்கும் இடத்தில் சொல்லிறந்த ஓர் எழுத்தாக விளங்கும் வெளியில் சத்தியும் சிவமும் ஒன்றாகி நின்ற மெய்ப்பொருளின் தன்மையை உணர்ந்து ஓர்ந்து நில்லுங்கள். அதிலிருந்தே சத்தியாக ஆகியதே உங்கள் உடம்பு. உடம்பில் நின்று இயங்கும் உயிரில் உட்சோதியாய்உள்ளதே சிவம். இப்படி ஈசன் இருந்த கோலத்தை அறிந்து கொள்ளாமல் பித்தராக திரியாதீர்.

413. அகாரமானது அம்பலம் அனாதியானது அம்பலம்
உகாரமானது அம்பலம் உண்மையானது அம்பலம்
மகாரமானது அம்பலம் வடிவமானது அம்பலம்
சிகாரமானது அம்பலம் தெளிந்ததே சிவாயமே.

அகாரம் அம்பலமாக இருக்கும் இடத்தில்தான் அனாதியான ஈசன் கோயில் கொண்டுள்ளான். உகாரம் அம்பலமாகிய இடத்தில்தான் ஈசன் உண்மையாக உள்ளது. மகாரம் மனதாக அமைந்து சோதியே வடிவமாகி அமைந்தது. சிகாரமே ஆதியும் நடுவும் அந்தமும் ஆகி நின்றதை அறிந்து தெளிந்து தியானியுங்கள் அதுவே சிவம் என்பதை உணர்ந்து.

414. சக்கரம் பறந்த தோடிச் சக்கரம் போல பலகையாய்ச்
செக்கிலாடு மெண்ணெய் போலச் சிங்கு வாயு தேயுவும்
உக்கிலே யொளி கலந்து யுகங்களும் கலக்கமாய்ப்
புக்கிலே புகுந்த போது போன வாற தெங்ஙனே.

வண்டிச்சக்கரம் கழன்று போய் ஓடியதால் வெறும் பலகையாய் கிடக்கும் வண்டியைப் போல் சக்கரமாக விளங்கிய வாலை பறந்தோடியதால் உயிர் போய் உடம்பு கிடக்கின்றது. செக்கினில் ஆடி எடுக்கும் எண்ணெய் போல உடம்பினில் சிகாரத்தால் காற்றையும் நெருப்பையும் இணைத்து உயிரிலே இருக்கும் சோதியிலே கலந்து யுகங்கள் தோறும் நில்லுங்கள். பூவிலே புகுந்திருந்த ஆன்மா கலக்கமாய் உடலைவிட்டு போனது எவ்வாறு என்பதை அறிந்து கொண்டு ஈசனையே தியானியுங்கள்.

415.வளர்ந்தெழுந்த கொங்கை தன்னை மாயமாமென்றெண்ணி நீர்
வளங்கொள் சீவராமுடம்பை உண்மையாகத் தேர்வீர்காள்
விளங்கு ஞான மேவியே மிக்கோர் சொல்லைக் கேட்பிரேல்
களங்க மற்று நெஞ்சுளே கருத்து வந்து புக்குமே.

இளம் பெண்களின் வளர்ந்தெழுந்த கொங்கைமேல் மயங்கி வீழும் ஆசையை விட்டு அதை மாயம் என்று எண்ணியிருங்கள். அதைப் போன்ற கொள்கையாய் இருந்து எல்லா வளங்களும் கொண்ட உயிர் உறையும் சூட்சம உடம்பை உணர்ந்து அதுவே உண்மையென்று அறிந்து யோகஞான சாதகங்களைப் பயின்று பாடுபடுங்கள். ஞானம் விளங்கும் பெரியோர்களின் ஞான உபதேசங்களைக் கேட்டு நடந்து கொள்ளுங்கள். மெய்யான இடத்திலிருந்து மெய்ப்பொருளை உணர்ந்;து தியானம் செய்யுங்கள். அதனால் மனக்குற்றங்கள் யாவும் நீங்கி கலங்கமில்லாத நெஞ்சக் கோவிலில் வாழும் ஈசனோடு சேர்ந்து இறைக்கருத்து தானே வந்து புகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

416. **நாலு வேத மோதுகின்ற ஞானமொன் றறிவீரோ**
நாலு சாம மாகியே நவின்ற ஞான போதமாய்
ஆல முண்ட கண்டனும் அயனுமந்த மாலுமாய்ச்
சால வுன்னி நெஞ்சுளேதரித்ததே சிவாயமே.

நான்கு வேதங்களும் சொல்கின்ற ஞானப்பொருள் ஒன்று உங்களிடமே உள்ளது என்பதை அறிவீர்களா ? நான்கு சமயங்களிலும் குருநாதன் சொல்லித்தந்த வண்ணம் யோக ஞான சாதகங்களை செய்து தியனத்திலிருந்து அந்த ஞானப் போதப் பொருளை உணருங்கள். ஆலகால விஷத்தை உண்ட நீலகண்டனும் பிரமனும் விஷ்ணுவும் மூவரும் அமர்ந்திருந்த நெஞ்சமாகிய உள்ளக் கோவிலின் உள்ளே ஒன்றாகிய சிவமாய் அமைந்திருப்பதை அறிந்து அதையே எப்போதும் எண்ணி தவம் புரிந்து சிவயநம என்று இருந்திடுங்கள்.

417. **சுத்தமென்று சொல்வதுஞ் சுருதி முடிவில் வைத்திடீர்**
அத்தனித்த மாடியே அமர்ந்திருந்த தெவ்விடம்
பத்தி முற்றி அன்பர்கள் பரத்திலொன்று பாழது
பித்தரே இதைக் கருதிப் பேசலா தெங்ஙனே.

எல்லா நூல்களும் முடிவாகச் சொல்வது இறைவன் பரிசுத்தமான இடத்தில் இருக்கிறான் என்பதைத்தான் கூறுகின்றது. இப்படியான இடத்தில் அத்தனாகிய ஈசன் நித்தியமாய் நின்று ஆடிய வண்ணம் அமர்ந்திருந்து நம் உடலில் எந்த இடம் ? அதுவே பரிசுத்தம். அதனை அறிந்து அதிலேயே பக்தி வைத்து பற்றி நின்று

முக்தி அடையும் மெய்யன்பர்கள் பாழ் என்ற சூன்யமாக நின்ற ஒன்றே பரம்பொருள் என்பதை அறிந்து கொண்டு அடைவார்கள். பித்தர்களே ! இதையே கருதி மெய்ப்பொருளை அடைவதையன்றி வேறு பேசுவதானல் பயன் இல்லை.

418. **எங்ஙனே விளக்கதற்குள் ஏற்றவாறு நின்று தான்**
எங்ஙனே யிருந்தருளி யீசனேச ரென்பரேல்
அங்ஙனே யிருந்தருளும் ஆதியான தற்பரம்
சிங்கமண்மி யான போலத் திரிமலங்களற்றவே.

நம்மில் சோதியான விளக்கின் உள்ளே வாசியை இருத்தி ஏற்றி நில்லுங்கள். அங்கே ஈசன் எழுந்தருளி அன்பே சிவமாய் அமர்ந்திருக்கின்றான். அப்படி மறைவாக இருந்தருளுகின்ற ஈசன் நமக்குள் ஆதியாக வாலையில் தற்பரம் பொருளாக இருக்கின்றான். அவனை அறிந்து தற்பரத்திலேயே நின்று அவனையே நினைந்து தியானித்தால் தவராஜ சிங்கங்களாக மாறி யானையைப் போன்ற அறிவு சொரூபங்களாகி ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அற்று இறவா நிலைப் பெறுவார்கள்.

419. **அற்றவுள் ளகத்தையும் அலக்கிடும் மெழுகிடும்**
மெத்த தீப மிட்டதிற்பிற வாத பூசையேத்தியே
நற்றவம் புரிந்து ஏகநாதர் பாதம் நாடியே
கற்றிருப்பதே சரிதை கண்டு கொள்ளு மும்முளே.

மும்மலங்கள் அற்ற உள் மனதில் அழுதும் அரற்றியும் உருகியும் அவனையே எண்ணி இருந்திடுங்கள். அம்மனதில் மெல்லிய தீபமாகிய சோதியில் மீண்டும் பிறவாத உண்மையான பூசையாகிய சூரியகலையில் வலதுபக்க பூவில் வாசியை ஏற்றி சேர்த்திடுங்கள். ஏகநாதனாகிய ஈசனின் பாதத்தை நாடியே மனம் வைத்து நற்றவம் புரிந்திடுங்கள். நீங்கள் கற்க வேண்டிய மெய்க்கல்வி இதுவே என்பதை மெய்ப்பொருளிலேயே நின்று கண்டு கொள்ளுங்கள். எல்லா உண்மையும் உங்களுக்குள்ளேயே உள்ளதை உணர்ந்து தியானியுங்கள்.

420. **பார்த்து நின்ற தம்பலம் பரமனாடு மம்பலம்**
கூர்த்து நின்ற தம்பலம் கோரமான தம்பலம்
வார்த்தையான தம்பலம் வன்னியான தம்பலம்
சீற்றமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே.

பார்த்து நின்ற அதுவே சிற்றம்பலம். பரமனாகிய நடராஜன் ஆடிக்கொண்டிருப்பதே பொன்னம்பலம். கூர்ந்து கவனிக்க கூர்மையாக நின்ற அதுவே அம்பலம். கோயிலாகி கோனாகிய அம்பலம். சொல்லும் வார்த்தைகளின் பொருளாகிய அம்பலம். வன்னி எனும் தீயாகியதே அம்பலம். சீற்றம் தோன்றும் சிகாரமான அம்பலம். எல்லாம் அறிந்து அறிவாக வெளியாக தெளிவாக இருப்பது சிவாயமே.

421. சென்று சென்றிடந் தொறும் சிறந்த செம்பொன்னம்பலம்
அன்று மின்று நின்றதோ ரனாதியான தம்பலம்
என்று மென்றிருப்பதோர் இறுதியான அம்பலம்
ஒன்றியொன்றி நின்றது ளொழிந்ததே சிவாயமே.

பிறந்து இறந்து மீண்டும் பிறந்துழலும் நமக்குள் இருக்கும் சோதி யாவர்க்கும் நின்று சென்றஇடங்களில் சிறந்த செம்மையான பொருளாகியது. பொன்னம்பலம் அன்றும் இன்றும் யாவர்க்கும் ஒன்றாகி என்றும் நித்தியமான அனாதியான ஈசன் விளங்கும் அம்பலம். என்றென்றும் நிலையாகவும் உறுதியாகவும் இறுதியாகவும் உள்ள ஓரெழுத்தான அம்பலம். அதிலேயே ஒன்றி ஒன்றாகி நின்று தியானியுங்கள். ஒன்றான சோதியில் ஒன்றி ஒழிந்திருப்பதுவே சிவம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

422. தந்தை தாய் தமரும் நீ சகல தேவதையும் நீ
சிந்தை நீ தெளிவு நீ சித்தி முத்தி தானும் நீ
விந்து நீ விளைவு நீ மேலதாய வேதம் நீ
எந்தை நீ இறைவ நீ என்னையாண்ட ஈசனே.

என் தந்தையும் தாயும் சுற்றமும் நீயே. சகல லோக தேவதைகளும் நீயே. என் சித்தத்திலே இருந்த சிந்தை நீயே. தெளிவான அறிவு நீயே. அதில் விளைந்த நாதமான உயிரும் நீயே. வேதங்கள் உரைக்கும் மேலான தெய்வம் நீயே. எனக்குள் இருந்த எந்தை நீயே. ஏக இறைவன் நீயே. என்னையும் மெய்ப்பொருளாகக் கொண்டு என்னை ஆண்டு கொண்டவன் ஈசனே.

423. எப்பிறப்பிலும் பிறந்திறந்தழிந்த ஏழைகாள்
இப்பிறப்பிலும் பிறந்தென்ன நீறு பூசுறீர்
அப்புடன் மலமறுத்தே ஆசை நீக்க வல்லிரேல்
செப்பு நாத வோசையிற் றெளிந்து காணலாகுமே.

எல்லாப் பிறப்பிலும் பிறந்து இறந்து அழிந்த ஏழைகளே ! பெறுதற்கரிய இம்மானிடப் பிறப்பில் பிறந்த நீங்கள் இறவா நிலை பெற்று இறைவனை அடைய நினையாது நீராக நின்ற நிலையை உணராது சாம்பலை திருநீறு என்று உடம்பு முழுவதும் பூசித்திரிகிறீர். நீரால் விளைந்த மும்மலங்களையும் அறுத்து மூவாசைகளையும் நீக்கி தியானிக்க வல்லவர்களானால் ஞானிகள் செப்பும் நாத ஓசை உங்களுள் தோன்றி சோதியில் சேர்வதை உணர்ந்து தெளிவாகக் காணலாம்.

424. **மந்திரங்கள் கற்று நீர் மயங்குகின்ற மாந்தரே**
மந்திரங்கள் கற்று நீர் மரித்த போது சொல்விரோ
மந்திரங்களும் முளே மதிக்க நீறு மும்முளே
மந்திங்களாவது மனத்தினைந் தெழுத்துமே.

பற்பல மந்திரங்களைக் கற்று ஓதியும் உண்மையை உணராமல் மயங்குகின்ற மனிதர்களே! இத்தனையும் படித்தும் செத்துவிட்டால் அம்மந்திரங்களை உங்களால் சொல்ல முடியுமா ? ஆதலால் உடலில் உயிர் இருக்கும்போதே மந்திரங்களாக உங்களுக்குள் நின்ற ஓங்காரத்தையும் அதனுள் இருந்த ஊமை எழுத்தையும் அறிந்து கொள்ளுங்கள். உயிர் இருந்தால்தான் யாவரும் மதிப்பார்கள். அந்த உயிருள் நீராக நின்ற ஈசனை உணர்ந்து அவனையே மனத்தில் இருத்தி அஞ்செழுத்தை நினைந்து தியானியுங்கள். மந்திரங்களாவது உங்கள் மனத்தில் நின்ற ஓரெழுத்தே. அதுவே அஞ்செழுத்தாக இருப்பது உண்மை.

425. **எட்டு யோக மானதும் இயங்குகின்ற நாதமும்**
எட்டு வக்கரத்துளே உகாரமும் மகாரமும்
விட்டலர்ந்த மந்திரம் வீணாத் தண்டின ஊடுபோய்
அட்டவக்கரத்துளே அமர்ந்ததே சிவாயமே.

அட்டாங்க யோகம் செய்வதனால் வாசி இலயத்தினால் இயங்குகின்ற நாதமும், அகாரமாகிய எண்சாண் உடம்பின் உள்ளே உகாரமாகிய உயிரும் மகாரமாகிய மனமும் சேர்ந்து ஓங்காரமாகி விட்டு எழுந்த ஓரெழுத்து மந்திரம் வாசியினால் முதுகுத் தண்டின் நடுவாக ஊர்ந்து மேலேறி அகாரமான சூரியனில் அமர்ந்திருந்த சோதியைச் சேரும். அதுவாக இருந்ததே சிவம் என அறிந்து தியானியுங்கள்.

426. பிரான் பிரான் என்று நீர் பினாத்துகின்ற மூடரே
பிரானை விட்டு மெம்பிரான் பிரிந்தாவற தெங்ஙனே
பிரானுமாய்ப் பிரானுமாய்ப் பேருலகந் தானுமாய்ப்
பிரானிலே முளைத்தெழுந்த பித்தர் காணுமும்முடல்

உடம்பை விட்டுப் பிராணன் போகப்போகும் பொழுது கடைசி நேரத்தில் எம்பிரானே என பினாத்துகின்ற மூடர்களே ! உங்கள் உடம்பிலேயே பிராணனை விட்டுப் பிரியாதிருந்த எம்பிரானை உணராமலேயே இருந்தீர்கள். உடம்பை விட்டு உயிர் எவ்வாறு பிரிந்தது என்பதை அறிந்து கொள்ளுங்கள். நம் பிராணனில் இருந்து எம்பிரானே இந்த பேருலகம் எங்கும் தானாகி நின்ற ஈசனால் முளைத் தெழுந்ததே உங்கள் உடம்பு என்பதைக் கண்டு கொண்டு அவ்வீசன் மீதே பித்தாக இருந்து உணருங்கள்.

427. ஆதியில்லை அந்தமில்லை ஆன நாலு வேதமில்லை
சோதியில்லை சொல்லுமில்லை சொல்லிறந்த தூவெளி
நீதியில்லை நேசமில்லை நிச்சயப் படாததும்
ஆதி கண்டு கொண்ட பின் அஞ்செழுத்து மில்லையே.

பரம்பொருளான ஈசனுக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. அனாதியாக என்றும் நித்தியமாய் உள்ள அப்பொருள் தோன்றுவதும் இல்லை, மறைவதும் இல்லை. நான்கு வேதங்களால் ஆனதும் இல்லை, அது சோதியான தீயும் இல்லை. எந்த சொல்லும் அது இல்லை சொற்கள் யாவும் இறந்த தூய மனவெளி, அதற்கென்று எந்த நீதியும் இல்லை. அன்பும் இல்லை இப்படித்தான் என்று சொல்லி நிச்சயிக்கப்படாதது இப்படியாக எல்லாம் உள்ளதும் இல்லாததாகவும் விளங்கும் ஆதியான வாலையைக் கண்டு கொண்டபின் ஓரெழுத்தைத் தவிர அஞ்செழுத்தும் இல்லையே.

428. அம்மையப்பனப்பு நீரமர்ந்த போதறிகிலீர்
அம்மையப்பனான நீராதியான பாசமே
அம்மையப்ப னின்னை யன்றி யாருமில்லை யானபின்
அம்மையப்பனின்னையன்றி யாருமில்லை இல்லையே.

அம்மை அப்பனின் அப்புவான நீரில் நீங்கள் அமர்ந்திருந்த போது அறியாமல் இருந்தீர்கள். அம்மை அப்பனாக நீரே ஆதியான பாசமாகவும் மனமாகவும் ஆனதை அறிந்து கொள்ளுங்கள்.

யாவையுமே அவ்வீசனிடம் ஒப்படைத்து சரணடைந்து அம்மை அப்பன் நின்னையன்றி வேறு யாரும் இல்லை என்று அவன் திருவடியையே தியானித்து இருங்கள். அம்மை அப்பனாக அவனே இருந்து ஆண்டு கொண்டு அருள்வான் பின் அவனையன்றி வேறு யாரும் இல்லை இல்லையே.

429. **நூறு கோடி மந்திரம் நூறு கோடி யாகமம்**
நூறு கோடி நாளிருந் தூடாடினாலு மென்பயன்
ஆறு மாறு மாறுமா யகத்தி லோரெழுத்ததாய்ச்
சீரை யோத வல்லிரேல் சிவ பதங்கள் சேரலாம்.

நூறு கோடி மந்திரங்களையும் நூறு கோடி ஆகமங்களையும் கடைபிடித்து நூறுகோடி நாட்களிலிருந்து ஊடாடி ஒழுகி ஓதி வந்தாலும் அதனால் என்ன பயன் உண்டாகும். இறவா நிலையடைந்து இறைவனைச் சேர இதனால் எந்த பயனும் இல்லை. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பதினெட்டு படிகளையும் முறையாக அறிந்து சிகாரத்தை உணர்ந்து அதனை சீராக வாசியினால் மேலேற்றி ஊத வல்லவர்களானால் சோதியில் கலந்து சிவபதங்கள் சேரலாம் என்ற உண்மையை உணர்ந்து தியானியுங்கள்.

430. **முந்த வோரெழுத்துளே முளைத்தெழுந்த செஞ்சுடர்**
அந்த வோரெழுத்துளே பிறந்த காய மானதும்
அந்த வோரெழுத்துளே யேகமாகி நின்றதும்
அந்த வோரெழுத்தையு மறிந்துணர்ந்து கொள்ளுமே.

ஆதிக்கும் முந்தையான சோதியான ஓரெழுத்திலிருந்து முளைத்து எழுந்த செஞ்சுடராகியது நெருப்பு. அந்த ஓரெழுத்திலிருந்தே நீராக வந்து உயிராகி பிறந்து உடம்பு ஆனது. அந்த உடம்பிலேயே ஓரெழுத்தாக இருந்து அதற்குள் ஏகமாக சிவம் நின்றது. இவ்வாறு ஓரெழுத்தாய் உலகிலும் உயிரிலும் இயங்கும் ஈசனாகிய மெய்ப்பொருளையும் நன்கு அறிந்து உங்களுக்குள் உணர்ந்து கொள்ளுங்கள்.

431. **கூட்டமிட்டு நீங்களும் கூடி வேத மோதுவீர்**
ஏட்டகத்துளீ சனுமிருப்ப தென்னெழுத்துளே
நாட்டமிட்டு நாடிடு நாலு மூன்று தன்னுளே
ஆட்டகத்துளாடிடும் அம்மை ஆணை உண்மையே.

யாகம் செய்கின்றோம் யோகம் கற்றுத் தருகிறோம் வாருங்கள் வளம் பெறலாம் என நீங்கள் கூட்டங்களைக் கூட்டி கூட்டாகச் சேர்ந்து வேதங்கள் படித்து ஓதுகின்றீர்கள். நூல் ஏடுகளின் உள்யேயும் நம் கூடான வீட்டின் உள்ளேயும் ஈசன் எந்த எழுத்தில் இருக்கின்றான் என்பதை அறிந்து உணர்ந்தீர்களா ? ஈசனையே அடைய நாட்டங்கொண்டு அவனையே நாடி நின்று தியானித்து நான்கு அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்பவைகள் உள்ள நான்கு வாசலையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அகார உகார மகாரமான மூன்றும் முக்கோண வட்டச்சக்கரமாகவும் தனக்குள்ளே ஆடிக்கொண்டிருப்பதை அறிந்து தியானியுங்கள். நிலையில்லாத உடம்பில் நிலையாக நின்று ஆடிடும் வாலை அம்மையின் மீதே ஒரே நினைவோடு நின்று ஈசனை அடையுங்கள். இதுவே இறவா நிலையடைய உண்மையான வழி என அம்மையின் மீது ஆணையிட்டுச் சொல்கின்றேன்.

432. காக்கை மூக்கை யாமையா ரெடுத்துரைத்த காரணம்
நாக்கையூன்றி யுள் வளைத்து ஞான நாடி யூடுபோய்
ஏக்கை நோக்க அட்சர மிரண்டெழுத்துமேத் திடிற்
பார்த்த பார்த்த திக்கெலாம் பரப்பிரம்மானதே.

காகபுசுண்டர், திருமூலர், அகத்தியர் போன்ற சித்தர்கள் ஆமைபோல் ஐம்புலனடக்கி தவம் புரிந்து எடுத்துரைத்த உண்மையை உணர்ந்து பரம்பொருள் இருந்த காரணத்தை அறிந்திடுங்கள். நாக்கை உள்மடக்கி உண்ணாக்கில் ஊன்றி ஞான நாடியான சுழுமுனையில் நின்று அகார உகார அட்சரத்தால் வாசியை ஏற்றி ஏகமான ஈசனையே எண்ணி தியானித்திருங்கள். பார்த்த அதையே பார்த்திருக்க பார்க்கும் திசைகள் யாவிலும் பரப்பிரம்மமே நிறைந்து நின்று ஆனதை உணருங்கள்.

433. கொள்ளொணாது குவிக்கொணாது கோதறக் குலைக்கொணாது
அள்ளொணாது அணுகொணாது ஆதிமூலம் ஆனதைத்
தெள்ளொணாது தெளியொணாது சிற்பரத்தினுற் பனன்
விள்ளொணாத பொருளையான் விளம்புமாற தெங்ஙனே.

எங்கேயும் வாங்கிக் கொள்ள முடியாது அது. மனதை குவிக்க ஒண்ணாதது. கோவெனும் பசுவாகி கோனான பதியாக கோயிலான இடத்தில் குலையாமல் இருப்பது அது. அளவிடமுடியாதது அணுகவிடாதது அது. ஆதிமூலமான வஸ்துவாக ஆனது. தெள்ளத் தெளிவான தெளிந்த பொருளானது அது. சிற்றம்பலத்தில் உற்பனமாகி பொன்னார் சோதியாக ஈசன் விளங்கும் சொல்லக் கூடாத அதுவான மெய்ப்பொருளை யான் சொல்லுவது எவ்வாறு? அது அறிந்து உணர்ந்து நினைந்து அனுபவித்த உண்மைப் பொருளாகும்.

434. **ஓசையுள்ள கல்லைநீர் உடைத்திரண்டு செய்துமே**
வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீருஞ் சார்த்துறீர்
ஈசனுக்குகந்த கல் எந்தக்கல்லு சொல்லுமே.

ஓசையுள்ள ஒரே கருங்கல்லை இரண்டு பாகமாக உடைத்து ஒன்றை வாசல் படி கல்லாகவும் ஒன்றை செதுக்கி சிலையாகவும் செய்து வைக்கிறீர்கள். வாசலில் வைத்த கல்லை மழுங்கவே காலால் மிதிக்கிறீர்கள். பூஜைக்கு வைத்த கல்லில் பல வகையான வாசனை திரவியங்களையும் நீரில் கலந்து அபிஷேகம் செய்து பூக்களால் அலங்காரம் செய்து வணங்குகின்றீர்கள். இவைகளில் ஈசன் உகந்திருப்பது எந்தக் கல்லில் என்பதை சொல்லுங்கள். அவன் உனக்குள் இருக்கும் அண்டக்கல்லில் அல்லவோ உகந்து உள்ளான் என்பதை உணர்ந்து தியானியுங்கள்.

435. **ஒட்டு வைத்துக்கட்டி நீருபாயமான மந்திரம்**
கட்டுப்பட்ட போதிலுங் கருத்தனங்கு வாழுமே
எட்டு மெட்டு மெட்டுளே யியங்குகின்ற வாயுவை
வட்டமிட்ட யவ்விலே வைத்துணர்ந்து பாருமே

அண்டக்கல்லே கட்டாத லிங்கமாக ஒட்டு வைத்துக் கட்டிய நீரே நாம் உய்வடைய உதவும் உபாயமான ஓரெழுத்து மந்திரமாக உள்ளது. அதற்குள் கட்டுப்பட்டு சோதியான கர்த்தனாகிய ஈசன் அங்குதான் வாழ்கின்றான். இதனை எட்டாகிய அகாரமான சூரிய கலையில் இயங்குகின்ற பிராண வாயுவை பிராணாயாமத்தால் வட்டமிட்டு சக்கரமாக உள்ள யகாரமான சதாசிவம் விளங்கும் ஆஞ்ஞா கமலத்தில் கும்பகம் செய்து நினைவை நினைவுகொண்டு நினைந்து தியானத்தில் வைத்து உணர்ந்து கொள்ளுங்கள்.

436. இந்தவூரி லில்லை யென்றெங்கு நாடி யோடுறீர்
அந்த வூரிலீசனும் அமர்ந்து வாழ்வதெங்ஙனே
அந்தமான பொந்திலாரில் மேவி நின்ற நாதனை
அந்தமான சீயிலவ்வில் அறிந்துணர்ந்து கொள்ளுமே.

இந்த ஊரில் ஈசன் இல்லையென்று எண்ணி எங்கெங்கோ அவனை நாடி தேடி ஓடுகின்றீர்களே ! இந்த ஊரில் இல்லாத ஈசன் அந்த ஊரில் மட்டுமா அமர்ந்து வாழ்கிறான். உனக்குள்ளேயே மிகவும் இரகசியமான பத்தாம் வாசலில் உள்ள பொந்தில் உயிரை மேவி நின்ற நாதனை அறிந்து இரகசிய ஓரெழுத்தான சிகாரத்தை உணர்ந்து அது அவ்வெனும் அகாரத்தில் இருப்பதால் அதிலேயே தியஸனத்தில் வைத்து அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

437. புக்கிருந்த தும்முளே பூரியிட்ட தோத்திரம்
தொக்குசட்சு சிங்குவை யாக்கிராணன் சூழ்ந்திடில்
அக்குமணியும் கொன்றை சூடி அம்பலத்துளாடுவார்
மிக்க சோதி யன்புடன் விளம்பிடாது பின்னையே.

உங்களுக்குள் புகுந்திருந்து பூவானதும் பூரணமாய் நின்றதுவும், ஆன சிவத்தையே தோத்தரித்து வாசியினால் தொக்கி நின்று சிங்கெனும் ஓரெழுத்தால் மேலேற்றி சூரியனை கிராணன் பிடிப்பது போல் சூரியனையே சூழ்ந்திருங்கள். உருத்திராட்ச மணியும் கொன்றை மாலையும் சூடிய சங்கரன் உங்கள் அம்பலத்துள் ஆடுவார். அருட்பெருஞ்சோதியான ஈசன் அன்பே சிவமாய் அமர்ந்திருந்த உண்மையை உணர்ந்து கொண்டு மௌனத்திலேயே இருந்து அனுபவித்து ஆனந்தம் அடையுங்கள்.

438. பின்னெழுந்த மாங்கிசத்தை பேதையர் கண் பற்றியே
பின்பு மாங்கிசத்தினால் போக மாய்கை பண்ணினால்
துன்புறும் வினைகள் தாம் சூழ்ந்திடும் பினென்றலோ
அன்புராயிருந்து பேர்களாறு நீந்தல் போல் விடே.

பேதைப் பெண்களின் உடம்பில் பின்பு தோன்றி எழுந்த சதையின் மேல் ஆசை கொண்டு அவர்களின் கண் வலையில் சிக்கி காமமுற்று தோலால் மூடிய சதையில் விருப்பமுற்று மாய்கையாகிய சிற்றின்பம் ஒன்றையே பெரிதாகக் கொண்டு போகத்திலேயே வீழ்ந்திருந்தால் அதனால் உங்களைத் துன்புறுத்தும் வினைகளும் பிணிகளும் சூழ்ந்து வாழ நேரிடும். அதனால் அன்பே சிவமாய் இருந்து சிற்றின்ப வேட்கையை விட்டு ஆற்றில் நீந்தி அக்கரை அடைவது போல் இப்பிறவிக் கடலை யோக ஞான சாதகத்தால் கடந்து இறைவனடியை சேர்ந்திடுங்கள்.

439. **விட்டிருந்ததும் முளே விதன மற்றிருக்கிறீர்**
கட்டி வைத்த வாசல் மூன்று காட்சியான வாசலொன்று
கட்டி வைத்த வாசலுங் கதவு தாள் திறந்து போய்த்
திட்டமான வீசனைத் தெளியு மாங்கி சத்துளே.

உனக்குள் உள்ள ஞான வீட்டில்தான் இறைவன் இருக்கிறான். அவனை அங்கேயே எண்ணாமல் விசாரமற்று இருக்கிறீர்கள். சந்திர சூரிய அக்னி மண்டலங்களாக கட்டி வைத்த வாசல் மூன்று. அதில் காட்சியாகவும் சாட்சியாகவும் இறைவன் இருக்கும் வாசல் ஒன்று. மூன்று மண்டலங்களையும் கட்டி பத்தாம் வாசலின் பூட்டை உடைத்து அடைத்த கதவின் தாள் திறந்தால் அங்கே திடமாக இருந்து உலாவுகின்ற ஈசனை தெளிவாக தரிசிக்கலாம். அவன் சதையால் ஆன இவ்வுடம்பின் உள்ளேயே இருப்பதை அறிந்து தெளிந்து தியானியுங்கள்.

440. **ஆகு மாகு மாகுமே அனாதியான அப்பொருள்**
ஏகர் பாதம் நாடி நாடி யேத்தி நிற்க வல்லிரேல்
பாகு சேர் மொழி யுமைக்குப் பாலனாகி வாழலாம்
வாகுடனே வன்னியை மருவியே வருந்திடீர்

அ, உ என்ற எட்டிரண்டு அறிந்து அதிலேயே ஆகி நின்ற அனாதியான மெய்ப்பொருளை அறிந்து கொள்ளுங்கள். அதனால்தான் எல்லாம் ஆகும் என்பதை உணருங்கள்.

அதுவே ஏகமாகிய ஈசர் பாதம் என்று பற்றி அதையே நாடி நாடி எட்டிரண்டால் ஆ ஹூ என வாசியை ஏற்றி அப்பொருளிலேயே மௌனத்தில் நிற்க வல்லவரானால் ஈசன் இடபாகத்தில் சேர்ந்திருக்கும் உமையம்பிகையின் அமுர்தப்பால் கிடைத்து பாலனாகி வாழலாம். யோக ஞான திறமையால் வாகுடனே வன்னியெனும் வலப்பக்க தீயே உண்மையென உணர்ந்து அதிலேயே மருவி நின்று ஊண் உருக உயிர் உருக தியானியுங்கள்.

441. உண்மையான தொன்ற தொன்றை யுற்று நோக்கியும்முளே
வண்மையான வாசியுண்டு வாழ்த்தி யேத்த வல்லிரேல்
தண்மை பெற்றிருக்கலாம் தனமும் வந்து நேரிடும்
கன்ம தன்மமாகும் ஈசர் காட்சி தானுங் காணுமே.

உண்மையான அதுவாகிய மெய்ப்பொருள் ஒன்றே ஒன்றுதான். அந்த ஒன்றையே உற்று நோக்கி தியானியுங்கள். உங்களுக்குள் எல்லா வல்லமையும் உள்ள வாசியை ஊதி சிவகதியை ஏற்றி வாழ்த்தி இருத்த வல்லவர்களானால் எல்லா நல்ல தன்மைகளும் வாய்க்கப் பெற்று இருக்கலாம். தனமும், தவமும் தானாகவே வந்து சேர்ந்திடும். இதுவே கர்மாவாகிய கடமையும் தர்மமும் ஆகும். சோதியாகிய ஈசன் காட்சி கிடைக்கும் தனக்குள்ளே தவமிருந்து காணுங்கள்.

442. பாலனாக வேணுமென்று பத்தி முற்று மென்பரே
நாலுபாத முண்டகத்தில் நனைந்திரண் டத்ததால்
மூலநாடி தன்னில் வன்னி மூட்டி யந்த நீருண
ஏலவார் குழலியூடே யீசர்பாத மெய்துமே.

அம்மையின் பாலனாக வேணுமென்றால் மெய்யான பக்தியிலே உடலும் உயிரும் முற்றியிருக்கவேணும் என்பார்கள். நான்கு இதழ் கமலமாகிய மூலாதாரத்தில் மூண்டெழும் குண்டலினி சக்தியை சூரிய சந்திர கலையால் அக்னி கலையை எழுப்பி மூலநாடியான சுழுமுனையில் சேர்த்து வலதில் உள்ள வன்னியிலே நின்று தவத்தால் தீமூட்டி அதனால் நாம் கேட்டதையெல்லாம் கொடுக்கவல்ல ஏலவார் குழலியான வாலையின் அருளால் அமிர்தத்தை உண்டு பேரின்பம் பெற்று ஈசனின் திருவடி அடையலாம்.

**443. எய்து நின்னை அன்பினா லிறைஞ்சி யேத்த வல்லிரேல்
எய்து முண்மை தன்னிலே இறப்பிறப்ப கற்றிடும்
மையிலங்கு கண்ணிபங்கன் வாசி வானிலேறி முன்
செய்த வல்வினைகளுஞ் சிதறு மஃது திண்ணமே.**

அடைய வேண்டிய ஈசனை அவன் பாதத்திலேயே நின்று அன்பினால் நெக்குருகி கெஞ்சி அழுது அறிவு உணர்வு நினைவு என்ற மூன்றையும் இணைத்து அவனையே மனதில் இருத்தி நினைந்து தியானம் செய்ய வல்லவரானால், தன்னிலேயே மெய்ப்பொருள் கிடைக்கப் பெற்று அதனால் இறப்பும் பிறப்பும் அகற்றிவிடும். மை தீட்டிய அழகிய கண்களை உடைய உமையம்பிகையின் வலபாகத்தில் பங்கு கொண்ட ஈசன் வாசியில் வான், ஆகாயத்தில் ஏறி நின்றிடு. அவன் அருளால் இறவா நிலை அடைவது மட்டுமல்லாது முன் செய்த கொடிய வினைகள் யாவும் வாசியால் சிதறி ஓடிடும். இது நிச்சயம்.

**444. திண்ணமென்று சேதி சொன்ன செவ்வியோர்கள் கேண்மினோ
அண்ணலன்புளன் புருகி அறிந்து நோக்கலாயிடும்
மண்ணதிர விண்ணதிர வாசியை நடத்திடில்
நண்ணியெங்கள் ஈசனும் நமதுடலில் இருப்பனே.**

இதுவே நிச்சயமாய் நிலை கிடைக்கும் வழி என்று வாசியோகம் செய்யும் செம்மையானவர்களே ! கேளுங்கள். அண்ணலாகிய இறைவன் அன்பே சிவமாய் அன்பெனும் குடில் புகும் அரசனாக இருக்கின்றான் என்பதை அறிந்து அன்பினால் உருகி மெய்ப்பொருளையே நோக்கி தியானம் செய்திடுங்கள். மண்ணும் விண்ணும் அதிர வாசியை நடத்திடுங்கள். நன்மையையே தரும் எங்கள் ஈசன் நம்மை ஆட்கொண்டு எப்போதும் நமது உடலிலேயே இருந்து இறவா நிலை தருவான்.

**445. இருப்பனென் எட்டெண்ணிலே இருந்து வேறதாகுவான்
நெருப்பு வாயு நீரு மண்ணும் நீள் விசும்பு மாகுவான்
கருப்புகுந்து காலமே கலந்த சோதி நாதனைக்
குருப்புனலில் மூழ்கினார் குறித்துணர்ந்து கொள்வரே.**

எண்ணாகவும் எழுத்தாகவும் இருப்பவன் ஈசன். எனக்குள் எட்டான அகாரத்தில் இருந்து அதற்குள் சிகாரமாகி வேறாகி அதுவாகி நிற்பான்.

நெருப்பு, காற்று, நீர், மண், ஆகாயம் என ஐந்து பூதங்களாக ஐ வண்ணமாகி இருப்பான். கருவில் நாம் புகுந்த காலத்திலேயே அதற்குள் சோதியாகி கலந்த நாதனான அவனே குருவாக நீராக நின்றிருப்பான். குரு கற்றுத் தந்த யோக ஞான கலைகளை அறிந்து அந்நீரிலேயே நினைவாய் நின்று மூழ்கி தியானித்திருங்கள். குருவை நமக்குள்ளேயே குறித்து உணர்ந்து கொள்ளுங்கள்.

446. கொள்ளுவார்கள் சிந்தையிற் குறிப்புணர்ந்த ஞானிகள்
விள்ளுவார்கள் பக்குவத்தில் வேண்டி வேண்டி யேத்தினால்
உள்ளுமாய்ப் புறம்புமாய் உணர்வதற்கு உணர்வுமாய்
தெள்ளிதாக நின்ற சோதி செம்மையைத் தெளிந்திடே.

குரு இதுதான் என்ற குறிப்பை உணர்ந்த ஞானிகள் எந்நேரமும் சிந்தையில் இறைவனையே நினைவில் நினைந்திருப்பர்.அவர்களை அறிந்து அவர்களைஅணுகி ஞானம் அடைவது ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு வேண்டி நின்று கேட்டால் பக்குவம் வைராக்கியம் பக்தி இருப்பதைக் கண்டு உணர்த்த உணரும் வண்ணம் உரைத்து உபதேசிப்பார்கள். உள்ளுமாகவும் வெளியாகவும் உணர்த்த உணரும் உணர்வுமாய் தெள்ளிய பொருள் அதுவாக நின்ற சோதியைக் கண்டு அதனை அடையும் செம்மையான வழியைத் தெரிந்து தெளிவுடன் தியானித்திருங்கள்.

447. தெளிந்த நற்சரியை தன்னில் சென்று சாலோகம் பெறும்
தெளிந்த நற்கிரியை பூசை சேரலாம் சாமீபமே
தெளிந்த நல்ல யோகம் தன்னில் சேரலாகும் சாரூபம்
தெளிந்த ஞானம் நான்கிலும் சேரலாம் சாயுச்யமே.

தெளிந்து நீங்கள் கடைப்பிடித்து ஒழுகும் நல்ல சரியை வழியினால் சாலோகம் என்ற சிவலோக பதவியை பெறலாம். தெளிந்த நல்ல கிரியை வழியில் தொண்டினாலும் பூசையினாலும் சாமீபம் என்ற சிவத்தின் அருகில் சேரும் நிலையை அடையலாம். தெளிந்த நல்ல யோகம் செய்து சாரூபம் என்ற சிவத்தின் உருவத்தைச் சேரலாம். தெளிந்த ஞானம் நான்கிலும் ஞானத்தில் ஞானம் என்ற வழிகளில் சாயுச்யம் என்ற நித்தியமான மெய்ப்பொருளில் ஈசனைச் சேர்ந்து என்றும் நிலையாக இருக்கலாம்.

448. சேருவார்கள் ஞானமென்று செப்புவார் தெளிவுளோர்
சேருவார்கள் நாலு பாதச் செம்மை யென்றதில்லையே
சேருவார்கள் சிவகதி திருவருளைப் பெற்றபேர்
சேருமாறு கண்டு நாலுஞ் செய்தொழில் திடப்படே.

மெய்ப்பொருளை அறிந்து சேர்ந்தால்தான் ஞானம் அடைய முடியுமென்று சொல்லுவார்கள் ஞானிகள். ஞானிகள் தெளிவுடன் ஞான வேட்கை கொண்டு தேடுவார்கள் அதனை அடைந்து சேருவார்கள். நான்கு இதழ் கமலமான மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை செம்மையான மெய்ப்பொருளில் சேர்த்து தியானிப்பதுவே செம்மையாகும். வாசியினால் சிவகதி செய்து மேலேற்றி ஒன்றிலேயே ஒன்றி ஈசனின் திருவருளைப் பெற்றவர்கள் இறவா நிலை அடைவார்கள். நீங்களும் மெய்ப்பொருளைக் கண்டு சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கிலும் திடமுடன் பயிற்சி செய்து தியானித்திடுங்கள்.

449. திறமலிக்கு நாலு பாதம் செம்மையும் திடப்படார்
அறிவிலிகள் சேத நாடி அவத்திலே அலைவதே
குறியதனைக் காட்டியுட் குறித்து நோக்க வல்லிரேல்
வெறிகமழ் சடையுடையோன் மெய்ப் பதமடைவரே.

திறங்கள் யாவும் பொருந்தியுள்ள நான்கு இதழ் கமல பீடத்தில் உள்ள மூலாதாரத்தில் குண்டலினி சக்தியை வாசியை செம்மையாக நடத்தி பாதமான மெய்ப்பொருளில் சேர்த்து தியானித்து திடப்படார்கள். அறிவை அறியாத அறிவிலிகள் தேசாந்திரம் செய்து இறைவனை நாடி அங்குமிங்கும் அவத்திலே அலைகின்றனர். ஓரெழுத்து குறியாக உள்ளதை அறிந்து அதற்குள்ளேயே அதையே குறித்து நோக்கி ஒரே நினைவுடன் தியானிக்க வல்லவரானால் வெறிகமழ் கங்கையை தலையில் சுமந்த சடாமுடியையுடைய ஈசனின் உண்மையான திருவடியான மெய்ப்பொருளை அடைவார்கள்.

450. அடைவுளோர்கள் முத்தியை அறிந்திடாத மூடரே
படையுடைய தத்துவமும் பாதகங்களல்லவோ
மடை திறக்க வாரியின் மடையிலேறு மாறுபோல்
உடலில் மூலநாடியை உயர வேற்றி ஊன்றிடே.

அடைவாகவே இருந்து மெய்ப்பொருளை அடையாதவர்கள் முத்தியை அறிந்திடாது ஞானத்தை அடையாமல் போகும் முட்டாள்கள். ஆர்ப்பாட்ட அலங்காரங்களால் தத்துவங்கள் சொல்லி நானே கடவுள் என்று வாய்ஜாலம் பேசுவது எல்லாம் பாவமாகி உனக்கே பாதகங்கள் ஆகும் அல்லவோ. ஆதலால் அதனைவிட்டு உனக்குள்ளேயே வாசியை தேக்கி வைத்த நீரை அணையின் மடையை திறந்தால் பாயும் வெள்ளம் ஆற்றின் மடையில் ஏறுவது போல் உடலில் உள்ள மூலாதாரத்தில் மூண்டெழுகின்ற கனலை மூலநாடியான சுழுமுனையில் உயர ஏற்றி மெய்ப்பொருளில் ஊன்றி தியானித்திருந்திடுங்கள்.

451. **ஊன்றியேற்றி மண்டலம் மூடுருவி மூன்று தாள் திறந்து**
ஆன்று தந்தி ஏறிடில் அமுதம் வந்திறங்கிடும்
நான்றிதன்று தொண்டருக்கு நாதனும் வெளிப்படும்
ஆன்றியும் உயிர் பரம் பொருந்தி வாழ்வதாகவே.

வாசியை மெய்ப்பொருளில் ஊன்றி ஏற்றி மூன்று மண்டலங்களையும் ஊடுருவிக் கடந்து பத்தாம் வாசலின் தாள் திறந்து அங்கேயே ஆழ்ந்து தவம் புரிந்து இருந்திட்டால் மனோன்மணி தாய் கருணையால் தன்னிலேயே அமிர்தம் வந்து அண்ணாக்கில் இறங்கிடும். நான் என்பது இதுதான் என்று ஞான சாதகம் செய்யும் தொண்டருக்கு மெய்ப்பொருள் தெரிந்திடும். அதிலேயே நாதனான ஈசனும் வெளிப்பட்டு தோன்றிடும். நன்கு ஆராய்ந்து நம் உயிரில் பரம்பொருள் பொருந்தி இருப்பதை அறிந்துணர்ந்து தவம் புரிந்து மரணமிலா பெரு வாழ்வில் வாழ்ந்திடுங்கள்.

452. **ஆக மூலநாடியில் அனலெழுப்பி அன்புடன்**
மோகமான மாயையில் முயல்வதும் மொழிந்திடில்
தாகமேரு நாடியேகர் ஏகமான வாறுபோல்
ஏகர் பாதம் அன்புடன் இறைஞ்சினால் அறிவரே.

மூலாதாரத்தில் இருக்கும் மூலக்கனலை வாசியால் மூலநாடியான சுழுமுனையில் அனலை எழுப்பி இணைத்து அன்பால் கசிந்து தியானித்து இருந்திடுங்கள். மோகம் எனும் மாயையில் விழாது சிற்றின்ப நாட்டத்தை அடக்கி ஒழித்திடுங்கள். எருது ஏறும் எங்கள் ஈசனையே நாடி அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை உணர்ந்து, அவன் ஒன்றான மெய்ப்பொருளாய் இருப்பதை அறிந்து ஏகர் பாதத்தில் அன்புடன் இறைஞ்சி தவத்தில் இருப்பவர்கள் ஈசனை அடைவார்கள்.

453. **அறிந்து நோக்கி உம்முளே அயன் தியானம் உம்முளே**
இருந்திரா மனீசர் பாதம் பெற்றிருப்பது உண்மையே
அறிந்து மீள வைத்திடா வகையு மரண மேத்தினார்
செறிந்து மேலை வாசலைத் திறந்து பாரு மும்முளே.

மெய்ப்பொருளை உங்களுக்குள் அறிந்து அதையே நோக்கி அவனையே எண்ணி தியானம் செய்து இருந்தீர்களானால் அயன், அரி, அரன் என்ற மும்மூர்த்திகளும் ஏக பாதமான மெய்ப்பொருளில் இருப்பது உண்மையே என்பதை உணர்வீர்கள். இந்த உண்மையை உங்களுக்குள் அறிந்து மீண்டும் பிறக்க வைத்திடாத வகையில் மரணமிலா வாழ்வைப் பெற வாசியை ஏற்றி மெய்ப்பொருளில் சேர்த்து செம்மையான சோதியாக ஈசன் திகழ்வதை உணர்ந்து மேலை வாசலெனும் பத்தாம் வாசலின் பூட்டுடைத்து திறந்து பார்த்து அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

454. **சோதியாக உம்முளே தெளிந்து நோக்க வல்லிரேல்**
சோதி வந்து உதித்திடும் துரியாதீதம் உற்றிடும்
ஆதி சக்கரத்தினில் அமர்ந்து தீர்த்தம் ஆடுவன்
பேதியாதி கண்டு கொள் பிராணனைத் திருத்தியே.

சோதியாக உங்களுக்குள்ளே உள்ள மெய்ப்பொருளை தெளிந்து நோக்கி தியானிக்க வல்லவர்கள் ஆனால் அதிலேயே சோதி தோன்றி உதித்து நிற்கும். துரியாதீதமான வெளியையே உற்று நிற்கும். ஆதியான வாலை சக்கரத்திலேயே ஈசன் அமர்ந்து நீராகி நிறைந்து ஆடிக்கொண்டிருக்கிறான். சக்தி சிவன் என்ற பேதம் பாராது சிவமாக நின்ற ஆதியிலேயே அனைத்தையும் கண்டு கொள்ளுங்கள். உயிரை வளர்த்து திருத்தமான யோக ஞான சாதகம் செய்து சிவத்தில் சேருங்கள்.

455. **திருவுமாகிச் சிவனுமாகித் தெளிந்துள்ளோர்கள் சிந்தையில்**
மருவிலே எழுந்து வீசும் வாசனைய தாகுவான்
கருவிலே விழுந்தெழுந்த கன்ம வாதனை யெலாம்
பருதி முன் இருளதாய்ப் பறியும் அங்கி பாருமே.

திருவும் அதுவே சிவனும் அதுவே என மெய்ப்பொருளாகி இருப்பதை அறிந்து தெளிந்து எந்நேரமும் சிந்தையில் வைத்து தியானம் செய்பவர்கள் மீது மருக்கொழுந்திலே எழுந்து மணம் வீசும் வாசனையாய் ஆகி நிற்பான். தாயின் கருவிலே நாம் விழுந்த போதே உருவான உடம்பில் கர்மாவால் தோன்றிய வினைகளும் வாதனை செய்யும் நோய்களும் அந்த மெய்ஞானிகளைக் கண்ட போதே சூரியனின் முன்பு மறைந்து போகும் இருளைப் போன்று விரைவில் விலகிப் போய்விடும். இதை உங்கள் உடம்பிலேயே இருந்து பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

456. **பாரும் எந்தை ஈசர் வைத்த பண்பிலே இருந்து நீர்**
சேருமே நடுவறிந்து செம்மையான அப்பொருள்
வேரையும் முடியையும் விரைந்து தேடி மாலயன்
பாரிடத்து விண்ணிலே பறந்துங் கண்டதில்லையே

உலக முழுதும் உள்ள உயிரில் எந்தையான ஈசர் உகந்து வைத்த பாதத்தினால் ஒளி பெற்று நீராக இருந்து வருகின்றது என்பதை உமக்குள் தியானித்திருந்து பாருங்கள். அது செம்மையான மெய்ப்பொருளாக நடுவில் இருப்பதை அறிந்து அதுவே ஈசர் பாதம் என்பதை உணர்ந்து வாசியை ஏற்றிச் சேருங்கள். ஈசனின் அடியையும் முடியையும் காண விரைந்து தேடிய பிரமனும் திருமாலும் பூமியைப் பிளந்தும் வானில் பறந்தும் சோதிப்பிழம்பாக பூமிக்கும் வானத்துக்கும் நின்ற ஈசனின் அடி முடியைக் கண்டதில்லை. அப்படிப்பட்ட ஈசன் நமக்குள் மெய்ப்பொருளில் சோதியாக உள்ளதை உணர்ந்து அதுவே திருவடியானதை அறிந்து அதையே நோக்கித் தியானித்திருங்கள்.

457. **கண்டிலாது அயன் மாலென்று காட்சியாகச் சொல்கிறீர்**
மிண்டினால் அரனுடன் மேவலாய் இருக்குமோ
தொண்டு மட்டும் அன்புடன் தொழுது நோக்க வல்லிரேல்
பண்டு முப்புரமெரித்த பக்தி வந்து முற்றுமே.

திருமாலும் பிரமனுங் கூட ஈசனின் அடிமுடியைக் கண்டதில்லை என்று கதை காட்சியாகச் சொல்கிறீர்கள். உடம்பினுள் ஈசனுடன் மேவி கூடியே இருந்தாலும் ஈசனே யாவர்க்கும் மேலான இறைவனாய் இருப்பதை அறிந்துணர்ந்து கொள்ளுங்கள். இறைத் தொண்டுகள் செய்து அன்புடன் மெய் பக்தி வைத்து அழுது தொழுது

அதைநோக்கி தியானிக்க வல்லவரானால் முன்பு முப்புரங்களையும் மெல்ல சிரித்தே எரித்த ஈசன் நம் பக்கத்திலேயே தீயாக நின்று முற்றுமாய் அவனே வந்து ஆண்டு கொள்வான்.

458. முற்றுமே அவனொழிந்து முன்பின் ஒன்றும் காண்கிலேன்
பற்றில்லாத ஒன்று தன்னை பற்றி நிற்க வல்லது
கற்றதாலே ஈசர் பாதங் காணலா யிருக்குமோ
பெற்ற பேறை அன்புடன் பிரியமாகக் கேளுமே.

யாவிலும் முழுவதுமே அவனைத் தவிர முன்னும் பின்னும் வேறு ஒன்றையும் காண்கிலேன். அவனே அனாதியாய் பற்றில்லாத ஒன்றான பரம்பொருளாகி நம்மை பற்றி நிற்கும் வல்லமையான மெய்ப்பொருள். அதையே பற்றி நின்று பரம்பொருளை அடைவதே மெய்க்கல்வி. நிரம்பக் கற்று பட்டம் பதவி பெற்றிருந்தாலும் உனக்குள் இருக்கும் ஈசர் பாதம் காணாமல் இருக்கலாமோ ! எவ்வளவு கற்றாலும் ஈசன் பாதம் அறிய முடியாது. மெய்ப்பொருளைப் பெற்று ஈசனையே எண்ணி தியானம் செய்து ஞானமடைந்த குருவினைப் பணிந்து அன்புடன் தொண்டு செய்து பிரியமாக நடந்து அப்பதமடைய ஆவல் கொண்டு கேளுங்கள். உணர்ந்த அதை உணர்த்துவார்கள்.

459. கேட்டு நின்ற உன்னிலை கிடைத்த காலந் தன்னுளே
வாட்டமுள்ள தத்துவ மயக்கமும் அகற்றிடும்
வீட்டிலே வெளியதாகும் விளங்க வந்து நேரிடும்
கூட்டி வன்னி மாருதம் குயத்தை விட்டெழுப்புமே.

ஞானம் கேட்டு நின்ற உனக்கு நிலையான மெய்ப்பொருள் கிடைத்த காலத்தில் தன்னுள்ளேயே அறிந்து உணர்ந்த நேரத்தில் உனக்குள்ளே உன்னை சந்தேகித்து சங்கடப்படுத்தி வாட வைத்த தத்துவ மயக்கங்கள் யாவையும் அகற்றி தெளிய வைக்கும் உன் உடம்பாகிய வீட்டிலேயே புதிர்களாய் இருந்தவை யாவும் விளக்கமாக விளங்கி மெய்யறிவு வந்து சேர்ந்திடும். வன்னி எனும் அனலையும் மாருதமான தனஞ்செயன் வாயுவான கனலையும் வாசியினால் கூட்டி ஏற்றினால் மூலாதாரத்தைவிட்டு குண்டலினி சக்தி மேலே எழும்பி நாத ஒலியுடன் கிளம்பும்.

460. எழுப்பி மூலநாடியை யிதப் படுத்தலாகுமோ
மழுப்பிலாத சபையை நீர் வலித்து வாங்க வல்லிரேல்
சுழுத்தியுங் கடந்து போய் சொப்பனத்தில் அப்புறம்
அழுத்தி யோரெழுத்துளே அமைப்பதுண்மை ஐயனே.

குண்டலினியை எழுப்பி சுழுமுனை நாடியில் வாசியை வயப்படுத்தி நாதமாக உடலில் எங்கணும் செலுத்த உங்களால் முடியுமோ. அப்படி வாசி லயமானால் அதனை எல்லாம் அடங்கிய சிற்சபைக்கு நீங்கள் வலித்து வாங்கி ஏற்றி மெய்ப்பொருளில் சேர்த்து தியானித்து இருங்கள். அப்போது ஏற்படும் சுழுத்தியாகிய மயக்க நிலையைக் கடந்து போய் கனவு காணும் இடத்திற்கு அப்புறத்தில் மனதை நிறுத்தி இருந்திடுங்கள். எல்லாம் அந்த ஓரெழுத்துக்குள்ளேயே அமைத்து அதிலேயே நீ அமர்ந்திருப்பது உண்மை என்பதை உணர்ந்து கொண்டேன் ஐயனே.

461.அல்ல தில்லை யென்று தானாவியும் பொருளுடல்
நல்லவீசர் தாளிணைக்கும் நாதனுக்கும் ஈந்திலை
என்றும் என்னுள் நேசமும் வாசியை வருந்தினால்
தொல்லையாம் வினை விடென்று தூர தூரமானதே.

இதற்கு இணையாக வேறொன்றில்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்டு அதுவே நல்லதான ஈசர் திருவடித்தாளிணை என்பதை அறிந்து கொண்டு தன் உடல் பொருள் ஆவியை குருநாதனுக்குக் கொடுத்திடுங்கள். என்றும் தனக்குள் அன்பை வளர்த்து அன்பே சிவமாய் இருப்பதை அறிந்து வாசியை நடத்தி தியானித்திருந்தால் தொல்லையாக வந்த வினைகளும் வருகின்ற வினைகளும் நமக்குத் துன்பம் தரமால் நம்மைவிட்டு அகன்று வெகு தூரம் ஓடிவிடும்.

462. ஆனதே பதியது அற்றதே பசு பாசம்
போனதே மலங்களும் புலன்களும் வினைகளும்
கானகத்தில் இட்ட தீயில் காற்று வந்து அடுத்ததோ
ஊனகத்தில் வாயு உன்னி ஒன்றியே உலாவுமே.

இறைவனால் பதியாக ஆனதே மெய்ப்பொருள். அதிலேயே பசுவாகிய உயிரும், பாசமாகிய மனமும் உற்று இருக்கின்றது.

அதிலேயே தியானித்திருப்போர்க்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அகன்று ஐம்புலன்களும் ஒடுங்கி எல்லா வினைகளும் ஒழிந்து போய்விடும். காட்டில் இட்ட தீயுடன் காற்று வந்து சேர்ந்து அக்கானகமே பற்றி எரிவது போல் உங்கள் உடம்பிற்குள் உள்ள தீயில் வாசிக்காற்று சேர்ந்து இரண்டும் ஒன்றாகி ஒன்றி சோதியாக உலாவும்.

463. உலாவும் உவ்வும் அவ்வுமாய் உதித்தடர்ந்து நின்றதும்
உலாவி ஐம்புலன்களும் ஒரு தலத்திருந்திடும்
நிலாவும் அங்கு நேசமாகி நின்றமுர்தம் உண்டு தாங்
குலாவும் எங்கள் ஈசனைக் குறித்துணர்ந்து கும்பிடே.

உடம்பினில் உகாரமாக சந்திரனும் அகாரமாக சூரியனும் உலாவி உதித்து உயிர் அடர்ந்து நின்றதும் ஐம்புலன்களும் அகாரமாக ஒரு தலத்தில் இருந்ததும் அறிந்து அதிலேயே யோக ஞானத்தில் தவம் புரிந்து இருந்திடுங்கள். உடலையும் உயிரையும் பக்தியால் கரைந்து அன்பால் உருகி தியானித்து நின்றிட சூரியனில் நேசமாகி சந்திரனும் இணைந்து அமுர்தகலை உருவாகி சுழுமுனை திறந்து அமிர்தம் இறங்கிடும். மெய்ப்பொருளில் சோதியாக குலாவுகின்ற ஈசனையே குறித்து உணர்ந்து கும்பிட்டு இருந்திடுங்கள்.

464. கும்பிடுங் கருத்துளே குகனையும் ஐங்கரனையும்
நம்பியே இடம் வலம் நமஸ்கரித்து நாடிட
எம்பிரானும் அம்மையும் இருத்தியே நடுவணைத்
தும்பிபோல வாசகந் தொடர்ந்து சோம்பி நீங்குமே.

நமக்குள்ளேயே கருத்தாக இருந்து கும்பிடுவது எவ்வாறெனில் முழு நம்பிக்கையுடன் குகனாகிய முருகனை பிரணவத்தாலும் ஐங்கரனாகிய கணபதியை ஓங்காரத்தாலும் உச்சரித்து சந்திர சூரிய கலைகளால் பிராணாயாமம் செய்து சுற்றி வந்து குனிந்து மண்டியிட்டு நமஸ்கரித்து நாட்டமுடன் தியானித்திருங்கள். நடுவணையில் இருக்கும் மெய்ப்பொருளில் சிவனையும் சக்தியையும் சிவகதியால் இணைத்து வாசியை இருத்தி தொடர்ந்து நடத்திடுங்கள். அதனால் வாசி லயமாகி தும்பியின் ரீங்கார நாதம் ஒலித்து ஓரெழுத்தான சோதியில் சேர்ந்து பரவசம் கிடைக்கும். எல்லாத் துன்பங்களும் சோம்பலும் நீங்கி இறை இன்பம் அடையுங்கள்.

465. **நீங்குமைம் புலன்களும் நிறைந்த வல்வினைகளும்**
ஆங்காரமா மாசையும் அருந்தடர்ந்த பாவமும்
ஓங்காரத்தினுள்ளிருந்த ஒன்பதொழிந் தொன்றிலத்
தூங்க வீசர் சொற்படி துணிந்திருக்க சுத்தமே.

ஐந்து புலன்களின் சேட்டைகளும், உடம்பையும் உயிரையும் பற்றி நிறைந்திருந்த வல்வினைகளும், ஆங்காரமும் மூவாசைகளும் பிறவியை தொடர்ந்த பாவங்களும் மெய்ப்பொருளில் தியானம் செய்து வர நீங்கும். ஓங்காரத்தின் உள்ளிருக்கும் ஓரெழுத்தில் ஒன்பது வாசலில் ஒழிந்து கொண்டிருக்கும் ஒன்றான பத்தாம் வாசல் தலத்தில் சோதியாக துலங்க விளங்கும் ஈசனை அறிந்துணர்ந்து அந்த பரிசுத்தமான இடத்தில் குரு சொற்படி துணிவுடன் யோக ஞானத்தால் தியானித்து தூயவனாகுங்கள்.

466. **நினைப்ப தொன்று கண்டிலேன் நீயாலாது வேறிலை**
நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாய்கை மாய்கையே
அனைத்துமாய் அகண்டமாய் அனாதி முன் அனாதியாய்
நினைக்குள் நானெனக்குள் நீ நினைக்கு மாறது எங்ஙனே.

உன்னை நினைப்பது ஒன்றில் தான். அந்த ஒன்றைத் தவிர வேறெதிலும் உன்னை நான் காணவில்லை. என்னில் நினைவாகவும் மறதியாகவும் நின்றது மாயையால் வரும் மயக்கமே. அனைத்திலும் நீயாய் அகண்டம் யாவும் நீயாய் அனாதியான மெய்ப்பொருளுக்கு முன்பே உள்ள அனாதியாய் இருப்பவன் நீயே. நினைக்கும் நினைக்குள் நானும் எனக்குள் நீயும் இருப்பதையும் என் நினைவே நீயாக ஆனபின் உன்னை நினைப்பதும் மறப்பதும் எவ்வாறு ஐயனே !.

467. **கருக்கலந்த காலமே கண்டு நின்ற காரணம்**
உருக்கலந்த போதலோ உன்னை நானுணர்ந்தது
விரிக்கிலென் மறைக்கிலென வினைக் கிசைந்த போதெலாம்
உருக்கலந்து நின்றபோது நீயும் நானும் ஒன்றலோ.

நான் கருவான காலத்திலேயே என்னில் கலந்து நின்றவன் ஈசன். அனைத்திற்கும் காரணமானவன் அவனே. காரண குருவாக அவனை எனக்குள் மெய்ப்பொருளாக கண்டு உருவாக கலந்து

நின்ற உன்னை அறிந்து உண்மையான தியானத்தில் இருந்த போதல்லவோ உன்னை நான் உணர்ந்தேன். அது என்பதை விரிவாக சொன்னாலும் மறைவாக சொன்னாலும் அது ஒன்றுதான். இருவினைக்கு உட்பட்டு இன்ப துன்பங்கள் யாவினுக்கும் என்னோடு இசைந்திருந்தது அதுவே. என் அனுபவமாக வந்த மெய்ப்பொருள் உண்மையை உணர்ந்து அவ்வுருவில் கலந்து நின்று தவம் புரிந்தபோது நீயும் நானும் ஒன்றே.

468. ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞான யோகிகாள்
ஞானமான சோதியை நாடியுள் அறிகிலீர்
ஞானமாகி நின்றதோர் நாதனை அறிந்த பின்
ஞானமாகி தில்லை வேறு நாமுரைத்த துண்மையே.

ஞான நூல்கள் பலவும் தேடிப் படித்துவிட்டு ஞான போதனை செய்து உபதேசிக்கும் ஞான யோகிகளே ! ஞானப் பொருளானதில் நின்ற சோதியை சுழுமுனை நாடியில் உங்களுக்குள் தேடி நாடியே தியானித்து அதை அறிந்தீர்களா ? ஞானமாகி நின்ற ஓரெழுத்தாகிய மெய்ப்பொருளில் குருநாதனாக உள்ள ஈசனை அறிந்து கொண்ட பின் ஞானமாகி நின்ற அந்த மெய்ப்பொருளைத் தவிர வேறெதுவும் இல்லை என்பதே யாம் உரைக்கும் உண்மையாகும்.

469. கருத்தரிப்தற்கு முன் காயம் நின்றது எவ்விடம்
உருத்தரிப்பதற்கு முன் உயிர்ப்பு நின்றது எவ்விடம்
மருட்பொதிந்த சிந்தையில் மயக்கம் நின்றது எவ்விடம்
விருப்புணர்ந்த ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.

நாம் கருவில் தரிப்பதற்கு முன் உடம்பு எங்கு எவ்வாறு இருந்தது. உருவாக தரித்து உடம்பு வருவதற்கு முன் உயிர் எங்கு எவ்வாறு நின்றது. மனம் பொருந்தியிருந்த சிந்தையில் மயக்கம் நின்றது எவ்விடத்தில் எங்கள் ஞான வேட்கையை உணர்ந்த அருளடைந்த ஞானிகளே ! இவைகளை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்து உபதேசிக்க வேண்டும்.

470. கருவினில் கருவதாய் எடுத்த ஏழு தோற்றமும்
இருவினை பயத்தினால் பிறந்திறந்து உழன்றிடும்
மறுவினைப் பிறவி மூன்று காலமும் வகுத்த பின்
உறுவினைப் பயனிதென்று உணர்ந்த ஞானி செல்லுமே.

கருவினில் கருவாகி நின்ற அதுவால் எடுத்த உடலும் உயிரும் ஏழு பிறவிகள் எடுத்து தோன்றுகின்றது. அப்பிறவியில் செய்யும் இரு வினைகள் மட்டுமே உயிரைப் பற்றி இறந்தும் பிறந்தும் இவ்வுலகில் உழன்று கொண்டிருக்கின்றது. வினையால் எடுக்கும் மறு பிறவியில் இரு வினைகள் நியதிப்படி இறைவனால் முக்காலங்களும் வகுத்து அமைக்கப்பட்டுள்ளது. இதனை அறிந்து இப்பிறப்பிலாவது இறைவனைச் சேர்ந்து உய்வடைய இறவா நிலையடைய உருவினைப் பயனாக உள்ள மெய்ப்பொருள் இதுதான் என்று அதை உணர்ந்த ஞானிகள் விரிவாக எடுத்துச் சொல்லி உபதேசிக்க வேண்டும்.

471. வாயில் எச்சில் போகவே நீர் குடித்து துப்புவீர்
வாயிருக்க எச்சில் போனவாறு தென்ன தெவ்விடம்
வாயிலெச்சில் அல்லவோ நீருரைத்த மந்திரம்
நாதனை அறிந்த போது நாடும் எச்சில் ஏதுசொல்

வாயில் எச்சில் போக வேண்டும் என்று நீரைக் குடித்து வாய் கொப்புளித்து துப்புவீர். வாய் இருக்க அதைவிட்டு எச்சில் போவது எவ்வாறு ? நீங்கள் ஓதுகின்ற மந்திரங்கள் வாயிலுள்ள எச்சிலால் அல்லவோ உருவாகி வெளிவருகின்றது. ஆதலால் எச்சிலால் ஆன நீரே ஈசன்தான் என்பதை அறிந்து அவனையே நமக்குள் நாடி தவம் புரியும் இடமே எச்சிலால் ஆனது. அது எது என்பதை சொல்லுங்கள்.

472. தொடக்கதென்று நீர் விழத் தொடங்குகின்ற வூமர்காள்
தொடக்கிருந்து தெவ்விடம் சுத்தியான தெவ்விடம்
தொடக்கிருந்த வாறறிந்து சுத்தி பண்ண வல்லீரேல்
தொடக்கிலாத சோதியைத் தொடர்ந்து காணலாகுமே.

சுக்கிலமான விந்தையும் அதன் சக்தித் திறனையும் அறியாது அந்த நீரை தொடர்ந்து விரயமாகி அதனால் செத்து விழப்போகின்ற உன்மத்தர்களே ! அந்த நீர் தொடக்காக இருந்தது எவ்விடம் ? அது சுத்தியாகும் இடம் எது ? அது எவ்விதம் என்பதை அறவீர்களா ? தொடக்காக விழும் விந்தையும் அது உருவாகும் விதத்தையும் அதன் சக்தி வீரியத்தையும் அறிந்து கொண்டு வாசியினால் சுத்தி பண்ணி உடல் முழுதும் ஆவியாக அந்நீரை மாற்றி தோன்றும் உயிரிலேயே சேர்ந்து தியானம் செய்ய வல்லவர்கள் ஆனால் அந்த விந்து தோன்றும் சோதியை தொடர்ந்து உங்கள் உடம்பும் பொன்னார் மேனி பெற்று காணலாகும்.

473. மேதியோடும் ஆவுமே விரும்பியே புணர்ந்திடில்
சாதிபேதமாய் உருத்தரிக்குமாறு போலவே
வேதமோது வானுடன் புலைச்சி சென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கிலாத வாறதென்ன பேசுமே.

எருமைக் கெடாவும் பசுமாடும் இணைந்து புணர்ந்தால் அதனால் ஏற்படும் பசுவின் சூலில் இரண்டுங் கெட்ட தன்மையான உருத்தரித்து பிறந்து இறக்கும். ஏனெனில் அவை இரண்டும் வேறு வேறு சாதி. ஆனால் அதைப்போல மனிதர்களில் சாதி பேதம் பேசும் மதியில்லாதவர்களே ! வேதம் ஓதும் மேல் சாதி எனக் கூறும் பிராமணன் கீழ் சாதி எனக்கூறும் புலைச்சியுடன் இணைந்து புணர்ந்தால் அதனால் அப்பெண் கருவுற்று பிறக்கும் குழந்தை எந்த சாதி பேதமும் இல்லாமல் தானே பிறந்து வளர்கிறது. இயற்கை இப்படி இருக்கும் போது இதில் எங்கிருந்து வந்தது சாதி ? ஆதலால் மனிதகுலம் யாவும் ஓரினம்தான் என்பதை உணருங்கள்.

474. வகைக் குலங்கள் பேசியே வழக்குரைக்கு மாந்தர்கள்
தொகைக் குலங்கலான நேர்மை நாடியே யுணர்ந்தபின்
மிகைத்த சுக்கிலமன்றியே வேறுமொன்று கண்டிலீர்
நகைத்த நாதன் மன்றுள் நின்ற நந்தினியாரு பேசுமே.

எங்கள் குலமே உயர்ந்த வகை என்று விதண்டாவாதம் பேசி வழக்குரைக்கும் மனிதர்களே எல்லா மனிதர்களும் ஒரே வகைதான் என்ற உண்மையை உணர்ந்து அவையாவும் நீரினில் தோன்றிய நேர்மையை அறிந்து எல்லோர்க்கும் பொது நீதியாக உள்ள அதையே நாடி தியானியுங்கள். இதுவரையில் அதை அறியாமல் இரைத்த சுக்கிலத்தால் வரும் இன்பத்தையன்றி வேறு ஒன்றையும் நீங்கள் கண்டதில்லை. சோதியான விந்திலிருந்தே அனைத்தும் வந்தது என்பதையும் அதைச் சேர்வதுவே மெய்யான பேரின்பம் என்பதையும் அறிந்துணர்ந்து அதையே நாடியிருந்து பிறவிப்பிணியை ஒழியுங்கள். சிரித்து திரிபுரம் எரித்த ஈசன் நம்புருவ நடுவில் நின்று ஆடுவதையும் முத்தீயும் ஒன்றாகி நம் தீயான நந்தியாக நின்றதையும் அறிந்து தியானித்திருங்கள். நந்தியே நம் குருவாக வந்து பேசுவதை உணர்ந்து கொள்ளுங்கள்.

475. **ஓதும் நாலு வேதமும் உரைத்த சாத்திரங்களும்**
பூதத் தத்துவங்களும் பொருந்தும் ஆகமங்களும்
சாதி பேத உண்மையும் தயங்குகின்ற நூல்களும்
பேத பேத மாகியே பிறந்துழன்று இருந்ததே.

ஓதுகின்ற நான்கு வேதங்கள் கூறும் உண்மையும், அனைத்து சாஸ்திரங்களில் உரைத்த உண்மையும், ஐந்து பூத தத்துவங்களில் உள்ள உண்மையும் ஒன்றான மெய்ப்பொருளை அறிவதற்கே அமையப்பெற்றுள்ளது. அதுவே சாதி பேதம் இல்லாத உண்மையாக இருப்பது. அதைப்பற்றியே அனைத்து நூல்களும் பலவிதமாக பேதமாகக் கூறி வருகின்றது. அந்த மெய்ப்பொருளே உலகம் எங்கினும் பலவிதமான சாதி பேதங்களாக பிறந்து உழன்று கொண்டிருக்கிறது.

476. **உறங்கிலென் விழிக்கிலென் உணர்வு சென்று ஒடுங்கிலென்**
திறம்பிலென் திகைக்கிலென் சில திசைகள் எட்டிலென்
புறம்புமுள்ளும் எங்ஙனும் பொதிந்திருந்த தேகமாய்
நிறைந்திருந்த ஞானிகள் நினைப்பது ஏதுமில்லையே.

உறங்குவது எது ? விழிப்பது எது ? உணர்வு சென்று ஒடுங்குவது எங்கு ? திரும்பிப் பார்ப்பது எது ? திகைப்பு ஏற்படுவது எது ? திசைகள் எட்டும் எட்டான அகாரமாக நிற்பது எது ? என்பதை அறிந்து கொண்டு அது மெய்ப்பொருளே என்பதை உணர்ந்து கொண்டு அதையே தங்கள் உடம்பில் வெளியாகவும் உள்ளத்தின் உள்வெளியான மனமாகவும் பொருந்தி சூட்சம தேகத்திலேயே நினைவை நிறுத்தி தியானித்திருக்கும் ஞானிகள் இறைவனைத் தவிர வேறு ஒன்றை நினைப்பது இல்லை.

477. **அங்கலிங்கம் பூண்டு நீரகண்ட பூசை செய்கிறீர்**
அங்கலிங்கம் பூண்டு நீரமர்ந்திருந்த மார்பரே
எங்குமோடி எங்குமெங்கும் ஈடழிந்து மாய்கிறீர்
செங்கல் செம்பு கல்லெலாஞ் சிறந்து பார்க்கும் மூடரே.

உங்களுக்குள் இருக்கும் ஆத்மலிங்கத்தை உணராமல் உங்கள் அங்கத்தில் லிங்கத்தை மாலையாகக் கட்டி அதை மார்பில் அணிந்து கொண்டு நீங்கள் மிகவும் பிரம்மாண்டமாக சிவபூசை செய்கிறீர்கள்.

ஈசன் எங்கெல்லாம் கோயில் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து எல்லாத் தலங்களும் ஓடியோடி வணங்கித் தேடுகின்றீர்கள். உங்கள் உடலுக்குள்ளே கட்டாத லிங்கமாய் ஈசன் இருப்பதை அறியாமல் எங்கு அலைந்தும் ஈசனைக் காணாமல் ஈடில்லா உயிரை இழக்கின்றீர்கள். செங்கல்லால் ஆன சுதைகளிலும் செம்பு, கருங்கல்லால் செய்த சிலைகளிலும் சிவன் இருக்கின்றான் என்று சிறப்பாக சொன்ன நூல்களை எல்லாம் ஆராய்ந்து அங்கெல்லாம் சென்று பார்க்கிறீர்கள். உங்கள் அங்கத்திலேயே அவன் லிங்கமாகி நிற்பதை ஆராய்ந்து பார்க்காத மூடர்களே.

478. **தீட்டந்தீட்டமென்று நீர் தினமுமுழுகும் மூடரே**
தீட்டமாகி யல்லவோ திரண்டு காய மானதும்
பூட்காயமும்முளே புகழுகின்ற பேயரே
தீட்டு வந்து கொண்டலோ தெளிந்ததே சிவாயமே.

எதற்கெடுத்தாலும் தீட்டு தீட்டு என்று கூறிக் கொண்டு தினமும் நீரில் மூழ்கி குளித்துவிட்டு ஆச்சாரமாக இருப்பதாக சொல்லும் மூடர்களே ! தீட்டினால் தானே உயிர் உருவாகி உடம்பு திரண்டு உண்டாகியுள்ளது. அதே தீட்டில் பூடமாக பொருந்தியிருக்கும் சூட்சம உடம்பையும் மெய்ப்பொருள் உண்மையையும் உணர்ந்து அந்த ஒன்றையே பேணிப்புகழ்ந்திருக்கும் பேயர்களான ஞானிகள், தீட்டாக வந்து நின்ற அதற்குள்ளேயே தியானித்திருந்து தெளிந்த கண்ட சோதியே சிவம் என்பதை அறிந்து அடைவார்கள்.

479. **மூல நாடி தம்முளே முளைத்தெழுந்த வாயுவை**
நாளு நாளும் உம்முளே நடுவிருத்த வல்லிரேல்
பாலனாகும் உம்முடல் பறந்து போகலாய் விடும்
ஆலமுண்ட கண்டர் பாதம் அம்மைபாதம் உண்மையே.

வாசி யோகத்தினால் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாக உறங்கிக் கொண்டிருக்கும் தனஞ்செயன் வாயுவை எழுப்பி சுழுமுனை நாடியில் செலுத்தி தியானம் செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் இதை உங்களுக்குள் வைராக்கியமாக இருந்து அப்பியாசித்து உம்மில் நடுவாகமெய்ப்பொருளில் வாசியை இருத்தி நிறுத்தி நினைத்து தியானித்து ஞானத்தில் வல்லவராகுங்கள். அதனால் உங்கள் உடம்பு வஜ்ர தேகமாகி இளமையாகவே இருக்கும்.

ககன மார்க்கத்தில் பறவை போல் பறந்து போகும் சித்து கிடைக்கும். இது ஆலகால விஷம் உண்ட நீலகண்டர் பாதமாகவும் அகிலத்தையே ஆளும் அம்மையின் பாதமாகவும் நம்முள் இருக்கும் மெய்ப்பொருளே என்பதை உணர்ந்து தியானியுங்கள். இது உண்மையாகும்.

480. உந்தி மேலே நாலும் மூன்றும் ஓம் நமசிவாயமாம்
சந்தி சந்தி யென்று நீர் சாற்றுகின்ற பேயரே
முந்த வந்து நும்முளே மூலநாடி யூடுபோய்
அந்தி சந்தி அற்றிடம் அறிந்துணர்ந்து பாருமே.

உந்தி என்ற உங்கள் தீயாக உலாவும் சோதிக்கு மேல் உள்ள மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை நான்கு வேத வாசல்களாகவும் அதற்குள் உள்ள முக்கோண வட்டங்களாகியதில் அறிவு, உணர்வு, நினைவு என்ற மூன்றும் சேர்ந்திருப்பதுவே ஓம் நமசிவாயமாக அமைந்துள்ளது. இதனை அறிந்து கொண்டு அந்தி சந்தி கூடும் நேரங்களில் சந்தியாவந்தணம் செய்து ஓம் நமசிவாய சிவாயநம ஓம் என்று சாற்றி தியானம் செய்யும் பேயரென்ற ஞானிகளே ஆதியாக வந்ததும் அனாதியாய் நின்றதும் ஆன மெய்ப்பொருளை உங்களில் கண்டு அந்த மூலநாடியான சுழுமுனையில் வாசியை செலுத்தி இராப்பகல் இல்லாத இடத்தில் மௌனமுற்று இவ்வுண்மையை அறிந்து உணர்ந்து தவத்தில் இருந்து பாருங்கள்.

481. வன்னி மூன்று தீயினில் வாழும் எங்கள் நாதனும்
கன்னியான துள்ளிருக்க காதல் கொண்ட தெவ்விடம்
சென்னி நாலு கையிரண்டு சிந்தையில் இரண்டிலொன்று
உன்னியுன்னி நம்முளே உய்த்துணர்ந்து பாருமே.

வன்னி எனும் சோதியில் சந்திரன் சூரியன் அக்னி எனும் மூன்று தீயாகி வாழ்கின்றான் எங்கள் நாதனாகிய ஈசன். காமம் எனும் காதல் தோன்றும் இடத்தில்தான் கன்னியாக வாலை உள்ளே இருக்கின்றாள். சென்னியாகிய சிரசிலே சூட்சமாக நான்கு கைகளாகவும் சிவசக்தி என்ற இரண்டு பாதங்களும் உள்ளது. அந்த இரண்டு பாதங்களும் ஒன்றாகி ஒன்றான மெய்ப்பொருளை அறிந்து அதையே சிந்தையில் வைத்து தியானித்திருங்கள். நமக்குள் உள்ள வாசியினால் அதையே உன்னி உன்னி நோக்கியிருந்துஉய்ஃடையும் ஈசன் திருவடி அதுவே என்பதை உணர்ந்து கொண்டு தியானித்துப் பாருங்கள்.

**482. தொண்டு செய்து நீங்களும் சூழவோடி மாள்கிறீர்
உண்டுழன்று நம்முளே உற்றுணர்ந்து பார்க்கிலீர்
வண்டுலாவும் சோலை சூழ வாழுமெங்கள் நாதனும்
பண்டு போல நம்முளே பகுத்திருப்பனீசனே.**

இவரே குருவென்றும் அவதார மென்றும் கூறிக்கொண்டு அப்பொய் குருவுக்கே வாழ்நாள் முழுதும் தொண்டு செய்தும், கூட்டமாக கூடி சூழ்ந்து ஓடி ஆடி உழன்று உண்மையை உணராமல் நீங்கள் செத்துப் போகின்றீர்கள். மெய்க்குருவாக அவர் நமக்குள்ளேயே உண்டு என்பதை அறிந்து அதிலேயே உழன்று தியானம் செய்தும் சத்விசாரம் செய்தும் உற்றுணர்ந்து பார்க்கமாட்டீர்கள். கற்பகத்தரு விளங்கும் சோலையில் வண்டுகள் போல் உலவிக் கொண்டுள்ள எங்கள் உள்ளத்தில் வாழும் எங்கள் குருநாதன் ஆதியான மெய்ப்பொருளில் புகுந்து பகுத்தறிவாக இருப்பான் ஈசன் என்பதை உணர்ந்து அதையே பற்றித் தியானித்திருங்கள்.

**483. அரியதோர் நமச்சிவாயம் ஆதி அந்தமானதும்
ஆறிரண்டு நூறு கோடி அளவிடாத மந்திரம்
தெரிய நாலு வேத மாறு சாத்திர புராணமும்
தேடு மாலும் அயனும் சர்வ தேவ தேவ தேவனே.**

அனாதியான அறிவதற்கரிய ஓரெழுத்தே நமசிவய என்ற அஞ்செழுத்தாகி ஆதி அந்தமான மெய்ப்பொருளாய் ஆகி உள்ளது. அதுவே எட்டான அகாரமாகி அளவிடமுடியாத ஆகாயம் போல் விரிந்து நூறு கோடி மந்திரங்களாக அமைந்தது, இதனையே தெரிந்து கொள்ளுமாறு நான்கு வேதங்களும் ஆறு சாஸ்திரங்களும் புராணங்களும் தேடுமாறு சொல்லுகின்றது. அந்த ஒன்றான ஈசனையே திருமாலும் பிரமனும் தேடியும் காணமுடியவில்லை. அந்த ஒன்றே சர்வ தேவர்களுக்கும் மேலான தேவ தேவனான ஈசன் என்பதை உணர்ந்து அறியுங்கள்.

**484. பரமுனக்கு எனக்கு வேறு பயமும் இல்லை பாரையா
கரமுனக்கு நித்தமுங் குவித்திடக் கடமையாம்
சிரமுருக்கி அமுதளித்த சீருலாவு நாதனே
உரமெனக்கு நீயளித்த உண்மை யுண்மை உண்மையே.**

ஈசா ! நீயே பரம்பொருள் என அறிந்து உனக்கே என்னை அளித்துவிட்டேன். எனக்கு வேறு எதைப்பற்றியும் எந்த பயமும் இல்லை. பரமனையே பார்த்து தியானித்து இருக்கின்றேன். என்னுடைய கைகள் நித்தமும் நின்னையே வணங்கி குவித்திடுவதே கடமையாக கொண்டிருக்கின்றேன். என் சிரசில் நின்று அன்பால் உருக வைத்து அமுத ஞானத்தைக் கொடுத்து ஆனந்தம் தந்து சீராக என்னுள் உலாவுகின்ற குருநாதனே ! உரமாக நீ நின்று எனக்களித்த ஓம் நமசிவாயமே உண்மையான மெய்ப்பொருள் என்பதுவே உண்மையாகும்.

485. மூல வட்ட மீதிலே முளைத்த ஐந்தெழுத்திலே
கோலவட்டம் மூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்து நின்ற நீ
ஞான வட்ட மன்றுளே நவின்ற ஞானி மேலதாய்
ஏக வட்டம் ஆகியே இருந்ததே சிவாயமே.

மூல வட்டம் என்ற பிரமத்திலிருந்து முளைத்து விளைந்த ஐம்பூதங்களும் ஐந்தெழுத்தாகி இந்த உடம்பின் கோலமானது. அதில் மூன்று வட்டமாகி அகார உகார மகாரமான ஓங்காரத்தில் குளிர்ந்த நீராகவும் அலர்ந்த தீயாகவும் நின்றவன் ஈசன். உலக வட்டமே உங்கள் மன்றுளே ஞானப்பொருள் ஒன்றிலேயே அமைந்துள்ளது. அண்டத்தில் உள்ளவை யாவும் தங்கள் பிண்டத்திலே கண்டு அறிந்து சொல்பவர்கள் ஞானிகள். தங்களுக்குள் ஞானமே மேலாக ஏக வட்டமாகி நின்ற பிரமத்தில் இருந்த அதுவே சிவம் என்பதை உணர்ந்து தியானியுங்கள்.

486. என்னகத்தில் என்னை நான் எங்குமோடி நாடினேன்
என்னகத்தில் என்னையன்றி ஏது மொன்று கண்டிலேன்
மின்னெழும்பி விண்ணகத்தில் மின்னொடுங்கு மாறுபோல்
என்னகத்துள் ஈசனோடி யானுமல்ல தில்லையே.

என்னகத்தில் ஆறு ஆதாரங்களிலும் ஏழாம் தலமான சகஸ்ராரத்திலும் என் உள்ளமாகிய கோயிலிலும் எல்லா இடங்களிலும் மனதை ஒட்டி ஈசனையே நாடி தேடினேன். என் உள்ளத்தில் நானாக நின்ற மெய்ப்பொருள் ஒன்றையன்றி வேறு ஒன்றும் ஏதும் இல்லை என்பதைக் கண்டு கொண்டேன். மின்னல் தோன்றிய விண்ணிலேயே மின்னல் ஒடுங்குவது போல் என் அகத்திலேயே ஆகாயத்தில் ஈசன் ஒடுங்கியிருப்பதை அறிந்து கொண்டேன்.

என் அகத்தில் உள்ள மெய்ப்பொருளில் ஈசனும் யானும் இணைந்து ஒன்றாகவே இருப்பதை உணர்ந்தேன். என் உயிரில் உள்ள ஈசன் ஓடிவிட்டால் நான் என்ற ஒன்று இல்லையே.

487. நாலு வேதம் ஓதுகின்ற ஞானமொன்று அறிவீரோ
நாலு சாமமாகிய நவின்ற ஞான போதமாய்
ஆல முண்ட கண்டனும் அயனுமந்த மாலுமாய்ச்
சாலவுன்னி நெஞ்சிலே தரித்ததே சிவாயமே.

நான்கு வேதங்களும் சொல்லுகின்ற ஞானப் பொருள் ஒன்றை அறிவீர்களா ? சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு வழிகளிலும் சொல்லப்படும் ஞான போதமாய் அமைந்திருந்த மெய்ப்பொருள் அதுவாய் உள்ளது. ஆலமுண்ட நீலகண்டனும் பிரமனும், திருமாலும் ஒன்றாகி அதிலேயே அமர்ந்திருப்பதை நன்கு ஆராய்ந்தறிந்து தங்கள் நெஞ்சமாகிய உள்ளக்கோவிலில் தரித்து நின்ற அதுவே சிவம் என்பதை உணர்ந்து கொண்டு அதிலேயே நினைவை வைத்து தியானத்தில் இருங்கள்.

488. முச்சதுர மூலமாகி மூன்றதான பேதமாய்
அச்சதுர மும்முளே அடங்க வாசி யோகமாய்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்கு ஞான தீபமாய்
உச்சரித்த மந்திரம் ஓம் நமச்சிவாயவே.

பனிரெண்டு அங்குல அளவு வெளிச்செல்லும் பிராணவாயுவான மூச்சினால் மூலமாகி மூலாதாரத்தில் உறங்கும் குண்டலினி சக்தியை எழுப்ப சந்திர சூரிய அக்னி கலைகளால் மூன்று வித பேதமாக நின்ற அகார உகார மகார அட்சரங்களால் சுழுமுனை வழியாக முதுகுத்தண்டின் ஊடே மேலேற்றி, நான்கு கைகள் பொருந்தியிருக்கும் சதுர வீட்டில் வீற்றிருக்கும் உமக்குள் இருக்கும் மெய்ப்பொருளில் அடங்கச் செய்வதே வாசியோகமாகும். மெய்யெனும் உடம்பில் சதுரமாகிய வீட்டில் உள்ள மெய்ப்பொருளில் ஞான தீபமாய் விளங்கும் சோதியே ஈசன். அதையே எண்ணி உச்சரிக்கும் மந்திரம் ஓம் நமசிவாயவே.

முச்சதுரம் $3 \times 4 = 12$

489. **மூல மண்டலத்துளே முச்சதுர மாயமாய்**
நாலு வாசல் என்விரல் நடு உதித்த மந்திரம்
கோலியென்றும் ஐந்துமாய்க் குளிர்ந்தலந்து நின்ற நீ
மேலு மேலு நாடினேன் விழைந்ததே சிவாயமே.

மூல மண்டலத்துள் உள்ள உயிரிலிருந்து பனிரெண்டு அங்குல அளவு வெளிவிடும் மூச்சில் நான்கு அங்குல அளவு உயிரில் உள்ள பிராணவாயு மாயமாக சென்று கொண்டே இருக்கின்றது. அந்த உயிர்க்காற்று மனம், புத்தி, சித்தம், அகங்கரம் என்ற நான்கும் இருக்கும் நான்கு வேதங்களாய் நமக்குள் இருக்கும் வாசலில் நம் கட்டை விரல் அங்குஷ்ட அளவில் அமைந்திருக்கின்றது. அதன் நடுவில் நடுவாக உதித்திருக்கும் ஓரெழுத்து மந்திரமே சிகாரம். அதுவே நமசிவய என்ற அஞ்செழுத்தாகி ஐந்து பூதங்களும் நீராகவும் நெருப்பாகவும் குளிர்ந்தலந்து பனிக்கட்டி போல நின்றதை அறிந்து உணர்ந்து அதிலேயே தியானித்து நில்லுங்கள். அதுவே சிவம் என்பதை அனுபவத்தால் உணர்ந்து கொண்டு அதன் மேலேயே ஒரே நாட்டமுடன் விரும்பி தவம் செய்யுங்கள்.

490. **இடங்கள் பண்ணி சுத்தி செய்தே யிட்ட பீடத்திலே**
அடங்க நீரும் பூசல் செய்து அருந்தவங்கள் பண்ணுவீர்
ஒடுங்குகின்ற நாதனார் உதிக்கு ஞானம் எவ்விடம்
அடங்குகின்ற தெவ்விடம் அறிந்து பூசை செய்யுமே.

புண்ணிய இடங்களை தேடிச் சென்று கருவறையைச் சுத்தம் செய்து பீடமிட்டு அமைந்திருக்கும் சிலைகளில் வாசனை திரவியங்களாலும் புனித நீராலும் அபிஷேகம் செய்து பூசைகள் பணணுவீர்கள். ஆனால் உங்கள் உள்ளத்தை அறிந்து அதனை சுத்தி செய்து ஈசனார் கட்டாதலிங்கமாக இருக்கும் பீடத்தை உணர்ந்து அதிலேயே அடங்கி பூவாக விளங்கும் உங்கள் ஆன்மாவை அசையாமல் நிறுத்தி பூசை செய்வதே அரியதான தவம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்குள் பீடம் மீதில் ஒடுங்கியிருக்கும் ஈசனால் ஞானப்பொருளாகி உதிப்பது எந்த இடம்? அடங்கி இருப்பது எந்த இடம் ? என்பதை அறிந்து கொண்டு அங்கேயே உங்கள் ஆன்மாவை நிறுத்தி இந்த மெய் பூசையை செய்து தியானித்திருங்கள்.

491. புத்தகங்களைச் சுமந்து பொய்களைப் பிதற்றுவீர்
செத்திடம் பிறந்திடம் அது எங்ஙனென்று அறிகிலீர்
அத்தனைய சித்தனை அறிந்து நோக்க வல்லிரேல்
உத்தமத்துளாய சோதி யுணரும் போக மாகுமே.

புத்தகங்கள் பலவும் நிரம்பப் படித்து தலைக்கனத்தைச் சுமந்து உண்மையை உணராது கற்ற கர்வத்தினால் பொய்களையே பிதற்றித் திரிகின்றீர்கள். நீங்கள் பிறந்த இடம் எது? சாகப் போகும் இடம் எது ? என்பதையும் அது உங்களுக்குள் எங்கனமாய் எங்கு உள்ளது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். அதுவே மெய்யறிவு என்பதையும் அதிலேயே அத்தனை தத்துவங்களும் பொருந்திய சித்தனாம் சிவனிருப்பதை அறிந்து கொண்டு அதையே நோக்கி தியானம் செய்து ஞானத்தில் வல்லவராகுங்கள். உங்கள் உள்தமரில் உள்ள உத்தமமான சோதியை உணர்ந்து இறை இன்பம் பெறுங்கள்.

492. அருளிலே பிறந்து உதித்து மாயை ரூபமாகி
இருளிலே தயங்குகின்ற ஏழை மாந்தர் கேண்மினோ
பொருளிலே தவம் புனைந்து பொருந்தி நோக்க வல்லிரேல்
மருளதேது வன்னியின் மறைந்ததே சிவாயமே.

ஈசன் அருளினாலே பிறந்து வளர்ந்து மாயாரூபமான இந்த பொய்யான உடம்பைப் பெற்று இருளாகிய துன்பத்தில் வீழ்ந்து சாகும் மனிதர்களே ! நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் உடம்பிலேயே மெய்ப்பொருளை அறிந்து அங்கு சோதியான ஈசனை உணர்ந்து அப்பொருளிலேயே வாசியைப் புனைந்து மனம், அறிவு, உணர்வு என்ற மூன்றையும் அதிலேயே பொருந்தி நோக்கி தவம் புரிந்து வல்லவராகுங்கள். மருளாகிய மயக்கமும் துன்பங்களும் வன்னியாகிய சோதியில் மறைந்துவிடும். வன்னியாக நின்றதுவே சிவம் என்பதை அறிந்து தியானியுங்கள்.

493. கருக்கலந்த காலமே கண்டிருந்த காரணா
உருக்கலந்த சோதியைத் தெளிந்து யானறிந்த பின்
தருக்கலந்த சோதியைத் தெளிந்து யானறிந்த பின்
இருக்கிலேன் இறக்கிலேன் இரண்டு மற்றிருந்ததே.

கருவாக உருவாகியபோதே என்னோடு கலந்து நின்றவன் ஈசன் என்பதை நான் கண்டுகொண்டேன்.நான் காணவும்

அனைத்துக்கும் காரணமானவன் ஈசன். அவன் என்னுள் உருவாகவும் சோதியாகவும் கலந்து நின்றதை தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அண்டங்கள் யாவும் கலந்து நின்றது அச்சோதியே என்பதைத் தெளிந்து அவ்வீசனையே பற்றி தியானித்திருக்கின்றேன். அதன் பின் நான் இருப்பதைப் பற்றியோ இறப்பதைப் பற்றியோ எந்த நினைவும் இன்றி எல்லாம் அவ்வீசனிடமே ஒப்படைத்து சரணடைந்து என்றும் நித்தியமான இரண்டுமற்றிருந்த மெய்ப்பொருள் ஒன்றிலேயே தியானித்து இருக்கின்றேன்.

494. **தன்ம சிந்தை யாமளவுந் தவமறியாத் தன்மையாய்க்**
கன்ம சிந்தை வெயிலுழன்று கருத்தழிந்த கசடரே
சென்ம சென்மந் தேடியும் தெளியொணாத செல்வனை
நன்மையாக வும்முளே நயந்து காண வேண்டுமே.

தர்ம எண்ணம் சிறிதும் இல்லாத தன்மையினால் தர்மமே தவம் என்பதை அறியாமல் கர்மாவினால் ஏற்பட்ட பந்தங்களில் சிந்தையை வைத்து அதனால் வருகின்ற இன்ப துன்பங்களால் கடும் வெயிலில் விழுந்து துடிக்கும் புழு போல் துடித்து இப்பிறப்பின் உண்மையான கருத்தை அறியாமல் அழிந்து போகும் கசடர்களே ! எத்தனை சென்மங்கள் எடுத்து தேடினாலும் கண்டு தெரிந்து கொள்ள முடியாத செல்வமான ஈசனை நமக்குள் நல்ல பொருளாகவும் நன்மையை தரவல்ல மெய்ப்பொருளாகவும் நடுவாகவும் இருப்பதை அறிந்து அதையே எப்போதும் நினைவில் நிறுத்தி தியானித்து நயந்து காண வேண்டும்.

495. **கள்ள உள்ளமே யிருக்கக் கடந்த ஞானம் ஓதுவீர்**
கள்ள உள்ளம் அறுத்த போது கதியிதன்றிக் காணலீர்
உள்ளமே விளக்கி நித்தம் ஒளியை அணுக வல்லிரேல்
தெள்ளு ஞானமும் முளே சிறந்ததே சிவாயமே.

கள்ளத்தனமாக எண்ணங்களை உங்கள் உள்ளத்தில் வைத்துக் கொண்டு எல்லாம் கடந்த எல்லையைக் கண்டது போல் ஞானம் பேசி உபதேசம் செய்கின்றீர். அந்த கள்ள எண்ணங்கள் யாவையும் வேரொடு அறுத்து உள்ளத்தைப் பரிசுத்தமாக்கி தியானிக்கும் போது நமக்கு நற்கதி கொடுக்கும் திருவடி மெய்ப்பொருளையன்றி வேறு எதையும் பார்க்காதீர்கள்.

நம் உள்ளத்தில் உள்ள அழுக்குகள் யாவையும் அன்பால் கசிந்துருகி அகற்றி நித்தமும் வாசியினால் ஒலியை ஏற்றி ஒளியுடன் கூட்டி தியானிக்க வல்லவரானால் தெளிந்த சோதியாகிய ஞானம் உங்களுக்குள் சிறந்து அதுவே சிவத்தோடு சேர்க்கும்.

496. காணவேண்டும் என்று நீர் கடல் மலைகள் ஏறுவீர்
ஆணவம் அதல்லவோ அறிவிலாத மாந்தரே
வேணுமென்ற அவ்வீசர் பாதம் மெய்யுளே தரிப்பிரேல்
தாணுவாக நின்ற சீவன் தான் சிவமதாகுமே.

இறைவனைக் காண வேண்டும் என்று ஆவல் கொண்டு கடல் கடந்தும் மலைகள் பல ஏறியும் செல்கிறீர்கள். அதனால் நீங்கள் ஆண்டவனைக் கண்டு கொண்டீர்களா ? அதனால் ஆணவம் வருமேயன்றி ஆண்டவனை அறிய முடியாது. அறிவை அறியாத மனிதர்களே ! ஞானம் அடைய வேண்டும் என்ற ஞான வேட்கையுடன் அந்த ஈசனின் பாதம் நமது உடம்பிலேயே இருப்பதை அறிந்து அதையே பற்றித் தியானித்திருந்திடுங்கள். தாணுவாகிய சிவனே நம் சீவனாகிய உயிரிலேயே தங்கியிருப்பதைக் கண்டு கொள்ளலாம். அதுவே சிவமாகிய பரம்பொருள்.

497. அணுவினோடு அகண்டமாய் அளவிடாத சோதியைக்
குணமதாக உம்முளே குறித்து நோக்கின் முக்தியாம்
மிண மிணென்று விரலை என்னும் மீளொணா மயக்கமாய்த்
துணிவிலாத படியினால் தொடர்ந்து பூசை செய்குவீர்.

அணுவிற்குள் அணுவாகவும் அளவிட முடியாத அகண்டமாகவும் யாவிலும் நிறைந்திருக்கும் சோதியை உங்களுக்குள் அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள். அதை அடைவது ஒன்றே நோக்கமாகக் கொண்டு உமக்குள் குணமாக குறித்து நோக்கி மெய்ப்பொருளில் தியானிப்பதே முக்திக்கு வழியாகும். இது இறப்பைத் தடுக்கும் இதை விடுத்து மனதிற்குள்ளேயே மந்திரங்களை முணுமுணுத்து விரல் விட்டு எண்ணும் செபங்களைச் செய்து தியானித்து வருவதால் மீள முடியாத இறப்பைத் தவிர்க்க முடியாது. மரணமிலாப் பெருவாழ்வைப் பெற துணிவு இல்லாவிட்டாலும் படிப்படியாக ஞானத்தில் துணிவு வருவதற்கு தொடர்ந்து பூசைகளையும் இறைத் தொண்டுகளையும் செய்து வாருங்கள்.

498. **எச்சிலெச்சில் என்று நீரிடைந்திருக்கும் ஏழைகாள்**
துச்சிலெச்சில் அல்லவோ தூய காய மானதும்
வைச்சலெச்சில் தேனலோ வண்டின் எச்சில் பூவலோ
கைச் சுதாவில் வைத்துடன் கறந்த பாலும் எச்சிலே.

எச்சில் எச்சில் என்று சொல்லி எச்சலாகிய நீரால் ஆன உடம்பைப் பெற்று அதனால் இடர் அடைந்து வாழும் ஏழை மக்களே! உங்கள் உச்சியிலிருந்து இறங்கி விழுந்த எச்சிலான சுக்கிலத்தால் தானே இத்தூல உடம்பு உண்டானது. தேன் வண்டு பூக்களில் இருந்து உறிஞ்சி எடுத்து தேனடையில் வைத்த எச்சில் தானே சுவை மிகுந்த தேன் ஆகியது. கைப்பாத்திரத்தில் பசுவின் மடியிலிருந்து கறந்தவுடன் எடுத்து வரும் தூய பாலும் கன்றின் எச்சில் தானே. ஆகையால் எச்சில் என்று இகழாமல் எச்சில் ஆகிய நீரை அறிந்து கொள்ளுங்கள்.

499. **தீர்த்த லிங்க மூர்த்தியென்று தேடி ஓடும் தீதரே**
தீர்த்த லிங்க முள்ளில் நின்று சீவனைத் தெளியுமே
தீர்த்தலிங்கம் உம்முளே தெளிந்து காண வல்லிரேல்
தீர்த்தலிங்கம் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே.

தீர்த்தம் தலம் மூர்த்தி என்றும் ஜோதிர்லிங்கம் என்றும் தேடி ஓடும் தீயை அறியாத பக்தர்களே ! தீர்த்தமாகிய நீரையும் லிங்கமாகிய நெருப்பையும் ஒன்றாகி நின்று உலவும் உயிரைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். நீராகவும் லிங்கமாகவும் உமக்குள் உள்ள மெய்ப்பொருளை அறிந்து அதையே தெளிந்து தியானித்துக் கண்டு ஞானத்தில் வல்லவராகுங்கள். நீராகவும் லிங்கமாகவும் திகழும் அதுவே தான் என்ற ஞானமாகி சிறந்து இருப்பதுவே சிவம் என்பதை உணர்ந்து தியானியுங்கள்.

500. **ஆடு கொண்டு கூறுசெய்து அமர்ந்திருக்குமாறு போல்**
தேடுகின்ற செம்பினைத் திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானும் நம்முளே இருக்கவே
போடு தர்ப்ப பூசையொன்றும் பூசை யென்ன பூசையே.

ஆட்டைக் கொன்று அதன் தசைகளைக் கூறு போட்டு அடுக்கி வைத்து அதை விற்பதற்கு அமர்ந்திருப்பதைப் போல், ஆண்டவனுக்கு பூசை செய்கிறோம் என்று தேடி வைத்த செம்புச்

சொம்புகளில் எல்லாம் நீர் நிரப்பி எட்டுத் திசைகளிலும் திடப்பட பரப்பி வைத்து நீங்கள் போடுகின்ற பூசை என்ன பூசையோ ! நீங்கள் நாடி செய்கின்ற பூசைக்குரிய தம்பிரான் ஆன ஈசன் நமக்குள் உள்ள ஆன்மாவில் பூவாக இருப்பதை அறிந்து அதிலேயே மனதை ஒன்றி நிறுத்தி அசையாமல் இருந்து தியானிப்பதுவே உண்மையான பூசையாகும்.

501. **என்னை அற்ப நேரமும் மறக்கிலாத நாதனே**
ஏகனே இறைவனே இராச ராச ராசனே
உன்னை அற்பநேரமுமொழிந்திருக்க லாகுமோ
உனது நாமம் எனது நாவிலுதவி செய்த ஈசனே

அற்பனாகிய இந்நாயேனைக் கண் இமைக்கும் நேரங்கூட மறக்காது என்னுள் இருக்கும் என் குருநாதனே ! ஏகப்பொருளாகிய ஒருவனே ! யாவிற்கும் மோலான இறைவனே ! எனக்குள் கோனான இராசனாகி யாவர்க்கும் மேலான இராசராசனே ! ஒரு நொடி நேரங்கூட நீ இல்லாது இவ்வுடம்பில் நான் இருக்க முடியுமோ ! ஆகையால் உனது நாமமான நமசிவய என்ற அஞ்செழுத்தை எனது நாவில் மறக்காது ஓதவும் எனக்கு உபதேசித்து உதவி செய்த என் ஈசனே. உன்னை ஒரு கணநேரங் கூட மறக்காது உன்னையே நானடைய உதவி செய் ஈசா.

502. **எல்லையற்று நின்ற சோதி ஏகமா யெரிக்கவே**
வல்ல பூரணப்ரகாச யோக போக மாகியே
நல்ல வின்ப மோன சாகரத்திலே அமுத்தியே
நாடொணாத அமிர்தம் உண்டு நானழிந்து நின்ற நாள்.

எல்லையற்ற பரம்பொருளே நமக்குள் சோதியாக நின்று ஏகமாய் எரிந்து கொண்டிருக்கிறது. அது எல்லாம் வல்ல பூரணப் பெருளாகி பிரகாசம் பொருந்தி மிளிர்வதை அறிந்து கொள்ளுங்கள். அதிலேயே வாசி யோகத்தை இணைத்து சிவ போகத்தை அனுபவித்து பேரின்பத்தைத் தரும் மௌனத்தில் இருந்து திருப்பாற்கடலாகிய இடத்திலேயே நினைவை அமுத்தி தியானம் செய்யுங்கள். அதனால் நான் என்ற ஆணவம் அழிந்து நானே அதுவாகி நின்ற நாளில் எவரும் நாடிக்கிடைக்காத அமிர்தம் அருந்தி இறவா நிலை அடைந்திடுங்கள்.

503. **ஆனவாற தாயிடும் அகண்டமான சோதியை**
ஊனைக்காட்டி உம்முளே உகந்து காண வல்லிரேல்
ஊன காய மாளலாம் உலகபார மாளலாம்
வான நாடு மாளலாம் வண்ண நாடரானையே

எல்லா மனிதர்களுக்கும் ஒரே அளவில் ஆனவாறு அமைந்திருப்பது மெய்ப்பொருள். அகண்டம் முழுதும் நிறைந்த அளவிட முடியாத சோதியை உங்கள் உடம்பிற்குள்ளேயே ஊமை எழுத்தாக நின்றதைக் கண்டு கொண்டு அதையே உகந்து இருந்து, காணும் அப்பொருளையே தியானித்து ஞானம் பெற்று வல்லவர் ஆகுங்கள். அதனால் இந்த உடம்பையும் உயிரையும் காத்து ஆளலாம். உலகம் யாவையும் அன்பால் ஆட்சி செய்யலாம். வானகத் தேவராகி வானுலகம் ஆளலாம் இது ஐவண்ணப் பாதத்தில் இருந்து நம்மை ஆளும் ஈசன் ஆணையாக உண்மை.

504. **நித்தமும் மணிதுலக்கி நீடு மூலை புக்கிருந்து**
கத்தியே கதறியே கண்கள் மூடி என் பயன்
எத்தனை பேர் எண்ணினாலும் எட்டிரண்டும் பத்தலோ
அத்தனுக்கிது ஏற்குமோ அறிவிலாத மாந்தரே.

நித்தமும் மணி ஒலித்து வீட்டின் மூலையில் இருக்கும் பூசை அறைதனில் பூசைகள் செய்து உரக்கக் கத்தி ஓதுவதாலும் கதறுவதாலும் கண்கள் மூடியபடி அமர்ந்து இருப்பதாலும் என்ன பயன் கண்டீர்கள். எத்தனை பேர்கள் எத்தனை முறை எண்ணினாலும் எட்டும் இரண்டும் பத்துதானே. உண்மை அறியாது நீங்கள் இவ்வாறு செய்யும் பூசைகளை நமையீன்ற அத்தனாகிய ஈசன் ஏற்பானோ ? அறிவை அறியாத மனிதர்களே ! எட்டும் இரண்டுமாகிய அகாரத்தையும் உகாரத்தையும் தம்மில் அறிந்து பத்தாம் வாசலில் இருக்கும் ஈசனையே பற்றியிருந்து வாசியினால் நாத ஒலியை மணி ஓசை போல் ஒலிக்கச் செய்து ஒளியான சோதியில் சேர்த்து கண்களை மூடி தியானித்து இருந்திடுங்கள். இதுவே ஈசனுக்கு ஏற்ற உகந்த பூசை.

505. **எட்டிரண்டும் கூடியே இலிங்கமான தேவனை**
மட்டதாக உம்முளே மதித்து நோக்க வல்லிரேல்
கட்டமான பிறவியென் கருங்கடல் கடக்கலாம்
இட்டமான வெளியினோடு இசைந்திருப்பீர் காண்மினே.

எட்டாகிய அகாரமும் இரண்டாகிய உகாரமும் கூடியே இலிங்கமாக ஆகியுள்ளது. அதிலே இருந்து ஆளும் தேவனான ஈசனை எல்லோர்க்கும் பொதுவாக ஒன்றாக உனக்குள் உள்ள மெய்ப்பொருளை மதித்து அதையே நோக்கி தியானித்து இருந்திடுங்கள். மிகவும் கஷ்டமான பிறவி என்ற கருங்கடலை கடந்து ஈசன் திருவடியில் சேரலாம். ஈசனுக்கு விருப்பமான ஆகாய வெளியில் ஈனோடு இசைந்து இருந்து கண்டுகொள்ளுங்கள்.

506. **உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்**
தன்மையான மந்திரம் சமைந்து ரூபமாகியே
வெண்மையான மந்திரம் விளைந்து நீறதானதே
உண்மையான மந்திரம் ஒன்றுமே சிவாயமே.

உண்மையன மந்திரமான ஓரெழுத்து ஒளியாகிய சோதியில் இருக்கின்றது. அச்சோதியிலிருந்து ஐம்பூதத் தன்மைகளால் ஐந்தெழுத்து மந்திரமாக அமைந்து அதனாலேயே உருவம் ஆகி உடம்பு வந்தது. அதிலிருந்தே வெண்மையான நீராக விளைந்து அதுவே மந்திரமான நீராக நிற்கின்றது. இவையாவையும் உங்களுக்குள் நன்கு ஆய்ந்தறிந்து மெய்யிலே ஒன்றான ஓரெழுத்து மந்திரமே உண்மையான சிவம் என்பதை உணர்ந்து கொண்டு அந்த ஒன்றிலேயே ஒன்றி தியானம் செய்யுங்கள்.

507. **பன்னிரண்டு நாணிருத்திப் பஞ்ச வண்ணம் ஒத்திட**
மின்னி யவ்வெளிக்குள் நின்று வேறெடுத் தமர்ந்து
சென்னியான தலத்திலே சீவனின்றி மாங்கிடும்
பன்ன யுண்ணி ஆய்ந்தவர் பரப்பிரம்மம் ஆவரே.

பன்னிரண்டு அங்குல அளவு வெளியேறும் மூச்சுக் காற்றை வில்லில் உள்ள நாணில் அம்பை ஏற்றி விடுவது போல் மேலேற்றி வாசியாக்கி ஐந்து வண்ணங்கள் கொண்ட பரமன் திருவடியில் சேர்த்து இருத்தி அதிலேயே ஒத்து ஒன்றாக்கி இருங்கள். சோதியானது மின்னிக்கொண்டு யகாரமான ஆகாய வெளிக்குள் நின்று அங்கிருந்து வேராக இறங்கி அமர்ந்து இருக்கின்றது. சென்னியான தலையில் தான் சீவனாகிய உயிர் நின்று இயங்குகின்றது. இதனை நன்கு அறிந்து அத்தலத்திலேயே யோக ஞான சாதகம் செய்து அதையே உன்னிப்பாய் ஆராய்ந்து தியானிப்பவர் பரம்பொருளான ஈசனோடு சேர்ந்து பரப்பிரம்மம் ஆவார்கள்.

508. **தச்சு வாயிலுச்சி மேல் ஆயிரந் தலங்களாய்**
முச்சுடரும் மூவிரண்டு மூண்டெழுந்த தீச்சுடர்
வச்சிரமாகியே வளர்ந்து நின்ற தெவ்விடம்
இச்சுடரும் இந்திரியமும் ஏகமான தெங்ஙனே.

உடம்பின் தலை உச்சியின் மேல் ஆயிரம் இதழ் கமலமான சகஸ்ரதலத்தில் சூரிய சந்திர அக்னி என்ற முச்சுடரிலும், ஆறு ஆதாரங்களிலும் மூண்டெழுந்த தீச்சுடராகிய சோதி சூட்சமாய் வச்சிர தேகமாகி சாகாத் தலையாக வளர்ந்து நின்றது நமக்குள் எந்த இடம் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள். இந்த மூன்று தீயும், பஞ்சேந்திரியங்களும் ஏகமான மெய்ப்பொருளில் அமைந்திருப்பது எவ்வாறு என்தை நன்கு அறிந்து அந்த பொருளிலேயே ஏகமாகி நின்று தியானியுங்கள்.

509. **முத்தி சித்தி தொந்தமாய் முயங்குகின்ற மூர்த்தியை**
மற்றுதித்த வைம்புலன்களாகு மத்திமப் புலன்
அத்தனித்த கால கண்டரன்பினால் அனுதினம்
உச்சரித்து ளத்திலே அறிந்துணர்ந்து கொண்மினே.

முத்தித் தருவதற்கும் சித்தி அளிக்கவும் வல்ல ஈசன் நமக்குள் சொந்தப் பொருளாக இயங்குகின்ற மூர்த்தியாக இருக்கின்றான். அதை வைத்தே உதித்த மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்புலன்களில் நடுவாக இருக்கின்றான். மார்க்கண்டேயனைக் காக்க எமனை உதைத்த காலகண்டரான அப்பனை அனுதினமும் அன்பினால் உங்கள் உள்ளத்திலேயே சிவயநம என உச்சரித்து அவனையே எண்ணி தியானித்து அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள். அந்த நடுவாக நின்ற ஒன்றே எமனை உதைத்த திருவடி என்பதை உணர்ந்து அந்த ஒன்றையே பற்றியிருந்து மரணத்தை வெல்லுங்கள்.

510. **அண்ணலார் அனாதியாய் அனாதிமுன் அனாதியாய்**
பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதாகு முன்னல்லோ
கண்ணிலானில் சுக்கிலம் கருத்தொடுங்கி நின்ற பின்
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்த வாற தெங்ஙனே.

அண்ணலாகிய ஈசனே அனாதியானவன். நம்முள் அனாதியான மெய்ப்பொருளுக்கு முன் உள்ள அனாதியாய் இருக்கின்றான். பெண்ணும் ஆணும் இணைந்ததனால் உருவாகும்

உயிர் பிறப்பதற்கு முன்பு பெண்ணுமன்றி ஆணுமன்றி ஒன்றான ஆன்மாவாகவே இருந்தது. கண்ணில் ஆணியாக சுக்கிலம் நினைவிலேயே ஒடுங்கி நின்றது. இதன் பின்னரே கருவில் உருவாகி உயிர் வளர்ந்து பிறக்கின்றது. இப்படி நீரினால் தான் மண்ணில் வந்த மனிதர்களும் விண்ணில் உள்ள தேவர்களும் தோன்றியுள்ளனர். வந்த அவ்வழியை அறிந்து அதிலேயே ஒடுங்கி தியானித்திருங்கள்.

511. எத்திசைக்கும் எவ்வுயிர்க்கும் எங்களப்பன் எம்பிரான்
முத்தியான வித்துளே முளைத்தெழுந்த செஞ்சுடர்
சித்தினில் தெளிந்தபோது தேவர் கோயில் சேர்ந்தன
அத்தன் ஆடல் கண்டபோது அடங்கி ஆடலுற்றதே.

எல்லாத் திசைகளுக்கும் எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குபன் எம்பிரானாகிய ஈசன் ! முத்தீயும் ஒன்றாக அமைந்துள்ள வித்தாகிய மெய்ப்பொருளில் முளைத்து எழுந்த செஞ்சுடரான சோதியானவன். இதனை உங்கள் சித்தமாகிய அறிவை அறிந்து தெளிந்த போது தேவனாகிய ஈசன் நம் உள்ளக் கோயிலில் சேர்ந்திருப்பதை உணர்ந்து தியானித்தில் நில்லுங்கள். அங்கே அத்தன் நடராஜனாக நடம் புரிந்து கொண்டிருப்பதைக் கண்ட போது மனம் அதிலேயே அடங்கி அவனது ஆடலிலேயே உற்று அறிவாகப் பிரகாசித்திருந்தது.

512. வல்ல வாசல் ஒன்பதும் அருத்தடைத்த வாசலும்
சொல்லும் வாசலோ ரைந்தும் சொல்லி விம்மி நின்றதும்
நல்ல வாசலைத் திறந்த ஞான வாச லூடு போய்
எல்லை வாசல் கண்டபின் இனிப் பிறப்ப தில்லையே.

நம் உடலில் உள்ள ஒன்பது வாசலில் அருத்தடைத்த வாசலாகியதாகச் சொல்லும் பத்தாம் வாசலில் உள்ள ஓரெழுத்தை அறிந்து அதிலேயே ஐந்து பூதங்களும் அடங்கியிருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அதிலேயே நமசிவய என்ற அஞ்செழுத்தை ஓதி தியானிக்க மெய்ப்பொருள் நீராக விம்மி நின்றது. அதுவே நம் தீயாகிய நந்தியாகிய நல்ல வாசனை சோதியாக ஈசன் உலாவுகின்ற எல்லையான வாசலைக் கண்டு வாசலைக் கண்டு கொண்டு அவனையே தியானித்திருப்பவர்கள் இறவா நிலை பெற்று இனி இப்பூமியில் பிறப்பது இல்லையே.

**513. ஆதியான தொன்றுமே அனேக ரூப மாயமாய்ப்
பேத பேதமாய் எழுந்து சர்வ சீவன் ஆனபின்
ஆதியோடு கூடி மீண்டெழுந்து சன்மமான பின்
சோதியான ஞானியரும் சத்தமாக யிருப்பரே.**

ஆதியான அது ஒன்று தான் அனேக விதமான உருவங்களாகி மாயமான நிலையில்லா உடம்பாகி பல விதமான பேதங்களாய் மனிதன் விலங்கு, பறவை, பாம்பு போன்ற சகல விதமான உயிர்களாக ஆனது. அந்த ஆதியோடு கூடி மீண்டும் பிறந்து மனித சென்மம் எடுத்த நாம் ஆதியோடு கூடி சோதியாக நின்ற ஈசனை அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையை உணர்ந்த ஞானிகள் வாசிலயத்தால் நாத சப்தத்தை கிளப்பி ஆதியாகிய மெய்ப்பொருளில் கூடி சோதியிலேயே நிலைத்து தியானித்திருப்பார்கள்.

**514. வண்டு பூ மணங்களோடு வந்திருந்த தேனெலாம்
உண்டுளே யடங்குவண்ணம் ஓதுலிங்க மூலமாய்
கண்டு கண்டு வேரிலே கருத்தொடுங்க வல்லிரேல்
பண்டு கொண்ட வல்வினை பறந்திடும் சிவாயமே.**

தேன் வண்டு மணம் வீசும் பூக்களிலிருந்து தேனை உறிஞ்சி எடுத்து வந்து தேனடையில் சேர்த்து வைத்து பின் அதையே உண்டு உள்ளேயே அடங்கி இருக்கும். அதுபோல் நீங்கள் ஓதுகின்ற அஞ்செழுத்து மந்திரம் உங்களுக்குள்ளேயே இலிங்கமாகி மூலப் பொருளாக இருப்பதை அறிந்து கொண்டு அந்த லிங்கத்தையே கண்களில் கண்டு அஞ்செழுத்தை ஓதி அதன் வேராக உள்ளிருக்கும் வித்திலேயே அறிவு உணர்வு நினைவு என்ற மூன்றையும் இணைத்து மனதை ஒடுக்கி ஈசனையே நினைந்து தியானம் செய்து அதிலேயே ஒடுங்கியிருங்கள். நீங்களும் முன் சென்மங்களில் செய்த பாவங்களும் வலிய ஊழ்வினைகளும் உங்ளை விட்டு விலகி ஓடச் செய்வது சிவாயமே.

**515. ஓரெழுத்தில் லிங்கமாக ஓதுமக்கரத்துளே
ஓரெழுத்தில் இயங்குகின்ற உண்மையை அறிகிலீர்
மூவெழுத்தும் மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாலெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே.**

உங்கள் உடம்பிலேயே உணர்வுறு மந்திரமாகிய ஓரெழுத்தே பஞ்சபூதங்களாகி ஓதுகின்ற அஞ்செழுத்தான இலிங்கமாக அமைந்துள்ளது. ஓரெழுத்தில் ஈசன் இருந்து இயங்குகின்ற உண்மையை அறியாமல் இருக்கின்றீர்கள். அந்த ஓரெழுத்தில் இருந்தே தோன்றி அகாரம் உகாரம் மகாரம் என்ற மூன்றெழுத்தான ஓங்காரமாகவும் சிவன் விஷ்ணு பிரம்மன் ஆகிய மும்மூர்த்திகளாகவும் முளைத்தெழுந்த சோதியை உணருங்கள். மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களையும் தினமும் அதிகாலமே எழுந்து சுத்தி செய்து நாவிலே நமசிவய மந்திரத்தை நவின்று அதுவே சிவம் என்பதை தெளிந்து தியானியுங்கள்.

516. **தூர தூர தூரமும் தொடர்ந்தெழுந்த தூரமும்**
பார பாரம் என்றுமே பரிந்திருந்த பாவிகாள்
நேர நேர நேரமும் நினைந்திருக்க வல்லிரேல்
தூர தூர தூரமும் தொடர்ந்து கூடலாகுமே.

இறைவன் ஆகாயத்தில் இருக்கின்றான் என்று எவ்வளவு தூரம் சென்று தேடினாலும் அது தொடர்ந்து தூரமாக எழுந்து நிற்கின்றது. அவனை அடைவது என்பது மிகவும் கஷ்டம் என்று எண்ணித் தொடர்ந்த துன்பங்களில் வாழ்ந்திருக்கும் பாவிகளே ! அல்லும் பகலும் அனவரதமும் எந்த நேரத்திலும் ஈசனையே எண்ணி நினைவால் நினைந்து தியானித்து இருக்க வல்லவரானால் வெகு தூர தூரமாய் உள்ள ஆகாயம் உங்களுக்குள்ளேயே வெளியான மனதிலேயே இறைவனைக் கண்டு அவனையே தொடர்ந்து முயன்று பயின்று கூடலாம். இது உண்மையே.

517. **குண்டலங்கள் பூண்டு நீர் குளங்கள் தோறும் மூழ்கிறீர்**
மண்டுகங்கள் போல நீர் மனத்தின் மாசறுக்கிலீர்
மண்டையேந்து கையரை மனத்திருத்த வல்லிரேல்
பண்டை மாலயன் தொழப் பணிந்து வாழலாகுமே.

காதில் குண்டலங்கள் அணிந்து கொண்டு பெரிய பக்தர் என எண்ணும்படி வேடம் பூண்டு புண்ணிய நீர்கள் உள்ள திருக்குளங்கள் தேடிச் சென்று, அதில் மூழ்கி எழுந்தால் பாவங்கள் யாவும் அகன்றுவிடும் என்று சொல்லி மண்டுகங்களான வாத்து

போல மூழ்கி குளிக்கின்றீர்களே ! அதனால் நீங்கள் செய்த பாவம் போய்விடுமா ? உங்களுக்குள் உள்ள மனதை அறிந்து அதிலுள்ள பாவங்களையும் குற்றங்களையும் நீக்கும் நீர் உள்ள குளமான இடத்தில் அன்பால் கசிந்துருகி ஈசனையே எண்ணத்தில் வைத்து மூழ்கியிருந்தால் மன மாசுகள் யாவுமே அகன்றுவிடும். கபாலத்தை கையில் ஏந்தியுள்ள ஈசனை மனத்திலேயே இருத்தி தியானிக்க வல்லவரானால் உங்கள் உள்ளத்தில் ஆதியான மெய்ப்பொருளில் திருமாலும் பிரமனும் தேடியும் கிடைக்காத திருவடியில் பணிந்து ஈசனோடு சேர்ந்து வாழல் ஆகும்.

518. **கூடுகட்டி முட்டையிட்டுக் கொண்டிருந்த வாறுபோல**
ஆடிரண்டு கன்றையீன்ற அம்பலத்துள் ஆடுதே
மாடு கொண்டு வெண்ணெயுண்ணும் மானிடப் பசுக்களே
வீடு கண்டு கொண்ட பின்பு வெட்ட வெளியும் காணுமே.

சிலந்தியானது தன் வாயிலிருந்த எச்சிலால் கூடு கட்டி அதிலே முட்டையிட்டு அடைகாத்து அதிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல நம் உடம்பில் சந்திர சூரிய கலைகளாக ஆடிக் கொண்டிருந்த அகாரமும் உகாரமும் ஓரெழுத்தான ஆதியிலிருந்தே பிறந்து வெளியாக அம்பலத்தில் ஆடிக் கொண்டிருக்கின்றது. அதுவே நம் உயிர் உள்ள இடம் என்பதையும் அதிலே தான் ஈசன் ஆடிக் கொண்டிருக்கின்றான் என்பதையும் அறிந்து கொள்ளாமல், ஈசனை அடைய சைவத்தை கடைபிடிக்க வேண்டும் என்று உபதேசம் செய்து பசுவின் இரத்தத்திலிருந்து வரும் பாலில் இருந்து கடைந்த வெண்ணெயை உண்ணும் மானிடப் பசுக்களே ! உங்கள் உயிர் இருக்கும் வீட்டை அறிந்து கண்டு கொண்ட பின்பு வெட்டவெளியாக ஈசனைக் காணலாம்.

519. **உள்ளதோ புறம்பதோ உயிர்ப்படங்கி நின்றிடம்**
மெள்ள வந்து கிட்ட நீர் வினவ வேண்டும்என்கிறீர்
உள்ளதும் புறம்பதும் ஒத்த போது நாதமாம்
கள்ள வாசலைத் திறந்து காணவேண்டும் மாந்தரே.

உடம்பில் உயிர் அடங்கி நிற்பது உடம்பின் உள்ளேயா உடம்பின் வெளியிலா என்பதை என்னிடம் மெள்ள வந்து அருகில் நின்று சொல்லவேண்டும் என்று கேட்கின்றீர்கள்.

உடம்பின் உள்ளேயும் வெளியேயும் ஒத்து ஒட்டியும் ஒட்டாமலும் ஒரே பொருளில் அடங்கியே உயிர் நின்று கொண்டுள்ளது. உட்சுவாசத்தையும் வெளிச் சுவாசத்தையும் இணைத்து வாசியாக்கி, நாதமாகிய அகாரத்தில் சேர்ந்து நம் உடம்பிலேயே ஈசன் குடியிருக்கும் கள்ள வாசல் எனும் பத்தாம் வாசலை யோக ஞானத்தால் திறந்து அதிலேயே நின்று தியானித்துக் காணவேண்டும் மனிதர்களே.

520. **நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே**
சுற்றிவந்து முண முணென்று சொல்லு மந்த்ர மேதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

நட்டுவைத்த கற்சிலைகளையே தெய்வம் என்று சொல்லி பூக்களைச் சூடி அலங்கரித்து கோயிலைச் சுற்றி வந்து வாய்க்குள் முணுமுணுத்து மந்திரங்களைச் சொல்லி வணங்குகிறீர்கள். அந்த நட்ட கல்லும் பேசுமோ ? நாதன் இருப்பதைக் காட்டுமோ ? சட்டியில் வைத்து சுட்டு சமைத்த கறியின் சுவையை அந்தச் சட்டி அறிய முடியுமோ ? அது போல் இல்லாமல் நாதனாகிய ஈசன் நம்முள் நடுவாக நட்டகல்லாக இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அதையே தெய்வம் என்று அறிந்து மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற நான்கு மலர்களை சாற்றி அதையே நினைவால் சுற்றிவந்து மௌனம் என்ற மந்திரத்தையே தியானம் செய்யுங்கள். நம் உள்ளிருக்கும் குருநாதன் பேசுவார். உடலின் உள்ளளேயே உள்ள இந்த உண்மையை உணர்ந்து ஊனுருக உயிர் உருக தவம் இருந்து அறிந்து கொள்ளுங்கள்.

521. **நானுமல்ல நீயுமல்ல நாதனல்ல ஓதுவேன்**
வானிலுள்ள சோதியல்ல சோதி நம்முள் உள்ளதே
நானும் நீயும் ஒத்த போது நாடிக் காணலாகுமே
தான தான தத்தனா நாதனான தானனா.

நான் என்பதும் இல்லை நீ என்பதும் இல்லை நாதன் பார்த்து என்பதும் இல்லை எல்லாம் பரம்பொருள் என்றே சொல்லுவேன். வானிலுள்ள சந்திர சூரிய ஒளியில் அல்ல நம்முள் உள்ள மெய்ப்பொருளே சோதி.

வானாகிய யகாரமும் தீயாகிய சிகாரமும் ஒன்றாக ஒத்து சோதியாக நின்றதை உணர்ந்து அதையே நாடி ஒரே நினைவாக நின்று தியானித்து கண்டு கொள்ளுங்கள். தானாக நின்ற அதுவே வத்துவான பொருளானதாகி நாதனான ஈசனே தானாகி ஆடிக் கொண்டிருக்கிறான்.

522. நல்லதல்ல கெட்டதல்ல நடுவில் நிற்பது ஒன்றுதான்
நல்லதென்ற போது அது நல்லதாகி நின்று பின்
நல்லதல்ல கெட்டதென்றால் கெட்டதாகும் ஆதலால்
நல்லதென்று நாடி நின்ற நாமம் சொல்ல வேண்டுமே.

நல்லதும் அல்ல கெட்டதுமல்ல நம் நடுவில் நிற்பது மெய்ப்பொருள் தான். அந்த ஒன்றை அறிந்து உணர்ந்த பிறகு நல்லதே நடக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் நல்லது தான் நடக்கும். நல்லதை எண்ணாமல் கெட்டதுதான் நடக்கவேண்டும் என்று நினைத்திருந்தால் கெடுதலே நடக்கும். ஆதலால் மெய்ப்பொருளை அறிந்து உணர்ந்தவர்கள் அது நல்லதே தரும் என நாடி ஈசனை எண்ணி அவன் நாமத்தைச் சொல்லி தியானத்தில் இருக்க வேண்டும்.

523. பேய்கள் கூடிப் பிணங்கள் தின்னும் பிரியமில்லாக் காட்டிலே
நாய்கள் சுற்ற நடனமாடும் நம்பன் வாழ்க்கை ஏதடா
தாய்கள் பாலுதிக்கும் இச்சை தவிர வேண்டி நாடினால்
நோய்கள் பட்டு உழல்வதே நோக்கிப்பாரும் உம்முளே.

நமக்குள் நாய்கள் போல் சுற்றும் மனத்திற்குள் நடனமாடும் நம் அப்பனான ஈசன் இல்லாது போய்விட்டால் நமக்கு வாழ்க்கை என்பது ஏது ? இவ்வுடம்பிற்குக் பிணம் என்று பேர் வைத்து பேய்கள் கூடிப் பிணங்கள் தின்னும் நாம் விரும்பாத சுடுகாட்டிற்குத் தான் கொண்டு செல்வார்கள். பெண்களை தாயாக பாவித்து அவர்களின் இளமையிலும் செழுமையிலும் ஏற்படும் காம இச்சையை தவிர்த்துவிட்டு அவனையே தனக்குள்ளேயே நாடி யோக ஞானத்தால் தியானித்திருப்பவர்களுக்கு நோய்கள் பட்டு உழலும் துன்ப வாழ்க்கை ஏற்படாது. ஈசனையே நாடியிருந்து அவன் இருக்கும் இடத்தையே தியானம் செய்யுங்கள்.

**524. உப்பை நீக்கில் அழுகிப் போகும் ஊற்றையாகும் உடலில் நீ
அப்பியாசை கொண்டிருக்க லாகுமோ சொலறிவிலா
தப்பிலிப் பொய் மானங்கெட்ட தடியனாகும் மனமே கேள்
ஒப்பிலாச் செஞ்சடையனாகும் ஒருவன் பாதம் உண்மையே.**

உப்பான பொருள் நீங்கினால் உயிர் போய் அழுகி நாற்றமடித்து ஊத்தையாகும் உடம்பில் நீங்கள் அபிப்பிராயம் வைத்து ஆசை கொண்டு இருப்பதால் பயன் ஏதும் ஆகுமோ சொல்லுங்கள். அறிவில்லாமல் தப்பிலித் தனங்களைச் செய்து பொய் பேசும் மானங்கெட்ட தடியனாக திரியும் மனமே கேள். குரங்கு போல் தாவும் மனதை ஒருமுகப்படுத்தி ஒப்பிலாத ஒருவனாகிய செஞ்சடையனாகும் ஈசன் பாதம் மெய்ப்பொருளாக உண்மையில் உள்ளதை உணர்ந்து அந்த ஒன்றையே மனதில் நிறுத்தி தியானம் செய்யுங்கள். அதன் பயனால் உயிரும் போகாது உடம்பும் நாறாது மரணமிலாப் பெரு வாழ்வில் வாழலாகும். ஈசன் பாதம் ஒன்றே உண்மை என்பதை உணருங்கள்.

**525. பிறப்பதெல்லாம் இறப்பதுண்டு பேதை மக்கள் தெரிகிலாது
இறப்பதில்லை யென மகிழ்ந்தே எங்கள் உங்கள் சொத்தெனக்
குறிப்புப் பேசித் திரிவாரன்றிக் கொண்ட கோலம் என்னவோ
நிறப்பும் பொந்தி அழிந்த போது நேசமாமோ வீசனே.**

இப்பூமியில் பிறப்பவை எல்லாம் ஒருநாள் இறந்து போகும் என்பதை தெரிந்து கொள்ளாமல் பேதை மனிதர்கள், நாமும் ஒரு நாள் இறந்து போவோம் என்பதை அறியாமல் இது என் சொத்து அது உன் சொத்து என மகிழ்ந்து அது குறித்தே பேசிக்கொண்டு திரிவார்கள். அதனால் அவர்களின் மரணத்தை தடுத்து நிறுத்த முடியுமோ ? அவர்கள் இன்றிருக்கும் கோலம் என்றும் நிலைத்திருக்குமா ? வயிறு நிரம்ப தின்று வளர்ந்த இந்த உடம்பு அழிந்த போது அவையாவும் உங்களுடன் நேசமாகி கூடி வருமா ? ஈசன் ஒருவனே என்றும் நித்தியமானவன்.

**526. சுட்டெரித்த சாந்து பூசும் சுந்தரப்பெண் மதிமுகத்
திட்ட நெட்டெழுத்தறியா தேங்கி நோக்கு மதவலீர்
பெட்டகத்துப் பாம்புறங்கும் பித்தலாட்ட மறியீரே
கட்டவிழ்த்துப் பிரமன் பார்க்கில் கதி உமக்கு ஏது காண்.**

சுட்டெரிக்கும் நெருப்பான பொட்டாக இருக்கும் சுந்தரப் பெண்ணான வாலை நம் அகத்தில் அறிவாகவும் முகத்தில் அழகாக இருப்பதையும், அதில் ஓர் எழுத்தாக உள்ள தலையெழுத்தை அறியாமலும், அதிலேயே ஏங்கி அதையே நோக்கி தவம் புரியும் வழியை உணராமலும் இருக்கின்றீர்கள். பெட்டகம் போன்ற மூலாதரத்தில் பாம்பினைப் போல் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினி சக்தியையும் அதனால் நம் தலை எழுத்தை மாற்றும் வல்லமை உள்ளதையம் அறியாமல் இருக்கின்றீர்களே ! நீங்கள் உருவான போதே உங்கள் ஆயுள் கணக்கை உங்களுக்குள்ளேயே வைத்த பிரமன் உங்கள் விதியின் கணக்கை கட்டவிழ்த்துப் பார்த்தால் என்ன செய்வீர்கள். உங்களுக்குள் கதியாக இருக்கும் வாசியை உணர்ந்து வாலையை அறிந்து சோதியில் சேர்த்து தியானித்து மரணத்தை வென்று இறவாநிலை பெற முயற்சி செய்யுங்கள்.

527. **வேத மோது வேலையோ வீணதாகும் பாரிலே**
காத காத தூரமோடிக் காதல் பூசை வேணுமோ
ஆதிநாதன் வெண்ணையுண்ட அவனிருக்க நம்முளே
கோது பூசை வேதமோது குறித்துப் பாரும் உம்முளே.

வேதம் ஓதுவது சிறப்பானதுதான். ஆனால் அது ஒன்றை மட்டும் வேலையாக கொண்டு செய்து கொண்டிருப்பது வீணாகத்தான் போகும். இந்த பூமியெங்கும் பலகாத தூரங்கள் ஓடி ஓடி ஆசையினால் செய்யும் பூசைகள் இறைவனை அடைய முடியுமா ? ஆதி மூலமாக நமக்குள்ளே வெண்ணை உண்ட கண்ணன் இருக்கும் போது கோ பூசை செய்வது எதற்கு ? வேதங்கள் நான்கும் சொல்லுகின்ற மெய்ப்பொருளை அறிந்து அதையே உங்களுக்குள் குறித்து நோக்கி தியானித்துப் பாருங்கள். அது இறைவனைக் காட்டி இறவா நிலைதரும்.

528. **பரமிலாத தெவ்விடம் பரமிருப்ப தெவ்விடம்**
அறமிலாத பாவிகட்குப் பரமிலை யதுண்மையே
கரமிருந்தும் பொருளிருந்தும் அருளிலாத போதது
பரமிலாத சூன்யமாகும் பாழ் நரக மாகுமே.

பரம்பொருள் இல்லாத இடம் ஏதுமில்லை. நமக்குள் பரம்பொருள் எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை அறிந்து

கொண்டு தியானியுங்கள். அறம் சிறிதும் நெஞ்சில் இல்லாத பாவிகளுக்குப் பரமன் இல்லை என்பதும் அதை அறியாமலே அழிவதும் உண்மையே. இறைவனை வணங்குவதற்கு கரங்கள் இருந்தும் அவனையே நினைத்து தியானம் செய்ய மெய்ப்பொருள் இருந்தும் கடவுள் இல்லை என்று சொல்லி அவனை வணங்காத் தன்மையினால் அவன் அருள் இல்லாத உயிர் பரம் பொருள் இல்லாத சூன்யமாகி கண்களில் குருடு ஏற்பட்டு பாழும் நரக வாழ்வில் உழல்வது உண்மையாக நடக்கும். ஆதலால் கடவுள் இல்லை என்று சொல்லி உங்கள் உயிர் இருக்கும்போது அதை உணராமல் பாழ் நரகில் விழாதீர்கள்.

529. **மாதர் தோள் சேராதவர் மாநிலத்தில் இல்லையே**
மாதர் தோள் புணர்ந்தபோது மனிதர் வாழ் சிறக்குமே
மாதராகும் சக்தியொன்று மாட்டிக் கொண்டதாதலால்
மாதராகும் நீலி கங்கை மகிழ்ந்து கொண்டான் ஈசனே.

மாதரைச் சேர்ந்து பெண்ணால் வரும் சுகத்தை அறியாதவர் எவரும் இப்பூவுலகில் இல்லையே. நன்மங்கையரை மணந்து நன்மக்களைப் பெற்று வாழ்வதே மனிதர் வாழ்வு சிறப்படையும் சக்தியே உமதுடல் சிவனே உமதுயிர் என்பதை உணருங்கள். சக்தியும் சிவனும் இணைந்தே மனித வாழ்வு அமைந்துள்ளது. ஈசன் சக்திக்கு தன் உடம்பில் பாதியையும், நீலியான கங்கையை தன் தலையிலும் வைத்து மகிழ்ந்து கொண்டான் என்பதை அறிந்து கொண்டு மாதரை இம்மாநிலத்தில் மதித்து இருங்கள்.

530. **சித்தரென்றும் சிறியரென்றும் அறியொணாத சீவர்காள்**
சித்தரிங்கு இருந்தபோது பித்தரென்றே எண்ணுவீர்
சித்தரிங்கு இருந்துமென்ன பித்தனாட்டிருப்பரே
அத்தனாடும் இந்த நாடு மவர்களுக்கு எலாம் ஒன்றே

இவர் பரந்த உள்ளம் கொண்ட சித்தரா அல்லது குறுகிய எண்ணம் கொண்டு வேடமிட்ட சிறியரா என்பதை அறிய முடியாத மனிதர்களே ! சித்தர் இங்கு இருந்த போதும் அவரை பித்தம் பிடித்தவர் என்றே எண்ணுவீர்கள். சித்தர் இங்கிருந்தும் அவரை அறியாமல் பித்தன் என்று விரட்டும் பைத்தியகார உலகில் இருக்கும் மூடர்களே ! அத்தன் ஈசன் ஆடும் சுடுகாடும் அவன் ஆலயம் கொண்டிருக்கும் இந்த நாடும் அவர்களுக்கு எல்லாம் ஒன்றே.

531. மாந்தர் வாழ்வு மண்ணிலே மறைந்த போது விண்ணிலே
சாந்தனான ஆவியைச் சரிப்படுத்த வல்லிரேல்
வேந்தனாகி மன்றுளாடும் விமலன் பாதம் காணலாம்
கூந்தலம்மை கோணலொன்றுங் குறிக்கொணாதி துண்மையே

மனிதர் வாழ்வு இப்பூமியில் தான். உயிர் மறைந்தபோது ஆவியாகச் சேர்வது ஆகாயத்தில் தான். ஆகையால் பஞ்சபூதங்களையும் உணர்ந்து நம் உயிர் உள்ள இடத்தை உடம்பிலேயேஅறிந்து கொண்டு அதை யோக ஞான சாதகங்களால் சரியான பாதையில் நடத்தி ஞானத்தில் வல்லவராக மாறுங்கள். கோன் என்ற அரசனாக உங்கள் உடம்பில் மன்றுள்ளாடும் விமலன் ஆன ஈசன் பாதம் கண்டு அதையே பற்றி நில்லுங்கள். கருங்கூந்தலை உடைய அம்மையும் கோனாகிய இடம் ஒன்றிலேயே இணைந்து இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அத்திருவடியையே குறித்து நோக்கி தியானித்திருங்கள். மரணத்தை வென்று ஈசன் திருவடியை சேர்ந்து இறவா நிலை பெறலாம். இது உண்மையே.

532. சருகருத்தி நீர் குடித்துச் சாரல் வாழ் தவசிகள்
சருகருத்தில் தேகங்குன்றிச் சஞ்சலம் உண்டாகுமே
வருவிருந்தோடு உண்டுடுத்தி வளர் மனை சுகிப்பிரேல்
வருவிருந்தோன் ஈசனாகி வாழ்வளிக்கும் சிவாயமே.

ஞானம் அடைய வேண்டி வீட்டைத் துறந்து காட்டிற்குச் சென்று தவம் செய்பவர்களுக்கும் பசி வருத்த வரும். அதனால் காட்டில் உள்ள இலைச்சருகுகளை அருந்தி அருவி நீரை அள்ளிக்குடித்து மலைச்சாரல்களில் வாழ்ந்து வரும் தவசிகளே ! அந்த சருகுகளை மட்டுமே உண்டு வந்தால் தேகத்தில் உள்ள திசுக்களின் செயலிழந்து உடல் சுருங்கி மன சங்சலங்கள்தான் உண்டாகும். மனம் அடங்காது போனால் ஞானம் பெறுவது எவ்வாறு ? அவனை அடைவதே இலட்சியமாய் அனைத்தையும் துறந்து வரும் தவசிகள் பலரும் தவத்தை மறந்து பசியினால் பிச்சைக்கார சாமியார்களாக அலைவதைக் கண்டுணருங்கள். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்து உழைத்து உண்டு நல்ல உடைகள் உடுத்தி எல்லாம் சிவன் செயலே என எண்ணி உங்கள் வீட்டிலேயே இல்லறத்தோடிருந்து சகல செல்வ யோகம் ஞானம் மிக்க வாழ்வில் அன்பே சிவமாய் தியானித்து சுகமாய் இருந்து வாருங்கள். ஈசனே உங்களைத் தேடி விருந்தாக வருவான். உங்களுக்கு வேண்டியதை வழங்கி நல்வாழ்வைத் தருவான். இது சிவாயம் ஆன உண்மையே.

**533. காடு மேடு குன்று பள்ளம் கானிநாற சுற்றியும்
நாடு தேசம் விட்டலைவர் நாதன் பாதம் காண்பரோ
கூடுவிட்டகன்று உன் ஆவி கூத்தனூர்க்கே நோக்கலால்
வீடு பெற்று அரன் பதத்தில் வீற்றிருப்பார் இல்லையே.**

ஈசனைத் தேடி காடு மேடு குன்று பள்ளம் என்று பாத யாத்திரைகள் செய்து நாடு விட்டு நாடு தேசம் விட்டு தேசம் சுற்றி அலைபவர்கள் நாதன் பாதம் காண்பரோ ! உங்கள் உடம்பை விட்டு அகன்று உங்கள் உயிர் ஆவியாகி எமனூர்க்குத்தான் போகும். இருந்த இடத்திலிருந்தே உங்களுக்குள் உள்ள மெய்ப்பொருளையே நோக்கித் தவமிருந்து பிறவியின் வீடு பேற்றைப் பெற்று அரன் பாதத்தைப் பற்றி தியானித்திருப்பவர் இல்லையே.

**534. கட்டையாற் செய் தேவரும் கல்லினாற் செய்தேவரும்
மட்டையாற் செய் தேவரும் மஞ்சளாற் செய் தேவரும்
சட்டையாற் செய் தேவரும் சாணியாற் செய் தேவரும்
வெட்டவெளி யதன்றி மற்று வேறு தெய்வம் இல்லையே.**

மரக்கட்டையால் செய்த தெய்வச் சிலைகளும், கருங்கல்லினால் செய்த தெய்வச்சிலைகளும், தென்னை மட்டையால் செய்த தேவரும், மஞ்சளால் செய்து வைத்த பிள்ளையாரும் சட்டைத் துணியால் செய்யும் தேவரும், பசுஞ்சாணியால் செய்த தேவரும் வெட்ட வெளியாக உள்ள மெய்ப்பொருளையே காட்டும். நமக்குள் வெட்ட வெளியாக உள்ள மெய்ப்பொருளை அன்றி மற்ற வேறு தெய்வம் ஏதும் இல்லையே.

**535. தங்கள் தேகம் நோய் பெறின் தனைப் பிடாரி கோயிலில்
பொங்கல் வைத்தும் ஆடு கோழிப் பூசைப்பலியை இட்டிட
நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளுந் தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள் குலத் தெய்வம் உங்களைக் குலைப்ப துண்மையே.**

தங்களுடைய உடம்பு நோயுற்றால் அதிலிருந்து மீள்வதற்கு தங்கள் தெய்வமான பிடாரி கோயிலில் பொங்கல் வைத்து ஆடு கோழிகளைப் பலி கொடுத்து பூசைப் பேடுகின்றீர்களே ! அதனால் பிணி நீங்குகின்றதா ? இதனால் எப்பயனுமின்றி உங்கள் உடம்பு மேலும் நலிவடைந்து ஒவ்வொரு நாளும் நோய் அதிகமாகி மூஞ்சுரைப்போல் தேய்ந்து சுருங்கித்

தானே போகின்றீர்கள். உங்களுக்குள் உள்ள தெய்வத்தை அறிந்து நோயை நீக்கும் வழியை உணர்ந்து கொள்ளாமல் இப்படி உங்கள் குலதெய்வங்களுக்குப் போடுகின்ற பூசைகள் உங்களை உருக்குலைத்து அழிப்பது தான் உண்மை.

536. **ஆசை கொண்டு அனுதினமும் அன்னியர் பொருளினை**
மோசம் செய்து அபகரிக்க முற்றிலும் அலைபவர்
பூசையோடு நேம நிட்டை பூரிக்கச் செய் பாதகர்
காசினியில் எழுநரகைக் காத்திருப்பதுண்மையே.

பூசைகளைப் போட்டு நேம நிட்டைகளோடு மற்றவர் பார்த்து வியப்படைய பூரித்து நடிக்கும் பாதகர்கள் ஆசை கொண்டு அனுதினமும் அன்னியர் பொருள்களை அபகரித்து மோசம் செய்வதற்கே முற்றிலும் அலைகின்றனர். அவர்களுக்கு இவ்வுலகில் ஏமாற்றுவதால் பொருளோடு வாழ்ந்திருந்தாலும், அதனால் இக்காசியினில் எழு பிறப்பும் நரகம் காத்திருப்பது உண்மையாகும்.

537. **நேசமுற்று பூசை செய்து நீறு பூசிச் சந்தனம்**
வாசமோடு அணிந்து நெற்றி மைதிலர்தம் இட்டுமே
மோசம் பொய் புனை சுருட்டு முற்றிலும் செய் மூடர்களே
வேசரி களம்புரண்ட வெண்ணீராகும் மேனியே.

ஈசன் மீது மிகவும் அன்புற்று இருப்பது போல் நடித்துக்கொண்டு அன்றாடம் பூசைகள் செய்து உடல் நிறைய விபூதியை தரித்து வாசமுடைய சந்தணத்தை உடம்பு முழுவதும் அணிந்து கொண்டு நெற்றியில் அஞ்சன மையினால் கருப்புத் திலகமிட்டு மற்றவர் மதிக்க பெரிய பக்தராக வேடமிட்டு மோசம் பொய் புனைசுருட்டு போன்ற அத்தனை திருட்டுத் தனங்களையும் செய்து வாழ்ந்து வரும் மூடர்களே ! அதனால் வரும் வினை என்ன தெரியுமா? போர்க்களத்தில் வெட்டுப்பட்டு ரண வேதனையால் புரளும் குதிரையைப் போல் உங்கள் உடம்பில் ரண வேதனைகள் உண்டாகி கொதிக்கும் வெண்ணீரைப் போல் மேனி கொதித்து துன்பத்தில் உழல்வீர் எச்சரிக்கை.

538. **வாதஞ்செய்வேன் வெள்ளியும் பொன் மாற்றுயர்ந்த தங்கமும்**
போதவே குருமுடிக்கப் பொன் பணங்கள் தாவெனச்
சாதனை செய்தெத்திச் சொத்துத் தந்ததைக் கவர்ந்துமே
காத தூரம் ஓடிச்செல்வர் காண்பதும் அருமையே.

நான் இரும்பைத் தங்கமாக்கும் வாதவித்தை செய்வேன். வெள்ளியும் பொன்னும் பத்தரை மாற்றுத் தங்கமும் செய்ய சாகாத வேகாத போகாத குருமருந்து செய்யவேண்டும். அந்த குரு செய்து முடிக்க ஒரு மண்டல காலம் ஆகும். அதற்கு வேண்டிய பொன்னும் பணமும் தாருங்கள். உங்களை இந்த உலகத்திலேயே பெரிய பணக்காரனாக மாற்றுவேன் என ஆசை காட்டி எத்தாகப் பேசி ஏமாற்றி வாங்கிய சொத்துக்களைக் கவர்ந்து கொண்டு வெகுதூரம் ஓடிவிடுவார்கள். அவர்களைத் திரும்பவும் காண்பதென்பது அருமையே. ஆதலால் இம்மாதிரியான போலி சித்தர்களை நம்பி ஆசையில் அகப்பட்டு ஏமாறாதீர்.

539. **யோக சாடை காட்டுவார் உயரவும் மெழும்புவார்**
வேகமாக அட்ட சித்து வித்தை கற்று நெட்டுவார்
மோகங் கொண்டு மாதரின் மூத்திரப்பை சிக்கிப் பின்
பேயது பிடித்தவர் போல் பேருலகில் சாவரே.

மற்றவர் தம்மை மதிக்க வேண்டும் என்று யோக சாடைகளை செய்து காட்டுவார்கள். தரையிலிருந்து உயரவும் எழுவார். வெகு வேகமாக சித்து விளையாட்டுக்களைக் கற்று அதனை செய்து வித்தைக் காட்டி வியப்படைய வைப்பர். இதனால் மாயையில் அகப்பட்டு காம ஆசையினால் மோகங் கொண்டு பெண்களின் சிற்றின்பத்தில் சிக்கிக் கொள்வார். அதன் பின் உண்மையான யோக ஞானத்தை இழந்து பெண்ணாசையால் பேய் பிடித்தவர் போல அலைந்து இப்பேருலகில் சாவார்கள். ஆகையால் சித்து வித்தைகளை விட்டு அவைகளில் நாட்டமில்லாது மெய்ஞானத்தில் நில்லுங்கள்.

540. **காய காய முண்பதாகக் கண்டவர் மதித்திட**
மாய வித்தை செய்வதெங்கு மடிப்பு மோசஞ் செய்பவர்
நேயமாக்கஞ் சாவடித்து நேரபிணியைத் தின்பதால்
நாயதாக நக்கி முக்கி நாட்டினில் அலைவரே.

காய கற்பம் உண்டு கல்ப தேகம் பெற்றதாக கண்டவர்கள் மதிக்கும்படி சொல்லிக் கொள்வார்கள். கற்பத்தினால் மற்றவர் கண்களில் படாது மாயமாய் மறையலாம், ககன மார்க்கத்தில் எங்கும் பறந்து செல்லலாம். அன்பு மார்க்கத்தை சாகடித்துவிட்டு எந்நேரமும் அபினியை காயகற்பம் என்று தின்பர். அதனால் பைத்தியம் பிடித்து நாயைப் போல் சாக்கடை நீரை நக்கிக் குடித்து நாட்டில் அலைவார்கள்.

541. நீரினிற் குமிழியொத்த நிலையிலாத காயமென்று
ஊரினிற் பறையடித்து ஊதாரியாய்த் திரிபவர்
சீரினிற் உனக்கு ஞான சித்தி செய்வேன் பாரென
நேரினிற் பிறர் பொருளை நீளவுங் கைப்பற்றுவர்.

நீர்மேல் நிற்கும் குமிழியைப் போன்றது நிலையில்லாத உடம்பு. இது என்று ஞானம் பேசி தாங்களே அவதாரமாக வந்த உண்மையான குருவென்று ஊர் முழுதும் பறையடித்து பிரச்சாரம் செய்து உண்மைப் பொருள் அறியாத ஊதாரியாய் திரியும் போலிக் குருவானவர் ஊரிலுள்ளோரை எல்லாம் அழைத்து ஞானம் பெற என்னிடம் உபதேசம் பெற்றுக் கொள்ளுங்கள். வெகு சீக்கிரத்தில் உங்களுக்கு ஞான சித்தியை நானே கொடுப்பேன் என அழைப்பு விடுத்து ஒவ்வொரு படியாக உபதேசம் பெறவேண்டும் எனக் கூறி அதற்கு நிகராக பிறர் பொருளை கட்டணம் என்று கட்டாய வசூல் செய்து வாழ்நாள் முழுதும் நெடுக கைப்பற்றுவார்கள். இவர்களை கண்டு ஏமாறாதீர்கள்.

542. காவியுஞ் சடைமுடி கமண்டலங்கள் ஆசனம்
தாவுருத்திராட்ச் யோகத்தண்டு கொண்ட மாடுகள்
தேவியை அலைய விட்டுத் தேசமெங்குஞ் சுற்றியே
பாவியென்ன வீடெலாம் பருக்கை கேட்டலைவரே.

காவி ஆடை, சடாமுடி, கமண்டலம், மான்தோல் ஆசனம், கழுத்திலும் உடம்பிலும் உருத்திராட்சம், யோகத்தண்டு இவைகளைக் கொண்டு சாமியார் வேடம் போட்ட சோம்பேறி மாடுகளான மனிதர்கள், தங்கள் மனைவியைத் தவிக்கும்படி அலைய விட்டு தேசமெங்கும் சுற்றிப் பிச்சையெடுப்பார்கள். அதனால் பாவியாகி சோற்றுக்காக வீடெலாம் சென்று அம்மா தாயே பசி என்று கேட்டு அலைவார்கள்.

543. முத்தி சேறச் சித்தியிங்கு முன்னளிப்பேன் பாரென
சத்தியங்கள் சொல்லி அங்கும் சாமி வேடம் பூண்டவர்
நித்தியம் வயிறு வளர்க்க நீதி ஞானம் பேசியே
பத்தியாய்ப் பணம் பறித்துப் பாழ் நரகில் வீழ்வரே.

ஜீவன் முக்தி அடைவதற்குள்ள சித்தியை இங்கு முன்னதாக உடனே நான் தருவேன் பாருங்கள் என்று சத்தியங்கள் சொல்லி

சாமி வேடம் பூண்டவர், நித்தியம், தன் வயிறு வளர்க்கப் பல நீதிக்கதைகளையும் சொல்லி ஞானப் பொருளறியாமல் ஞானம் பேசிப் பேசியே குருபக்தியை எடுத்துரைத்துப் பணத்தைப் பறிப்பார்கள். யோக ஞானத்தை விலை வைத்து விற்பதால் இவர்கள் பாழும் நரகத்தில்தான் விழுவார்கள்.

544. **செம்மை சேர் மரத்திலே சிலை தலைகள் செய்கிறீர்**
கொம்மையற்ற கிளையில் பாதகுறடு செய்தழிக்கிறீர்
நும்முளே விளங்குவோனை நாடி நோக்க வல்லிரேல்
இம்மலமும் மும்மலமும் எம்மலமும் அல்லவே.

செம்மை மிகுந்த பழமையான மரத்தில் சிலைகளையும், தலைகளையும் செய்து வணங்குகிறீர்கள். கொம்பில்லாத அம்மரக் கிளையில் பாதக்குறடுகள் செய்து காலில் போட்டு அழிக்கிறீர்கள். கையெடுத்து வணங்கியதும் காலில் போட்டு மிதித்தும் ஒரே மரத்தில் ஆனது தானே. உங்களுக்குள்ளே சோதியாக விளங்கும் ஈசனை அறிந்து அனையே நாடியிருந்து நோக்கி தியானிக்க வல்லவரானால் இம்மலமான உடம்பில் ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் எக்குற்றங்களும் இல்லாது மனத்தூய்மை பெறுவீர்கள். மாசற்ற மனதில் ஈசன் வாழ்வான்.

545. **எத்திசை எங்கெங்குமோடி எண்ணிலாத நதிகளில்**
சுற்றியும் தலை முழுகச் சுத்த ஞானி யாவரோ
பக்தியோடு அரன்பதம் பணிந்திடாத பாவிகாள்
முத்தியின்றிப பாழ் நரகில் மூழ்கி நொந்தலைவரே.

எல்லாத் திசைகளுக்கும் சென்று எங்கெங்கும் ஓடி சுற்றி வந்தாலும் எண்ணற்ற புண்ணிய நதிகளில் தலை முழுகுவதாலும் சுத்த ஞானியாக ஆக முடியுமோ ! மெய்ப்பக்தியோடு மெய்ப்பொருளை அறிந்து அரன்பாதம் பணிந்திடாத பாவிகளே ! மெய்ப்பொருளை அறிந்து தவம் செய்து உணர்ந்தால் தான் சுத்த ஞானி ஆக முடியும். இதைவிடுத்து அலைவதால் முக்தி கிடைக்காது. பாழும் நரகத்தில் தான் மூழ்கி நொந்து போவீர்கள். ஆதலால் மெய்பபெருளை அறிந்து தியானியுங்கள்.

546. **கல்லு வெள்ளி செம்பிரும்பு காய்ச்சிடும் தராக்களில்**
வல்ல தேவ ரூபபேதம் அங்கமைத்துப் போற்றிடின்
தொல்லையற்றிடப் பெருஞ் சுகம் தருமோ சொல்லுவீர்
இல்லை இல்லை இல்லை இல்லை ஈசன் ஆணை இல்லை.

கல்லிலும், வெள்ளி, செம்பு, இரும்பு என்று காய்ச்சிடும் தராக்களிலும் வல்லமையுள்ள தெய்வ உருவங்களைப் பலவித பேதங்களில் அமைத்து அங்கு போற்றி வழிபட்டாலும் தொல்லையற்று இருக்க முடியுமா ? அது உண்மையில் பெருஞ்சுகமாகிய இறை இன்பத்தை தருமோ சொல்லுங்கள். உங்களில் உள்ள சோதியில்தான் மெய்யின்பம் பெற முடியுமேயன்றி வேறு வகைகளில் போற்றுவதனால் இல்லையென்று ஈசன் மீது ஆணையிட்டுச் சொல்கின்றேன்.

547. **இச்சகஞ் சனித்ததுவும் ஈசனைந் தெழுத்திலே**
மெச்சவுஞ் சராசரங்கள் மேவுமைந்தெழுத்திலே
உச்சிதப் பல உயிர்கள் ஓங்கலஞ் செழுத்திலே
நிச்சய மெய்ஞ்ஞான போதம் நிற்குமைந்தெழுத்திலே.

இந்த உலகம் தோன்றியது ஈசனுடைய நமசிவய என்ற அஞ்செழுத்தாலே அனைத்து மேலான சராசரங்கள் யாவிலும் மேவியிருப்பது ஐந்தெழுத்து. உச்சிதப் பல உயிர்களிலும் பொருந்தி ஓங்கியிருப்பதும் ஐந்தெழுத்தே. சத்தியமான மெய்ஞ்ஞானப் போதப் பொருளாக நிற்பதும் ஐந்தெழுத்தே ஆனதால் ஐந்தெழுத்தை ஓதி ஐந்தெழுத்தின் உண்மைகளையும் பஞ்சபூத தன்மைகளையும் உணர்ந்து ஐந்தெழுத்தே பஞ்சாட்சரமாகிய மெய்ப்பொருளாக இருப்பதை இருந்து அதையே நோக்கி தியானித்து ஈசன் அருள் பெறுங்கள்.

548. **சாத்திரங்கள் பார்த்துப் பார்த்துத் தாங்குருடாவதால்**
நேத்திரங் கெட வெய்யோனை நேர்துதி செய் மூடர்காள்
பாத்திர மறிந்து மோன பத்தி செய்ய வல்லிரேல்
சூத்திரப்படி யாவரும் சுத்தராவர் அங்ஙனே.

சாத்திரங்களைப் பார்த்து பார்த்து அதன்படியே நடந்து வந்தும் மெய்யறிவை அறியாமல் தாங்கள் குருடாகி இருளிலேயே இருக்கின்றீர் கண்கள் கெட்டுப் போகும்படி உச்சிவெயிலில் சூரியனை நேராகப் பார்த்து மந்திரங்களை ஓதி துதி செய்யும் முட்டாள்களே ! பக்குவப்பட்டு பாத்திரமாக இருக்கும் உயிரை அறிந்து அதுவே மோனம் என்ற மெய்ப்பொருள் என்பதை உணர்ந்து அதையே ஈசன் திருவடி என பற்றி பக்தியுடன் தியானம் செய்ய வல்லவர் ஆனால் சாஸ்திரங்களின் சூத்திரப்படி அதைத் தெரிந்தவர்கள் யாவரும் சுத்த ஞானியாக ஆவார்கள்.

549. **மன உறுதி தான் இலாத மட்டிப் பிண மாடுகள்**
சினமுறப் பிறர் பொருளைச் சேகரித்து வைத்ததைத்
தினந்தினமும் ஊரெங்குஞ் சுற்றித் திண்டிக்கே அலைபவர்
இளமதிற் பலர்கள் வையும் இன்பற்ற பாவிகாள்.

தன்னிடம் மனதில் திட நம்பிக்கையுடன் இறைவனை எண்ணி தியானம் செய்ய வேண்டும். மனதில் உறுதியில்லாத மடமந்தை கொண்ட மாடுகளைப் போன்று வாழ்ந்து கொண்டு பிணமாகப் போகும் மனிதர்களே ! கோபம் அடைவார்கள். பிறர் பொருளை ஏமாற்றி சேகரித்து வைத்து யாருக்கும் சொல்லாமல் எதற்கும் பயனன்றி இறந்து போவார்கள். தினந்தோறும் ஊரெல்லாம் சுற்றி சோற்றுக்கு அலைபவர்கள் மெய்யின்பத்தை அறியாபாவிகள். இவர்களை வருங்காலம் தூற்றும் ஆதலால் இளமையிலேயே உண்மையை உணர்ந்து மனத்தில் உறுதியுடன் செத்தாலும் வைத்த அடி மாறாத திடநம்பிக்கையுடன் ஈசனைத் தியானித்திருங்கள்.

550. **சிவாய வசியென்னவுஞ் செபிக்க இச்சகமெலாம்**
சிவாய வசி யென்னவுஞ் செபிக்க யாவும் சித்தியாம்
சிவாய வசி யென்னவுஞ் செபிக்க வானமாளலாம்
சிவாய வசி யென்பதே இருதலைத் தீயாகுமே.

சிவாய வசி என்று ஓதி செபிக்க இந்த சகம் எல்லாம் நம் வசம் ஆகும். சிவயாவசி என்று எண்ணி மனதிலேயே செபித்து தியானிக்க யாவும் சித்தியாகும். சிவாய வசி என வாசியேற்றி செபிக்க ஆகாயத்தலத்தில் ஆண்டவனைச் சேர்ந்து தேவர்களாகி வானம் ஆளலாம். சிவாய வசி என்பது இருதலைத் தீயாகி ஆதுவே சோதியான ஈசன் ஆகும்.

சிவ வாக்கியர் பாடல் முற்றிற்று

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த
திருச்சந்த விருத்தம்

(யமுநாகல்யாணி ராகம் – ரூபக தாளம்)

1. பூநிலாய வைந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய் சிறந்த காலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாயவண்ணம் நின்னை யார்நினைக்க வல்லரே?

2. ஆறுமாறுமாறுமாய் ஓரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டு மூன்றும் ஏழுமாறு மெட்டுமாய்
வேறுவேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஊறொடோசையாயவைந்தும் ஆய ஆயமாயனே!

3. ஐந்துமைந்துமைந்துமாகி அல்லவற்றுளாயுமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே!
ஐந்துமைந்துமைந்துமாகி அந்தரத்தணைந்துநின்று
ஐந்துமைந்துமாய நின்னை யாவர்காணவல்லரே?

4. மூன்றுமுப்பதாறினோடு ஓரைந்து மைந்துமைந்துமாய்
மூன்றுமூர்த்தியாகி மூன்று மூன்றுமூன்றுமூன்றுமாய்
தோன்றுசோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்
ஏன்றெனாவியுள் புகுந்தது என்கொலோ? எம்மீசனே!

5. நின்றியங்கு மொன்றலா உருக்கள்தோறும் ஆவியாய்
ஒன்றியுள் கலந்துநின்ற நின்னதன்மையின்ன தென்று
என்றும் யார்க்குமெண்ணிறந்த ஆதியாய்! நின்னுந்திவாய்
அன்றுநான்முகற்பயந்த ஆதிதேவனல்லையே?

6. நாகமேந்து மேருவெற்பை நாகமேந்து மண்ணினை
நாகமேந்துமாகமாகம் மாகமேந்துவார்புனல்
மாகமேந்துமங்குல்தீயொர் வாயுவைந்தமைந்துகாத்து
ஏகமேந்திநின்ற நீர்மை நின்கணேயியன்றதே.

7. ஒன்றிரண்டு மூர்த்தியாய் உறக்கமோடுணர்ச்சியாய்
ஒன்றிரண்டு காலமாகி வேலைஞால மாயினாய்
ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனாய மாயனே!
ஒன்றிரண்டு கண்ணினாலும் உன்னையேத் தவல்லனே?

8. ஆதியான வானவர்க்கும் அண்டமாய் வப்புறத்து
ஆதியான வானர்க்கும் ஆதியான ஆதிநீ
ஆதியான வானவாணர் அந்தகாலம் நீயுரைத்தி
ஆதியான காலநின்னை யாவர்காண வல்லரே?

9. தாதுலாவு கொன்றைமாலை துன்னுசெஞ்சடைச் சிவன்
நீதியால் வணங்குபாத! நின்மலா! நிலாயசீர்
வேதவாணர் கீதவேள்வி நீதியான கேள்வியார்
நீதியால் வணங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே.

10. தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின் கண்நின்றதே.

(அபரூபராகம் - ரூபகதாளம்)

11. சொல்லினால் தொடர்ச்சிநீ சொலப்படும் பொருளும்நீ
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதிநீ
சொல்லினால் படைக்க நீபடைக்க வந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்க நின்குணங்கள் சொல்லவல்லரோ?

12. உலகுதன்னைநீ படைத்தி உள்ளொடுக் கிவைத்தி மீண்டு
உலகுதன்னுளே பிறத்தி ஓரிடத்தையல்லையால்
உலகுநின்னொடொன்றிநிற்க வேறுநிற்றியாதலால்
உலகில் நின்னையுள்ளசூழல் யாவருள்ளவல்லரே?

13. இன்னையென்று சொல்லலாவது இல்லையாதும் இட்டிடை
பின்னைகேள்வனென்பர் உன்பிணக்குணர்ந்த பெற்றியோர்
பின்னையாயகோலமோடு பேருமூருமாதியும்
நின்னையார் நினைக்கவல்லர்? நீர்மையால் நினைக்கிலே.

14. தூய்மையோக மாயினாய்! துழாயலங்கல் மாலையாய்!
ஆமையாகி யாழ்கடல்துயின்ற ஆதிதேவ! நின்
நாமதேயமின்னதென்ன வல்லமல்லவாகிலும்
சாமவேத கீதனாய சக்கரபாணி யல்லையே?

15. அங்கமாறும் வேதநான்கும் ஆகிநின்று அவற்றுளே
தங்குகின்ற தன்மையாய்! தடங்கடற் பணத்தலை
செங்கண் நாகணைக்கிடந்த செல்வமல்கு சீரினாய்!
சங்கவண்ண மன்னமேனி சார்ங்கபாணி யல்லையே?

16. தலைக்கணத்துகள் குழம்புசாதி சோதிதோற்றமாய்
நிலைக்கணங்கள் காணவந்து நிற்றியேலும் நீடிரும்
கலைக்கணங்கள் சொற்பொருள் கருத்தினால்நினனைக்கொணா
மலைக்கணங்கள் போலுணர்த்தும் மாட்சி நின்தன்மாட்சியே!

17. ஏகமூர்த்தி மூன்றுமூர்த்தி நாலுமூர்த்தி நன்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தின்மூர்த்தி எண்ணில் மூர்த்தியாய்
நாகமூர்த்தி சயனமாய் நலங்கடற்கிடந்து மேல்
ஆகமூர்த்தியாய வண்ணம் என்கொல்? ஆதிதேவனே!

18. விடத்தவாயொராயிரம் இராயிரம்கண் வெந்தழல்
விடுத்து வீள்விலாதபோகம் மிக்கசோதி தொக்கசீர்
தொடுத்து மேல்விதானமாய் பௌவநீரராவணை
படுத்தபாயல் பள்ளிகொள்வது என்கொல்? வேலைவண்ணனே!

19. புள்ளதாகி வேதநான்கும் ஓதினாய் அதன்றியும்
புள்ளின் வாய்பிளந்து புடகொடிப்பிடித்த பின்னரும்
புள்ளையூர்தியாதலால் அதென்கொல்? மின்கொள்நேமியாய்
புள்ளின்மெய்ப்பகைக்கடல் கிடத்தல் காதலித்ததே.

20. கூசமொன்றுமின்றி மாகணம்படுத்து வேலைநீர்
பேசநின்று தேவர்வந்து பாடமுன்கிடந்ததும்
பாசம்நின்ற நீரில்வாழும் ஆமையான கேசவ!
ஏசவன்றுநீ கிடந்தவாறு கூறுதேறவே.

21. அரங்கனே! தரங்கநீர் கலங்கவன்று குன்றுசூழ்
மரங்கள் தேயமாநிலம் குலுங்க மாசுணஞ்சுலாய்
நெருங்க நீகடைந்தபோது நின்றசூரரென் செய்தார்?
குரங்கையாளுகந்த வெந்தை! கூறுதேற வேறிதே.

22. பண்டுமின்றுமேலுமாய் ஓர்பாலனாகி ஞாலமேழ்
உண்டுமண்டி யாலிலைத்துயின்ற ஆதிதேவனே!
வண்டுகிண்டுதண்துழாய் அலங்கலாய்! கலந்தசீர்
புண்டரீக பாவைசேரும் மார்ப! பூமிநாதனே.

23. வால்நிறத்தொர்சீயமாய் வளைந்த வாளெயிற்றவன்
ஊன்நிறத்துகிர்த்தலம் அழுத்தினாய்! உலாயசீர்
நால்நிறத்த வேதநாவர் நல்லயோகினால் வணங்கு
பால்நிறக்கடற் கிடந்த பற்பநாபனல்லையே?

24. கங்கைநீர்பயந்த பாதபங்கயத்தெம்மண்ணலே!
அங்கையாழி சங்குதண்டு வில்லும் வாளுமேந்தினாய்!
சிங்கமாய தேவதேவ! தேனுலாவு மென்மலர்
மங்கைமன்னி வாழுமார்ப! ஆழிமேனி மாயனே!

25. வரத்தினிற் சிரத்தைமிக்க வாளெயிற்று மற்றவன்
உரத்தினிற் கரத்தைவைத்து உகிர்த்தலத்தை யூன்றினாய்
இரத்திநீயி தென்னபொய்? இரந்தமண் வயிற்றுள்ளே
கரத்தி உன்கருத்தை யாவர்காணவல்லர் கண்ணனே.

26. ஆணினோடு பெண்ணுமாகி அல்லவோடு நல்லவாய்
ஊணொடோசை யூறுமாகி ஒன்றலாத மாயையாய்
பூணிபேணு மாயனாகிப் பொய்யினோடு மெய்யுமாய்
காணிபேணு மாணியாய்க் கரந்துசென்ற கள்வனே!

27. விண்கடந்த சோதியாய் விளங்குஞான மூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே!
எண்கடந்த யோகினோடு இரந்துசென்று மாணியாய்
மண்கடந்த வண்ணம்நின்னை யார்மதிக்க வல்லரே?

28. படைத்த பாரிடந்தளந்து அதுண்டுமிழ்ந்து பௌவநீர்
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்த பெற்றியோய்
மிடைத்தமாலிமாலிமான் விலங்கு காலனூர்புக
படைக்கலம்விடுத்த பல்படைத்தடக்கை மாயனே!

29. பரத்திலும்பரத்தையாகி பௌவநீரணைக்கிடந்து
உரத்திலும்மொருத்திதன்னை வைத்துகந்து அதன்றியும்
நரத்திலும்பிறத்தி நாதஞானமூர்த்தியாயினாய்
ஒருத்தரும்நினாதுதன்மை இன்னதென்னவல்லரே?

30. வானகம்மும்மண்ணகம்மும் வெற்புமேழ்கடல்களும்
போனகம்செய்தாலிலைத்துயின்ற புண்டரீகனே!
தேனகஞ்செய்தண்ணறும் மலர்த்துழாய் நன்மாலையாய்
கூனகம்புகத்தெறித்த கொற்றவில்லியல்லையே?

(பியாகடைராகம் – திரிபுடைதாளம்)

31. காலநேமிகாலனே! கணக்கிலாத கீர்த்தியாய்
ஞாலமேழுமுண்டு பண்டொர் பாலனாய பண்பனே!
வேலைவேவவில் வளைத்த வெல்சினத்தவிர! நின்
பாலராயபத்தர்சித்தம் முத்திசெய்யும் மூர்த்தியே!

32 குரக்கினப்படைகொடு குரைகடலின் மீதுபோய்
அரக்கரங்கரங்க வெஞ்சரந்துரந்தவாதிநீ
இரக்கமண்கொடுத்தவற்கு [1]இருக்கவொன்று மின்றியே
பரக்கவைத்தளந்துகொண்ட பற்பபாதனல்லையே?

33. மின்னிற்தெயிற்றரக்கன்வீழ வெஞ்சரந்துரந்து
பின்னவற்கருள் புரிந்து அரசளித்த பெற்றியோய்!
நன்னிறத் தொரின்சொல்ஏழை பின்னைவேள்வ! மன்னுநீர்
பொன்னிறத்தவண்ணனாய புண்டரீகனல்லையே?

34. ஆதியாதியாதிநீ ஓரண்டமாதியாதலால்
சோதியாதசோதிநீ அதுண்மையில்விளங்கினாய்
வேதமாகிவேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி ஆயனாய மாயமென்னமாயமே?

35. அம்புலாவு மீனுமாகி ஆமையாகி ஆழியார்
தம்பிரானுமாகி மிக்கது அன்புமிக்கு அதன்றியும்
கொம்பராவு நுண்மருங்குல் ஆயர்மாதர் பிள்ளையாய்
எம்பிரானுமாய வண்ணம் என்கொலோ? எம்மீசனே!

36. ஆடகத்தபூண்முலை யசோதையாய்ச்சி பிள்யையாய்
சாடுதைத்தொர்புள்ளதாவி கள்ளதாயபேய்மகள்
வீடவைத்த வெய்யகொங்கை ஐயபாலமுதுசெய்து
ஆடக்கைமாதர்வாயமுதம் உண்டதென்கோலோ?

37. காய்த்தநீள் விளங்கனியுதிர்த்து எதிர்ந்த பூங்குருந்து
சாய்த்து மாபிளந்தகைத்தலத்த கண்ணனென்பரால்
ஆய்ச்சிபாலையுண்டு மண்ணையுண்டு வெண்ணெயுண்டு பின்
பேய்ச்சிபாலையுண்டு பண்டொரேனமாயவாமனா!

38. கடங்கலந்தவன்கரி மருப்பொசித்து ஓர்பொய்கைவாய்
விடங்கலந்தபாம்பின்மேல் நடம்பயின்றநாதனே!
குடங்கலந்த கூத்தனாய கொண்டல்வண்ண! தண்துழாய்
வடங்கலந்த மாலைமார்ப! காலநேமிகாலனே!

39. வெற்பெடுத்துவேலைநீர் கலக்கினாய், அதன்றியும்
வெற்பெடுத்துவேலைநீர் வரம்புகட்டி, வேலைசூழ்
வெற்பெடுத்த இஞ்சிசூழ் இலங்கைகட்டழித்தநீ
வெற்பெடுத்துமாரிகாத்த மேகவண்ணனல்லையே?

40. ஆனைகாத்தொரானைகொன்று அதன்றி, ஆயர்பிள்ளையாய்
ஆனைமேய்த்தியானெயுண்டி அன்றுகுன்றமொன்றினால்
ஆனைகாத்து மையரிக்கண் மாதரார்திறத்து முன்
ஆனையன்று சென்றடர்த்த மாயமென்னமாயமே?

(ஆரபிராகம் – ரூபகதாளம்)

41. ஆயனாகி ஆயர்மங்கை வேயதோள்விரும்பினாய்
ஆய! நின்னையாவர்வல்லர்? அம்பரத்தொடிம்பராய்
மாய! மாயமாயைகொல்? அதன்றிநீ வகுத்தலும்
மாயமாயமாக்கினாய் உன்மாயமுற்றும் மாயமே.

42. வேறிசைந்தசெக்கர்மேனி நீறணிந்த புன்சடை
கீறுதிங்கள்வைத்தவன் கைவைத்தவன் கபால்மிசை
ஊறுசெங்குருதியால் நிறைத்தகாரணந்தனை
ஏறுசென்றடர்த்தவீச! பேசுகூசமின்றியே.

43. வெஞ்சினத்தவேழ வெண்மருப்பொசித்து உருத்தமா
கஞ்சனைக்கடிந்து மண்ணளந்து கொண்டகாலனே!
வஞ்சனத்துவந்த பேய்ச்சியாவி பாலுள்வாங்கினாய்!
அஞ்சனத்த வண்ணனாய ஆதிதேவனல்லையே?

44. பாலினீர்மைசெம்பொனீர்மை பாசியின்பசும்புறம்
போலும்நீர்மை பொற்புடைத்தடத்து வண்டுவிண்டுலாம்
நீலநீர்மையென்றிவை நிறைந்தகாலம் நான்குமாய்
மாலினீர்மைவையகம் மறைத்ததென்ன நீர்மையே?

45. மண்ணுளாய்கொல்? விண்ணுலாய்கொல்? மண்ணுயேமயங்கிநின்று
எண்ணுமெண்ணகப்படாய்கொல்? என்னமாயை? நின்தமர்
கண்ணுளாய்கொல்? சேயைகொல்? அனந்தன்மேற்கிடந்தஎம்
புண்ணியா! புனந்துழாய் அலங்கலம்புனிதனே!

46. தோடுபெற்றதண்துழாய் அலங்கலாடு சென்னியாய்!
கோடுபற்றியாழியேந்தி அஞ்சிறைப்புள்ளூர்தியால்
நாடுபெற்றநன்மை நண்ணமில்லையேனும். நாயினேன்
வீடுபெற்றிறப்பொடும் பிறப்பறுக்குமாசொலே.

47. காரொடொத்தமேனி நங்கள்கண்ண! விண்ணின்நாதனே!
நீரிடத்தராவணைக்கிடத்தி யென்பர்,அன்றியும்
ஓரிடத்தையல்லை எல்லையில்லையென்பராதலால்
சேர்விடத்தைநாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே.

48. குன்றில்நின்றுவானிருந்து நீள்கடற்கிடந்து மண்
ஒன்றுசென்ற தொன்மையுண்டு அதொன்றிடந்துபன்றியாய்
நன்றுசென்றநாளவற்றுள் நல்லுயிர்படைத்து அவர்க்கு
அன்றுதேவமைத்தளித்த ஆதிதேவனல்லையே?

49. கொண்டைகொண்டகோதைமீது தேனுலாவுகூனிகூன்
உண்டைகொண்டரங்கவோட்டி உள்மகிழ்ந்தநாதனூர்
நண்டையுண்டுநாரைபேர வாளைபாய, நீலமே
அண்டைகொண்டு கெண்டைமேயும் அந்தணீரரங்கமே.

50. வெண்திரைக்கருங்கடல் சிவந்துவேவ, முன்னொர்நாள்
திண்திறற்சிலைக்கைவாளி விட்டவீரர்சேருமூர்
எண்திசைக்கணங்களும் இறைஞ்சியாடுதீர்த்தநீர்
வண்டிரைத்த சோலைவேலி மன்னுசீரரங்கமே.

51. சரங்களைத்துரந்து வில்வளைத்து இலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்த செல்வர்மன்னுபொன்னிடம்
பரந்துபொன்னிரந்துநுந்தி வந்தலைக்கும் வார்புனல்
அரங்கமென்பர் நான்முகத்தயன் பணிந்த கோயிலே.

52. பொற்றையுற்றமுற்றல்யானை போரெதிர்ந்துவந்ததை
பற்றியுற்றுமற்றதன் மருப்பொசித்தபாகனூர்
சிற்றெயிற்றுமுற்றல்மூங்கில் மூன்றுதண்டரொன்றினர்
அற்ற பற்றர்சுற்றிவாழும் அந்தணீரரங்கமே.

53. மோடியோடி லச்சையாய சாபமெய்திமுக்கணான்
கூடுசேனைமக்களோடு கொண்டுமண்டி வெஞ்சமத்து
ஓட வாணனாயிரம் கரங்கழித்த ஆதிமால்
பீடுகோயில் கூடுநீர் அரங்கமென்ற பேரதே.

54. இலைத்தலைச்சரந்துரந்து இலங்கைகட்டழித்தவன்
மலைத்தலைப்பிறந்திழிந்து வந்துநுந்துசந்தனம்
குலைத்தலைத்திறுத்தெறிந்த குங்குமக்குழம்பினோடு
அலைத்தொழுகுகாவிரி அரங்கமேய அண்ணலே!

55. மன்னுமாமலர்க்கிழத்தி வையமங்கைமைந்தனாய்
பின்னுமாயர்பின்னைதோள் மணம்புணர்ந்ததன்றியும்
உன்னபாதமென்னசிந்தை மன்னவைத்துநல்கினாய்
பொன்னிசூழரங்மேய புண்டரீகனல்லையே.

56. இலங்கைமன்னனைந்தொடைந்து பைந்தலைநிலத்துக்
கலங்கவன்று சென்று கொன்று வென்றிகொண்டவீரனே!
விலங்குநூலர் வேதநாவர் நீதியானகேள்வியார்
வலங்கொளக் குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே?

57. சங்குதங்கு முன்கைநங்கை கொங்கைதங்கலுற்றவன்
அங்கமங்கவன்றுசென்று அடர்த்தெறிந்தவாழியான்
கொங்குதங்குவார்குழல் மடந்தைமார்குடைந்தநீர்
கொங்குதண்குடந்தையுள் கிடந்தபுண்டரீகனே!

58. மரங்கெடநடந்தடர்த்து மத்தயானைமத்தகத்து
உரங்கெடப்புடைத்து ஓர்கொம்பொசித்து கந்தவுத்தமா!
துரங்கம்வாய்பிளந்து மண்ணளந்தபாத! வேதியர்
வரங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே.

59. சாலிவேலிதண்வயல் தடங்கிடங்குபூம்பொழில்
கோலமாடநீடு தண்குடந்தைமேயகோவலா!
காலநேமிவக்கரன் கரன்முரன்சிரம்மவை
காலனோடுகூட விற்குனித்தவிற்கைவீரனே!

60. செழுங்கொழும்பெரும்பனி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள்நின்று
எழுந்திருந்துதேன்பொருந்து பூம்பொழில் தழைக்கொழும்
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே?

(கல்யாணிராகம் - ரூபகதாளம்)

61. நடந்தகால்கள் நொந்தவோ? நடுங்கஞாலமேனமாய்
இடந்தமெய்குலுங்கவோ? விலங்குமால்வரைச்சுரம்
கடந்தகால்பரந்த காவிரிக்கரைக்குடந்தையுள்
கிடந்தவாறெழுந்திருந்துபேச வாழிகேசனே!

62. கரண்டமாடுபொய்கையுள் கரும்பனைப்பெரும்பழம்
புரண்டுவீழ வாளைபாய் குறுங்குடிநெடுந்தகாய்!
திரண்டதோளிரணியன் சினங்கொளாகமொன்றையும்
இரண்டு கூறு செய்துகந்த சிங்கமென்பதுன்னையே.

63. நன்றிருந்துயோகநீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்துதீவினைகள் தீர்ந்ததேவதேவனே!
குன்றிருந்தமாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து வெஃகணைக்கிடந்தது என்னநீர்மையே?

64. நின்றதெந்தையூரகத்து இருந்ததெந்தைபாடகத்து
அன்றுவெஃகணைக்கிடந்தது என்னிலாதமுன்னெலாம்
அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன்
நின்றதுமிருந்ததும் கிடந்ததும்என்நெஞ்சுளே.

65. நிற்பதும்மொர்வெற்பகத்து இருப்பும்விண் கிடப்பதும்
நற்பெருந்திரைக்கடலுள் நானிலாதமுன்னெலாம்
அற்புதன்னனந்தசயனன் ஆதிபூதன்மாதவன்
நிற்பதும்மிருப்பதும் கிடப்பதும்என்நெஞ்சுளே.

66. இன்றுசாதல் நின்றுசாதல் அன்றி யாரும்வையகத்து
ஒன்றிநின்று வாழ்தலின்மைகண்டும் நீசரென்கொலோ?
அன்றுபாரளந்தபாதபோதை யொன்றி, வானின்மேல்
சென்றுசென்றுதேவராய் இருக்கிலாவண்ணமே.

67. சண்டமண்டலத்தினூடு சென்றுவீடுபெற்று மேல்
கண்டுவீடிலாதகாதலின்பம் நாளுமெய்துவீர்
புண்டரீகபாதபுண்யகீர்த்தி நுஞ்செவிமடுத்து
உண்டு நும்முறுவினைத் துயருள்நீங்கியுய்ம்மினோ.

68. முத்திறத்து வாணியத்து இரண்டிலொன்றும் நீசர்கள்
மத்தராய் மயங்குகின்றது இட்டதிலிறந்து போந்து
எத்திறத்துமுய்வது ஒருபாயமில்லை, உய்குறில்
தொத்துறுத்ததண்துழாய் நன்மாலைவாழ்த்திவாழ்மினோ.

69. காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்
பேணிலும்வரந் தரமிடுக்கிலாததேவரை
ஆணமென்றடைந்துவாழும் ஆதர்காள்! எம்மாதிபால்
பேணிநும் பிறப்பெனும் பிணக்கறுக்ககிற்றிரே.

70. குந்தமோடு சூலம்வேல்கள் தோமரங்கள் தண்டுவாள்
பந்தமானதேவர்கள் பரந்து வானகம்முற
வந்தவானனீரைந்நூறு தோள்களைத் துணித்தநாள்
அந்தவந்த வாகுலம் அமரரே அறிவரே.

(ஸாவேரிராகம் – திரிபுடைதாளம்)

71. வண்டுளாவு கோதைமாதர் காரணத்தினால்வெகுண்டு
இண்டவாண னீரைந்நூறு தோள்களைத் துணித்தநாள்
முண்டன்நீறன்மக்கள் வெப்பு மோடியங்கியோடிடக்
கண்டு நாணிவாணனுக்கு இரங்கினான் எம்மாயனே.

72. போதில்மங்கை பூதலக்கிழத்தி தேவி அன்றியும்
போதுதங்குநான்முகன்மகன் அவன்மகன்சொலில்
மாதுதங்குகூறன் ஏறதூர்தியென்று வேதநூல்
ஓதுகின்றதுண்மை அல்லதில்லைமற்றுரைக்கிலே.

73. மரம்பொதச்சரந்துரந்து வாலிவீழமுன்னொர்நாள்
உரம்பொதச்சரந்துரந்த உம்பராளியெம்பிரான்
வரம்குறிப்பில்வைத்தவர்க்கு அலாதுவானமாளிலும்
நிரம்புநீடுபோகம் எத்திறத்தும்யார்க்குமில்லையே.

74. அறிந்தறிந்துவாமனன் அடியிணைவணங்கினால்
செறிந்தெழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும்
மறிந்தெழுந்த தெண்திரையுள் மன்னுமாலைவாழ்த்தினால்
பறிந்தெழுந்து தீவினைகள் பற்றறுதல் பான்மையே.

75. ஒன்றிநின்றுநற்றவஞ்செய்து ஊழியூழிதோறெலாம்
நின்றுநின்றவன் குணங்கள் உள்ளிஉள்ளம் தூயராய்
சென்றுசென்று தேவதேவர் உம்பரும்பரும்பராய்
அன்றி எங்கள்செங்கண்மாலை யாவர்காணவல்லரே?

76. புன்புலவழியடைத்து அரக்கிலச்சினைசெய்து
நன்புலவழிதிறந்து ஞானநற்சுடர்கொளீஇ
என்பிலெள்கிநெஞ்சுருகி உள்கனிந்தெழுந்ததோர்
அன்பிலன்றியாழியானை யாவர்காணவல்லரே?

77. எட்டுமெட்டுமெட்டுமாய் ஓரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகி நின்ற ஆதிதேவனை
எட்டினாயபேதமோடு இறைஞ்சிநின்று அவன்பெயர்
எட்டெழுத்து மோதுவார்கள் வல்லாவானமாளவே.

78. சோர்வலாதகாதலால் தொடக்கறாமனத்தராய்
நீரராவணைக்கிடந்த நின்மலன்நலங்கழல்
ஆர்வமோடிறைஞ்சிநின்று அவன்பெயரெட்டெழுத்தும்
வாரமாகவோதுவார்கள் வல்லர்வானமாளவே.

79. பத்தினோடுபத்துமாய் ஓரேழினோடொரொன்பதாய்
பத்தினால் திசைக்கண்நின்ற நாடுபெற்றநன்மையாய்
பத்தினாயதோற்றமோடு ஓராற்றல்மிக்க ஆதிபால்
பத்தராமவர்க்கலாது முத்திமுற்றலாகுமே?

80. வாசியாகி நேசமின்றி வந்தெதிர்ந்ததேனுகன்
நாசமாகிநாளுலப்ப நன்மைசேர்பனங்கனிக்கு
வீசி மேல்நிமிர்ந்ததோளில் இல்லையாக்கினாய் கழற்கு
ஆசையாமவர்க்கலால் அமரராகலாகுமே?

(சுட்டி ராகம் – திரிபுடைதாளம்)

81. கடைந்துபாற்கடற்கிடந்து காலநேமியைக்கடிந்து
உடைந்தவாலிதன் தனக்கு உதவவந்திராமனாய்
மிடைந்தவேழ்மரங்களும் அடங்கவெய்து வேங்கடம்
அடைந்தமாலபாதமே அடைந்துநாளுமுய்ம்மினோ.

82. எத்திறத்து மொத்துநின்று உயர்ந்துயர்ந்த பெற்றியோய்!
முத்திறத்துமூரிநீர் அராவணைத்துயின்ற நின்
பத்துறுத்தசிந்தையோடுநின்று பாசம்விட்டவர்க்கு
எத்திறத்துமின்பம் இங்குமங்குமெங்குமாகுமே

83. மட்டுலாவுதன்துழா யலங்கலாய் புலன்கழல்
விட்டு விள்விலாதபோகம் விண்ணில்நண்ணியேறினும்
எட்டினோடிரண்டெனும் கயிற்றினால்மனந்தனைக்
கட்டி வீடிலாதுவைத்த காதலின்பமாகுமே

84. பின்பிறக்கவைத்தனன் கொல்?அன்றிநின்றுதன்கழற்கு
அன்புறைக்கவைத்தநாள் அறிந்தனன்கொல்? ஆழியான்
தன்திறத்தொரன்பிலா அறிவிலாதநாயினேன்
என்திறத்திலென்கொல்? எம்பிரான்குறிப்பில் வைத்ததே.

85. நச்சராவணைக்கிடந்த நாத!பாதபோதினில்
வைத்தசிந்தைவாங்குவித்து நீங்குவிக்கநீயினம்
மெய்த்தன்வல்லையாதலால் அறிந்தனன் நின்மாயமே
உயத்துநின்மயக்கினில் மயக்கலென்னைமாயனே!

86. சாடுசாடுபாதனே! சலங்கலந்தபொய்கைவாய்
ஆடராவின்வன்பிடர் நடம்பயின்றநாதனே
கோடுநீடுகைய! செய்யபாதநாளுமுள்ளினால்
வீடனாகமெய்செயாதவண்ணமென்கொல்? கண்ணனே!

87. நெற்றிபெற்றகண்ணன் விண்ணின்நாதனோடுபோதின்மேல்
நற்றவத்துநாதனோடு மற்றுமுள்ளவானவர்
கற்றபெற்றியால் வணங்குபாத! நாத! வேத! நின்
பற்றலாலொர்பற்று மற்றதுற்றிலேனுரைக்கிலே

88. வெள்ளைவேலைவெற்புநாட்டி வெள்ளெயிற்றராவளாய்
அள்ளலாக்கடைந்தவன்று அருவரைக்கொராமையாய்
உள்ளநோய்கள்தீர்மருந்து வானவர்க்களித்த எம்
வள்ளலாரையன்றி மற்றொர்தெய்வம்நான் மதிப்பனே?

89. பார்மிகுத்தபாரம் முன்ஒழிச்சுவான் அருச்சுனன்
தேர்மிகுத்துமாயமாக்கி நின்றுகொன்று. வென்றிசேர்
மாரதர்க்குவான்கொடுத்து வையமையவர்பாலதாம்
சீர்மிகுத்தநின்னலால் ஓர்தெய்வம்நான்மதிப்பனே?

90. குலங்களாயவீரிரண்டில் ஒன்றிலும்பிறந்திலேன்
நலங்களாயநற்கலைகள் நாலிலும்நவின்றிலேன்
புலன்களைந்தும்வென்றிலேன் பொறியிலேன்புனித நின்
இலங்குபாதமன்றி மற்றொர்பற்றிலேனெம்மீசனே

(சங்கராபரணராகம் – ருபகதானம்)

91. பண்ணுலாவுமென்மொழிப் படைத்ததடங்கணாள்பொருட்டு
எண்ணிலாவரக்கரை நெருப்பினால்நெருக்கினாய்
கண்ணலாலொர்கண்ணிலேன் கலந்தசுற்றம்மற்றிலேன்
எண்ணிலாதமாய! நின்னை என்னுள்நீக்கலென்றுமே.

92. விடைக்குலங்களேழடர்த்து வென்றிவேற்கண்மாதரார்
கடிக்கலந்ததோள்புணர்ந்த காலிஆய! வேலைநீர்
படைத்தடைத்ததிற்கிடந்து முன்கடைந்து. நின்தனக்கு
அடைக்கலம்புகுந்தவென்னை அஞ்சலென்னவேண்டுமே

93. கரும்பரங்குதண்துழாய் துதைந்தலர்ந்தபாதமே
விரும்பிநின்றிறைஞ்சுவேற்கு இரங்குஅரங்கவாணனே!
கரும்பிருந்தகட்டியே! கடற்கிடந்தகண்ணனே!
இரும்பரங்கவெஞ்சரந்துரந்த வில்லிராமனே!

94. ஊனில்மேயஆவிநீ உறக்கமோடுணர்ச்சிநீ
ஆனில்மேறவைந்தும்நீ அவற்றுள்நின்றதூய்மைநீ
வானினோடுமண்ணும் நீ வளங்கடற்பயனும்நீ
யானும்நீஅதன்றி எம்பிரானும்நீ இராமனே!

95. அடக்ககரும்புலன்கள்ஐந்தடக்கி ஆசையாமவை
தொடக்கறுத்துவந்து நின்தொழிற்கண்நின்றஎன்னைநீ
விடக்கருதிமெய்செயாது மிக்கொராசையாக்கிலும்
கடற்கிடந்தநின்னலால் ஓர்கண்ணிலேன்எம்மண்ணலே!

96. வரம்பிலாத மாயைமாய! வையமேழும்மெய்ம்மையே
வரம்பிலூழியேத்திலும் வரம்பிலாதகீர்த்தியாய்!
வரம்பிலாதபல்பிறப்பு அறுத்துவந்துநின்கழல்
பொருந்துமாதிருந்தநீ வரஞ்செய்புண்டரீகனே!

97. வெய்யவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்து சீர்க்
கைய செய்யபோதில்மாது சேரும்மார்ப! நாதனே!
ஐயிலாயஆக்கைநோய் அறுத்துவந்துநின்னடைந்து
உய்வதோருபாயம்நீ எனக்குநல்கவேண்டுமே.

98. மறந்துறந்துவஞ்சம்மாற்றி ஐம்புலன்களாசையும்
துறந்து நின்கணாசையே தொடர்ந்துநின்றநாயினேன்
பிறந்திறந்து பேரிடர்ச் சுழிக்கணின்றுநீங்குமோ
மறந்திடாது மற்றெனக்கு மாய! நல்கவேண்டுமே.

99. காட்டிநான்செய்வல்வினை பயன்தனால்மனந்தனை
நாட்டிவைத்துநல்லவல்ல செய்யவெண்ணினாரென
கேட்டதன்றியென்னதாவி பின்னைகேள்வ! நின்னொடும்
பூட்டிவைத்தவென்னை நின்னுள்நீக்கல்பூவைவண்ணனே!

100. பிறப்பினோடுபேரிடர்ச் சுழிக்கண்நின்றும் நீங்குமஃது
இறப்பவைத்தஞானநீசரைக் கரைக்கொடேற்றுமா
பெறற்கரியநின்பாத பத்தியானபாசனம்
பெறற்கரியமாயனே! எனக்குநல்க வேண்டுமே.

(செஞ்சுருட்டி ராகம் – ரூபகதாளம்)

101. இரந்துரைப்பதுண்டுவாழி ஏமநீர்நிறத்தமா!
வரந்தரும்திருக்குறிப்பில் வைத்ததாகில்மன்னுசீர்
பரந்தசிந்தையொன்றிநின்று நின்னபாதபங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்கவேண்டுமே.

102. விள்விலாதகாதலால் விளங்குபாத போதில்வைத்து
உள்ளுவேனதூனநோய் ஒழிக்குமா தெழிக்குநீர்
பள்ளிமாய! பன்றியாய வென்றிவீர! குன்றினால்
துள்ளுநீர்வரம்புசெய்த தோன்றல்! ஒன்று சொல்லிடே

103. திருக்கலந்துசேருமார்ப! தேவதேவதேவனே!
இருக்கலந்தவேதநீதி ஆகிநின்றநின்மலா!
கருக்கலந்தகாளமேக மேனியாய! நின்பெயர்
உருக்கலந்தொழிவிலாது உரைக்குமாறுரைசெயே.

104. கடுங்கவந்தன்வக்கரன் கரன்முரன்சிரம்மவை
இடந்துகூறுசெய்த பல்படைத்தடக்கைமாயனே!
கிடந்திருந்துநின்றியங்குபோதும் நின்னபொற்கழல்
தொடர்ந்துவிள்விலாதது ஓர்தொடர்ச்சிநல்கவேண்டுமே

105. மண்ணையுண்டுமிழ்ந்து பின்இரந்து கொண்டளந்து மண்
கண்ணுளல்லதில்லையென்று வென்றகாலமாயினாய்
பண்ணைவென்றவின்சொல்மங்கை கொங்கைதங்குபங்கயக்
கண்ண! நின்னவண்ணமல்லதில்லை எண்ணும்வண்ணமே.

106. கறுத்தெதிர்ந்தகாலநேமி காலனோடுகூட அன்று
அறுத்தவாழிசங்குதண்டு வில்லும்வாளுமேந்தினாய்!
தொறுக்கலந்தவூனமஃது ஒழிக்கவன்று குன்றமுன்
பொறுத்தநின்புகழ்க்கலால் ஓர்நேசமில்லை நெஞ்சமே!

107. காய்சினத்தகாசிமன்னன் வக்கரன்பவுன்டிரன்
மாசினத்தமாலிமான் சுமாலிகேசிதேனுகன்
நாசமுற்றுவீழநாள் கவர்ந்தநின்கழற்கலால்
நேசபாசமெத்திறத்தும் வைத்திடேன் எம்மீசனே!

108. கேடில்சீர் வரத்தனாய்க் கெடும்வரத்தயன்அரன்
நாடினோடுநாட்டமாயிரத்தன் நாடுநண்ணினும்
வீடதானபோகமெய்தி வீற்றிருந்தபோதிலும்
கூடுமாசையல்லதொன்று கொள்வனோ? குறிப்பிலே

109. சுருக்குவாரையின்றியே சுருங்கினாய் சுருங்கியும்
பெருக்குவாரையின்றியே பெருக்கமெய்துபெற்றியோய்
செருக்குவார்கள் தீக்குணங்கள் தீர்த்ததேவதேவனென்று
இருக்குவாய் முனிக்கணங்களேத்த யானுமேத்தினேன்.

110. தூயனாயுமன்றியும் சுரும்புலாவுதண்துழாய்
மாய! நினனைநாயினேன் வணங்கிவாழ்த்துமீதெலாம்
நீயும்நின்குறிப்பினில் பொறுத்துநல்கு வேலைநீர்
பாயலோடுபத்தர் சித்தம்மேய வேலைவண்ணனே!

(மோஹநராகம் – ரூபகதாளம்)

111. வைதுநின்னைவல்லவா பழித்தவர்க்கும் மாறில்போர்
செய்துநின்னசெற்றத்தீயில் வெந்தவர்க்கும் வந்துன்னை
எய்தலாகுமென்பர் ஆதலால் எம்மாய! நாயினேன்
செய்தகுற்றம் நாற்றமாகவேகொள் ஞாலநாதனே!

112. வாள்களாகிநாள்கள்செல்ல நோய்மைகுன்றிமூப்பெய்தி
மாளுநாளதாதலால் வணங்கிவாழத்து என்நெஞ்சமே!
ஆளதாகும் நன்மையென்று நண்குணர்ந்ததன்றியும்
மீள்விலாத போகம் நல்கவேண்டும் மாலபாதமே.

113. சலங்கலந்த செஞ்சடைக் கறுத்தகண்டன் வெண்தலை
புலன்கலங்கவுண்டபாதகத்தன் வன்துயர்கெட
அலங்கல்மார்வில்வாசநீர் கொடுத்தவன் அடுத்தசீர்
நலங்கொள்மாலை நண்ணும் வண்ணம் எண்ணுவாழி நெஞ்சமே!

114. ஈனமாயவெட்டும்நீக்கி ஏதமின்றிமீதுபோய்
வானமாளவல்லையேல் வணங்கிவாழ்த்துஎன்நெஞ்சமே!
ஞானமாகிஞாயிறாகி ஞாலமுற்றும் ஓரெயிற்று
ஏனமாயிடந்தமூர்த்தி எந்தைபாதமெண்ணியே

115. அத்தனாகி யன்னையாகி ஆளுமெம்பிரானுமாய்
ஒத்தொவ்வாதபல்பிறப்பொழித்து நம்மையாட்கொள்வான்
முத்தனார்முகுந்தனார் புகுந்துநம்முள்மேவினார்
எத்தினால் இடர்க்கடல்கிடத்தி? ஏழைநெஞ்சமே!

116. மாறுசெய்தவாளரக்கன் நாளுலப்ப அன்றிலங்கை
நீறுசெய்துசென்றுகொன்று வென்றிகொண்டவீரனார்
வேறுசெய்துதம்முளென்னை வைத்திடாமையால் நமன்
கூறுசெய்தகொண்டிறந்த குற்றமெண்ணவல்லனே?


117. அச்சம்நோயொடல்லல்பல் பிறப்பு ஆயமூப்பிவை
வைத்தசிந்தைவைத்தவாக்கை மாற்றிவானிலேற்றுவான்
அச்சுதன் அனந்தகீர்த்தி ஆதியந்தமில்லவன்
நச்சுநாகணைக்கிடந்த நாதன்வேதகீதனே.

118. சொல்லினும்தொழிற்கணும் தொடக்கறாத அன்பினும்
அல்லும் நன்பகலினோடும் ஆனமாலைகாலையும்
வல்லிநாண்மலர்க்கிழத்திநாத! பாதபோதினை
புல்லியுள்ளம்விள்விலாது பூண்டுமீண்டதில்லையே.

119. பொன்னிசூழரங்கமேய பூவைவண்ண! மாய! கேள்
என்னதாவியென்னும் வல்வினையினுட் கொழுந்தெழுந்து
உன்னபாதமென்னநின்ற ஒண்சுடர்க்கொழுமலர்
மன்னவந்துபூண்டு வாட்டமின்றியெங்கும்நின்றதே.

120. இயக்கறாதபல்பிறப்பில் என்னைமாற்றி இன்றுவந்து
உயக்கொள்மேகவண்ணன் நண்ணி என்னிலாயதன்னுளே
மயக்கினான் தன்மன்னுசோதி ஆதலால் என்னாவிதான்
இயக்கெலாமறுத்து அறாதஇன்பவீடுபெற்றதே.

திருச்சந்த விருத்தம் முற்றும்.



பாட்டுச்சித்தர் ஓம்சக்தி நாராயணசாமி
நிறுவனர்: ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீடம்
ஸ்ரீ தர்மசாஸ்தா அறக்கட்டளை, பதிவு எண்.136/2007
27, தியாகராஜ நகர், சீர்காழி - 609110.
நாகை மாவட்டம். செல்: 9843650639

நிறைவுரை

அன்பு வாசக நெஞ்சங்களுக்கும் ஆன்மிக மெய்யன்பர்களுக்கம் வணக்கம். அடியவன் எழுதிய ஸ்ரீதர்ம சாஸ்தா ஐயப்பன் வெளிச்சம், தசதீட்சை ஆகிய நூல்களுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவுக்கு முதற்கண் என் நன்றியைக் கூறி, அது போலவே சித்தர் சிவவாக்கியரின் ஜீவிதமும் சிந்தனையும் எனும் இந்நூலும் தங்கள் பேராதரவைப் பெற திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலில் சிவவாக்கியர் வாழ்வு பற்றிய செவிவழி செய்தி கதைகளையும், பெரிய ஞானக் கோவையில் உள்ள சிவவாக்கியம் 550 பாடல்களுக்கான விளக்க உரையையும் எழுதியுள்ளேன். ஆத்திகரும் நாத்திகரும் அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும், பேச்சாளர்களும் பெரிதும் போற்றி உவமானம் காட்டப்படும் இச்சிவவாக்கியப் பாடல்களுக்கு எவரும் முழுமையாக உண்மையான விளக்கவுரை எழுதாமையினால் நாயேன் இச்சீரிய பணியைச் செய்து இந்நூலை வெளியிடுகின்றேன். அடியவனை ஆட்கொண்டு மெய்க்கல்வியைப் போதித்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று பதினெட்டுப் படிகளில் என்னை முறையாக நடத்தி வைத்து சித்தர் நெறியில் வாழ வைத்திட்ட என் சற்குருவாகிய ஜோதீஸ்வரன் ஐயன் அருளினால் இந்நூலை எழுதி முடித்தேன். அடியவன் இந்நூலை எழுதத் தொடங்கியதில் இருந்து சித்தர் சிவவாக்கியரின் கருணையும் பேரருளும் என்னைச் சூழ்ந்ததை உணர்ந்தேன். அனைத்து உண்மைகளையும் சித்தர்களின் பரிபாசை இரகசியங்களையும் சிவவாக்கியர் என் உள்ளிருந்து உணர்த்தியதை அறிந்து அவர் எவ்வாறு உலகிற்கு யோக ஞான சாதகர்களுக்கும் சொல்லியுள்ளாரோ அவ்வண்ணமே உரை செய்து வெளியிடுகின்றேன்.

சிவவாக்கியர் சித்தராக வாழ்ந்த போது மிகவும் தன்னடக்கத்துடன் தன்னை மறைத்து ஆழ்வாரைப் போல் இருந்து வந்தார். அவரே திருமழிசை ஆழ்வாராக அவதரித்த பின் பல அற்புதங்களை நிகழ்த்தி சித்தரைப் போல் இருந்து வந்தார். சிவவாக்கியத்தில் உள்ள பல பாடல்கள் அப்படியே அடி மாறாமல் திருமழிசை ஆழ்வாரின் திருச்சந்த விருத்தத்தில் அதே பொருளோடு இருப்பதை அறிந்து இருவரும் ஒன்றே என்பதை உணருங்கள். சிவவாக்கியரின் பாடல்களில் உள்ள கருத்துக்கள் பசுமரத்தாணி போல் படிப்பவர்கள் நெஞ்சில் பதியக் கூடியவை. அதில் உள்ள பரிபாசை இரகசிய உண்மைகளை அனைவரும் எளிமையாக அறிந்து கொள்ளும் வண்ணம் சித்தர் சிவவாக்கியரின் கருணையால் இந்நூல் அமையப் பெற்றுள்ளது.

"வையகத்தில் உண்மைதன்னை வாய்திறக்க அஞ்சினேன்" எனப்பாடிய சித்தரே "விகாரமற்ற யோகிகள் விரித்துரைக்க வேணுமே" என்றும் பாடியுள்ளதால் இந்நூலுக்கான விரிவுரையை துணிந்து எழுதினேன். சிற்சில பாடலுக்கான பொருளறியாமல் நான் திகைத்த வேளையில் "சீரும் ஓரெழுத்தை ஓத ஈசன் வந்து பேசுமே" என்று அவர் சொல்லியுள்ள வண்ணம் அதையே ஓதி தியானம் செய்யும் பழக்கத்தினால் குருநாதன் பேசியதை உணர்ந்து அதை அப்படியே எழுதி முடித்துள்ளேன்.

சிவவாக்கியத்தின் காப்புச் செய்யுளில் சிவவாக்கியர் கற்றணர்ந்த பெரியோரும் சிறியோரும் பேயனாகி ஓதிடும் பிழை பொறுக்க வேணுமே ! என்று வேண்டுகின்றார். அதுபோல் எளியவன் எழுதி வெளியிடும் இந்நூலில் ஏதேனும் பிழையிருந்தால் மன்னித்து பொறுத்தருள வேண்டுகின்றேன். இதில் உண்மை உள்ளதென்று உணர்ந்து வாசகர்களால் வரவேற்று ஏற்கப்பட்டால் இதுபோல் அனைத்து சித்தர்களின் வாழ்வையும் வாக்கையும் இயன்ற வரை தொகுத்து எழுதி ஒவ்வொன்றாக வெளியிட முயற்சி செய்வேன். இந்நூலில் ஏற்படும் தங்கள் சந்தேகங்கள் தெளிவு பெற எந்நேரமும் அடியவனை சந்தித்துத் தொடர்பு கொண்டால் தெளிவிக்க சித்தமாக இருக்கின்றேன். இந்நூலில் ஏதேனும் தவறு இருக்குமாயின் சுட்டிக்காட்டும் பெரியோர்க்கு கடமையுள்ளவனாகி திருத்திக்கொள்ளவும் சித்தமாய் உள்ளேன்.

அன்பும் சிவமும் தவமும் தர்மமும் தரணியெங்கும் தழைத்தோங்கட்டும்.

இறைச் சோதனையால் அடியவன் என்னை ஆன்மீகப் பாதையில் ஆளாக்கிய என் அன்னையிலிருந்து அனைத்தையும் இழந்து பரதேசியாக நிலையில்லாமல் திரிந்து கொண்டிருந்த காலத்தில் தன் அன்பெனும் பிடிக்குள் அகப்படுத்தி இன்று நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைத்து நான் இந்நூலை இயற்றுதற்கு ஆர்வம் கொடுத்து ஊக்குவித்தவர் விழுப்புரம், "ஜோதி விருட்சம்" தவயோகி C. கார்த்திகேயன் அவர்கள். வலது கை கொடுப்பது இடது கை அறியக் கூடாது என வாழ்ந்து வரும் ஞான வள்ளலான அவருக்கு என் நன்றியைக் கூறி என் நெஞ்சில் இருத்தி வாழ்த்துகிறேன். மேலும் என் பணியைத் தன் பணியாகக் கருதி இந்நூலை வடிவமைத்துக் கொடுத்த ஆனத்தூர் சோதிட ஞானி தவயோகி இல. திருமலைவாசன் அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவர பேருதவி செய்த திருப்பூர் ஆடிட்டர் தவத்திரு. தனசேகர் அவர்களுக்கும், இந்நூலை அழகிய முறையில் வடிவமைத்துக் கொடுத்த சென்னை வி.எஸ்.டி. ஆப்செட் அச்சக அதிபர் திரு. சி.மு.வேதாசலம் அவர்களுக்கும், அச்சக ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறக்க அருளாசியுரை வழங்கிய சீர்வளர்சீர் திருவாவடுதுறை ஆதீனம் அவர்கள், திருவடிகளை வணங்கி நன்றி கூறுகிறேன். மேலும் முன்னுரை வழங்கிய வள்ளல் நேசன் மருத்துவர் ஜெய. இராஜமூர்த்தி அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய நண்பர் நாகராஜ் அவர்களுக்கும் அன்புமிகுந்த நன்றியைக் கூறி இந்நூல் வெளிவர பொருளுதவி செய்த அனைவர்க்கும் என் குருநாதன் அருள் எந்நாளும் காக்க பிரார்த்திக்கின்றேன். புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் ஆட்படுத்தாது என்னை தன் பணிக்கே ஆளாக்கிய என் குருநாதரின் பேரருள் இந்நூலைப் படிக்கும் அனைவர்க்கும் கிடைக்க பரம்பொருளை தியானித்து நிறைவு செய்கிறேன்.

என்றும் மெய்யன்புடன்,

பாட்டுச்சித்தர் ஓம்சக்தி நாராயணசாமி

நிறுவனர்: ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீடம்
ஸ்ரீ தர்மசாஸ்தா அறக்கட்டளை, பதிவு எண்.136/2007
27, தியாகராஜ நகர், சீர்காழி - 609110.
நாகை மாவட்டம். செல்: 9843650639

ஸ்ரீ மனோன்மணித்தாய் ஞான சித்தர் பீடம்

சேராவாரும் புண்ணியோரே நம் மார்க்கம்

சத்திய மார்க்கம்

ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்ப சேவா
அன்னதான அறக்கட்டளை

SASTHA TRUST Regd No. 136 / 2007.

1. சித்தர்களின் யோக ஞானக் கலைகளும் சித்தர் பாடல்களும் மறைந்து விடாமல் பாதுகாத்து வளர்ப்பது. எங்கே உண்மை இருக்கும் எங்கு ஞானம் கிடைக்கும் எனத் தேடுகின்ற சாதகர்களுக்கு ஐயம் திரிபு இன்றி எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி எவ்வித கட்டாயமுமின்றி உபதேசம் வழங்கி ஆன்மிகப் பாதையில் அனைவரும் உழைப்பது.

2. ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் சித்தர்களின் நெறிப்படி இல்லறமோ துறவறமோ அவரவர்க்கு அமைந்த படியே இருந்து யோகம், தியானம், தவம் போன்றவற்றை நித்தியம் கடைப்பிடித்து வாழ்வது.

3. இந்து தர்மமும் சைவ சமயமும் காட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளிலும் இறையை அடைய சாதனம் புரிவது. யோகம், தியானம் செய்ய நண்பனாக இருந்து கற்றுத் தருவது; கற்றக் கொள்வது.

4. இயற்கையாய் இறைவனே அனைத்திலும் மிகப்பெரியவன். அவன் அருளால் அவன் தாள் வணங்கியே அனைத்து ஞான சித்தர்களும் மெய்நிலை அடைந்தனர். ஆகவே நாமும் இறைவனை மட்டுமே குருவாகவும், திருவாகவும் கொண்டு பெரியவர், சிறியவர், இல்லார், உள்ளார், ஆண், பெண் என்ற பேதமேதுமின்றி அனைவரையும் தம்முயிர்போல் எண்ணி ஞானமடைய முயற்சிக்கும் உயிர்கள் யாவும் நல்லவையே எனத் தேர்ந்து அன்போடு ஒன்ற கூடி யோக ஞான சாதனைகளை மேற்கொள்வது.

5. தம்மில் அழுந்தி இருப்பதால் தமிழ் எனப் பேர் பெற்றது என்ற வள்ளலாரின் வாக்குப்படி பிற மொழிகளில் பேதம் பாராது தமிழ் வளர்க்க சான்றோர்கள் வழியில் பாடுபடுவது. தமிழே தெய்வமாய் இருப்பதை உணர்த்துவது

6. தெய்வத்திருப்பணிகளிலும் திருவிழாக்களிலும் பங்கேற்று பசிப்பிணி போக்க அன்னதானங்கள் செய்வது.

7. இறையருளால் தீட்சை பெற்ற யாவரும் சமதர்மமாகவும், சகோதரத்துவமாகவும் இருந்து காட்டி அன்பினால் இணைந்து பக்தி, தொண்டு, பஜனை, பாராயணம் போன்றவைகளை ஆன்மிக சாதனையாக்கி முழுமனதோடு செய்வது.

8. அனாதைக் குழந்தைகளையும், ஆதரவற்ற முதியோர்களையும் பாதுகாக்க இயன்ற நன்முயற்சிகளைச் செய்வது. படிக்கும் மாணவர்களுக்குப் படித்தவர்களைக் கொண்டு இலவசக் கல்வி போதனா வகுப்பு நடத்துவது.

9. வள்ளுவரிலிருந்து வள்ளலார் வரை வாழ்ந்து காட்டிய சித்தர்கள் நெறியில் வாழ்வியலையும் உலகியலையும் ஆன்மிக வழியில் கடைப்பிடித்து வாழ்ந்து இறவா நிலை அடைய பாடுபடுவது.

10. ஞானிகளும், சித்தர்களும், சற்குருக்களும் மதிப்பதற்கும் போற்றுதற்கும் உரியோரே. ஆனால் வணங்குவதற்கும் வழிபாட்டிற்கும் தியானத்திற்கும் கருப்பொருள் இறைவன் ஒருவரே. அனைத்து மேலாம் நிலைகளுக்கும் மெய்பக்தியே அடிப்படை என்பதை அறிந்து அந்த இறையிடம் மட்டுமே அன்பு பக்தி செலுத்தி மேன்மையடைய வேண்டி அனைவருக்கும் போதித்து மெய் பக்தியை வளர்ப்பது.

11. ஞாயிறு தோறும் சத்சங்கம் கூடி தங்களது சந்தேகங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டு தெளிவடைவது. நன்னூல்களை படித்து ஆராய்ந்து மெய்ப்பொருளைப் பெறுவது சத்விசாரம் செய்வது. மெய்ப்பொருளை அறிந்து சித்த வைத்திய ஆராய்ச்சி மேற்கொள்வது. ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தி அறிவை அறிய வைப்பது.

12. சித்தர்களின் பீடங்களுக்கும் தெய்வ ஆலயங்களுக்கும் ஒத்த மனம் கொண்டு கூடி ஆன்மிக பயணங்கள் செய்து அனுபவ அறிவு பெறுவது. இயற்கையில் ஏகாந்தமாய் இருந்து தியான தவம் மேற்கொள்வது.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" – திருக்குறள்

பாடல் முதற் குறிப்பு அகராதி

பாபநாசம் அருகில் சிவந்திபுரம் ஆசிரமத்தில் அமையவிருக்கும் நமது அன்பு திருக்கோவிலின் மாதிரி வரைபடம்





என் அன்பு நிறைந்த நெஞ்சங்களே

நமது அன்பு திருக்கோவில் திருப்பணிக்கு தாங்கள் அன்புடன் வழங்கும் நன்கொடைகளை கீழ் கண்ட வங்கி கணக்கில் செலுத்துமாறு யாசிக்கின்றேன்.

அன்புடன்

பாட்டுச்சித்தன்

BANK DETAILS

BANK	:	CITY UNION BANK	A/C TYPE	:	CURRENT ACCOUNT
A/C NAME	:	SRI MANONMANI CHITTHAR BEEDAM TRUST	BRANCH.	:	SIRKALI
A/C NO	:	510909010092871	IFSC	:	CIUB0000202

அரியும் சிவனும் ஒன்றே
அறிந்தவர் வாழ்வு நன்றே



வெளியீடு:
ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட குருகுல ஆசிரமம்
7/17C, பழைய பாபநாசம் சிவன் கோயில் தெரு,
சிவந்திபுரம் கிராமம், அம்பை வட்டம்,
நெல்லை மாவட்டம் - 627 425.
செல் : 9843650639, 9894751006

Price Rs. 200/-

ISBN 978-81-935039-0-4